விரும்பெழில்செழுமு மிதத்துவசப்பேர் வேந்துகாண் டிக்கனையளி த்தான், பொருந்துநற்கருமத் ததிசயித்தன்றேன் புரந்தினிதருணாட் புகன்ற, பெரும்புகழ்க்கேசித் துவசனுக்கஞ்சிப் பெயர்ந்துகாட் டகத்தம ர்ந்தனனேற்; கரும்பெறற்கருமத் தையுறவொழித்தங் கவன்சொலுஞா னமுமுணர்ந்தான். ௨௦

ஞானவாரிதிகேசித்துவசப்பேர் நரபதிமகிழ்தர வுதித்தான், பானு மானன்றேன் வழிவருமரசர் பலருளர் நிமிமாபுரந்தோர், தேனவாந் தொடையாய் சிறந்தகல்வினையாற் சிமிழ்ப்புண்டார்போன் றிருப்பினுநகல், மோனமாதவரும் வியப்பமெய்ஞ்ஞான முதிர்ந்தனாவெனமுனி யுரைத் தான். உஉ

நிமிமாபுரைந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ருஅ.

[illegible]

## கஉ-வது, சந்திரன்மாபுரைந்தவத்தியாயம்.

### கலிவிருத்தம்.

சுந்தரவடவரைசூழுஞ்செங்கதிர்
வெந்திறன்மாபுகேட்டுவந்தவேலவன்
சந்திரமாபினிச்சாற்றுவாமெனா
மந்திரமறைமுனிமகிழ்ந்துகூறுமால். க

அந்தமிலாழிதாங்கங்கைமாயவன்
உந்தியம்போதிடையுதித்தநான்முகன்
தந்தனைத்திரிதன்னையன்னவன்
இந்துவையளித்தனன்விழியினென்பவே. உ

மாதவன்கண்ணின்முன்வந்தமாமதி
வேதியரொடுங்கருவினனின்பின்புலன்
ஏதமில்வண்பதிக்கெழில்செய்வேந்தெனப்
போதுறுமயன்முடிபுனைவித்தானரோ. ௩

மணிமுடிவனைதரமகிழ்ந்துசந்திரன்
இணையறுவலியிறைவிராசசூயமாம்
அணிபெறுமொருமகமாற்றிமுச்சகம்
பணிசெயவுலகையப்பாலவாழ்கின்றனன். ௪

இருதிதிச்செருக்கினுவிமகான்குரு
மருவியதாரையைமனத்துவைக்குவே
அரியவெஞ்சமர்செயவுடன்றவாறுமை
கரமொடுமாமதிதுன்னிவீவிருந்தனன். ௫

தாரையைவிடுத்திடீயென்றுசார்ந்திடும்
போரினைநனிசெயும்புலவர்தம்மொடும்
அருடையனாரைச்சுடரும்வெள்ளியை
யருடையிமகானிலையர்தம்கேற்றனன். ௬

எதிர்பொருமவ்வழியெய்திநான்முகன்
துதிதருகுருவெனுஞ்சுடர்செய்பொன்புணர்
கதிர்முலைவனிதையைக்கலந்ததென்கொனின்
மதியெனவழங்கலுமதிவிடுத்தனன். எ

சந்திரன்விடுத்தலுஞ்சார்ந்ததாரையை
அந்தணனேக்கிவம்பலனணைந்துறும்
இந்தவெங்கருவொழிகெனவுயிர்த்தனன்
சுந்தரம்விளங்கொருதோன்றலாகவே. அ

புனைதருகருங்குழற்பூவைநல்கிய
தனியெழிற்குழவியைச்சார்ந்துநோக்கலும்
பனிமதிக்கடவுளும்பகர்ந்தசீவனும்
எனதெனதெனவவணேக்கற்றாரோ. கூ

முனிவருமமருமோகமைந்தனைக்
கனிமொழியாரைநீகலந்துபெற்றனை
எனவவண்வினவலுமிடர்செய்நாணெடு
துனியொடுதாரைசொல்லாதுவைகினள். க0

தாரையைப்பார்த்தயன்றநயனைப்பெற
ஆரைநீமணந்தனையென்னவன்னவள்
பாரினைநாணெடுநோக்கிப்பைப்பயப்
பேருறுமதிக்குநான்பெற்றதென்றனள். கக

ததைமலர்க்கருங்குழற்றாரைசாற்றலும்
கதிரொளிகளுலியகாதவோன்விதி
மதிமகனென்னவும்வயங்குபுந்தியால்
புதனெனவழங்கவும்பெயர்பொருந்தினன். கஉ

பெருந்திறற்புதனெனும்பெயரினன்முனம்
திருந்திழையிளையெனச்செப்புமங்கையாம்
மருந்துறழ்சாயலைமணந்துபெற்றனன்
பொருந்தலர்வணங்குவேற்புரூரவாவையே. கங

அன்னவனற்குணமறிந்துநாரதன்
பொன்னகரடைந்தனன்புகழ்ந்துபாடினன்
மன்னெழிலுருப்பசிமகிழ்ந்துகேட்டனள்
தன்னழன்மெழுகினிற்சோர்ந்துநின்றனள். கச

மருவியமித்திராவருணரென்பவர்
உருகுதலறிந்தவணுரைத்தசாபத்தால்
தரைமிசையுருப்பசிசார்ந்துநோக்கினள்
அரசனையாசனுமவளைநோக்கினன். கரு

### தரவுக்கொச்சகக்கலிப்பா.

கண்டானல்வியப்புற்றான்கவினமுதுகண்ணால்
உண்டான்போலுள்ளுவந்தானொளியிழையிங்கென்றுயிராய்த்
தண்டாமலுறைதியெனத்தாங்கரியகாதலுரை
விண்டானவ்வுரைகேட்டமெல்லியலும்விள்ளுவளால். கசு

அங்கணிலவேந்தேநின்னழகினலங்கண்டிணையத்
துங்கவெழின்மதனுமொருதோகையுருக்காதலிப்பான்
இங்கணெனிற்றேயகணியிருந்தவத்தினாற்கிடைத்தாய்
மங்கையர்யார்நின்னகலமருவாமலொழிபவரே. கஎ

உன்னவரும்பல்சுவையாரூணவொழிந்துநெய்யருந்தி
நின்னகலம்புல்லிப்பனெடும்பகல்யாணிவணிருப்பல்
என்னொடுநன்னேயநல்கவியைத்தவிர்ந்தயாடிரண்டும்
மன்னவர்கண்மன்னவெனைமகிழ்ந்துறையக்காத்தருளே. கஅ

கோடாதசெங்கோல்கொள்குரிசிலெனநிலவமைப்பின்
வாடாமலுணவுதவவந்தவித்தயாடகலின்
தேடாதிருப்பினுநீசேர்ந்ததுகிலின்றிவா
நாடாதநின்னுருவநாடினுநான்றீர்குவனால். கக

என்றுநயமொழிகூறியியைத்தெழில்செய்கின்றவிரு
குன்றினெடுமிகல்குன்றங்கொடுஞ்சமருற்றுடற்றுதல்போல்
வென்றிதருவேலோன்றன்விளங்குமணிசேர்புயத்தின்
நன்றிதருகொங்கையிணைநெருங்கநலனுண்டனனே. உ0

இன்னணமவ்வேந்துமணியிலங்கிழையுமின்பநலம்
மன்னமுதமுண்டுநெஞ்சுமகிழ்ந்துநெடுநாள்கழித்தார்
உன்னிவிசும்பாரசனுருப்பசியைநீத்தவிற்றன்
பொன்னகரும்வான்செல்விபொலிந்திலதென்றேவுதலால். உக

கந்திருவானோர்கள்கலந்துறையுளிரவில்
அந்தமுறுபேர்யாட்டையடைந்தாற்றவவ்வுதலும்
சிந்தைமகிழ்செய்வோனைச்சிறந்தவென்றனொட்டினையார்
வந்துபிடித்தார்கொலெனமடந்தையதுநேர்ந்தனளால். உஉ

தோய்ந்துறையுமவ்வேந்தன்றுகிலொழியவல்லையெழுந்
தாய்ந்தவர்கள்விட்டேகுமாடுகொடுமேவுதலும்
வாய்ந்ததொருமின்னன்னொள்வனைதுகிலில்லாவேந்தை
எய்ந்தெழிலாள்கண்டனளங்கிருவிசும்பினேகினளே. உங

முன்பொருந்துமுருந்துறழ்வெண்முகிணகையங்கேகுதலும்
என்பொருந்திவைகாயலெழுந்தனனென்றென்றிரங்கிப்
பொன்பொருந்திப்போக்கிமிகப்புலம்புமவறியோர்களென
மன்பொருந்துமையறனைவழங்கவெவர்வல்லுநரே. உச

எங்குமெழுமோடலுறுமிருக்குமிறைபதைபதைக்கும்
ஓங்குமொளிநுண்ணுசுப்பாளுருவெளியைக்கண்டுவக்கும்
வாங்குமிடைமின்னொளித்துவந்தனையோவென்றுவக்கும்
நீங்குமுயிர்மீண்டுவந்துநிலைத்ததெனக்கென்றிசைக்கும். ௨௫

சூட்டுமலர்புனைதாழ்மென்சுரிகுழலின்மாலமிழ்
தூட்டவனுகாதொழியினுய்யேனென்றிருகரமும்
நீட்டியணையத்துனைந்தாங்கினைத்துருவுகாண்கிலனாய்
மீட்டுமெனைக்காந்தனையோவெனவுள்ளமெலிந்திடுமே. ௨௬

கொன்னஞ்சுகொடுபொன்னங்குழைபொருதவயில்விழியும்
மின்னஞ்சுகின்றவொருமெல்லிடையுங்கொங்கையுங்கொண்
டென்னெஞ்சுதான்கொடுசென்றிரங்காமேபோய்க்காந்த
கன்னெஞ்சுகொண்டனையாற்காட்டுவாரெனக்கலுழ்மே. ௨௭

மையோடுமொளிகூர்வேல்வரிவிழிமுன்புல்லியது
மெய்யோவஃதன்றுயின்விளங்குகனவாகியதோர்
பொய்யோவிஃதென்றெனக்குப்புலப்படுதலில்லையெனும்
ஐயோமதன்கணையையார்விலக்குவாரெனுமே. ௨௮

தண்காட்டின்மேவந்துதயங்குகிளிகாளுமைப்போல்
பண்காட்டுந்தீஞ்சொலெழிற்பாவையெங்ஙன்பகருமெனும்
வெண்காட்டுந்திங்கண்முகமெல்லியலையன்னவடன்
கண்காட்டுமான்காணீர்காட்டாததென்னெனுமே. ௨௯

பாட்டுவரிவண்டுநணியடியுமதகரியுனது
கோட்டினண்ணுந்தெழுந்தமுலைக்கொம்பினைநீகண்டதுண்டோ
காட்டுதிநீயிங்கென்னுங்கலந்தபிடிகாளுமைப்போல்
பூட்டுமிழையாணடந்துபோயநெறியேதெனுமே. ௩௰

காந்தளைநேர்கரதலத்தாள்காந்தவழிமாமலைவாய்க்
காந்தளையின்வாழரிகாள்கண்டீரோகழறுமெனும்
மாந்தளிர்போற்பொலமேனிமயிலையெங்குந்தேர்ந்துநறை
மாந்தளிகாளென்னைகொலோவழங்காதவாறெனுமே. ௩௧

கலிநிலைத்துறை.

இன்னவாறுளம்வருந்தியபுரூரவாவென்னும்
மன்னர்தாழும்வேன்மன்னவன்மகிழ்ந்துருப்பசியைச்
சொன்னவாண்டினுக்கொருமுறைகண்டனன்றோய்ந்து
பன்னுமாயுவேமுதலிருமூவரைப்பயந்தான். ௩௨

உரைசெய்கின்றவவ்வுருப்பசியொள்ளிழையொருநாள்
அரசவென்றனையடைவதற்கொருவகையறைவல்
மருவியாழினர்க்கேட்டியென்றுரைத்தவண்மறைந்தாள்
விரைவினன்னவாறடைந்தவர்க்கேட்டனன்வேந்தன். ௩௩

கலிநிலைத்துறை.

விஞ்சைமன்னவர்வேந்தவனுரைத்தலும்விருப்பால்
மஞ்செனுங்குழலுருப்பசிமுலைமுகமணைப்பான்
எஞ்சலின்றிமேயெழுமின்மகப்பயந்தெனைவியம்பி
அஞ்சுடர்க்கனற்குழியொன்றளித்தனனன்றே. கச

கொடுத்தலங்கியக்குழியைக்கொணர்ந்திடையதர்க்கண்
விடுத்திதென்கொலென்றரசனுங்கரிடைமேவ
எடுத்தியம்பியவிரண்டெனுமுழியான்றனின்
அடுத்ததாதலார்கருமம்வந்தவனுளத்தடைந்த. கரு

கமழ்மலர்த்தொடைக்காவலனுருப்பசிகலப்பான்
இமையவர்க்கிதஞ்செய்மகபியற்றலெனப்போய்
உமிழ்கதிர்க்கனற்குழியையுந்துழிக்காணன்
சமிகருப்பமாந்தடஞ்சினையாசவட்கண்டான். கசு

கண்டிருப்பினிற்கருதியதால்வழிகுறைத்துக்
கொண்டுவந்துமேலானிதாதைமுன்கூறும்
கெண்டையந்தடங்கண்ணாளுருப்பசிமிறா
அண்டரும்புகழானியாமதிக்குமத்தண்டம். கஎ

இலிங்கமாகவுங்கண்ணினன்கடையவுஞ்செழுந்து
புலிங்கமார்தமுன்மூன்றெனப்பிறந்தனபொருந்தத்
துலங்குவேதமுமூன்றெனப்பிறந்தனசொல்லும்
கலங்கொள்வேள்வியும்பற்பலபுரிந்தனனவிவ்வோன். கஅ

ஆதியாம்யுகத்தருமறைநெடிலையாயடங்கும்
சோதியாயவொருத்தனுங்கடவுளாய்த்துலங்கும்
சாதியோர்வகைத்தாக்கிவேதத்தவருணத்தாம்
பேதமாகியவிவையின்றிருந்தனமேபிறங்கும். ககூ

அரியவாதியாம்யுகமொழித்தாக்கிரண்டாய
உரைசெழுழிவந்தடைதலாற்கருமமூண்டாக்கிப்
பொருவில்வேள்விகள்புரிந்தவப்புருரவாவென்போன்
மருவிறைஞருப்பசிமுலைவாலுலகடைந்தே. உ0

சந்திரன்மரபுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் உ0க.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௩-வது, பரசுராமவிசுவாமித்திரர்கதையுரைத்த வத்தியாயம்.

---

### கலிநிலைத்துறை.

இசைசிலாவெடுத்தியம்பியபிதாமகனெய்ப்ப
வசையிலாவுருப்பசிமுலைமணப்பவங்குதித்தோர்
அசைவிலாயுநற்சுதாயுவுசத்தியவாயு
விசையன்வேற்சயன்ராயனெனவறுவராம்விளம்பின். ௧

தூமவார்குழலார்க்குவேள்சுதாயுவென்றுரைப்போன்
வாமமேவியசீர்வசுமான்றனையுயிர்த்தான்
தாமவேலினன்சத்தியவாயுவென்றுரைப்போன்
நாமமாப்படைச்சுதஞ்சயன்றன்னைநல்கினனால். ௨

ராயனெனேந்தனற்சுருதனோடேகனையீன்றான்
சயனெனுந்திறலோனமிதன்றனைத்தந்தான்
வியனிலம்புகழ்வீமனையுயிர்த்தனன்விசயன்
பயன்படுந்திறல்வீமனுங்காஞ்சநற்பயந்தான். ௩

தைக்குவேந்தனுங்காஞ்சனனோத்திரற்றந்தான்
திருத்தகுந்திறலான்றருசன்னுவாந்திறலோன்
இரைத்துவேள்வியினெய்தியகங்கையுண்டினன்போல்
விரித்தபைங்கதிர்க்குழையணிசெவிவழிவிடுத்தான். ௪

மன்னுகங்கையாள்சாநவியெனும்பெயர்மருவ
முன்னுகர்ந்துதன்செவிவழிவிடுத்தவம்முனிவன்
சன்னுவென்பவன்றந்தனன்பூருவைத்தந்தான்
அன்னவன்வலாகனையவனசகனையளித்தான். ௫

குசனெனுந்திறன்மன்னனையவன்றாக்குசனும்
இசைவளர்ந்தவேற்குசாம்பனோடெழில்கொளதூர்த்தன்
திசைபுரந்திடுந்திங்களங்குடைக்குசநாபன்
வசுவெனும்பெயர்நால்வரைப்பெற்றனன்மகிழ்ந்தே. ௬

ஓதுநால்வருட்குசாம்பனென்றொளிபெறுமரவோன்
காதியென்னுமோர்மைந்தனைத்தந்தனன்காதி
தாதுசேர்குழற்சத்தியவதிதனைத்தந்தான்
மாதைமாமறையிருசிகன்மணஞ்செயமதித்தான். ௭

மதித்தமாமுனிமன்னனையெய்திநின்மகளை
விதித்தமன்றலினுதவெனவேந்தனுந்தருவன்
உதித்தமாமதிபோல்விளர்த்தொருசெவிபசுத்துத்
துதித்தவாயிரந்துரகந்தரினெனச்சொன்னான். ௮

பெற்றகோதையைத்தாமணம்பொருந்திடான்பேசும்
கொற்றவாம்பரிவருணனைக்கேட்டனன்கொணர்ந்து
முற்றமாதவமுனிவரன்கொடுத்தான்மொழிந்த
கற்றைநறவார்குழற்கன்னியைமணந்தனன்களித்தான். ௯

ஏதமின்றியமகப்பெறவிரும்புமில்லவட்கும்
ஓதுமாதியென்றுரைதருமொன்னிழைதனக்கும்
தீதகன்றதங்குலத்திறைக்குரியசற்சிறுவர்
காதலால்வரவிருசிகமுனிவரன்கருதி. ௧௦

பிரமமந்திரத்தாலுநற்பெரும்புகழரசர்
குரியமந்திரத்தாலுமுண்டாக்கிருவகைத்தாம்
சருவைமாறியவ்விருவருநுகர்ந்தனர்தாங்கும்
கருவைநோக்கினன்காதலிக்கம்முனிசழறும். ௧௧

உனக்குவைத்திடுஞ்சருவைநீதாய்க்களித்துத்தாய்
தனக்குவைத்தவச்சருவினைநுகர்ந்ததன்மையினல்
சினக்குநெஞ்சடைச்சிறுவனைப்பெறுகுலவிருத்தாய்
மனக்கிதஞ்செயுமைந்தனையுயிர்ப்பையென்றிசைத்தான். ௧௨

என்றுகூறலுமனையவளிரக்கினளெனக்கு
நன்றிசெய்யுநன்மைந்தனைநல்கெனநவிலத்
துன்றுமாதவற்றொழுதெழுதுன்னலர்ச்செருத்த
வென்றியேபுனைமகப்பெறுகெனமுனிவிதித்தான். ௧௩

சாற்றுமாறுடன்றுஞ்சமதக்கியமுனியைப்
போற்றுமாறுபெற்றவந்தனள்கவுசிகைபுகலும்
சீற்றநீங்குதன்றுயகன்வீடுறச்செல்ல
ஆற்றுமாதவத்திருநதியாயினளன்றே. ௧௪

அயர்வொழிந்திடுசத்தியவதியெனவறையும்
பெயர்பொருந்தியகவுசிகைதாயெனும்பேதை
துயரகன்றிடவானவர்முதலினர்துதிக்கும்
உயர்பெருந்தவக்கோசிகன்றன்னையாங்குயிர்த்தாள். ௧௫

தரைசொன்மாதவஞ்சாருமெய்ச்சமதக்கிதழுங்கு
முரசமார்ப்புறரேணுகைதனைமணமுயன்று
கருதுசீர்புனைசிலமகவுயிர்த்துமாங்கவையாம்
பரசுராமனைப்பார்பொறைநீங்குறப்பயந்தான். ௧௬

பரசுராமனென்றுரைதருபசுந்துளவணிவோன்
அரசர்யாவருமடிதொழுமாயிரந்தடக்கைக்
குரிசிலாகியகார்த்தவீரியன்றனைக்கோறல்
உரைசெய்வேனெனச்சுகமுனியரசனுக்குரைப்பான். ௧௭

கலிவிருத்தம்.

தத்துதெண்டிரைச்செழுந்தரணிகாத்தபூங்
கொத்தலர்தொடையலாய்குமரனாகவே
அத்திரிபுதல்வனையடைந்தோராயிரம்
கைத்தலம்படைத்தனன்காத்தவீரியன். ௧௮

எத்துசீர்விதுகுலத்துதித்தவேந்தலாம்
காத்தவீரியன்வலிகழறயார்வலார்
சீர்த்தியானொருகுடைநிழற்றித்தெண்டிரை
ஆர்த்தவேழ்வாரிசூழவனியோம்புநாள். ௧௯

பாடினவளியினம்பரந்தபைந்தொடை
சூடினநறுங்குழற்றோகைமாரொடு
நாடினனருமறைநண்ணிநீர்விளை
யாடினனாயிரங்கையினானரோ. ௨௦

எண்ணாறுதிசைகளுமேகிவென்றுவந்
தெண்ணாறுபடையொடுமிலங்கைமன்னவன்
கண்ணறுஞ்செழுமலர்களுலுமந்நதிக்
கண்ணகன்கொழுங்கரைகலந்துவைகினான். ௨௧

காயிருங்கதிர்செய்வேற்காத்தவீரியன்
ஆயிரங்கரத்தினாலடைத்தங்காடலும்
மேயநன்னதிப்புனன்மீண்டிலங்கையார்
நாயகன்றேய்தரநனைத்ததென்பவே. ௨௨

எண்டிசைவென்றவனிறுத்தராவணன்
தெண்டிரைநதிப்புனறேங்கலென்னென
மண்டமர்வெம்படைமருவிமன்னனைக்
கண்டமர்விளைத்தனன்கனன்றுநெஞ்சமே. ௨௩

தரங்கநன்னதிக்குடைதடக்கைமன்னவன்
குரங்கினைப்பிடித்துடன்கொணருமாறுபோல்
இரங்குறக்கைப்பிணித்திலங்கைமன்னனைப்
புரங்கொடுபுகுந்தனன்புகுந்தமாலைவாய். ௨௪

மாதவப்புலத்தியன்மருவிமன்னனின்
ஏதமில்வலியையாரியம்பவல்லாரென்
றோதினன்விடுத்தியென்றுரைப்பவெய்யனை
மேதகுகுணத்தினான்விடுத்திட்டானரோ. ௨௫

மூவகையுலகமுமொய்ம்பின்வென்றுநேர்
தாவரும்புகழ்த்தயமுகனையும்பிணித்
தாவயின்விடுத்தவவ்வரசர்கோமகன்
மேவினன்வனத்திடைவேட்டமாடுவான். ௨௬

வேறு.

குமுதக்கனிவாயினர்கொங்கைசொல்கும்
பமதக்கரிபற்பலகொண்டெதிர்வோன்
சமதக்கினிசாலையடைந்தடிசில்
அமுதக்கனிநெய்யொடருந்தினனால். உஎ

படையோடுணவுண்டுறையைந்தொடையான்
நடையோடுமருந்தவனுடுபணி
விடையோடுறைதேனுவைவீர்கொடு
புடையோடுறவேநகர்போயினனால். உஅ

வளமேவியதேனுவைமன்னவர்கோன்
ஒளிமேவியவூர்கொடுபோயதறிந்
தளிமேவியவம்முனிமைந்தனெனும்
களிமேவியராமனைத்தெழலா. உகூ

சொல்லும்பரசோடுகடுஞ்சரமும்
வில்லுங்கொடுபோந்துவினைத்தெறுநாச்
செல்லும்பரிதேர்கரியான்களின்மேல்
கொல்லுங்கணைகோடிவிடுத்தனனே. ங0

வேறு.

பொருதுவென்றுகீர்புகுதுவென்றழன்
அரசனேவியவக்குரோணிகள்
பரிதிவேற்படைப்பதினென்றேழையும்
ஒருவனாகநின்றொறுத்திட்டானரோ. ஙக

பண்டைநான்மறைப்பரசுராமனும்
அண்டகோளகையதிரவார்த்தெதிர்
மண்டுபோரிடைமைந்தர்மாய்வது
கண்டுபோர்செய்தான்கார்த்தவீரியன். ஙஉ

ஐந்துநூறுகையாடல்விற்கொள
ஐந்துநூறுகையம்புதொட்டிட
வந்துவேகமார்வாசிபூண்டதேர்
வந்துபோர்செய்தான்மன்னர்மன்னனே. ஙங

வெந்திறற்பரசேவவேதியன்
கந்தமுற்றதார்க்கார்த்தவீரியன்
சிந்திறனுயிர்சென்னியற்றவன்
மைந்தர்யாவரும்வல்லேயோடினர். ஙச

ஓமவார்தழற்குரியகன்றுமக்
காமதேனுவைக்கண்டுகொண்டனன்
சேமமாதவன்சேர்ந்தசாலைவாய்
நாமராமனுநண்ணினனரோ. ஙரு

தாதைதாளிணைசார்ந்துகைதொழா
ஓதினனவனுற்றவாறெலாம்
நீதிமாதவனெஞ்சுநொந்துகேட்
டேதநீசெய்தாயென்றுசொல்லுவான். ௫௬

சொல்லுமந்தணர்துன்புசெய்துளார்க்
கல்லல்செய்திடாரருளின்வைகுவார்
வில்லொடம்பையுமேவிவேந்தையும்
கொல்லும்வெஞ்சினங்கொண்டதென்கொலோ. ௫௭

காவல்வேந்தனைக்கடிதுகாதுவெம்
பாவநீப்பவிப்பாரின்வைகிய
தாவிறீர்த்தநீசார்ந்துதோய்தியென்
றேவமைந்தனுமேகினனரோ. ௫௮

நீண்டவானதிநீரமாதியாய்
மாண்டநீரெலாம்வல்லையேகியோர்
ஆண்டுமூழ்கினனடர்கணிச்சியான்
மீண்டுசோலைவாய்மேவிவைகுநாள். ௫௯

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மூத்தழற்கருமந்தாதைமுயலுவானறல்வேட்டன்னை
தத்துவெண்டிரைநீர்க்கங்கைசார்ந்தனள்வானில்வாழும்
மைத்தடங்கண்ணாரோடுமருவிநீர்விளையாடுற்ற
சித்திரரதனைக்கண்டாடெருமாலுளத்திற்கொண்டாள். ௬௰

அன்னகந்திருவற்கண்டாங்காசையுற்றயர்ந்துநிற்பாள்
உன்னினளோமகாலமொழிந்ததென்றோடிவந்தாள்
முன்னுறமுனிவனோக்கிமுனிந்துவெம்பிழைசெய்நம்மோய்
என்னுமிங்கிவளைக்கொன்மினென்றலுங்கேட்டமைந்தர். ௬௧

தாயையாங்கொல்லாமென்றுதாழ்த்தனராகத்தாயென்
றேயரேணுகையையிப்போழ்தெம்முறையிகழ்ந்தநின்றன்
சேயமார்துணைவர்தம்மைநீசெகுத்திடுதியென்னத்
ஆயமாதவத்தோன்சொல்லத்துணித்தனன்பரசுராமன். ௬௨

தன்னுரைவழாதமைந்தன்றனைநனியுவந்துதாதை
உன்னுளம்விழைந்ததென்கொலுதவுதும்பெறுதியென்ன
இன்னெழிற்பரசுராமனிறந்தவர்பிழைப்பவென்னின்
மன்னியதிறப்பென்றெண்ணாதிருப்பநீவாமியென்றான். ௬௩

மைந்தனக்குரைத்தவண்ணமாதவனருளமாய்ந்தோர்
உய்ந்தனரெழுந்தாருற்றவுறக்கநீத்தெழுந்தாரேபோல்
தந்தையுந்தாயுஞ்சாற்றுந்தம்முனென்றுரைத்துளோரும்
அந்தமிலுவகைபூப்பவமர்ந்தனன்கணிச்சியாளன். ௬௪

ஒளிபெறுபரசுராமனொழிந்திடும்வேலைகாடிக்
களிதனைப்பொருதபட்டகாத்தவீரியன்றன்மைந்தர்
இளைதறவொழுகுதாரரிரேணுகைவிலக்கக்கேளார்
களிபெறுமோமசாலைநண்ணினர்தவனைக்கொன்றார். ௪௫

மனையவன்மார்பிலெற்றிமறுகினளுறுதுசோரத்
தனியுறைதவத்தினன்றன்றலைகொடுவெய்யோர்போக
முனிவருமுனிவனேயேழ்முனிவரிவெருவலுஞ்சிப்
புனைமுடியமார்போற்றப்பொருந்தினன்விளங்கினானல். ௪௬

உற்றதுதன்னைக்கையனெல்லைவந்துறுதிக்கேளாக்
கொற்றவிற்றுழுத்துவீரர்க்கொன்றுதன்றுதைசென்னி
பெற்றனன்கொணர்ந்துசாலைப்பெய்திடுமுடலிற்சேர்த்தி
இற்றிடுங்கருமமுற்றவிளங்கழன்மடுத்திட்டானல். ௪௭

அருந்தவன்றலையினேர்தடிந்தவக்காலத்தன்னை
வருந்தினன்மார்பின்மூவேழ்வருமுறைபுடைத்தவாற்றால்
பொருந்தியவறத்திற்றீர்ந்தபுரவலர்தம்மைமூவேழ்
தருந்தலைமுறையுமாய்த்தான்றனிமறைப்பரசுராமன். ௪௮

சமந்தருபரிதிவேளோர்தலைதுமித்துயர்ந்தகுன்றம்
சமந்தாக்குவைகள்செய்துதவையிழிகுருதியாற்றால்
சமந்தபஞ்சகமென்றோதுஞ்சலதிசேர்தடங்களாக்கிச்
சமந்தமம்புரிந்ததாதைதருப்பணமுஞற்றினானல். ௪௯

பேசுமக்கவியத்தன்னாற்பெட்டொடுமகன்காற்றிக்
காசிபன்முதலினோர்க்குக்காசினிபிரித்தளித்துத்
தேசுறுஞ்சித்தாதிதேவர்கள்வணங்கவின்றும்
மாசறுமகேந்திரப்பேர்மலையகத்துறைவான்மன்னோ. ௫0

காதிசேயென்னமுன்னங்கழறியகௌசிகப்பேர்
மாதவனாற்றினோடுமருவுமோர்மகவைப்பெற்றான்
ஓதியமைந்தர்தம்முளொளிபெறுமவனுள்ளான்
கோதறுமதுச்சந்தப்பேர்குலவியகுமாரனுமால். ௫௧

கோசிகன்றவஞ்செய்போழ்தருவலியமருகனென்பான்
பேசுமம்பரீடன்வேள்விப்பெரும்பசுவாகச்சார
ஆசறுமறையங்கோதென்றருமறையனைத்தானன்றோன்
தேசுறுவேள்விச்சாலைசென்றனன்புடஞ்சேர்ந்தான். ௫௨

சேர்ந்தவன்முனிவன்சொற்றசெழுமறையுணர்த்திற்றேற
வார்ந்தசெஞ்சடையோனாதிவானவர்மகத்திற்றோன்றி
ஆர்ந்ததுவேள்வியென்னவானுனக்கருளிப்போயார்
ஓர்ந்தவம்மறையவன்சேலோனுயர்க்கொருபெயருமுற்றான். ௫௩

உற்றபேருரைப்பிற்றேவராதனவ்வொருவன்றன்னைக்
குற்றமின்மறையோனையகோசிகன்மகவாய்க்கொண்டு
பெற்றதன்புதல்வர்தம்முட்பெட்புறுதிகழ்ந்துளோரைச்
சொற்றிடுமிலேச்சராகச்சொற்றனன்வெகுண்டுமாதோ. ௫௪

மருவியமதுச்சந்தப்பேர்மைந்தனேமுதலாமைந்தர்
அருள்புரிதாதைசொல்லையஞ்சிமுன்னவனைக்கொண்டார்
கருதியகௌசிகப்பேர்கலந்தகோத்திரத்தனாகி
உரைதருதேவராதனுவந்தனன்சாலமாதோ. ௫௫

புனைதருமலங்கல்வெள்வேற்புரவலபுகன்றகாதை
தினைதருமுணர்வின்மிக்கோர்நிகழ்த்துவோர்நிகழ்த்தல்கேட்போர்
வினைதருபிறவிவேலைவீழ்ந்திடார்வேண்டல்பெற்று
வனைதருதுளவமாயன்மாணடிபெறுவர்மாதோ. ௫௬

பரசுராம விசுவாமித்திரர்கதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் சகு௬.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கசு-வது, யயாதிகதையுரைத்தவத்தியாயம்.

---

### எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பொருதிரையுததிசூழ்புவிபுரந்தபுரூரவாவளித்தருள்புதல்வன்
மருவலர்வணங்குமாயுவென்றுரைப்போன்மைந்தரையிசைக்குறினகுடன்
அருள்புரியரசவிருத்தனேடாசியரம்பனென்சிலைமதனென்ன
இருவிசும்பாள்வோன்றூதையென்றிறைஞ்சுமேனசுவெனவிளம்புவரால்.

அவர்களிலாசவிருத்தனன்மரபிலாழியான்கலையெனுமரிய
தவர்புகழ்தன்வந்திரியுநல்விருக்காந்தனிமறைச்சவுனகாதி
நவிலுமந்தணருமறுபதோடாறினண்ணுமாயிரமெனும்பருவம்
புவிபுரந்தருளுமளர்க்கனேமுதலாய்ப்புகழ்பெறுவேந்தருமுதித்தார். உ

நானிலம்புரந்தநகுடன்முன்னுயிர்த்தோர்நயம்பெறும்யதிபுகழ்யயாதி
வேனிலஞ்செல்வனிவன்கொலென்றெண்ணவிளங்குசையாதியோயாதி
தேனினமுரலுஞ்செழுமலர்த்தொடைவேய்திண்புயவியதிநற்கிருதி [ன்.
ஈனமொன்றில்லாவறுவரென்றுரைப்பாரிவர்களின்யதியெனவிசைப்போ

துறவறம்பூண்டுதலங்கினனகுடன்சுரர்பதியாய்விசும்படைந்து
திறைதவத்தெழுமாமுனிவர்சாபத்தானெடுமலையாவெனவீழ்ந்தான்
மறமிகுங்குடிமிவேலிளையவர்தாமருவுநாற்றிசைபுரந்தளிப்ப
அறைதரும்புகழ்சேர்யயாதியேழ்புவியுமவிர்மதிக்குடைநிழற்றினனால்.

அள்ளிலைநெடுவேல்யயாதியென்றுரைப்பனகார்தங்குருவெனவமர்ந்த
வெள்ளிதன்மகளைமணந்தனனென்னவிண்டோராதப்பெயர்வேந்த
தன்னரும்பெருமையந்தணர்குலத்திறைதயலைமணந்தெதன்னாசன்
என்னருமுனைவலியம்பதியென்னவிருக்கவமுனிவாவிலைசப்பான். ௫

காவியனின்றகதிர்முலைத்தவர்வாய்க்கருங்குழற்கன்னிசெங்கமலப்
பாவையாக்கெய்வயானையென்றுரைக்கும்பனைமருங்கொளியுமவுணர்
கோவெனுமாடல்விடவருமாவற்கொற்றவன்பெற்றபூங்குழலாள் [௬.
தாவிலாவெழிலார்சன்மிட்டையென்றுரைக்கையருக்கடங்குடைக்கனோா

ஆயிரமடவார்சூழ்தரவணையாகன்சரைவைத்தவருவந்து
தூயநீராடும்வேலையிற்சன்மிட்டைமானமேற்சென்ற
தேயபேர்மடவார்யாவருமஞ்சிதைக்கவிலங்கியதுகில்புனைமெல்லை
யேயமார்தெய்வயானைதன்றுகிலைக்கமுக்தசன்மிட்டையுற்றுடுத்தாள். ௭

கலித்துறை.

காவியன்றருங்கருங்குழற்காரிகைகைசேர்
ஆவியத்துகிலாக்கவர்புனைதலுமுனா
ஓவியம்புரையொண்ணிழையும்பர்தம்முனைவ
காவியத்துறுகாய்ச்சின்பாபெயனகவின்றான். ௮

மங்கைசொல்லுதல்கேட்டெனமருக்துசன்மிட்டை
வெங்கருங்கொடியின்கீழ்வேட்டுறுமாபோல்
எங்களில்விடையிசக்துறுமெனவென்றவளைத்
தங்கரும்புனலுற்றவாழ்கூவத்திற்றவர்ளா. ௯

உன்றுவந்துமங்கையமொழிமொழியாதன்றுன்
வெள்ளிகல்கியமெல்லியல்வைத்தின்மேலிதல்
என்னருந்திறற்படையொடும்வேட்டம்வேட்டெழுந்த
தன்னரும்புகழ்யயாதிகண்டனனவட்சார்ந்தே. ௧௦

தோளின்மேலொருதுகிலளித்தவளைத்தூக்கி
ஆளிநேர்தருமவன்கொபேற்றவல்வரிவை
தாளதாமரைத்தடக்கைதொட்டெடுத்தவிந்தனக்கு
வாளுறாமனேயார்படிமாலெனவளித்தான். ௧௧

அணங்குகூறுதல்கேட்டேயவந்தணர்குலத்து
வணங்குறுன்னிடைவந்தேனென்றனைவளித்தல்
இணங்குமாதெறவென்றறுமோர்தடிபிருந்து
மணங்கொள்வார்குழன்மன்னவனுள்ளங்கொளவழங்கும். ௧௨

மன்றுவானவர்குரவனுக்குத்திதன்மகவாம்
பன்றுகான்மறைதெரிசன்சபித்தசொற்பண்பால்
என்னைவேதியர்மணந்திசையாதென்றுதன்மனைவாய
அன்னமாமெனவன்னவனடைந்தனளன்றே. ௧௩

அடைந்தவார்குழலணங்குதன்னையனுக்காங்கு
நடந்தவாறெலாநவிற்றினனற்றவன்வெகுளி
கிடந்தமாமனத்தொடுமதுகேட்டபினவ்வூர்
கடந்துபோயினன்றனவர்துயர்க்கடல்கலப்ப. கச

குரவனேகலும்விடவருவாமுனங்குறுகி
வருதிநீயெனவணங்கலுமன்னவெம்மகடன்
உரையினால்வருவேமெனவவுணனுற்றுங்கை
புரியுமோர்பிழைபொறுத்தருளெனவவள்புகல்வாள். கரு

காவியன்னகட்காரிகையாயிரர்தம்மோ
டேவல்செய்திடவெனக்குநின்மகளையீங்குதவின்
மேவிநின்னகர்வருதுமென்னவவ்வீரன்
பூவைசொற்படிக்களித்தனன்புரங்கொடுபுகுந்தான். கசு

மன்னிமாநகர்வைகியவெள்ளிதன்மகளைச்
சொன்னயாதிமுன்மணஞ்செயவளித்தனன்சொல்வோர்
அன்னநேர்நடையாடெய்வயானையென்றறையும்
பொன்னனாளொடுந்தாதியரொடும்புரம்புகுந்தான். கஎ

ஓதுமாயிரமடந்தையரோடவணுற்ற
தாதியாகியசன்மிட்டைதன்றொழும்பியற்ற
ஆதிதோளிணைபுல்லினனன்னவளளித்தாள்
சோதிசேரணிபுனையெதுவொடுந்துருவசுவை. கஅ

இகல்செய்வேல்விழியிலங்குசன்மிட்டையையாதி
திகழும்வெள்ளிதன்மகளறியாவகைசேர்ந்தாங்
ககமகிழ்ந்தனனளித்தனன்றுருகுவையநுவைப்
புகழும்வெற்றியும்படைத்தநற்பூருவைப்புவிமேல். ககூ

தொழும்புசெய்தசன்மிட்டைதன்றுணைமுலைதோய்ந்தாங்
கெழும்பிறைக்கொழுந்தெனவளர்குழவிபெற்றிறைவன்
விழைந்ததன்மையைவெள்ளிதன்மகள்விரைந்தறிந்து
குழைந்தநெஞ்சொடுதாதைபாலடைந்தனள்கூற. உ0

மனைவிவெஞ்சினத்தேகலுமன்னவன்றகையா
புனைமலர்க்குழல்பொறுத்தருளெனப்புகன்றடிமேல்
தனிவணங்கலுமறுத்தவடாதையைச்சார்ந்தாள்
நனிநடுங்கியந்நாதனுந்தொடர்ந்துநண்ணினனால். உக

தலைவனவ்வழிவிலக்கினன்றொடாலுஞ்சார்ந்தாள்
மலையெனும்புயன்மாதுசன்மிட்டையைமணந்து
கலையரும்பியமதிபுரைகாதலர்ப்பெற்றாங்
சலகிலன்புசெய்கின்றனனையவென்றறைந்தாள். உஉ

மகள்வருந்தியிங்கியம்புதல்கேட்டவம்மறையோன்
துகள்புரிந்தனைமன்னவனெவனெனச்சுடுசினத்தால்
உகள்கருங்கயலோடரிக்கண்ணியருன்னை
இகழவெவ்வியமூப்புறுகவெய்துகவென்றான். ௨௩

அழன்றுவெள்ளியங்கறைந்தவாறவ்வுருவடைந்தோன்
சுழன்றுவண்டுறைசுரிகுழலினின்வயிற்சென்று
கிழன்றதன்மதிமுகத்திவளேனையமென்மொழிக்குசின்
கழன்றதில்லையென்றிறைஞ்சிடக்காவியன்கழறும். ௨௪

கொடுக்கவும்பிதுவாங்கவுமுரித்தெனக்கோமான்
நடுக்கமவ்வழிநீங்கியிக்கலையுறுகண்ணி
அடுக்குநல்லுருவளித்தவற்காசியளிப்பன்
விடுக்கருந்தவவெனப்பணிந்தனக்கொடியீண்டான். ௨௫

மீண்டவவ்விறைமைந்தரைத்தனித்தனிமேவிப்
பூண்டவிக்கிழவுருவினைப்பொறுத்துநும்மிளமை
ஈண்டுநல்கிடவரசியலளிக்குதுமென்ன
மாண்டதன்றெனவெதுமுதனால்வருமறுத்தார். ௨௬

பூருவாகியமைந்தனம்மூப்புறுப்பொருந்தி
ஏருலாவுகட்டிளமையையிறைவனுக்கீந்தான்
சீருலாவியமதனெனச்சிறந்தவவ்வேந்தன்
வாருலாமுலையார்நலமாந்தினன்மாதோ. ௨௭

பருவமாயிரம்பாவையரினகலம்பருகி
அருவமாமறிவாலசத்தாசையென்றறிந்து
தருவனென்றனக்குருமூருநல்கினன்றன்மூப்
புருவம்வாங்கினன்யயாதியென்றுரைக்குமப்புரவோன். ௨௮

இளமைநல்கியபூருவுக்கிசைத்தவாறிப்பார்
உளமுவந்தவனேற்பநல்லொளிமுடிபுனையா
வளமிகுந்தநாற்றிசையையுமன்னவர்மன்னன்
அளவிகந்தசீரெழுமுதனால்வர்க்குமளித்தான். ௨௯

வண்ணச்சேயிழையசனன்றன்மகண்முதலோனுக்
கண்ணிற்காண்பவுங்காதினிற்கேட்பவுங்கருதோ
டெண்ணிற்பார்த்திடிற்பொய்யெனவவன்சிலவியம்பி
நண்ணிக்காட்டகத்தாற்றுறந்தவமனைநடாத்தான். ௩௦

காமமானதுதுறைமையேதருமெனக்கடிந்து
தீமைதீர்தவனத்தினிற்சிலபகல்சேர்ந்து
பூமியோரடிப்பொலிந்திடுபுனிதனைநினையூ
நாமவேலினுநெறிவிசும்பணைவிகண்ணினனால். ௩௧

ஆவிநேர்தருநாயகனிசைத்தவாறலர்ந்த
பூவினன்றருமூலகுபொய்யெனத்தெளிபுலத்தான்
மேவுமூன்றெனுமெய்யுமங்கொழிக்குபுவிளங்கும்
தேவயானையுமயர்வறவுயர்கதிசேர்ந்தான். ௧௨

யயாதிகதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

அ௨ திருவிருத்தம் ௬௧௬.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௧௫-வது, பூருமரபுப்பரதன்கதையுரைத்த வத்தியாயம்.

வேறு.

போர்வேல்விசயம்புனைகின்றயயாதிமைந்தன்
பார்மேவுவேந்தன்பழிதீர்புகழ்ப்பூருவென்னும்
சீர்மேவரசன்றிகழ்நின்குலச்செல்வனன்னோ
னேர்மாமரபிற்றிறம்யாவரியம்புமீட்டார். ௧

அன்னோன்மரபினருட்கண்ணுவனாதியாய
நன்றன்மறைதேரறவோர்களுளாட்படற்றும்
கொன்னார்வடிவேலிறையோர்களுக்கோதமன்சேர்
மின்னாரிடையும்பிறந்தாற்றுவிளங்கினால். ௨

உன்மாமரபிற்சிலவேந்தரையோதுதுங்கேள்
பொன்மாமணியாற்புனைபூணணிபூருவென்போன்
தன்மாமதலைசனமேசயன்சாற்றுமன்னோன்
தொன்மாமரபின்வழிவந்தவன்றுட்டியந்தன். ௩

உரைப்பாரொளிர்மாமதிவெண்குடையோன்றிறைவித்
திரைப்பார்புரந்தாங்கொருகோனனிசெல்லநின்றான்
விரைப்பாதவங்கண்மிடைகாட்டினில்வேட்டமாடித்
தரைப்பாலடங்காப்படைசூழ்தரச்சார்ந்தகாலை. ௪

கலிவிருத்தம்.

விண்ணவர்க்கருள்புரிவிமலனாகிய
அண்ணலந்துளவினற்கன்புசான்றமெய்க்
கண்ணுவன்சாலைசூழ்சோலைகண்டவன்
நண்ணினனலவளநாட்டினனரோ. ௫

புகுந்தளையுறைந்தெழும்புயங்கத்தாடியேர்
மிகுந்தளையருந்துமெய்ப்பொருளுக்கன்பினன்
நகுந்தளையவிழ்மலர்ச்சோலைநாடுவோன்
சகுந்தலையென்பவடன்னைக்கண்டனன். ௬

கண்டனன் கண்ணிணை களிப்பக் காமநோய்
கொண்டனனெனமனங் கொண்டதன்மையான்
மண்டமர் கடந்த கருண்மன்னர் தங்குலத்
தொண்டொடியாகுமென் றுள்ளத் துன்னினான். ௭

அன்னலங்களிற்றுத்தொகைகிமெனத்
தன்னனுங்குழலிருடவற்செய்சேகாகிகன்
பென்னெனனமீமனைகைப்பற்றிங்கேசுக்குகள்
கண்டுவன்வளர்த்தவண்காதுற்றனனா. ௮

என்றுதன்னியற்கையங்கினைசத்திறக்குவ்க
வன்றிறன்மன்னவவருத்தகீங்கி
நன்றிவலுறைறக்கபின்னடக்கவேலன்டுமேல்
ஒன்றுதியென்னவுரைசெய்கின்றனன். ௯

அன்னவன்றமக்மனைங்கைறத்தகேட்டலும்
இன்னருட்கோகிகேள்ன்றதன்மையான்
நன்னயக்குனைகணிகள்ணிருகொடு
மன்னவர்மன்னவன்மகிழ்ந்துசொல்லுவான். ௧0

நல்லெழில்வான்றலைக்காணிவன்மைகமர்
புல்லுவாவொனப்புகன்றுநீயுமேன்
அல்லலிங்கத்தெறனவனைக்குமேகர்க்தனன்
சொல்லுகன்மனத்திளிற்றேய்த்துவைகினன். ௧௧

ஓர்பகன்மனங்கொளிடைறத்தமற்றைநான்
சீர்வளர்வனகர்சென்றுவைகினன்
பார்புகழ்பாதுரைப்பாவகன்றதேர
வார்குழற்சுருக்குலவயிறுவாய்த்தனன். ௧௨

பிறைநெயவார்க்கவப்பின்னேயாளியின்
விறனைங்கொடுவேலியாடல்வத்தகன்
டைறதருகன்றுவறுபிமாயும்
இறைநகவியிவனென்வென்னிருவோ. ௧௩

எண்ணியகன்றுவனீன்றசெய்வம்
ஒன்னனைகவளிதயன்பதிவயமேவெவ
மன்னைகப்பாக்கவப்மன்னைமன்னிருள்
அன்னைமுப்பார்கொவென்னைறயற்றனமோ. ௧௪

முன்னவனைவடைந்துவமங்குசெய்துயும்
பின்னெறிப்புகல்லைப்பெற்றவன்னனும்
இன்னெறிற்சுருக்கயிறைநந்திமெல்லெமைப்
பன்னலும்பார்த்திவன்புரிச்சொலிசென்றான். ௧௫

ஆங்கெழுந்தந்தாவாணியையுறேல்
வாங்குநுண்ணிடையுனமனைவிமன்னவோர்
நீங்கிலள்கற்பினுற்சிறுவனீபெறும்
ஓங்கெழிற்புதல்வனீங்கோதின்மாலகலை. ௧௭

சங்கநல்லிரேகையைத்தடக்கைகாட்டுமால்
பங்கயவிரேகையைப்பாதங்காட்டுமால்
இங்கிவனேழுலகோம்புமென்றலும்
சிங்கமொத்தவனுளந்தேறினனரோ. ௧௭

பெருவிறற்பாதனும்பிள்ளைதன்னொடும்
உரைதருமனைவியென்றுற்றமின்னொடும்
மருவியங்குறைந்தனன்மன்னனைம்பது
புரவியின்வேள்வியும்புரிந்துவீடுற்றான். ௧௮

நீரகம்பொருந்தியகித்திலத்தொடு
தோரகம்பொருந்துசெங்கதிரின்மாமணி
ஆரகமுடிபுனைந்தாழியேழுஞ்சூழ்
பாரகம்புரந்தனன்பாதனென்பவே. ௧௯

வாழிவானவர்பகைமாய்த்துவார்திரை
ஆழிசூழ்புவிமுழுதாண்டுநல்லறம்
சூழுநான்முறைவழிதூங்கவேள்வியீர்
ஏழுநூறாயிரமியல்பினுற்றினன். ௨0

நிரைத்தமாமணிக்கடனிலத்தையன்பொடு
பரித்ததார்ப்புயத்தினன்பாதனுக்கிணை
தெரித்தநூல்வழிவினைத்திறத்தர்மூன்றெனை
உரைத்தகாலத்தினுமொருவரில்லையால். ௨௧

வேறு.

பாதன்வேட்டநற்பாவையர்மூவர்கள்
விரைசெய்கோதைவிதர்ப்பனளித்தவர்
பொருவிறம்பதிபோன்றிலபிள்ளைவேற்
றுருவுகாண்டலுமொல்லையொறுத்தனர். ௨௨

பெற்றபெற்றபுதல்வரைப்பேதையர்
வெற்றியுற்றநம்வேந்தனைப்போன்றினர்
உற்றுநோக்கினெவற்குயிர்த்தாரெனும்
குற்றமேதருவாரெனக்கோறலால். ௨௩

இறந்திலாதபுதல்வனங்கெய்திடச்
சிறந்தவோர்மகஞ்செய்தனனன்னவற்
கறிந்ததேவர்களந்தணற்கன்பொடும்
பிறந்தசீர்வளர்பிள்ளையைநல்கினார். ௨௪

என்னமாமுனிவேந்தனியம்புவான்
மன்றுசீர்செய்பாதனுக்கும்பர்கள்
மன்னிகற்குமமைந்தனுதித்தவா
றுன்னிநீயுணர்த்தென்றனுபோதுவான். ௨௫

வேறு.

திசைத்தலம்புகழ்தருதேவர்தேசிகன்
மிசைத்தலைவெழுந்தவேலையங்கவோக்குடைத்
திசைத்தனன்றுலோயவவென்றுமாதவ
உசத்தியன்மனைவியையுவந்துபுகல்வினன். ௨௬

அன்னவன்கருக்கொடங்கமர்ந்தவாற்றினால்
இன்னமோர்கருவினுக்கிடமிங்கில்லையென்
றுன்னியகருவினையுதைத்ததன்னலால்
பொன்னெழில்வீரியம்புவியின்வீழ்ந்ததே. ௨௭

அந்தணன்வீரியமாக்குறுத்தவிரிய
மைந்தனையந்தநற்குறுதகைமையால்
உந்தியவீரியமுருவுபெற்றொருவிர்
சுந்தரமகவெனத்துலங்கிற்றக்கணே. ௨௮

புதல்வனைவிருப்பிலன்பொன்றும்போயினன்
இதமுறயபுரிதருமென்னவெண்ணினன்
மதிநுதன்மடக்கையுமகிழ்ந்துகொண்டிலள்
கதிர்முடியமரர்க்காதன்மைந்தனை. ௨௯

பாதனுக்கவித்தவர்பாத்துவாசனென்
றொருபெயர்முன்னமேயுற்றமைந்தனுங்
காசனுக்கன்புடைத்தத்தனதலால்
மருவினன்விதத்தனென்பெயருமன்னனே. ௩0

அன்னவன்மரபினனிலத்துறைநரும்
மன்னருமுதித்தவர்மன்னர்தம்வழிப்
பன்றுதன்பேரிறேர்பதியுண்டாக்கிய
பொன்முடியத்திபன்பெருகுவன்போந்தனன். ௩௧

ஆங்கவன்மரபினனிடத்தராசத்தன்
ஓங்கியமாபுபாருசாவருத்திரும்
ஈங்கதமரபினைமுதலெசேர்த்தனை
ராங்குரைத்திடனியாக்குமென்பவே. ௩௨

மருவியவத்திதன்மாபின்வந்தனன்
குருவெனும்பெயர்புனைகொற்றமன்னவன்
உரைதருமவன்மரபுதித்தனன்புகழ்
பெருகியவெழிற்பிரதீபனென்பவே. ௩௩

பூருமரப்புப்பரதன்கதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௫௨௯.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௬-வது, சந்தனுவின்கதையுரைத்த வத்தியாயம்.

---

கலிநிலைத்துறை.

பிள்ளைவண்டறைதார்ப்பிரதீபனென்பெயரோன்
எள்ளருந்திறன்மூவரையீன்றனனிவரின்
உள்ளுவந்துதேவாபியென்றுரைசெயுமுரவோன்
கள்ளவிழ்ந்தபூங்கானிடைத்தவஞ்செயக்கலந்தான். ௧

அன்னமன்னவனணிசதிர்ச்சந்திரன்மாபிங்
குன்றுகின்றவெங்கலியினிலொழியுமற்றொழியின்
பின்னரம்மரபுதிப்பமாண்பெருந்தவம்புரிந்தீங்
கின்னமவ்வகினன்களபகற்கிராமமென்பதினே. ௨

பொய்யறத்தவம்மியற்றுமப்புரவலற்கிளையோன்
கையினிற்றனிதொடப்படுமாக்கையைக்கவின்சேர்
மெய்யெனப்பெறவிளக்குவனுகலின்விழுப்பேர்
ஐயமற்றசீர்ச்சந்தனுவெனவிவணடைந்தான். ௩

சந்தனுப்பெயர்மன்னவன்சாபமாங்கடைந்து
வந்தகங்கையாடனைமணம்புரிந்துயிர்த்தருள
மைந்தனித்தமாநிலம்வியக்குறுந்திறல்படைத்தான்
அந்தண்கோதையர்மணந்திடாவிரதமுமடைந்தே. ௪

தசைசொல்சந்தனுப்பின்னரும்பராசரன்றழுவக்
கருதுமெம்மெழிற்றுதையைப்பெற்றகன்னிகையாய்
அரியதண்புனலம்பியான்மனையகம்வளர்ந்து
மருவுசத்தியவதிதனைமன்றல்செய்தனனால். ௫

சந்தனுப்பெயரான்புணர்சத்தியவதிதான்
கந்தனுக்குநேர்சித்திராங்கதனொடுகெருதார்
மைந்தனுக்கியல்விசித்திரவீரியமன்னும்
வெந்தனுக்கொருவீரனைவிரும்பிநல்கினளால். ௬

செய்தவார்க்கருங்குழலினர்மதனெனவிகழ்த்தும்
சித்திராங்கதனெனும்பெயர்த்திண்டிறற்செம்மல்
கொத்துலாந்தொடைச்சித்திராங்கதனெனக்கூறு
மத்தவாரணவிகர்த்தகந்தருவனன்மாய்ந்தான். ௭

அங்கண்மாவிலம்புகழ்தருகாசிவேந்தளித்த
நங்கைமார்செயம்பாலிகையம்பிகைதம்மைக்
கங்கையாண்மகன்சுயம்வரங்கண்டெடுத்தளிப்பப்
பொங்குசீரினன்விசித்திரவீரியன்புணர்ந்தான். ௮

புணர்ந்துவைகியநாளிலப்புரவலன்கயநோய்
மணந்துமாய்ந்தனன்மற்றவன்றாயெனுமதிப்பாள்
இணங்குகம்மாபிறந்ததென்றெண்ணிமுன்னீன்ற
குணங்கொள்செம்மாதவவியாதனைவரமனக்குறித்தாள். ௯

நினைந்தகாலையிலம்முனிமுன்னர்நேர்போந்திக்
குனிந்தவார்சிலைநுதலிருடாயுரைகொண்டு
புனைந்தவார்கழல்விசித்திரவீரியன்புணர்ந்த
கனிந்தசொல்லியரிருவரைச்சிலதினக்கலந்தான். ௧0

கழறுமாதரவ்விருவருங்கண்ணிலான்றனையும்
விழையுஞ்சீர்புனைபாண்டுவாம்வேந்தையுமளித்தார்
அழிவிலவ்வேதவல்வியாதனையுவந்தனைதொழுதந்த
ஒழிவிலாவறமுரைக்குங்கல்விதுரனையுயிர்த்தாள். ௧௧

கண்ணிலானெழில்களிக்காந்தாரியைக்கலந்தாங்
கண்ணல்வாளரவுயரியவரசனேமுதலாம்
கன்னூற்றுவரொடொருநங்கையையளித்தான்
எண்ணிலாதசீர்ப்பாண்டுவென்றிசைக்குறுமிறையோன். ௧௨

குந்தியென்னுமோர்கொடியிடைதன்னையுங்குளிர்மாற்
றுந்தியென்னுமோருத்திமாத்திரையெனவுரைக்கும்
கந்தமன்னுபூங்குழலையுங்கடிமணம்புணர்ந்து
சந்தமன்னியதடமுலைதழுவுமக்காலில். ௧௩

மாதர்மென்முலைமனைக்குறிஞ்சியன்னுயிரொழிகென்
றேதுசாபமங்குற்றனனுற்றபின்மனையார்
தீதிறேவரைவரத்திறத்தேர்ந்தனரன்று
தாதைமார்களைப்பெற்றனர்மனநலந்தளிர்ப்ப. ௧௪

தருமனாசனிக்காற்றிறையைச்சமனை
உரைசெய்குந்தியாங்குறுமுறைதருமனையுயிர்த்தாள்
மருவிகல்லறம்புரிதருதருமனைவலியால்
அரியசீர்புனைவீமசேனனையருச்சனனை. ௧௫

அகனிலத்தவர்புகழ்பரித்தேவரையனையா
முகிலெனப்பொலிகருங்குழன்முகிணகைச்செவ்வாய்
இகல்படைத்தவெவ்வேல்விழிமாத்திரையென்பாள்
நகுலனைச்சகதேவனைநல்கினளன்றே. ௧௬

கூறுகின்றவவ்வைவருங்குழையொடுகுழன்மேல்
சீறுகின்றவவ்வேல்புரைசெழுந்தடங்கண்கள்
ஏறுகின்றபாஞ்சாலியைமணந்திளந்தேறல்
ஊறுகின்றமென்குதலையஞ்சிறுவரையுயிர்த்தார். ௧௭

ஒதுமைவருளொப்பறுமருச்சுனனோவில்
காதன்மைத்துனனாகியகண்ணனோடுதித்த
சூதுநேர்முலைச்சுபத்திரைதோளிணைதோய்ந்துன்
தாதையாமபிமன்னியுமன்னனைத்தந்தான். ௧௮

ஆடல்வாளபிமன்னியுவென்றுசொல்லரசன்
ஏடலர்மலர்மாலையான்விராடனீன்றெடுத்த
தோடுசேர்குழலுத்தரைதோணலந்துய்த்தான்
வீடுசேருநீபிறந்தனைவியனிலம்பிறங்க. ௧௯

விரிந்தபோரிடையரவுயர்கொடியினன்வீழப்
பரிந்தநெஞ்சமோடமர்க்களத்தடைபரித்தாமா
துரந்தவெங்கணையாலுயிர்தொலைந்திடாவண்ணம்
புரந்தனன்னுனைக்கருவினிற்றேவகிபுதல்வன். ௨௦

மாற்றருந்திறன்மன்னநின்மைந்தர்நால்வர்களில்
சாற்றுசீர்ச்சனமேசயனெனும்பெயர்த்தநயன்
ஆற்றன்மன்னநின்சரித்திரங்கேட்டபினழன்று
சீற்றவெம்பணிவேள்விசெய்குவனெனத்தெரித்தான். ௨௧

சந்தனுவின்கதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௫௪௫.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௭-வது, அநுமரபுரைத்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அணிதிகழ்யாதிமைந்தரைவருளநுவென்றேத்தும்
மணிதிகழ்பூணினன்மாபினிலங்கன்வங்கன்
இணையறுகலிங்கனுதியிறைவர்வந்துற்றான்றோர்
தணிவாப்புரந்தநாட்டைத்தம்பெயர்புனைவித்தாரால்.

அங்கனென்றுரைக்குமன்னனணிபெறுமரபுவந்த
பங்கமிலெழிலுரோமபதனெனப்பகருமன்னன்
பொங்கெழிற்சாந்தையென்னும்புதல்வியைத்தயரதப்பேர்
மங்குலினுதவுகையான்வழங்கிடவளர்த்தன்றோனே. ௨

மழைவளம்வறந்தகாலைமருவுதன்றேயமெல்லாம்
பொழிதருமாரிபெய்யப்பொலிதரமடவாருய்த்த
தழைகலைக்கோடுபெற்றதவத்தினாற்களித்தமன்னன்
விழைவொடுசதுரங்கப்பேர்வேந்தினையுயிர்த்தான்மன்றே. ௩

அன்னவன்மரபின்மன்னராங்காடளித்தபின்னர்ச்
சொன்னவனுடுகாத்தான்றலங்கெழிற்குந்தியென்பான்
பன்னுகன்னிகையென்றேறும்பருவத்திற்கதிரோற்கீன்ற
கன்னனென்றுரைக்கும்பேர்சொல்கருதருங்கொடையானுமால். ௪

அருமரபுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௫௬௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௮-வது, எதுமரபுரைத்தவத்தியாயம்.

### எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மண்ணகமுழுது மொருகுடைகவித்த மானவேல் யயாதியென் றுரைப்போன், வெண்ணகைத்துவர்வாய் வெள்ளிதன்மகளை விருப்பொடு புணர்ந்துமுன் னளித்த, தண்ணறுந்தொடைசே ரெதுமரபுரைப்போர் தவப்பயன்சாற்றுதற் கெளிதோ, கண்ணனென்றிறைவ னுதித்ததென்ற வன்சீர் காவலற்கருந்தவன்சுழறும். ௧

மருவலர்புகழுமெதுவெனுமன்னன்மகிழ்ந்தினிதளித்தருண்மைந்தர்
தரைபுரந்தருளுஞ்சகத்திரசித்தோர்தயங்கியகுரோட்டன்வண்டாற்றும்
விரைகமழ்மலர்த்தார்நளனெனுமுரிபுவாம்வேந்தனென்றுரைதருகால்வோர்
புரையறுமவரிற்சகத்திரசித்தாம்புங்கவன்சேய்சதசித்தே. ௨

கள்ளவிழ்நறுந்தாரணிசதசித்தாயகாவலனளித்தருள்புதல்வன்
இள்ளையங்கிளவிவணிதையர்வேட்குங்கேகயன்கேகயன்சிறுவன்
தள்ளரும்புகழ்சேர்தருமனென்றிசைப்பார்சாற்றியதருமனற்றநயன்
அள்ளிலைநெடுவேற்றருமகேத்திரனுமாசனென்றியம்புவான்றே. ௩

அலைக்கருங்கடல்சூழ் புவிப்பொறைநீத்த வாடல்வேலாங்கவன் புதல்வன், கலைக்கடல்கலந்த குந்தனென்றிசைப்பார் கவின்பெறு குந்தனுக் குதித்தோன், வெலற்கருந்திறற்சா வஞ்சியனவன்றன் விருப்பொடுமுயிர்த்தருடநயன், சிலைக்கரும்பொழித்த மதனெனமடவார் செப்பெழின் மயிட்டுமானுமால். ௪

## கலிநிலைத்துறை.

மத்தமால்கரியயிட்டுமானளித்தருள்மைந்தன்
பத்துமாதிசைபுகழ்தருபத்திரசேனன்
முத்தநீள்குடையன்னவனுயிர்த்திடுமுதலோன்
தொத்துலாந்தொடைத்துன்மிதன்றநகனென்றோன்றல். ௫

உரைத்ததுன்மிதன்றநகனென்றுரைக்குமாங்கவரில்
வரைத்தடம்புயத்தநகனுமன்னவன்மதலை
அரைத்தசந்தனமப்பியவணிமுலைத்துவர்வாய்
விரைத்தண்கோதையர்விரும்பெழிற்கிருதவீரியனால். ௬

கேளொடுஞ்சுரும்பாற்றுதார்க்கிருதவீரியன்சேய்
வாளொடும்பொலியாயிரந்தடக்கையான்வையம்
கோளொடும்பகைநீங்கியமதிக்குடைநிழற்றி
வேளொடும்பகைக்குறுமெழிற்கார்த்தவீரியனே. ௭

பகருமன்னவனெண்பதினாயிரம்பருவம்
புகாறும்படிபாரகம்பொதுவறப்புரந்து
மகிதலம்புகழ்மழுப்படையாளனுன்மடிந்தான்
தகைசெயன்னவன்றநயர்களாயிரர்தம்மில். ௮

பார்புரந்தனரைந்துபேரேனையோர்பகர்ந்த
வர்தழைந்தகூர்மழுப்படையாளனாலிறந்தார்
போர்தழைந்தவேலவர்தம்மரபுதிண்புவிமேல்
சீர்தழைந்திடவளர்ந்தனநாடொறுந்திகழ்ந்தே. ௯

கூறுகின்றவேலெனுமகனென்றுசொல்குரோட்டன்
ஆறறிந்திடுமிரசினவான்றனையளித்தான்
ஊறுமின்னறைத்தாரவனவிபுவையுயிர்த்தான்
வீறுசெய்குருசேருவைவிருப்பினல்கினனால். ௧௦

அன்னமன்னவன்சித்திரரதன்றனையளித்தான்
பன்னுசித்திரரதன்சசிவிந்துவைப்பயந்தான்
மன்னுநற்சசிவிந்துவிம்மாநிலமேழும்
தன்னதாணையேசெலுத்தினல்லறந்தயங்க. ௧௧

வையமேழுமோர்மதிக்குடைநிழற்றுமம்மன்னன்
தையலார்பதினாயிரரிளமுலைதழுவிப்
பொய்யிலாதவோர்பத்துநூறாயிரம்புகலும்
ஐயபேரெழின்மைந்தரையளித்தனனன்றே. ௧௨

அந்தமைந்தரிலாறுபேரவனியின்முதலோர்
சந்தறுங்கியதடம்புயத்தருவரிற்றவத்தால்
வந்தவன்பிருதுச்சிரவசுவவன்மதலை
உந்துதெண்டிரைப்பார்புகழ்தருமனென்றுரைப்பார். ௧௩

தருமனாகியமன்னவனுசநசுத்தந்தான்
பெருமையேதரும்ருசகனையுசநசுப்பெற்றான்
முருகுலாந்தொடைருசகனுமளித்தனன்முதனால்
மருவுசாமகன்முதலியவைவரைமாதோ. ௧௪

தேமலர்த்தொடைத்தெரியலர்செருக்களத்திரியப்
பூமுகக்கணைபற்பலபொருதருந்திறலான்
காமனுக்கிணையாகநற்கவின்பெறுங்காளை
சாமகப்பெயர்மன்னவன்விதர்ப்பனைத்தந்தான். ௧௫

சேரும்வண்டினமிளநறுமாந்தியசிலம்பும்
வேரியந்தொடைவிதர்ப்பனென்றுரைபெறுவேந்தன்
போரியன்றதன்புகழையார்புகல்பவர்புவிமேல்
சீரியன்றவன்மமதலைதன்றிறத்தையுந்தெரிக்கின். ௧௬

அலைதழைத்ததண்பாவையினழிபுணீர்பெருகச்
சிலையழுத்தியதிண்புயத்தொன்னலர்சிரத்தைத்
தலைபழுத்துயர்பண்ணையின்கனியெனத்தள்ளும்
கொலைபழுத்தவேற்கிதன்மகிழ்ந்தளித்தசேய்குந்தி. ௧௭

குந்திசேய்திருவிருத்தியாங்கொற்றவனவன்சேய்
தந்திமாப்படைதசாருகன்றசாருகன்றநயன்
விந்தைசேர்விறற்றடம்புயவியோமன்மற்றவன்சேய்
சிந்துசூழ்தருகுவலயம்புகழுஞ்சீமூதன். ௧௮

திகழுநெட்டிலைவேலினனெனச்சொல்சீமூதன்
விகுதியென்னுமோர்வேந்தனையுயிர்த்தனன்விகுதி
தகுதிபெற்றிடுந்தீவிரதன்றனைத்தந்தான்
அகனிலம்புகழ்வனவரதன்றனையளித்தான். ௧௯

நானிலம்புகழ்நவரதனெனப்புகனாதன்
கானலர்ந்ததார்த்தயரதன்றனைக்களித்தளித்தான்
தானவெங்கரித்தயரதன்சகுனியைத்தந்தான்
மானவெஞ்சிலைக்கரம்பனையவன்மகிழ்ந்துயிர்த்தான். ௨0

கரம்பனென்பவன்றேவராதனைக்களித்துயிர்த்தான்
விரும்புநல்லெழிற்றேவராதப்பெயர்வேந்தன்
பெரும்புகழ்ப்பெயர்த்தேவசத்திரன்றனைப்பெற்றான்
சுரும்புசூழ்தொடையவன்மகன்மதுவெனச்சொல்வார். ௨௧

மதுவெனும்பெயர்மன்னவனளித்தருண்மைந்தன்
குதசதப்பெயர்க்கொற்றவன்குதசதனுயிர்த்தான்
அதிர்திரைக்கடற்புவிபுகழநுவினையநுவும்
இசமுறும்புருகோத்திரன்றன்னையீன்றெடுத்தான். ௨௨

இயம்புமப்புருகோத்திரனீன்றலக்கிசுமுன்
நயக்குமெவர்திறற்சாத்துவதற்றாவவன்பால்
நயஞ்செயந்தகவிருட்டுணிநானிலம்புகழ
வயஞ்செய்போசனுதியரெழுவோர்களும்வந்தார். ௨௩

போசனன்மரபுதித்திடும்புகழ்ப்புரவலரை
ஓசையுற்றமாபோசனென்றுலகெலாமுரைக்கும்
தேசுபெற்றுயர்விருட்டுணியுயிர்த்தருள்சிறுவர்
ஆசகற்றநமித்திரனுதிமூவர்களாம். ௨௪

அரசர்தாழநமித்திரனுவந்தினிதளித்தோர்
உரைசெய்மாநிலம்புரக்குறுநிமமனனொடுசேர்ப்
பிரசநாண்மலர்ப்பிணையல்வேய்பிரச்சினிமுதலாப்
புரசைமால்களிற்றரசரோர்மூவராம்புகலின். ௨௫

குனிதடஞ்சிலைநிமமனனளித்தருள்குமரர்
நினைவருஞ்சுடர்ச்சமந்தகமணியைநீடொளிய
தினகரன்றரப்பெறுதிறற்சித்திராசித்தும்
புனைகழற்பிரசேனனும்புரவலர்க்கரசும். ௨௬

பேட்டொடுஞ்சுரும்பாற்றுதார்ப்பிரிசினியென்போன்
கோட்டுவெஞ்சிலைச்சுவர்க்கனுங்கொற்றவனொடும்போர்
வேட்டமாக்களத்தெதிர்தருவெருவலருயிரை
ஊட்டுவெம்படைச்சித்திராங்கதனையுமுயிர்த்தான். ௨௭

நிறைபெறும்புகழன்னவனிருவரினிகழ்த்தும்
அறனிழுக்குருவக்குரூரப்பெயரரசன்
முறைதிறம்பிடாதொழுகியதேவவான்முதலாத்
திறல்விளங்கொருநால்வரையுயிர்த்தனன்சிறப்பால். ௨௮

## எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடையலர்பாரவுநெடுமுடியரசனந்தகனெனமுனமறைந்த
மடலவிழ்நறும்பூந்தொடைபுனைமார்பன்மகிழ்ந்தினிதளித்தருண்மைந்தர்
முடிவறுபுகழ்சேர்குகுரனும்புவியோர்மொழிபயமானனுமுதலாப்
படையுடைநால்வரவர்களிற்குகுரான்பயந்தசேய்விருட்டுணியென்ப. ௨௯

இருட்டியலளக வீணைமுலைத்துவர்வா யிளையவர்மனநனி குழைய,
மருட்டியநெடுங்கண் மடந்தையர்விரும்ப மதனெனவயங்கெழில் படைத்
த, விருட்டுணியுயிர்த்தான் விலோமனைவிலோமன் விளங்குமோ ராழி
யேழ் புவியும், உருட்டியகபோத ரோமனென்றுரைக்கு மொருவனை யுயி
ர்த்தனனன்றே. ௩0

பாவையர்முகம்போற்பங்கயமலரும்பழனநாடுடையவல்வேந்தன்
ஆவொடுபசும்பொற்காவெனவளிக்குமந்தகன்றனையளித்தனனால்
கோவடுகுருதிவேலவனீன்றகுமரனைத்துந்துபியென்பார்
தாவரும்புகழ்சேர்துந்துபியென்போனருஃபியோதாவினைத்தந்தான். ௩௧

வேகமார்பரித்தேரான்னவன்மதலைவிளங்கியபுநாவசுவாமால்
பாகுநேர்தீஞ்சொற்பாவையர்விரும்பும்பசுங்கழைவேணிகரன்றோன்
ஆகுகனுயவாசனோடெழில்சோகுகைதன்னையுமளித்தான்
ஓகையாகுகனுந்தேவகனொடுஞ்சீருக்கிரசேனனையுயிர்த்தான். ௩௨

கஞ்சனைமுதலாமைந்தர்நால்வரையுங்கதிர்முலையெழிற்கஞ்சவதியாம்
அஞ்சனவிழியாளாதிநால்வர்களாமரிவையர்தம்மையுமளித்து
மஞ்செனுங்குழலம்மகளிர்நால்வரையும்வாள்வசுதேவனுக்கிளவல்
எஞ்சலின்மணஞ்செய்துவப்புறக்கொடுத்தானிலங்குவேலுக்கிரசேனன்.

காவெனுங்கொடைக்கைத்தேவவான்முதலாங்காதலர்நால்வர்தம்மோடு
தேவகிதிருததேவைநற்சாந்திதேவைசீர்திகழுபதேவை
தாவறுயாணர்தருசகதேவைசாற்றுநல்லணித்ததிதேவை
மாவகிர்விழித்தேவாக்கிதையென்னுமாதரைத்தேவகனளித்தான். ௩௪

கொண்டலிற்கருகி நெய்த்துமெத்தென்று கொழுமலர்த் தொடைபுனைகூந்தற், றொண்டையங்கனிவாய்த் துடிபுரைமருங்குற் சுடரவிர்மதிமுகத்தணியாள், தெண்டிரைப்பிறந்த தெள்ளமுதெனுஞ்சொற் றேவகிமுதலெழுவரையும், வண்டிமிரலங்கல் வனைவசுதேவன் மன்றல்செய் துவந்தனன்மாதோ. ௩௫

அந்தகன்மதலையென்றுமுன்னுரைத்தவாடலஞ்சிலைப்பயமானன்
மைந்தனென்றிசைப்பர்விடூரதனென்னுமானவேலரசனையன்றோன்
சுந்தரவதனச்சூரனென்றுரைக்குந்தோன்றலையீன்றனன்சூரன்
சந்தணிபுயத்தனெனும்பயமானன்றன்னையின்புறவளித்தனனால். ௩௬

பற்றலர்மகுட மணித்தழும்பிருந்த பதயுகமலர்ப்பய மானன், பெற்றிடுமதலை சினியெனவுரைப்பார் பேசியசினியெனும் பெயரான், கற்றவர்புகழ நல்லறநிறுவிக் கருதலர்களத்திரிக் தோட, வெற்றிசெய் நெடுவேற்போசனென்றுரைக்கும் வேந்தனையுயிர்த்தனன் விருப்பால். ௩௭

திருந்தலர்புகழும் போசனன்மதலை திருதிகன்றிருதிகன் சிறுவன், மருந்தினுமினிய மழலையந்துவர்வாய் வரிவிழிமலர்க்கருங் கூந்தல், முருந்துறழ்மூரன் மடந்தையர்விரும்பு மொய்ம்பனைமதன்கொலென் றிசைப்பப், பொருந்துநல் லெழில்சேர் கிருதவன்மாவாம் புரவலனெனப்புகலுவரால்.

அன்னவன்றேவமீடனையுயிர்த்தானவனடற்சூரனையளித்தான்
மன்னரியசூரன்மாரிடையெனும்பேர்மாதினைமணந்துநல்கினனால்
முன்னுநற்குணஞ்சால்வாள்வசுதேவன்முதலியபுகழ்ப்பதின்மரையும்
இன்னெழிற்குந்தியாதியோரைந்தாமேழையர்தம்மையுமன்றே. ௩௯

காவிலத்தவரும்புகழ்வசுதேவனைஞ்செயப்பிறந்தவஞ்ஞான்று
வானகத்தமரார்மாயனையளிப்பான்மகிழ்தரவிவனெனமதித்தாங்
கானகத்தோடுதுந்துபி முழங்கியவானகத்துந்துபியெனும்பேர்
வனமற்றெருவிருமெய்வேண்டுவானேனுளுர்றனைநுவப்பொடுமன்றே. ௧௦

சூரனென்றிசைக்கும்போசன்மெய்த்தநிவார்மகனைத்தோழமைக்குந்தனுக்க ளித்தான், வருணைமாமையுடையவளைக்கைத்தகுஞெழிற்பெயர் குந்தியெனுமன் ஞள், சிருதுதருவா சஸுதருவாததாற் செங்கதிர்ப் பண்ணைவந்சேர்ந்து, போருறுநெடுவேற்கன்னனையுயிர்த்துப்புனலுறுகுடிலையுயின்விட்டாள்.

செங்கதிர்க்கடவுளளித்தநல்வரத்தாற்றீங்கறதின்றவத்திருவை
மங்குலினுதவுன்றுதைநூதாதைமன்றல்செய்துவந்தனன்வழங்கு
நங்கைதன்னிளையார்கால்வரிலொருத்திநல்கினளாந்துகேகயரைப்
பங்கமிலொருத்திதந்தவக்கிரனும்பாலனைப்பயந்தனளன்றே. ௧௨

அணிகிளரொருத்திதிறற்சிசுபாலனைகியமன்னனையளித்தாள்
இணையின்மற்றொருத்திவிந்தனுடெழிலாவிலங்கநுவிந்தனையீன்றாள்
தனிவருவயஞ்சால்வாள்வசுதேவன்றன்னுடன்பிறந்தமன்னவரும்
அணிதிகழ்தரும்பூண்மைந்தரையளித்துவயங்கினருவப்பொடுமாதோ. ()

வானவர்புகழும்வாள்வசுதேவன்வாணகைத்தேவகிமுதலாம்
தேனிமிர்கூந்தலெழுவரோடுரோணிதிருமணம்புரிந்தனனுரோணி
பானிறமானவலாயுதன்முதலாம்பாலரைப்பயந்தனள்பகரும்
வனையர்தாமுஞ்சிறுவரையீன்றாரிலங்கெழிற்றேவகியென்பாள். ௧௩

கீர்த்திமான்முதலா வறுவரையளித்துக் கிளர்ந்தவேழாமக வென் னைப், பார்த்தலம்பரித்த பஃறலையரவப்பாணிறன் றனைவயிற்றடைந்து, போற்றலையவுணர்த்தொலைத்துமெய்ந்நிறுத்தப் புனைதுழாய்ப்புராணனிப் புவிமேல், சார்த்திருமேனிக்கண்ணனென்றுதிப்பக்கருதருந்தவத்தினல் கினளால்.

௪௫

மன்னவர்மன்னதன்னிடத்துதித்து மருவுதன்னேவன்மாயையினுல், பி பின்னல்வெண்டிரைப்பார்ப்பொறைதவிர்ப்பதற்காய் பேரொளிபிறந்தத ற்பின்னர், உன்னுடைத்தந்தைக்குவப்புறுந்தாயாமுருவநற் சுபத்திரைத னையும், அன்னமென்னடையதேவகியென்பாளளித்தனளெனமுனியறை ந்தான்.

௪௬

மறைமுழுதுணருமாதவத்தீர்காள்வகுத்தவிக்காதைகூறுநரும்
நிறைதருமன்பாற்கேட்டசமகிழுநிகரிலாதவருநீணிலக்கண்
குறைவறுமாயுள்சேர்மகவுயிர்த்துக்குலவிவீற்றிருந்தபின்மாலோன் [ன்.
உறைதருபதம்பெற்றுவப்பரென்றுரைத்தானுணர்வுடைச்சூதமா முனிவ

கலிவிருத்தம்.

என்னனுமிருந்தவினைகூறப்பொழுதி
சன்னியக்கூளவனிகண்ணன்செய்திறம்
மன்னவன்கேட்டதென்வகுத்துமாமுனி
சொன்னதென்சொல்லெனச்சூதன்சொல்லுவான். ௬௪

ஏதுமாரபுனைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௫௬௪.

௯-வது, ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

## ௧0-வது, ஸ்கந்தம்.

## ௧-வது, திருவைநாரவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

பரிதிவானவன்மாபெருபொளிவாத்திங்கள்
மாபுகேட்டவேன்மன்னவன்மதிமாபுதித்த
ஒருதனிச்சுடர்திருவிளையாட்டெலாமுன்னம்
தெருளக்கேட்பதுவிரும்பினன்செப்புமுற்றனறெல். ௧

புனலுமுன்னவனிருப்பவும்பொறுப்பதற்கரிதா
நனிகனற்றுவெம்பசிப்பிணிகளிதன்மற்றின்றுன்
முனிவன்றூயகொண்முகமலர்முனரியின்முறைத்த
அநகன்மாக்கதைதெய்வமூறவருத்தவினன்றே. ௨

அரவுயர்த்தவனுடைப்படைக்கடலேவர்
ஒருவனப்பாடியாம்படிசடப்பேரர்புவியாக்
கருவின்மற்றெறிகொத்தசெந்தாமரைக்கண்ணன்
பொருவின்மாக்கதைவிரித்தலேபுகலெனப்புகன்றன். ௩

தனிவென்சங்குதடக்கையான்சேவடிப்பிறந்த
பனிகொள்கங்கைநீர்படிக்தவர்போலவன்னெஞ்சம்
கனியமாயவன்கதைதெரிந்தரைப்பவர்கேட்போர்
புனிதராவரென்றருந்தவன்புகலுமுற்றனறெல். ௪

அரசுருப்புனைவுணராளாற்றனைநிலப்
பாவைமாவிலைப்படைக்கொடுமன்னவருஞ்சேர்த
உருவெடுத்தனளுற்றனளுற்றதுநினைத்தான்
மறைமலர்ப்பொருட்டிறைதருமறையவற்கன்றே. ௫

சேட்டநான்முகன்கிளரொளிவிரிந்தசெம்பவளக்
காட்டினல்லெழில்கவற்றியகற்றையஞ்சடைமேல்
சோட்டிளம்பிறைசூடியகுழகனோடமரர்
ஈட்டஞ்சூழ்வரவெழுந்துபாற்கடற்புலத்திறுத்தான். ௬

பாலைவெண்டிரைப்பாற்கடல்கருங்கடல்கடுப்ப
உருவமேனியினொளிபரந்திமைப்பவெஞ்செஞ்சூட்
டரவணைத்துயிலமலனையிறைஞ்சுபுபரவ
இருவிசும்பிடையெழுந்ததோர்வாணிமற்றன்றே. ௭

பட்டவர்தரவாணியின்படிபொருடெருண்டு
வட்டவானசத்துறைபவர்வாண்முகனோக்கி
விட்டுரைத்தனன்வெள்ளிவெண்ணிலாக்கதிர்விரியக்
கட்டவிழ்ந்ததாமரையுறைகலைமகள்காந்தன். ௮

தண்ணந்தாமரைத்தலைவிவீற்றிருந்ததார்மார்பத்
தண்ணலானகதுந்துபிக்கருள்சுரந்தளிக்கும்
விண்ணிற்றீர்ந்துநீர்வெண்ணகையரம்பையரோடு
மண்ணின்மேம்படுமெதுகுலத்துதிக்கெனவகுத்தான். ௯

அவர்பசுந்துழாயணிமுதற்றேவுவந்தளிக்கும்
மெவியனீயெனவெண்டிரைக்கருங்கடலுடுத்த
நிலமடந்தையைவிடுத்தனனிரையிதழ்க்கமல
மலரின்வந்தவன்மாண்டதன்பேருலகடைந்தான். ௧௰

பாரெலாமொருபனிமதிக்குடைநிழல்பரப்பும்
சூரசேனனின்னருள்பெறுதோன்றல்பைந்துணர்த்தாழ்
வேரியந்தொடைவிறல்வசுதேவன்வெண்டரங்க
வாரியன்னகுண்டகழ்மதின்மதுரைகாத்தளித்தான். ௧௧

பருந்துசூழ்தருபரிதிவேற்படைவசுதேவன்
புரிந்தவெள்வளைபொலமுகடுடைபடமுழங்க
சுரும்புசூழ்பசுந்தோட்டநாண்மலர்த்தொடைசூட்டித்
திருந்துவெண்ணகைத்தேவகிதிருமணம்புணர்ந்தான். ௧௨

செஞ்சிலைத்தழும்பிருந்ததோட்டேவகனீன்ற
அஞ்சொல்வஞ்சியோடந்தரதுந்துபிமுழங்கப்
பிஞ்சுநாண்மதிபிறங்குவெண்கோட்டுமால்யானைக்
கஞ்சன்பொற்றடந்தேர்விடக்கடிநகர்க்கெழுந்தான். ௧௩

மருப்பிளம்பிறைவாணுதற்றேவகியெட்டாம்
கருப்பம்வென்றிவேற்கஞ்சனுருயிர்தெறுமென்று
உருத்துவானிடையொலித்ததோருரைசெவியோர்ந்து
நெருப்புவாயுகுவானுறைவாங்கினனின்றான். ௧௪

குவளைகாண்மலர்பிணைந்தனதொழுங்கடைமழைக்கண்
அவளைமாய்ப்பலென்றடைந்தனன்மடங்கல்வசுதேவன்
தவளவாணகைத்தங்கையாருயிர்தெறத்தகைத்தோ
கவளமால்களிற்றரசவென்றினிதுரைகழறும். ௧௫

அழியும்யாக்கைமேல்விழைவினைழிவிலவாய
பழியும்பாவமும்படைத்திகொலென்றதெள்ளமுதம்
பொழியுமாறெனப்புகன்றனன்புதுமுகையவிழ்ந்து
வழியுந்தேறலின்வண்டுவீழ்ந்தாற்றுதார்மார்பன். ௧௬

சொற்றநன்மொழிகேட்கலன்கொலைத்தொழிலுணிய
மற்றினிச்செயல்யாதெனமன்னவன்குறித்துப்
பொற்றதாமரைமுகிழ்முலைப்பூவையைக்கொல்லல்
பெற்றபச்சிளங்குழவிநீசொல்கெனப்பெயர்த்தான். ௧௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சேட்டிளம்பரிதிமார்பிற்றேவகனன்பிணக்கம்
மோட்டிளந்திங்கட்கோட்டுமும்மதக்களிற்றியானை
கோட்டிளியற்றுதிண்டேர்கொய்யுளைப்புரவிசூழ
வேட்டபூந்தெரியல்வேந்தன்விழுமணிக்கோயில்புக்கான். ௧௮

மற்றடமார்பனின்பமாந்திளைத்துறையுநாளின்
சிற்றிடைப்பவளச்செவ்வாய்த்தேவகிகருப்பந்தாங்கிப்
பெற்றமென்குதலைத்திருச்சொற்பிள்ளையையங்கைதாங்கிக்
கற்றிண்டன்னதிண்டோட்கஞ்சன்முன்னெய்தினாளால். ௧௯

வளரிளந்திங்களன்னமதலைவாண்முகத்தைநோக்கி
விளைவதொன்றில்லையாமால்விழுத்தகுகுழவிதன்னால்
குளிர்மலர்த்தெரியன்மார்பகொண்டிலைசென்மோவென்னத்
தெளிகலனுரைத்தமாற்றஞ்செய்ம்மல்கொண்டேகினாளால். ௨௰

தாழிருந்தடக்கையானைத்தாமவேற்கஞ்சன்முன்னர்
யாழுடைமுனிவாங்கெய்தியாதவமரபாவார்
சூழ்கடலுலகின்பாற்றேவராவரையெல்லாம்
ஆழியாண்பிறந்துவீட்டுமாசெவன்றுரைத்துச்சென்றான். ௨௧

கோதைவேற்கஞ்சன்றானுங்கொடுந்திறற்காவலோயி
ஆதலின்முனிவன்கூற்றுமறிந்தனன்முனிந்துபாண்வண்
டூதவாய்விரிந்தபூந்தாருக்கிரசேனனென்னும்
தாதையைப்போக்கமாற்றித்தனியரசெய்தினானால். ௨௨

இன்றளிர்ப்படலைமாலையாதவரியற்றி
வென்றியாங்களிற்றியானைவிறல்வசுதேவனேறு
சென்றுயர்குழுமேதாயுங்கட்டேவகிதன்னையாங்கு
வன்றளைப்படுத்திப்பெற்றமகவெலாமாய்க்கலுற்றான். ௨௩

கூற்றனன்குழவியாறுகொன்றபினுலகந்தாங்கும்
ஆற்றலஞ்சேடன்மாதராலகட்டகத்தனாக
மாற்றருஞ்சிறப்புவாய்ந்தமாயையைநோக்கிமல்லற்
பாற்றிரைத்துயிலுநங்கள்பரஞ்சுடர்பணிக்குமன்றே. ௨௪

கந்துகொல்களிநல்யானைக்கஞ்சனைக்கரந்துமல்லல்
நந்தகோன்மனையின்வைகுநறுநுதலுரோணியாலின்
அந்தளிர்வயிற்றின்வைத்தியாக்கெறிகுவளையுண்கட்
செந்தளிருருவமேனித்தேவகியிளஞ்சூன்மாதோ. ௨௫

சிறப்புடையமுதின்சாயற்றேவகிவயிற்றின்வந்து
பிறத்துநாமுலகமெல்லாம்பிறைநுதற்கன்னியென்று
நறைத்துணர்தூவிவாழ்த்தநலந்தரப்பிறத்திநீசென்
றறற்கருங்கூந்தற்செவ்வாயசோதையவ்வயிற்றிலென்றான். ௨௬

புள்ளுயர்கொடியினானைப்போற்றியமாயையாங்கே
தெள்ளமுதனையதீஞ்சொற்றேவகிவயாவைவாங்கி
ஒள்ளொளிபரந்தவுண்கணுரோணியென்றுலகமேத்தும்
வள்ளிதழ்க்கோதைமாதர்வயிற்றிடைவைத்ததன்றே. ௨௭

ஆயிரந்தலையநாகத்தறிதுயிலமர்ந்தவம்மான்
மாயையங்ஙனமுஞற்றமாவிதழ்க்குவளைவென்று
சேயரிசிந்தவாட்கட்டேவகிகருப்பம்வீந்து
போயதென்றங்கண்மூதூர்புலம்பொடுமயர்ந்தன்றம்மா. ௨௮

கலிநிலைத்துறை.

எண்ணுமெண்ணெயுமிமையமற்றெப்பொருளகத்தும்
நண்ணுநாரணனலத்தகுமாதவம்புரிந்த
வண்ணவானகதுந்துபிமனத்துவந்தடைந்தான்
தண்ணென்வெண்டிரைத்தடங்கடனிலப்பொறைதவிர்ப்பான். ௨௯

தண்மதுக்கமழ்தாமரைத்தலைவிவீற்றிருந்த
ஒண்மணித்திருமார்பினனுளத்துவந்துறலால்
விண்வழுக்கிவீழ்வெங்கதிர்ப்பரிதிகொலென்னக்
கண்வழுக்குறுகதிரொளிகஞலினன்மன்னன். ௩௦

பின்னல்வெண்டிரைப்பிறந்ததெள்ளமுதினிற்றேனின்
கன்னலிற்சுவைகனிந்தசொற்றேவகிதேத்துத்
தன்னகத்தினிற்றோன்றியதனிப்பெருஞ்சுடரை
மன்னர்மன்னவன்மனத்தினால்வைத்தனன்மாதோ. ௩௧

கலைநிரம்பியகற்றைவெண்ணிலாக்கதிர்மதியைக்
குலவுநல்லெழிற்குணதிசைபொறுத்தவாபோல
உலகெலாந்தனதுந்தியந்தாமரைகாட்டி
இலகுசோதியையேந்திழைபொறுத்தனளன்றே. ௩௨

மாலையந்துழாய்மாகதப்பசும்புயல்வளர்வான்
கோலவாவிளக்களிரின்மேல்விழைதலென்குறிக்கேன்
சேலுலாவுகட்டேவகிதிருவயிறந்து
ஆவிளந்தளிர்போலுமென்றடைகுறல்போன்மால். ௩௩

மூடக்குந்தெண்டிரைமுழங்குபாற்கடலைகிகிந்தி
வடிக்குமென்மலரோதியவ்வயிற்றகத்தமர்ந்தான்
ஒடிக்குமஞ்சுடர்மாகதவுருவினதொளிமேல்
நடத்தல்போன்மெனத்தோன்றினமெய்ப்பகுகாப்பு. ௩௪

அஞ்சலஞ்சலென்றருளிதற்றுயிலிளிக்கு
வெஞ்சினக்கடக்களிற்றுவெண்கோடடிப்பிடுக்க
மஞ்சனென்வயிற்றுற்றனுமினைத்துகொண்மாதர்
கஞ்சநாண்முலைகடந்தெழுமுலைமுகங்கறுத்த. ௩௫

பட்டகாரிருட்படலமெண்டிசையிறும்பாற
விட்டதண்கதிரொளியிறைலல்லதுவிளர்த்து
வட்டவாண்மதிகிர்த்தநுவண்டினைத்துனைவப்பக்
கட்டவிழ்ந்தபூங்கோதைதீங்கதிர்கைவதனம். ௩௬

மாற்றிலாதபொற்கொழுந்தின்மாமணிவிளக்கன்ன
தோற்றங்காண்டலுங்கடிமைபண்டையளல்லள்
ஆற்றன்மாயனேயவ்வயிற்றகத்துவந்துறைந்தான்
கூற்றம்போலுயிர்குடிப்பவென்றுணர்ந்தனன்கொடியோன். ௩௭

அளையுறைந்தவாளரவெனமுனிந்துமற்றின்னே
குளிர்மலர்ப்பசுங்கோதையைக்கொலுமென்றுன்னும்
இளையருண்முதிரேந்திழையுயிர்விட்டொல்லின்
விளையுஞ்சாலவும்வெம்பழியெனமனமீளும். ௩௮

இருக்கினிற்றின்மற்றேதின்மெல்லியலிசைக்கிடக்கின்
உரைக்கிலுண்ணினிவெங்குற்றமனைத்துக்குமோவென்றும்
கருத்தறைதலாற்கண்டுயில்கண்டுயிலெல்லாம்
ஆரத்தமுண்டிலங்காழியானுருவமேயானும். ௩௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுடர்ந்தவிர்பூந்செம்பொற்றோடவிழ்மலரிறைனும்
விடம்பொதிமிடற்றிறையும்விண்ணவர்குழுவுமீண்டித்
தடங்கடலுலகமெல்லாந்தன்வயிற்றிருப்பமற்றோர்
மடந்தையாள்வயிற்றுவாழுமாயனைவழுத்தலுற்றார். ௪௰

தெளிக்குநான்மறையுமின்னந்தெளிவதற்கரியதெய்வ
விளக்கமேஞானசுந்தவென்னமேனியதுமாவை
வளைத்திடப்பட்டோர்கின்னேமதிப்பரோமுவராக
உளத்தெளிவுற்றோர்பார்ப்பருங்கோமற்றொருவனன்றே. ௪௧

ஆக்கமுமழிவுமின்றியகண்டமாயமலமாகி
வாக்கொடுமனத்துக்கெட்டாவள்ளலேயறத்தின்வாழ்வே
தீக்கவுந்தீயோர்தம்மைச்செய்வினைநலத்தினோரைக்
காக்கவுமன்றோகோடிகடவுளிவ்வுருவமம்மா. ௪௨

பாழிவாய்ச்சுடிகைநெற்றிப்பஃறலைப்பாந்தண்மீதே
ஊழிவாயண்டகோளமுடைபடக்கோத்ததெண்ணீர்
ஆழிவாய்வளர்வாய்மற்றுன்னடிப்புணைபற்றப்பெற்றோர்
எழிரும்பிறவிவேலையெளிதினிற்கடப்பான்றே. ௪௩

இருட்குறும்பெறியத்தோன்றுமிளங்கதிர்ப்பரிதிபோல
மருட்பெருந்திமிரமோடிமாண்டகவிளங்கஞானப்
பொருட்கதிரில்லாதாமேபூந்துழாயலங்கன்மாலை
அருட்கடல்பிறந்திலாயேலாழிசூழுலகமம்மா. ௪௪

ஆதிநின்னாமமெல்லாமஞ்செவிமடுத்தும்வாயால்
ஓதியுமழகுவாய்ந்தவுருவுகண்களிப்பக்கண்டும்
கோதில்வீட்டின்பமெல்லாங்கொள்ளைகொண்டுண்பரன்றே
மோதுவெண்டரங்கமுந்நீர்முதுநிலமாக்கடாமே. ௪௫

கற்றையங்கதிர்கால்பைம்பொற்கிங்கிணிகவைஇயதெய்வச்
சிற்றடிக்கமலப்போதுதீண்டவென்றோற்றதேயோ
ஒற்றையந்திகிரிச்செல்வவொருபெருங்கமலத்தாளால்
அற்றைநாட்பொதியப்பெற்றவங்கண்மாஞாலந்தானே. ௪௬

ஆக்குமாறென்னையீதியணிசடையானையீதி
போக்குமாறனைத்துங்காப்பப்புகுதிநின்றுண்மையெம்முள்
பூக்குமாறுணர்த்திலாதாய்புவனமோடெமையுமாய்ப்பான்
ஊக்குவாய்தொழில்கண்மூன்றுமுன்னவேயயன்மற்றுண்டோ. ௪௭

மாயையால்விளைந்தவண்ணமல்லதுவாய்மையாக
மாய்தலும்பிறத்தருனுமன்னுயிர்தனக்குமில்லை
மாயையிற்றீர்ந்துநின்றமற்றுனக்குண்டுகொல்லோ
மாயைநின்றோற்றமெல்லாமதிக்கினோர்விளையாட்டன்றே. ௪௮

இனமலரண்ணலாதியீசனவ்விமையோரேத்தி
வனைமலர்விலோதமாதுன்வயிற்றுறைகுழவிவெய்ய
கனலுமிழ்திகிரியெம்மான்கஞ்சனைக்கொல்லுமொன்றும்
நினையலென்றணங்கைவாழ்த்திநிலைக்களங்குறுகினாரே. ௪௯

நளியிருட்பிழம்புசீத்துநானிலம்விளக்குகின்ற
குளிர்கதிருமிழ்வெண்டிங்கள்குணதிசையுதிக்குமாபோல்
தெளியமுதன்னசாயற்றேவகியிடத்துநின்றும்
ஒளிமணிவண்ணத்தண்ணலுதித்தனனுரோணிதன்னில். ௫0

கலிநிலைத்துறை.

தாமரைக்கரகான்றில்வெண்சங்கொடுசுழல்வாய்
நேமிவெங்கதைதனையிகழ்த்தாமரைநிலவுத்
தேமலர்த்தொடைமார்பினிற்றிருமலர்சிறப்பக்
காமர்கட்டெழிற்கவுத்துவங்களத்தினிற்கவின. ௫௧

இருட்குழம்பெறிக்கெறிமணிமுடிவெயிற்கற்றை
விரிக்கவாய்தொடிவில்லிடவெண்ணிலாமதியைச்
சிரிக்கும்வாண்முகத்திலகுபொற்குழையொளிசிதற
நிரைத்தபன்மணிக்காஞ்சிபொன்றுடைமேனிலவ. ௫௨

கருவிமாமுகிற்றொழுந்தெனக்கண்கவர்மேனி
திருவிற்காண்டொறுநிந்திடச்செய்யதாமரைக்கண்
அருள்பொழிந்திடவற்புதக்குழவியாய்த்தோன்றும்
விரைசெய்பூந்துழாய்விமலனைக்கண்டனும்வியந்தான். ௫௩

கலிவிருத்தம்.

வானருமதியெனவந்துதோன்றிய
கானகாடனைக்கண்டுகைத்தொழாத்
தேனருதாமரைச்செங்கணிருக
ஆனகதுந்துபியன்பினைத்திறன். ௫௪

ஈனகல்விளங்கவிர்ப்பரிதியென
வானுறைவழக்குசெவ்வண்ணக்கோடியாய்
பானிறக்கோடியாற்பாதுகாத்திட
நீனிறக்கோடியானீதுசெய்யவே. ௫௫

செய்யதாமரைமலர்ச்செல்விகாதலை
யையாத்தாங்கியபாலைமண்மிசை
வெய்யகோவாசனைவிட்டற்கன்றுகொல்
உய்யகாருருவைவந்தடைந்தவண்ணமே. ௫௬

மன்னவன்படைச்செயல்மன்னன்செய்கையாப்
பன்னுதல்போற்றனிப்பரமமாயனீ
முன்னமேயியற்றியமுறைவகைச்செயல்
நின்றுடைச்செயலெனநிகழ்த்தல்செய்வான். ௫௭

என்றனையீனத்தூழியின்றசெல்வியும்
ஒன்றருந்தொன்முதறோற்றங்கண்டனள்
கன்றுவந்துவகைசீர்காட்டவார்தரக்
கன்றுகாண்கறவையிற்கசிந்துபோற்றினள். ௫௮

காணுயிர்த்ததுபுனல்கனல்கறங்குகால்
வானுயிர்த்தவன்றனைவருத்துகின்றபூந்
தேனுயிர்த்தலர்ந்ததார்ச்செம்மன்மற்றுனை
நானுயிர்த்தனனெனனகையுடைத்தரோ. ௫௯

கழிந்தொருநான்முகன்காலந்தீர்தலும்
அழிந்துமண்முதலியவனைத்துநின்னுற
ஒழிந்துநீசேடனென்றுரைப்பநின்றனை
செழுஞ்சுடர்நின்னிலைசெப்பற்பாலதோ. ௬௦

வெஞ்சினநிருதர்நீள்வேருறப்பவான்
செஞ்சிலைநிமிர்குதைகுழைத்தசேவக
கஞ்சனென்றுரைபெறுகடுங்கட்கூற்றினுக்
கஞ்சினனஞ்சினனழிப்பவேண்டுமால். ௬௧

காமர்வெண்ணிலாவுமிழ்கடவுட்சங்கொடு
நீமுகத்துமிழும்வெந்திகிரிநீள்கதை
தாமரைநறுமலர்தாங்குமிவ்வுரு
மாமுகில்வண்ணநீமாற்றல்வேண்டுமால். ௬௨

இவ்வுருக்கொண்டுநீயென்கொளுன்றனை
பவ்வவெண்டிரைத்துயில்பரமமற்றெனை
மவ்வலங்கருங்குழல்வழுத்தமாயவன்
செவ்விதழ்விண்டனன்செப்பினானரோ. ௬௩

முன்னநீர்நற்றவமுயலத்தோன்றினேம்
உன்னிகர்புதல்வனையுதவுகென்றலால்
எந்நிகர்யாமலதில்லையாலுமக்
கந்நிலைபிறந்தனமார்வமுற்றவே. ௬௪

என்றனனவ்வுருவிகந்துமாமணிக்
குன்றனானொருபசுங்குழவியாயினன்
ஒன்றுரையாடினனுயிர்த்தகாவலன்
மன்றலந்தாமரைவதனநோக்கியே. ௬௫

மன்னவநந்தகோன்மாலைமார்புதோய்
அன்னமென்னடையினளசோதைமற்றொரு
கன்னியைப்பயக்குமக்கன்னிகைக்கொடாங்
கென்னைநீவளர்த்துகென்றிதழ்விண்டானரோ. ௬௬

இமிழ்திரைக்கடலுலகேத்தவவ்வழி
அமிழ்துறழ்சாயலவ்வசோதையீன்றனள்
குழந்தையென்றுரைபெறுகுமுதச்செய்யவாய்க்
கமழலங்கருங்குழற்கன்னிதன்னையே. ௬௭

எழுறத் துயின்றனர் யாருமெங்கணும்
காமரங் கதிர்மணிக் கடைதிறந்தனை
மாமலர்ப் பசுந்தொடை மன்னன் செய்யதாட்
டாமரை யாயிடைத் தளையவிழ்ந்தவே. ௬௮

உயவிருள் விசும்பெலா மொளிசெய்யின் றவிழ்
புயல்வளர் தண்டெளி பொழிய வெய்புழை
அயிலெயிற் றரவாசண்ணன் மாமணி
வெயில்விரி படமுடை விரிசை கவிப்பவே. ௬௯

எழுதரு பனிமதி யெயிறுங்கார் முகில்
துழைதரு மாதிரு நாறு நண்ணிலாப்
பொழின்மதி முகத்தெழிற் புதல்வற் கொண்டுதேன்
வழிதொடை மார்பினன் வல்லையேகினன். ௭௦

கறையணற் பாப்பினைக் கைவிட் டெய்திய
மறைமுதன் மலரடி வழுத்து மாறுபோல்
வெறிகமழாம்பல்வாய் விண்டுதேன் பொழி
துறைதிகழ் பழனையிற் றுன்னினனரோ. ௭௧

விரியனல் வழிவிடை விழிசிவந்தவான்
அரவணைப் பள்ளியா னடைதல் கண்டும்
கரையழி யழுகை செங்கமலக் கைகம் முகிழ்த்
திருவுகாதலி னெறியுதவிற் றென்பவே. ௭௨

அந்தரத் துபிய திர்வதன்றியும்
உந்திதன் டிரைகதிபுதவமானைறம்
கந்தினமாதிர கடக்குக்கன் வாழ்
கொந்தவிழ்மலர் வலைக்குநினைரோ. ௭௩

கன்னென்யாமத் திடைகரந்தகாறுதன்
கள்ளுடைமாங் குருங்குழற் கண்ணி தன்னையின்
றன்னிலைப் புணர்துணை சோதைகண் டுயில்
பன்னிவாய்ப் பெண்மைப் படர்குற்றுவரோ. ௭௪

இன்னதோர் குழவிநாயின்ற தாயென
உன்னலன் மம்பர் கூர்ந்துறங்கு மேழைபால்
மன்றுடைக் குழவியைவளர்த்தி மன்னனைக்
கன்னியைக் கைக்கொடு கடிதின் மீண்டனன். ௭௫

மணிக்கொடியனையதன் மனைவி செங்கையில்
தணிப்பருங் குழவியைத் தலைவனல்கினன்
பிணிக்கறு வல்விசாண் மலர்பிறங்கிட
அணிந்தருள் சதவழுமடைக்கப் பட்டவே. ௭௬

அழுததுகுழவியாங்கழுதவின்னொலி
செழுமணிவாயிலோர்செவிப்பட்டோதலும்
குழலொடுநறுமலர்க்கோதைசோர்தரக்
கழைசுளிகளிற்றுவெங்கஞ்சனெய்தினான். எஎ

மல்லடுதோளினான்வரவுநோக்கிய
சில்லரியொழுகுகட்டுஞ்சொற்றேவகி
கொல்லனின்றிருமகன்கோடற்காகுமிந்
நல்லெழின்மாதெனநயப்பிற்கூறினாள். எஅ

துளிமுகிற்கருங்குழறுவர்த்தசெய்யவாய்க்
கிளியெனமிழற்றுதீங்கிளவிகேட்கலன்
தளிர்புரைசெங்கையிற்றழீஇக்கொள்கன்னியை
வளைதொடுதடக்கையால்வலிதின்வாங்கினான். எகூ

அற்றமில்கன்னிதனஞ்செஞ்சீறடி
பற்றினன்குருச்சுடர்ப்பளிக்குப்பாறைமேல்
எற்றுழிக்கையிகந்தெழுந்துதைத்தனள்
சுற்றமைசிலையினான்றோளிதென்பவே. அ௦

வானுலாய்த்திரிதருவான்முகட்டிடை
நீளொளிமின்னெனநிலவத்தோன்றியெண்
டோளினண்முருகவிழ்துளவத்தாரினள்
காளகவுடையினள்காளிகூறுவாள். அக

ஆசமற்றென்னைநீயறைவதென்கொலோ
பொருதுநிற்கொல்பவன்புதுவெண்டிங்கள்போல்
ஒருவழிப்பிறந்தனனுறைகின்றனனென
வெருவருகட்டுரைவிளம்பியேகினாள். அஉ

முத்தவெண்ணகையினாண்மொழிதல்கேட்டலும்
எத்திறம்புரிந்தனம்யாமற்றீங்கெனாத்
தத்தரியொழுகுகட்டங்கைதன்னொடு
மைத்துனன்வன்றளைமாற்றினானரோ. அ௩

தெய்வமும்பொய்யுரைசெப்பிற்றேயெழு
பல்லவெண்டிரைநிலம்பரவுநல்லெழிற்
கொவ்வைவாய்க்குழவிகள்கொல்லப்பட்டவே
வெவ்வினைவிளைவையார்விலக்கவல்லரே. அச

அழியன்மினுதலுமழிவுமோர்ந்திடின்
ஒழிவிலெப்பொருட்கெலாமுண்மையல்லவோ
பொழிமதுக்கோதையிர்பொறுமின்யான்புரி
பிழையெனப்பணிந்தனன்பெயர்ந்திட்டானரோ. அரு

மழைமதக்களிறனான்மற்றைஞான்றுநல்
எழில்வளர்கன்னிகன்றிசைத்தகூறலும்
குழவிகளனைத்தையுங்கோறல்வேண்டுமென்
றழலுமிழ்வேற்படையமைச்சர்கூறினார். ௮௬

புணர்ப்புறுபூதனையாதியாகிய
தணிப்பருங்கொடியவர்தம்மைமாவிலைத்
இணைப்பருங்குழவிகள்யாவுங்கொல்கெனப்
பணித்தனன்வெங்கொலைபழுத்தவேலினான். ௮௭

முருகவிழ்முள்ளைமுளரிவாண்முகத்
தொருபசுங்குழவிவந்துதித்ததாமென
நாலைமாநிலம்புகழ்ந்தகோபரோர்
கரையிலாவுவகையங்கடலின்மூழ்கினான். ௮௮

ஊழிமாக்கடன்முகட்டொருவனின்றுபோ
தாழ்சினையாலிளந்தளிரின்மீமிசை
வாழ்பசுங்குழவிக்குமறைநவல்வேதியர்
சூழ்வரவியற்றினன்றேற்றச்செய்வினை. ௮௯

சொரிதருபாலினாலன்றுகன்றினை
புரையறுபசும்பொனூற்புனையப்பட்டன
இருபதினாயிரமளகல்லாதுவக்
கருமறையவர்க்கவாவடங்கநல்கினான். ௯௰

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கொத்தளிசுலாவுமுல்லைக்கொழுமலர்கொடுத்தபங்கு
கைத்தளிர்சிவப்பவீசிக்கடிகமழ்சிவிறிநீர்தூய்
முத்தவெண்ணகையார்நெய்தோய்முறிபுரைமேனிமாதர்
நெய்த்தபோன்புபோர்ப்பநெய்விளையாடல்செய்தார். ௯௧

நந்தன்வாழ்பெருந்தண்காலைத்தருபசும்பொற்சுண்ணம்
சிந்துரப்பொடிகளோடுதிசைதிசைகமழவீசி
அந்தளிர்ப்பாரிசாதத்தாய்மலர்த்தாதுபோர்த்த
இந்திரனகரமேய்ப்பவின்னெழிலிறந்ததன்றே. ௯௨

பிடவமென்படலைமாலைப்பெருந்தகைநந்தகோபன்
கடன்மடைதிறந்ததென்னக்கடாய்பொழிகளிற்றுக்குஞ்சற்
கிடுதிறைகொணர்ந்தநல்வேயிசைதெரியாயர்சூழ
வடவரைமருளுமாடமதனைசென்றெய்தினானால். ௯௩

கதக்களியானையன்னகஞ்சனைக்கண்டுவண்டு
மிதிக்கவாய்நெகிழ்ந்ததாரான்வீட்டகமீட்டனோடும்
பொதிக்கடிந்துலகங்காத்தபுகழ்வசுதேவனெய்தி
உதித்ததோர்குழவியென்றுவுரைத்தனன்றழீஇனானே. ௯௪

கொடிப்பசுந்துளவநாறுகோகுலத்தன்னினண்ப
அடுக்குமுற்பாதங்கூர்வேலாசினைக்கண்டாயன்றே
கெடித்தல்செல்லாதிபோதியென்றலுநினைவுகூர்ந்து
வடித்தபூந்தாமமார்பன்வல்விரைந்தணுகலுற்றான். ௧௫

திருவவதாரவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௫.

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

---

## உ-வது, பூதனைவீடுபெற்றவத்தியாயம்.

---

### கலிவிருத்தம்.

செஞ்சுடர்மணிக்கலைசிலம்பொடுசிலம்ப
வஞ்சியெனநின்றொசிமருங்குதடுமாற
கஞ்சுபொதிவெம்முலையருத்துறநடந்தாள்
அஞ்சுவருபூதனையணங்குருவெடுத்தே. ௧

கண்டவர்மனம்பருகுகாவிபுரைகண்ணாள்
வண்டுபடுதாமரையலர்க்கையின்விளங்கப்
புண்டரிகமாதுவரல்போலவருண்மாரிக்
கொண்டல்விளையாடல்புரிகோயிலினடைந்தாள். ௨

காலவிடமூறுமொருகட்செவியையந்தண்
மாலையெனவங்கையிலெடுப்பதனைமான
ஆலுமறையந்தமுமலைக்கடலுநீத்துக்
கோலமுறுகோவலர்கொழுந்தினையெடுத்தாள். ௩

குண்டலமிலங்கவொர்குறங்கினிருத்தி
வெண்டளவரும்பனையமென்னகைவிளைத்து
மண்டுபுனல்வேலிதிகழ்மண்ணுமுயர்விண்ணும்
உண்டவனைவெய்யமுலையூட்டினளணைத்தே. ௪

அறிந்துகையாடிமுலையங்கைகொடுபற்றி
மறங்குலவுவஞ்சமகண்மாமுலைமணிக்கண்
திறந்தொழுகுபாலினொடுசெய்யதளிரன்னப்
பிறங்குகனிவாய்முகில்பிழிந்துயிர்குடித்தான். ௫

ஊறுமுலைதந்திளையருள்ளுயிரையெல்லாம்
ஈறுபுரிபூதனையிறந்துருவுவேறு
நீறுபடயோசனையினின்றமரமெல்லாம்
வீறுயர்நிலம்புகவிழுந்தனளொர்வெற்பின். ௬

கொண்டறவழ்கின்றதொருகுன்றமனையாண்மேல்
தண்டனிதமாமுகிறவழ்ந்துவிளையாட
அண்டர்குலமங்கையரொடாய்தொடியசோதை
கண்டனள்கலங்கினள்கலுழ்ந்தனளெடுத்தாள். ௭

மூப்பிளமையின்றியுயிர்மூவுலகுமுண்டோர்
பாப்பணையின்மீதுதுயில்பண்ணவனையெல்லாம்
பூப்பவனையுந்திதருபூவினில்வகுத்துக்
காப்பவனைநின்றுசிலகாப்பணகள்செய்தாள். ௮

மூரலின்முகிழ்த்தமலர்மொய்த்ததொடைநந்தன்
சார்தருநெறிக்கணுயர்தண்சினைமரங்கள்
வேரறவிழுந்தவள்வெருக்கொளுடனோக்கி
ஓரும்வசுதேவன்மொழியுள்ளினன்வியந்தான். ௯

நீட்டியநற்செவ்விகொடுசேர்ந்ததுமுலைப்பால்
ஊட்டியதும்வல்லுருவமுற்றுவிழுமாறும்
கேட்டனன்வியந்தளிகிளைத்ததுளவோனை
ஆட்டினன்விழிப்புனலணைத்தனனுவந்தான். ௧௦

மட்டொழுகுமுல்லைமலர்மார்பர்முகனோக்கிச்
சுட்டிடுகவிங்கிதுதுணிந்தெனவிசைப்பக்
கட்டழலுமிழ்ந்துகதிர்காலுமழுவாளால்
வெட்டியவரக்கியுடல்வெங்கனன்மடுத்தார். ௧௧

மேதகுகடற்பவளம்வென்றுமிளிர்செவ்வாய்
ஆதிகதிர்மாமுலையருந்தியதிறத்தால்
பூதனையுடற்சுடுபுகைப்படலமண்டக்
காதமொருநான்குவிளைகாரகில்கமழ்ந்த. ௧௨

வீட்டரினைவாகியழல்வெய்யவிடனூறு
மோட்டுமுலைதந்தவளுமுத்திபடர்குற்றாள்
வாட்டுளவிறைற்கமுதுதத்திவழிகொங்கை
ஊட்டுமவர்சேர்நெறியுரைப்பதெவனம்மா. ௧௩

பூதனைவீடுபெற்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௦௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# ௩-வது, சகடமுதைத்தவத்தியாயம்.

## அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மஞ்சாயொளிருந்திருமேனிமழலைப்பசுஞ்சொன்மறைக்கொழுந்தை
அஞ்சாய்மருங்குற்செங்கனிவாயசோதைகனிவாய்முலையருத்தி
நஞ்சாயிரவாய்முழைஞ்சுபொழிநாகங்கிடந்துபெரிதுயிர்ப்பத்
துஞ்சாமணிப்பொற்றொட்டின்மிசைத் துயிலத்துணைக்கண்டுயிற்றினளா[ல்.

சிறந்தமூன்றாந்திங்களின்வாய்ச்செந்தாமரைக்கட்பசுங்குழவி
பிறந்ததிருநாள்விழாவயர்ந்துபிள்ளைப்பிறைவாணுதலன்னை
உறைந்தகாலைப்பசித்தழுதங்கொண்பொன்னடித்தாமரைநீட்ட
மறிந்துசகடம்வீற்றாகிமண்மேலதிர்ந்துவீழ்ந்ததால். ௨

வேறுபடவீழ்நெடுஞ்சகடம்வீழவியந்தேயெடுத்தணையா
ஊறுமுலைப்பாலின்னமுதமூட்டிக்குறங்கின்வைத்துவப்ப
மாறில்குழவிமணிவரையிற்கனப்பமண்மேல்வைத்திடலும்
சூறைவளியாவோரவுணன்சுழன்றுவிண்கொண்டெழுந்தனனால். ௩

சுழிக்குங்கடுங்காலெறிகின்றதூளிப்படலத்திடைமறையக்
குழைக்கும்பசும்பொற்கொம்பனையாள்குழவிகாணாள்குழைவெய்த
வழுத்தற்கரியமறைமுதலைவவ்விக்கொடுபோம்வாளவுணன்
கழுத்துநெரியக்கண்பிதுங்கிக்கன்மேற்கவிழ்புளுயிர்மாய்ந்தான். ௪

விண்டோய்குடுமிநெடுவரைபோல்வீழ்ந்தவவவுணனாக்கைமிசைத்
தண்டாதுறைக்குந்துளவருகிறவழ்ந்துவிளையாடுதலன்னை
கண்டாள்வெருவிக்கைவிதிர்த்தாள்கலுழ்ந்தாள்கைத்தாமரைமலரில்
கொண்டாள்சுரந்துவழிமுலைப்பால்கொடுத்தாளுள்ளங்குளிர்ப்புற்றாள்.

## கலிநிலைத்துறை.

பூவைப்புதுமாமலர்போலெழில்பூத்ததோன்றல்
ஆவித்தகாலைத்துவர்வாயிடையாழிஞாலம்
மேவித்திகழுந்திறனோக்கிவியக்குமன்னை
காவித்திருமாமலரன்னதன்கண்புதைத்தாள். ௬

நிறைவுற்றதிங்கணிலத்தூடெழனோமும்மை
மறுவற்றகாட்சிமறையோன்வரக்கண்டுநன்னர்
நறையுற்றபூமென்கரங்கூப்பியநந்தகோபன்
சிறுவர்க்குநாமம்புனைவாயெனச்செப்பினானால். ௭

மடல்சேர்கழுநீர்மலர்வாட்கணுரோணிசெம்மல்
சுடர்கான்மதியிற்சுடர்கின்றதொர்தோற்றமேய
அடலேறனையாற்ககன்ஞாலமனைத்துமேத்த
மிடல்கூரிராமனெனநாமம்விளம்பினானே. ௮

மன்னைக்கிளைக்குஞ்சுடர்நீலமும்வண்டுதேறல்
உண்ணைக்கிளைக்குநறுநீலமுமொத்தகோல
வண்ணற்குத்தண்ணங்கமலத்தலர்போன்மலர்ந்த
கண்ணற்குக்கண்ணனெனவோர்பெயர்கட்டுரைத்தான். ௯

## கலிவிருத்தம்.

பொருவில்வெண்மையுஞ்செம்மையும்பொன்மையும்
மாபிறுற்றனன்மற்றையுகந்தொறும்
விரவலுற்றகலியில்விழிகவர்
கருமையெய்துபுகண்ணனென்றாயினன். ௧௦

அருமறைத்துறையாடுதடந்திரைப்
பரவைஞாலப்பரப்பிற்றவழ்தர
முருகுவிம்முமுளரியஞ்செய்யகட்
கரியவன்றவழ்க்கற்றனனென்பவே. ௧௧

களித்துவண்டுகளுலுங்களிநறுந்
துளித்ததண்ணந்துழாய்முகிற்கேழல
களிப்பத்தோன்றுமமலர்குவந்தறம்
முளைத்ததென்னமுளைத்தனுமாலே. ௧௨

கடகளிற்றினங்கன்றனையான்மழ
விடையின்மென்னடைகற்பவிளைத்தெனப்
படருங்கன்றின்வால்பற்றினன்மென்மெல
நடைபுரிந்தனன்ஞாலங்களிப்பவே. ௧௩

## வேறு.

தழைத்தநீருலகுதந்துமளித்தும்
அழித்துநின்றவிளையாடுமவ்வண்ணல்
குழைத்தபைந்தழைசெய்கோவலர்குற்றில்
உழைப்படர்ந்துவிளையாடலுவந்தான். ௧௪

உந்திநீருலகமுண்டருள்செவ்வாய்ப்
பைந்துழாய்க்குழவிபண்பினியற்றல்
கொந்துலாநறியகோதையசோதைக்
கந்தண்முல்லைநகையாய்ச்சியர்சொல்வார். ௧௫

கட்டமைந்தசிறுகன்றுவிடுக்கும்
தொட்டுவெண்ணெயொடுதோய்தயிருண்ணும்
மெட்டுறிக்காலினின்றுகைநீட்டும்
எட்டுகின்றிலதுடைக்குமெறிந்தே. ௧௬

வேறு.

ஏரொழுகுதாமரையெனத்திகழ்கரத்தால்
காரிருள்குடித்துவெயில்காலுமணிபொத்திப்
பாரில்விளையாடுமொருபைம்புயலெனச்சென்
றாரிருளகத்தளையெடுத்தனனருந்தும். ௧௭

என்றுபலசின்மழலையேழையரிசைப்பக்
குன்றிணைசுமந்துகுழைவுற்றகொடிபோல
நின்றுசிமருங்கினெழினேரிழையசோதை
ஒன்றுமுறையாடலனுவந்தனளிருந்தாள். ௧௮

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நங்காய்மண்ணருந்தினனின்குழவியெனவில்லையெனநவின்றானாகக்
கொங்கார்ந்தசெழுங்கமக்கோற்றொடிகைபற்றினள்வாய்காட்டுகென்ன
அங்காந்தமணிவண்ணனம்பவளத்துவர்வாயினழகுகாலும்
செங்காந்தண்முகிழ்விரலந்தீங்கிளவியுலகனைத்துந்தெரியக்கண்டாள். ௧௯

விண்கண்டாள்விண்வளாக்கும் வெங்கதிருந்தண்சுடரும் விளங்கக்கண்டாள், மண்கண்டாண்மண்வளைத்த மாகடலும்பேருயர்மால்வரையுங்கண்டாள், தண்கொண்டவெண்கோட்டுத் தளவநெடுவனங்கண்டாடனையுங்கண்டாள், பண்கொண்டவண்டாற்றும் பசுந்துளவோனிவனெனவே பாவினளால். ௨௰

முருகொழுகுமுகிழ்விரியு மொய்த்துளவோன்மாயையினான் மறைத்தலோடும், பருகுவனபோனோக்கிப்பழுத்தொழுகுமன்பினளாய்ப்பாவியன்னை, பொறுகளிறுவருகவளர்போரேறுவருகவெழிற்பூவைவண்ண, வருகவெனத்துகிரில்விளைமணிமுத்தங்கொண்டனளுண்மகிழ்வுபூத்தாள். ()

வேறு.

என்னலுமன்னர்மன்னனீன்றவர்க்கெய்தலாகாக்
கன்னன்மென்றனையதீஞ்சொற்கண்ணனிளமைத்தன்மை
மன்னியவிருப்பிற்காணமாதருநந்தகோனும்
முன்னமெய்த்தவஞ்செய்தார்கொலெனமறைமுனிவன்சொல்வான். ௨௧

சகடமுதைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௯௰.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௪-வது, மருதிடைத்தவழ்ந்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தண்ணிலாமுறுவற்செவ்வாய்த்தரையெனுந்தலைவியோடு
மண்ணினிற்பிறப்பவென்றோர்வசுவினைமலரோன்கூற
அண்ணலந்திகிரியான்மேலன்பெமக்களிப்பாயென்னக்
கண்ணுறுநம்மில்வந்துகண்ணனென்றருளினானேல். ௧

அன்னவரிவர் மற்றம்பொன் னரும்பவிழ்கமலம்விட்டு
முன்னவன்மொழிந்த வாறே மூதிடைபடலைப் பைந்தார்க்
கன்னியத் துளவத் தோன்றல் கண்ணுறக் களியுமன்பால்
இன்னினந்து செல்வி நோக்கி யெய்தினா ளின்பமன்றே. ௨

வளையின மூலத் திங்கள் வாணுதன் முத்தம்பூப்ப
அளியுணவிரிந்த கோதை யயவிர் தாவசோதை யோர்நாள்
முளிதயிர்கடைந்த காலை முழங்குகிருகை முண்ட
ஒளிமணிவண்ணனெய்தியுண்டனன் முலைமற்றன்றே. ௩

பைங்கதிர்க் குழலியன்றன் படாமுலை யருந்து மெல்லைப்
பொங்கியதபொலெல் லுபுணர் முலைசொரிந்த பாலும்
கொங்குலாமலங்கன் மாலைக் கொழுநருந்தளியுஞ் சிந்தச்
செங்கடைமழைக்கட் பேதைதென்றனையோ ராடமன்றே. ௪

எறித்தவெண்டிங்களரு ளாயின் றனியமுதமென்னத்
தெறித்தவெண்டயிர் தண்புள்ளிதிரு முகத்துச் சிறப்பயின்ற
உறைப்பசுங்கொண்டலின்று முடைத்தனன் றடவுத்தாழி
மறைத்தனள் வைத்த வெண்ணெய் வாரினே ருடிந்தும். ௫

மழைக்கருங்கண்ணி நோக்கி மையுறுமிருங்கூந்தலோர்க்
குழைத்தந்தார்வல்லி யென்னைக் குழைக்க தண்மருங்கு கோவைப்
பழுத்ததாண் மறையிலேறுடும் பொருலொருகுங்குமேர்ந்த
விழுத்தவர் தொடாவொட்டாவிமலனைத் தொடர்ந்து சென்றாள். ௬

தளிர்க்கவினழித்த பொற்றாட்டாமரை சிலம்பலோடி
இளைத்தனளென்னை யென்று வாங்கமிரப்பளிதிகாணக்
இளைத்தொளிதவழும் பைம்பொற் கிங்கிணிசிலம்ப வோடுங்
களிற்றினைக் குழலியன்றன் கையகப்பட்டிநின்றான். ௭

தளையவிழ் முளரியன்ன தாட்டுணை நினைவோர்க்கெல்லாம்
விளைதருவினையின் கட்டுவிட்டுமைத்தளவிதேறுக்
களியிருந்தரும்பார் முசுகாந்தன் மென்முகமன்ன
ஒளிவளைக்கயந்தா லன்னையுரலொடு பிணிக்கலுற்றாள். ௮

கலிநிலைத்துறை.

அளைக்கு வெண்மதி தொடு நெடுங்கிரியென வண்டுத்
திளைக்கு விம்மிதம்வேய்ந்தள்ள மூலைகமைத்து
வளைக்குநுண்ணிடைமயிலியல்வயின்வயிறோக்
கொணர்த்துக்கட்டியசயிறெனாவிருவிரற்குறைந்த. ௯

மீக்கி மீக்கித்தன் மிசைரகமழ்தாமரைக் கைகள்
சேக்கவங்கதிர்த் திங்களஞ்சிறு தக்விமப்ப
நோக்கவெம்முலைமடவாள் வருந்துதர்க்கு
யாக்கப்பட்டனனெனக் கவுடிசைத் தகலிமறவன். ௧௦

இருநிதிக்கிறைகாதலெரிபொன்வார்ந்தன்ன
புரிநரம்புளர்நாரதன்புகன்றசாபத்தால்
மருதுருக்கொடுநின்றவைநோக்கினன்மலர்ந்து
கருணைமாமழையசும்பெருந்தாமரைக்கண்ணன். ௧௧

எனலுமன்னவனென்னைகொலிவருவொழுகி
அனையதீங்கொடையாழ்முனியறைதருசாபம்
தனதன்காதலருற்றதுசாற்றுவாயென்ன
வினைமுருக்கியமெய்த்தவன்விளம்பலுற்றனனால். ௧௨

வேறு.

நந்தாதவென்றிநளகூபரனென்றுதேன்சோர்
மந்தாரமாலைபுனைமார்பன்மணிக்கிரீவன்
செந்தாமரைமேற்றிருவிற்றிகழ்மாதரோடும்
அந்தாதுயிர்க்குமலர்ப்பூம்புனலாடுவாரால். ௧௩

விரைநாறுதேறன்மதுமாந்திமென்றூசுநீங்கி
ஆரமாதரோடுகளியாற்புனலாடனேக்கி
மரனாகவென்றுசபித்தான்மலர்வாயவிழ்ந்து
சொரிதேறலென்னச்சொரியாழிசைச்சூழ்ச்சிமிக்கோன். ௧௪

உயர்தெய்வயாண்டொருநூறுநின்றொற்றையாழிப்
புயல்வண்ணன்றன்னையடைவுற்றுழிப்போவதாகச்
செயிர்மன்னுசாபமெனச்செப்பினன்செப்புமாறு
வெயின்மன்னுசெக்கர்மணிமார்பன்விலக்கலுற்றான். ௧௫

வேறு.

தழைதவழ்ந்தபூந்தாதவிழ்தாழிருங்கூந்தற்
குழைதவழ்ந்தகட்டேவகிபச்சிளங்குழவி
இழைதவழ்ந்தபேரொளிக்கதிர்மின்னெனவிமைப்ப
மழைதவழ்ந்தெனமருதிடைத்தவழ்ந்தனன்மன்னோ. ௧௬

உரலொடுந்தனித்தவழ்தருபுயர்வெளியளந்த
விரிதடஞ்சினைபுணர்மருதொசிந்துவேர்பறியா
வரைவிழுந்தெனவீழ்ந்தவம்மருதுருவெடுத்தோர்
பாவியேகினர்பசுந்துழாய்ப்பரனடிபணிந்தே. ௧௭

அசனிவீழ்ந்ததென்றாய்ச்சியரால்வயிறதுக்கி
நொசிமருங்கிறநொய்தின்வந்தீண்டினர்நோக்கிப்
பசியமாமுகில்வண்ணத்தனுரலொடும்படா
ஒசிதலுற்றுவீழ்ந்தனவெனத்தெளிந்தனருள்ளம். ௧௮

அண்ணனந்தகோனறிந்தனன்கைம்முகிழ்த்தறியா
வெண்ணெயுண்டபைம்புயல்பிணிப்பவிழ்த்தனன்விருப்பால்
தண்ணந்தாமரைத்தடக்கையாற்றழீஇயினன்செய்ய
கண்ணிறைந்தனன்படுபுனல்களித்தனனெஞ்சம். ௧௯

மழைத்தகார்முகிற்கொழுந்தனுண்மணிநிறவிசும்பு
இழித்தமின்னெனக்கீற்றிளம்பிறைநுதலுரோணி
தழைத்தகாதலிற்றளிரடிசிவப்புறநடந்தாங்
கழைப்பவர்திலனுடினனுற்றடைகரையின். ௨௦

கண்ணதாமரைக்கண்ணனின்பிறந்தநாளின்றால்
அண்ணலானினமந்தணர்க்குதவுவானடைக
உண்ணிலாவிளையாடலேயுவத்திகொலென்று
வண்ணவார்குழலசோதைசென்றழைத்தனள்வந்தான். ௨௧

தோடுவாயவிழ்தூய்மலர்க்கற்பகங்கொணாக்
கோடுவாய்வைக்குங்கொற்றவன்கூத்தெனைப்புகல்வேன்
பாடல்வாயிளம்பூவையிற்பாவையர்பாடி
ஆடுவாயெனச்சீறடிசேப்பநின்றாடும். ௨௨

ஊறுபற்பலவுற்றவிவ்வுழையகன்றொருபால்
சேறுமாமெனத்தேங்கொள்பூந்தொடையுபநந்தன்
கூறநந்தகோன்கோற்றொடிமாதர்முன்செல்ல
ஏறுபோல்வளர்குழவிகடம்மொடுமெழுந்தான். ௨௩

மருதிடைத்தவழ்ந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௫௩.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௫-வது, விருந்தாவனமடைந்தவத்தியாயம்.

---

### கலிச்சந்த விருத்தம்.

…தங்கமழ்குழன்மங்கையர்நகுதண்கதிர்நகைபோல்
…ம்புந்தளவிளவெண்முகையலர்தாதுழுதகலாச்
…ம்பஞ்சிறைவரிவண்டொடுதளவம்பொழிதண்டேன்
…ந்துண்டுபைந்தொடையாழ்செயும்விருந்தாவனமடைந்தான். ௧

…ண்டற்குலம்விளையாடியகோவத்தனகிரியும்
…டற்சடிமனைநாறியகாளிந்தியுமெறிநீர்
…டற்புதுமணலுங்கதிர்மணிவாலுகக்குன்றும்
…டர்க்கிறைகண்டற்றனனமையாமகிழ்வன்றே. ௨

உழைக்கன்றுறழ்விழியாய்ச்சிபருகிவெண்ணெய்தொட்டுண்டோர்
மழைக்கன்றெனத்திகழ்வோனுயர்வானோர்மணிமுடியால்
தொழக்கன்றியபதத்தான்பசுந்தோட்டின்னறுகருந்தும்
குழக்கன்றினைமேய்த்தானிளங்குறுமாக்களொடம்மா. ௩

வளர்கன்றினதுருவாயொருவைவேற்கொலையவுணன்
தளவம்படர்தண்கானகந்தலைப்பெய்தமையறிந்தான்
துளவம்புனைவிரிதாரவன்றுணைவற்கறிவுறுத்தான்
விளவின்கனியுதிரும்படிவிரைவிற்கொடெறிந்தான். ௪

வையம்பொதிபொற்றண்முகில்வால்வெள்வளையொளிரும்
கையம்புயமலராலிருகாற்பற்றினனெறியப்
பெய்யும்புயலெனவார்த்துமண்பின்றேம்படி வீழாப்
பொய்யும்படுகொலையுக்கனிபுலம்புற்றிடமடிந்தான். ௫

அழன்மன்னியதிகிரிப்படையலர்தாமரைக்கரத்தோர்
எழின்மன்னியசிறுகோலெடுத்தினங்கன்றினந்துரந்தான்
பொழின்மன்னியநறுமுல்லையம்புலத்தெள்ளிணர்க்குரவின்
நிழன்மன்னியதண்ணந்துறைநீரூட்டினனிருந்தான். ௬

புழுங்குஞ்சினமுதிர்வுற்றதொர்புள்ளாகியொரவுணன்
விழுங்கும்பொழுதழலாமெனமிடற்றிற்சுடவுமிழாக்
கொழுந்தண்டளவணிமாயனைக்குத்தற்கெழநெடுமால்
செழும்பங்கயமலரங்கையிற்றீவாய்கிழித்தனனால். ௭

பொருகொக்கினதுருவாகியபுலவுப்படையவுணன்
செருகுற்றனன்விழிமற்றெழுசிறுகன்றினந்தொடரா
முருகுற்றதண்முகைவாய்நெகிழ்முல்லைப்புறவெல்லாம்
விரைகக்கியதளவப்புயல்விளையாடினனுவந்தான். ௮

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

எறிகதிர்வாளாலிருட்குறும்பெறியுமேரிளம்பரிதிவான்பொடிப்பச்
செறியிதழ்விரிசெந்தாமரைக்கண்ணன்சேட்டிளங்கன்றெலாந்துரந்து
முறியிளமுல்லைமெல்லரும்பென்னமூரல்வெண்டயிரளைபொதிந்து
குறுகுறுநடந்துசிறுவர்வந்தீண்டச்சோறுவாய்வைத்தனனெழுந்தான். ௯

முன்னைமுளரிமுகத்தினளாகி முலைகொடுத்திறந்தபூ தனைக்கும், புள்ளுருவெடுத்து விழுங்கிமாய்ந்தவற்கும் பொருவிலாத் தம்பியென்றுரைக்கும், அள்ளிலைநெடுவேலகாசுரனென்போ னவ்வழிமலைநெடும்பாம்பாய், வெள்ளிமுள்ளெயிற்றுப்பாழிவாய்விசும்பு வெளியறவிரித்தனன்கிடந்தான். ௧௦

சேட்டிளந்திங்கடவழ்வரைமுழைஞ்சோர்தீவிடப்பாந்தள்வாய்போலக்
காட்டியவண்ணங்காண்மினேவென்றுகாதலாற்சிறுவராக்கணங்கள்
நீட்டமோடேகப்பவளவாய்மலர்விண்டியம்பலனென்றுமாங்கேகி [ன்.
சூட்டுவாளரவின்மிடறுகீண்டெழுந்தா னுத்திவாளரவினிற்றுயில்வோ

பிளந்தகார்மிடற்றினின்றினக்கன்றுயம்பின்னோடுருந்தரும்பொழுதெரிவன்
இளந்ததார்முல்லைப்பசுந்தொடையாயருயிர்புனைதிருவுருமுய்ந்தெழுந்தார்
வளர்ந்தபாம்புருவாக்கிடந்தவன்பாம்பின்வளர்ந்தவன்சேவடிபடர்ந்தான்
களங்கனிவண்ணத்திறைவிளையாடல்கண்டனன்மலரவன்களித்தான்.

வெருவருபாந்தளுருக்கொடுகிடந்தவெற்றிறலவுணனைத்தாம்
பருவமாமாயன்சோறல்கண்டாடும்பருவமேபுகழ்ந்தனருயர்
புனையுறுமிருவார்தலவ்வாறுபுகழ்ந்ததென்வழங்குவாவென்றைக்
குருதிகொப்புளிக்கும்பரிதிவேல்வேந்தன்கூறினான்மறையவன்கூறும்.

விருந்தாவனமடைந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௪௬௬.

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

---

## ௯-வது, மலரவன் சிறார்க்கன்றுகவர்ந்தவத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாற்குடமருட்டுசெருத்தலான்கன்றுபசிதனப்புல்லுணத்தெவிட்டித்
தாற்றினங்குழுகுதவிழ்ப்படாத்தளவணியாயர்தங்குயர்
விற்றுவீற்றுகப்பாசடைவிரித்துவிராவியேயதனித்தனிமேவி
ஆற்றுறைவயின்றுசெறிதிசையமுனையாற்றடைகரையகத்திருந்தே. ௧

வட்டுடைச்செருகுமுல்லையங்குழலவ்வயிற்றிடைத்திகழவார்கோடும்
கட்டெடுதிற்கோலுங்கைமுதலணைத்துக்கரியமுறிடக்காத்தேந்தி
விட்டொளிர்பசும்பொன்றுறிமெல்விரலின்மிசைவதற்றுரியனதாங்கி
இட்டபூந்தவிசினளிதினின்றயின்றுனிலைமையவர்குழாத்தவிருசர்வோன்.

நிழல்வளரிளங்கன்றுழைதொறும்படாகின்மிவென்றிளொருமைதிறுவி
எழில்வளர்செங்கைமலரில்வெண்கவளமேந்திளவெழுந்தனன்றொடாப்
பழமறைமுதலிருவிளையாட்டுப்பார்க்குநாபின்னமென்றினவன்
ஒழுகுமலரோன்பழவசோடான்கன்றெளித்தனன்மாயையிற்றெருக்கே.

முற்றநான்மறையுங்கற்றறிந்தவருமுறைதமைசான்றுமறைக்குலமும்
தெற்றெனக்காணுவொருபெருந்தீர்த்தன்சிற்றடித்தாமரைசிவப்பக்
கற்றினந்தேடிக்காண்கிலான்மீளுங்காலமென்முல்லையங்கண்ணிப்
பொற்றொடிப்புதல்வர்தம்மையுமந்தண்புளினமேற்காணிலனினைந்தான்

களிச்சுரும்பார்த்தவெண்ணிலவென்றோட்டுக்கள்ளவிழ்முளரியீற்றிருக்கும்
பளிக்கொளியுருவிற்பவளவாய்ப்பச்சைப்பசுங்கிளிமழலையாள்கொழுநன்
ஒளித்தனனென்பதுணர்ந்துபோமுடக்கிணைமலரிடைக்காட்டி
அளித்தழிப்பவன்றன்றுணர்தங்கிருமுளரிகண்டுமாயினனால். ௨

மாற்றருஞ்சிறப்பின்மழலைவாய்க்குடவமைந்தர்தம்வண்ணமும்வனப்பும்
தோற்றமும்வடிவுந்தொழில்களுங்குணனுஞ்சுடர்மணிப்பூணுமந்துகிலும்
ஊற்றிருந்திளந்தேனொழுகுபூந்தாருமூதுதீங்குழலும்வார்கோடும்
வேற்றுமையின்றியங்ஙனம்விளைந்தவிளைவுநாமெங்ஙனமுரைக்கேம். ௬

நறவுவாய்மடுத்துவரியளிமிழற்றுநறுமலர்வடிக்கணைதெரிந்து
சுறவமீதுயர்த்தவேனிலான்ஞான்றேன்றச்சுடர்மறைமாலையம்போதில்
பறவையூர்பறவாப்பூவைவண்ணத்தன்படர்தலுங்குவிமுலைசார்ந்து
கறவைகன்றூட்டிக்களித்தவாய்ச்சியருங்களித்தனர்சிறுவர்க்கண்ணுறவே

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஈன்றதங்குழவிதம்மேலெழுதருங்காதறன்னின்
தேன்றவழ்துளவத்தெய்வச்சிறுவர்மேற்காதல்கூர்ந்தார்
வான்றவழ்குழவித்திங்கள்வாணுதற்பவளச்செவ்வாய்க்
கான்றவழ்முல்லைவேய்ந்தகாரிருங்கூந்தலாரே. ௮

பருவமொன்றிவ்வாறேகப்பாற்கடல்வண்ணனோடும்
கருமுகில்வண்ணத்தண்ணல்கன்றெலாந்துரந்துமன்றற்
குரவமுங்குருந்துங்கோங்குங்கொன்றையுமகிலுஞ்சாந்தும்
மாவமுங்கமழுஞ்சாரன்மலையகத்தேகினானால். ௯

பொற்புறுவரைமேனின்றபுனிற்றிளஞ்சேதாவோடிக்
கற்பகமலர்ந்ததெய்வக்கடிகமழ்சாரன்மேவும்
முற்படுகன்றுக்கெல்லாமுலைசுரந்தொழுகுதீம்பால்
அற்பின்வந்தூட்டல்செய்தவாயர்கையிகந்துமன்னோ. ௧௦

ஊதுவண்டுழலுமுல்லையொள்ளிணர்க்கண்ணிசிந்த
ஆதுரந்தொல்லைவந்தவாயருமலைதவின்றி
மாதர்மீதூறநின்றுமதுப்பொழிமழலைச்செவ்வாய்க்
காதலர்செவ்விநோக்கிக்களித்தனர்நெஞ்சமாதோ. ௧௧

விளைவதெனிதுமற்றென்னுவியப்புடைமனத்தனாகி
வளைமருண்மேனிவள்ளன்மாயவன்வதனநோக்க
உளநனிகசிந்துகற்றுவூறுபாலூட்டுகன்றும்
இளைஞருந்தானேயாகியிருத்தலாங்கியம்பினானால். ௧௨

அவ்வழிநமதுமாயையகத்தனாகிக்கன்றும்
மைவழிகுழல்சூழ்கண்ணிமைந்தருமிருப்பமற்றும்
இவ்வழியிவ்வாறாகியிருந்ததென்னென்றுபார்த்தான்
செவ்வழிவண்டுபாடுஞ்செய்யதாமரையானம்மா. ௧௩

கொடிவளர்முல்லைப்பைந்தார்க்குமாரும்வளரான்கன்றும்
கடல்வயிறளைந்துபெற்றகதிர்மணிதிருவில்வீசச்
சுடர்விரிபசும்பொன்னுடைசூழ்கதிர்க்கற்றைதூற்ற
மடலவிழ்துளவோனாகிவயங்கினன்பெரிதுமாதோ. ௧௪

புனிற்றிளங்கன்றுமாயர்பொற்றொடிப்புதல்வர்தாமும்
கனற்பொலிதிகிரியேந்துங்கார்முகில்வண்ணனாகித்
தனித்தனியமாரோடுதானுமின்றேத்தநோக்கி
அனைத்தையும்படைக்குமண்ணலலம்வரலெய்தினானல். ௧௫

மலரவன்மறுக்கநோக்கிமாயவன்மாயைவாங்க
உலகெலாமளிக்குமாயனொருவனேயாகிச்செங்கை
மலரில்வெண்கவளமேந்திவளரிளங்கன்றுதேடிக்
குலவுதல்கண்டுசெங்கண்குளிர்த்தனனுவந்திட்டானே. ௧௬

கலிவிருத்தம்.

மற்றொருத்திமடுக்கிளர்பூவினில்
பெற்றெடுத்தபிரான்புவியுட்பொதி
சிற்றடித்துணைசேர்ந்தனன்றேங்கமழ்
பொற்றதார்முடிநான்கும்பொலியவே. ௧௭

செழும்பொனண்டந்திறப்பமுழக்கொடு
விழும்புனற்கங்கைவெள்ளந்ததும்பிய
கொழும்பொற்றாமரைப்போதுகுறைந்துநாத்
தழும்பவேத்தினன்றாமரைச்செல்வனே. ௧௮

அற்றமில்லெனவண்டமனுவென
முற்றுகின்றவாணின்றன்முழுமெய்யும்
ஒற்றையண்டத்தொருவழிவைகுவேன்
தெற்றெனத்துணிவேன்கொனின்சீர்த்தியே. ௧௯

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வெங்கதிர்ப்பரிதிமுன்னமேயமின்மினியும்விள்ளாப்
பொங்கிருட்கங்குல்சேர்ந்தபுன்பனியிருளுமன்றே
அங்கண்மாஞாலமுண்டோராலிலைப்பள்ளிதுஞ்சும்
செங்கண்மாமாயநின்பாற்செய்தவென்மாயைதானே. ௨௦

அடைத்துழாய்ப்படலைமாலையமலநின்னிலைமைதேரா
துடைப்பெருமாயைதன்னாலுருப்பலகாட்டுவாயால்
படைக்கையானாகிமற்றைப்படைப்பெலாங்காப்பநீயாய்த்
துடைப்பமுக்கண்ணனாகித்தோன்றுமாயோலமாதோ. ௨௧

அல்லியங்கமலச்செங்கணமலநீயாகத்தன்னை
நல்லுணர்வதனானற்றவமுடையாற்கன்றோ
மெல்லிணர்க்கண்ணிமேயவெஞ்சினவரவுபோல
இல்லதாமெல்லையில்லாவிருள்பலதோற்றத்தானே. ௨௨

மண்ணெலாமுண்டசெல்வவயிற்றசத்துறையாநின்ற
ஒண்ணிறக்குழவிதாளாலுதைத்தலாய்பிழையென்றோநாள்
அண்ணலின்னச்வயிற்றளகப்படாப்பொருளுமுண்டோ
எண்ணினின்வயிற்றுவாழ்வேனிழைத்ததெப்பிழையதாமால். ௨௩

உவப்பொடுமறையோர்வேள்வியூட்டுமின்னவியினாலே
தெவிட்டலாய்த்தெவிட்டுமாறுதீஞ்சுவையமுதமூட்டும்
குவட்டிளங்குவவுக்கொங்கைக்கொடியிடையாயர்மாதர்
தவத்தையென்புகல்வாளின்றவத்தையென்சாற்றுகிற்பேன். ௨௪

வெஞ்சினந்திருகுநஞ்சம்பிலிந்தவெம்முலைப்பாலூட்டு
வஞ்சனையாக்கினாலும்வந்துநின்னடியிற்சேர்ந்தாள்
நெஞ்சுவந்தமுதமூட்டுநேரிழையவரோடாவிற்
கஞ்சனவனையென்னேவளித்திமற்றறிகிலேனால். ௨௫

திருவினர்பெருதுமந்தோ திருவினர்பெருதுமந்தோ
விரியல்வெண்டோட்டுமுல்லைவியன்புலத்துறையப்பெற்றோர்
அருவமாயொன்றாய்ச்சித்தாயகண்டமாய்ப்பரமாநந்த
உருவமாய்நின்றாய்நின்னோடுறவுகொண்டிருக்கின்றாரே. ௨௬

என்றவன்வலங்கொண்டேகவிளநிலாக்குவித்தாலன்ன
குன்றவெண்மணலின்மேயசோற்றொடிப்புதல்வர்தம்பால்
மன்றலங்கமலவீட்டுமறைமுதல்விடுக்கப்பட்ட
கன்றினந்தாந்துசென்றான்சங்கைசூழ்கழற்பெம்மானே. ௨௭

குவளைபோல்வண்ணன்வந்துகுறுகலுங்குமார்யாங்கள்
கவளமொன்றருந்தாமுன்னங்கன்றினங்கொண்டுமீண்டாய்
திவளுமஞ்சுரும்புபாய்ந்துதேன்மதுத்திவலைமாந்தும்
தவளமெல்லிணர்ப்பூமுல்லைத்தாவமிசையென்றால். ௨௮

முத்தெனமுகிழ்த்தமூரன்முறுவல்வாண்முகத்தனுகிப்
பைத்தவாளாவின்பைந்தோல்பார்மிசைகிடந்தென்று
கொத்தவிழ்முல்லையெல்லன்கொடிதலைமணந்துமன்றற்
பித்திகைவளர்த்தண்கானம்பெயர்ந்தனனெல்லமாதோ. ௨௯

வண்டுசூழ்கண்ணிமைந்தர்மலைநெடும்பாம்பின்பைந்தோல்
கண்டனரிதுமற்றம்மகண்ணிறந்தோங்கிற்றென்னக்
கொண்டனர்வியப்புமுல்லைக்குழலினன்விளைத்தகொற்றம்
விண்டனர்புகழ்ந்தார்முல்லைவியன்புலமாக்கட்கன்றே. ௩௦

இத்திறனுகுமோர்யாண்டிறந்தபின்விளைவெல்லாம்
பைத்தபாம்புருவமாயபடுகொலையவுணன்றன்னை
மைத்தசார்வண்ணத்தண்ணன்மாய்த்ததைபுகழ்ந்தென்று
முத்தரின்முதல்வனுகுமுழுத்தவனியம்பினனால். ௩௧

பெற்றதங்குழவிதம்மேற்பிறந்திடுங்காதறன்னின்
மற்றிளங்குழவியாயமாயன்மேலாயர்மாதர்க்
குற்றதென்காதலென்றுவொளிறுவாருழவன்கேட்ப
முற்றுணர்முனிவன்மூரன்முறுவலன்மொழியலுற்றான். ௩௨

தன்னுயிர்மேற்செல்காதறன்னுயிர்ப்பதற்குண்டேகொல்
மன்னுயிரனைத்துஞ்செங்கண்மாலவனுறைதலானே
இன்னுயிர்க்குழவிதன்மேலிமையக்ததுபெரிதுங்காதல்
மின்னுயிர்த்திலங்குவேலோயென்றனன்மீட்டுஞ்சொல்வான். ௩௩

மலரயன்சிறார்க்கன்றுகவர்ந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௱௩௰௩.

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

---

## ௭-வது, அரவின்மேலாடியவத்தியாயம்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குராமலர்முருகுவிம்மிக்குழலியமல்லன்முல்லை
விராய்மலர்த்துளவம்பூத்தமேகநீர்தன்னைக்காளின்
மாரனெனமருளுமேனிவண்ணனோடெழுந்துசென்றுட்
டரவணைதுயின்றவண்ணலானிரைமேய்க்கலுற்றான். க

அறம்புரைதுளைவன்றன்னையருச்சனைவண்ணமேத்திச்
செறிந்தகார்மயில்களாடல்செய்தபான்மையன்றவண்டு
நறுஞ்சினைமெலியப்பூத்தநாண்மலர்மானகளெல்லாம்
இறைஞ்சினநிற்கண்டென்றுவிண்ணுளையாடினான். உ

வளரொளிவிரிக்கும்பச்சைமாகதப்பகைகட்டோகை
இளமயிலாடலாடியிலோத்தகார்மேகவண்ணன்
முளரிநாண்மலரான்காக்குன்முறிபுதிவாங்கைநீண்டும்
தளிரடிதோய்வர்மைந்தர்தைவாலாமென்றே. ௩

### கலிவிருத்தம்.

காமனைப்பயந்தவன்கமழுமுல்லையந்
தாமமார்பினன்றிருத்தாமமேவுபவன்
தேமுறுபனங்கனிசெல்வமிங்குள
ஏமமார்க்கதனைவெளவியம்பினனரோ. ௪

செழுநிலாவான்மதித்திகழுமொற்றையங்
குழவியினெழுந்தனன்குறித்தேம்படு
பழமுதிர்மடற்பனையலப்பார்த்தனன்
கழுதையினுருவினன்கனன்றுதோன்றினன். ௫

அணற்செவிக்கழுதையாயான்றுதோன்றிய
தனிப்பருந்தேனுகாசுரனைத்தாமரை
மணிக்கையாற்சுழற்றினனெற்றவான்பனை
துணிந்தனன்வீழ்ந்தனன்றுஞ்சினனரோ. ௬

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆனெழுதூளிமொய்த்தவணிகருங்கேசன்மாயன்
கானெழுமலரினோடுகார்மயிற்பீலிசூடித்
தேனுறவமுதமூறுந்தீங்குழலிசைத்துமாழை
மானனமதர்த்தகண்ணார்மகிழ்வுறவெய்தினானால். ௭

ஊனிரைதெவிட்டிப்பல்பேயுவந்தனகுனிப்பவோங்கு
வானிரைநிருதர்மேவவரிசிலைகுனித்தபோரோ
னானிரைதுரந்துசென்றானதிர்திரையமுனையாற்றுத்
தேனிரையிதழுண்டாடுஞ்செழுமலர்த்தடத்தினோர்சார். ௮

வடித்தகார்முல்லையாயர்மைந்தரோடுஞ்செஞ்சேதா
விடப்புனன்மாந்திவீழ்ந்துவிளிந்தனவிளிதலோடும்
உடைத்தெழுகருணைவெள்ளமொழுகியின்னமுதமூறும்
கடைக்கணோக்குதவியாவிகாத்தனனுலகங்காப்பான். ௯

வெவ்விடப்புனலும்வெய்யவிடப்புனல்விளைத்தபாம்பும்
அவ்வழிக்கடிதல்செய்தானஞ்சனவண்ணனென்ன
எவ்வகைக்கடிதல்செய்தானினிதெடுத்திசைத்தியென்று
தெவ்வடுகுருதிவேலான்செப்பலுமுனிவன்செப்பும். ௧௦

கடுவிளைந்தொழுகுபேழ்வாய்க்காளியனுயர்காளிந்தி
மடுவினில்வாழுமற்றம்மடுவினிற்றவழ்ந்தகாற்றுப்
படினும்வல்விலங்குமாயும்பறவைவீழ்ந்துயங்கும்வேம்பின்
நெடுமரங்கரியுமாங்குநீள்சினைக்கடம்பொன்றுண்டால். ௧௧

### எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

ஈறிழைத்தவிடநீரகற்றுதுமெனக்கடம்பின்மிசையேறியோர்
ஆறெனக்களிநறவெடுத்தொழுகுமாய்மலர்ப்படலையந்துழாய்
மாறடர்த்ததனிநேமிமாயவன்மணித்தடத்தினிடைபாய்தலும்
நூறுவிற்கடையகன்றெழுந்ததுநுரைத்தலைப்புனலகழ்ந்ததோ. ௧௨

அளக்குமண்ணுலகருந்திவெண்ணெயுணவாயர்பாடிவளர்செங்கணான்
றொளைக்கைமால்களிறுபோலநின்றுதனிதுளையவெம்பியெழுவாளரா
வளைத்துவால்கொடுநெடும்பணாடவியின்வள்ளன்மேனியைமறைக்குபு
முளைத்ததண்மதிமருட்டும்வாலெயிறுமூழ்குறும்படிகடித்ததால். ௧௩

சூட்டுவாளரவின்மன்றலந்துளவுசூடுகார்முகிலகப்படா
வாட்டமுற்றனனெனத்தளர்ந்திளையர்மறுகவானுமறுகுற்றதால்
நாட்டமென்கொலிடனாடுகின்றதெனநந்தகோபன்முதலாயினோர்
ஆட்டுதெண்டிரையலம்புநீர்யமுனையாற்றகன்கரையணீஇயினார். ௧௪

பாழிவரையாவுமெய்வளைப்பவொருபாலனின்றநிலைகண்டுடன்
வீழ்துநாமுமெனநந்தகோபனெழவீழல்வீழலெனவந்துபால்
ஆழிபோல்பவன்விலக்கிநின்றலையுமலைவுகண்டருளியாகமேல்
சூழும்வாளரவகற்றினான்றுயில்கொள்சூட்டரவணையகற்றினான். ௧௫

காடுகொண்டெழுபணாமணித்திரள்கள்கக்குசெக்கொளிசுற்றியோ
பாடுசெக்கொளிவீசுகற்கள்பலபட்டழுந்தியெழில்கன்றியோ
சூடுதார்மகுடகோடிமேலமர்சூடுசேவடிசிவப்பவின்
கூடல்வாளரவினுச்சிநின்றுநடமாடினான்மறைகள்பாடினான். ௧௬

பண்பழிந்தாவிவீள்பணாடவிபதைப்பவாய்க்குருதிகாலவெங்
கண்பிதுங்கநடனாடநோக்கியுயிர்காத்தியென்றுதளர்காளியன்
நண்புகொண்டுபுணர்தொய்யில்வெய்யமுலைநாககன்னியர்செறிந்துமால்
மண்பொழிந்தகமலத்திலைந்தண்மலர்மாரிதூவினர்வணங்கினார். ௧௭

பொருதிரைக்கடலுடுத்தநீள்புவிபுரக்கவந்தமணிவண்ணபொற்
றிருமணக்குமணிமார்பகொற்றமுறுசெம்முகத்திகிரியங்கையாய்
அருமறைத்தலையின்வைத்தசேவடியழுங்குனைத்தலையின்வைப்பதற்
கெரிசினத்தவிடவரவமெத்தவபிழைத்ததோவெனவழுத்தினார். ௧௮

அறிந்திலாளிவளிழைத்தவெம்பிழையருட்பெருங்கடல்பொறுத்தியென்
றிறைஞ்சவாளரவினுடல்விட்டனனெழுந்துபோகியுறைதீவின்வாய்ப்
பிறங்குநின்முடியினம்மடித்துணைபிறக்கவொற்பொறிபடைத்தலால்
மறங்கொள்வெங்கலுழனுன்றனையடல்வல்லனல்லனெனவோதினான்
மறைக்கொழுந்தினைவணங்கியொண்மணிகண்மாசிலாடையதினொடுமது
வெறுப்பகல்வியநீர்வெண்டிரைக்கடல்விளிம்படுத்ததொருதீவின்வாய் [ம்
எறித்தசெஞ்சுடிகையரவினுக்கிறையெழுந்துகன்னியரொடேகினான்
நறைச்செழுங்கமலமலர்நிறைந்தடனைத்துசொரிந்துபொலிவுற்றதால். ௨௦

என்னவோடுமடன்மன்னனென்னைகொலிருந்தநீவினையகன்றிடாப்
பன்னகாதிபதிபின்னுதெண்டிரைபரந்தயாயமுனைமடுவின்வாய்
மன்னவுற்றதுவழங்குவாவியெனமைந்ததன்னைநறவுவிட்டெழும்
கன்னியந்துளவணிந்தகண்ணனருள்கனியுமாதவனியம்புவான். ௨௧

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாளரவழியாடாற்றிவழங்குதல்வழங்காறைக்
காளியனிருப்பதூழிக்காற்றெனைக்கலுழன்சீறி
நீளிருஞ்சிறையிற்றூக்கநெஞ்சகங்கலங்கியோடித்
தாளதாமரைவாய்வின்றுக்கட்டிடையெய்தினால். ௨௨

இருஞ்சிறைக்கருளன்பின்னெய்தெறிதருமெறியவென்றோர்
அருந்தவன்சபித்தலாலேயாங்கண்வந்தணுகானைப்
பொருந்தினன்யமுனையாற்றுப்புத்தடமென்றுசாவா
மருந்தினுமினிமைசமுறுமாதவன்வகுத்தானன்றே. ௨௩

அழலெனவுயிர்க்குநாகத்தஞ்சுறுவிடம்பாயாகம்
முழுவதுந்தாயர்கொம்மைமுலைசுரந்தொழுகுபாலோ
குழையொடுபொருதுநீண்டகொழுங்கயற்கண்ணீர்கொல்லோ
கழுமுறக்கமலச்செங்கட்கண்ணனைக்கழீஇயினரே. உ௪

வேயினுமிழ்பரிதியத்தவெற்பகம்படாவீங்கு
புயலெதிர்நறியமுல்லைப்பூம்புனல்படாயாரும்
குயில்குடைந்துகுத்தபோதின்கொங்குலாமணற்குன்றேறித்
துயிலமர்ந்தனாலற்றைத்தூங்கிருட்கங்குன்மாதோ. உ௫

கலிவிருத்தம்.

உய்ந்துபோநெறியுமுண்டுகொலென்றெ
நந்தகோபன்மனைநந்துநடுங்கச்
சிந்தவல்விருடிசாமுகமெங்கும்
வந்துகானழல்வளைந்ததையன்றே. உ௬

நண்ணுமாரழலைநச்சரவேந்து
மண்ணெலாமகல்வயிற்றிடைவைத்த
அண்ணல்செய்யதளிரங்கையின்வாரி
வெண்ணெயுண்டெனவிழுங்கினனன்றே. உ௭

முரிதிரைக்கடன்முகத்துவிளங்கும்
உருவவொண்டிகைமொப்புறமாறு
இருள்குடித்தெழுமிளங்கதிரோனம்
விருதென்வேனில்துமேயதுசென்றே. உ௮

வெயில்சினந்திருகும்வேனிலிறுப்பக்
குயிலினத்தொடெதிர்கூவியும்வேயின்
இயல்கொளின்னிசைவடித்துமிருங்கான்
மயில்களிப்பமழைவண்ணனெழுந்தான். உ௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தவளமார்களிநல்யானைக்கதிர்மருப்பொசிக்குந்தோன்றல்
தவழ்மதுக்கமழுங்கானந்தண்ணெனவமுதமூறு
குவிமுலையஞ்செஞ்சேதாக்குவிதரத்தாளமூரத்
பவளவாய்திகழவைத்துப்பசுங்கழையிசைத்திட்டானல். ௩௦

விசும்புசூழ்வெயிலான்வற்றிவெம்பியமரன்கள்யாவும்
ஒசிந்துயர்மருதஞ்சாயவுரலொடுதவழ்ந்தவொண்கேழ்
அசும்புபொன்றுடையான்றனவிரொளிதவழுந்தோறும்
பசுங்குழைகுழைத்தபோலும்பான்மையிற்சிறந்தமாதோ. ௩௧

வாட்டிறனிருதர்வெள்ளம்வானெலாம்பரக்கவல்வில்
கோட்டியகொண்டன்மேனிக்கொழுஞ்சுடர்தவழுந்தோறும்
ஊட்டழல்சுட்டசெம்பொனுயர்வரைச்சாரல்பச்சைத்
தோட்டறுகின்றபோலத்துலங்கெழிற்படைத்தமன்றே. ௧௨

நாகமீமிசைத்துயின்றுநளிகடலுடுத்தஞாலத்
தோகையுண்மகிழவந்துதோன்றியுந்துளிக்குநீல
மேகமேபோல்வான்மேனிவிரிகதிர்பாயுந்தோறும்
போகுயர்பூவையாவும்பூத்தனபோலுமன்றே. ௧௩

மறுக்குடம்விரித்தாலன்னமாமலர்க்கோதைமார்பன்
கதிர்த்தகாருருவின்காந்திகளைமிசைத்தவழுந்தோறும்
புறப்புனல்பரந்ததேய்க்கும்பொறிவரிவண்டுபாய்ந்து
மிறிப்பவாயிதழ்மென்போதுவிரிதுறையமுனைமன்றே. ௧௪

வளமலர்முருகுவிம்முமாதவிப்பந்தருடு
துளவணிபடலைமாயன்சுடரொளிபாயுந்தோறும்
குளிதலைமணக்குதோன்றுக்காந்துறைகருங்கட்டோகை
இளமயிலெருத்தநீட்டுமியற்கையிற்பொலிந்தவன்றே. ௧௫

இருநிலவளாகம்போற்றுயிலவிழ்க்கமலப்பொற்றாள்
ஒருமுதல்பவளச்செவ்வாயொண்ணொளிதவழுந்தோறும்
அருவியஞ்சாரலெல்லாமஞ்சிறைச்சுரும்பர்பாட
விரைகமழ்குருதிக்காந்தள்விரிந்தனபோலுமன்றே. ௧௬

ஆரமுமணியுமுந்தியதிரொளியருவியாயும்
சாரலுங்காடுங்காவுந்தடந்திரையாறுந்தன்னங்
கார்வளங்காட்டவேனிற்காலின்றாடல்செய்தான்
ஏர்விளையாடுசெம்பொனேக்கெழின்மார்வத்தெம்மான். ௧௭

வளைகடன்ஞாலமஞ்சவருபிரலம்பன்மற்றுங்
களவிலைப்பொலம்புறைத்தாயர்தம்புதல்வனூடு
ஒளியிலங்கருவிச்சாரலோங்கியகடையினலோர்
களிறெனநின்றசெங்கட்கண்ணனைவெய்திறனூல். ௧௮

விரவியவண்ணமோர்க்கவெய்யவன்றன்பாலாக
இருதிறமாக்கியாயரினெழிற்குமரீட்டத்
தொருதிறத்திராமனிற்பவொருதிறம்பற்றிநீலச்
சுரிகுழற்குரிசிலேனோர்றார்கயக்கெனவாடலுற்றான். ௧௯

மல்லலங்கங்கைபோலுமன்னவன்றிறத்துவெற்றி
புல்லலும்வண்டுபாடப்பொதியவிழ்குழவுமுல்லை
மெல்லிணர்விரியன்மாலைமிலைந்தீர்த்தாமன்மன்றற்
கல்லினன்மாரியோப்புங்கரியவன்சுமத்தல்செய்தான். ௨௰

இகலறவிமைக்குமொண்கேழிந்திரநீலங்கான்ற
திகழொளிபுடைசூழ்வெள்ளிச்செழுங்கிரிகடுப்பநீலுண்
டுகில்புனைவெள்ளைமேனித்தோன்றலைத்துணைவினாயர்
மகனெனவந்தவஞ்சமனத்தினான்சுமந்திட்டானே. ௪௧

கமழ்ந்தபூந்தெரியன்மார்பன்கையகப்பட்டானென்னாச்
சுமந்தனனேகுங்காலைத்தொல்லைவல்லுருவுகொண்ட
சமங்கடந்தொளிசெய்வெள்வேற்றானவன்றலையிற்குட்ட
உமிழ்ந்தனன்குருதிமாலரியுந்தனன்குப்புற்றன்றே. ௪௨

விரைவிளையாடுமுல்லைமென்றொடைப்புதல்வரோடு
வரைவிளையாடுமார்பமால்விளையாடுமெல்லைத்
திரைவிளையாடும்யாற்றுச்செழுங்கரைமருங்குவண்டின்
நிரைவிளையாடுகானநீங்கியான்மறைந்தமாதோ. ௪௩

தண்ணறல்படுகான்யாற்றுத்தழைத்தபுற்கானஞ்சேர்ந்த
அண்ணலஞ்சேதாமைந்தாழைப்புழிமுழங்கரவாய
கண்ணும்வாண்முகமுஞ்செய்யகமலமொத்தலர்ந்தமைக்கார்
வண்ணனின்றழைப்பப்பொங்கிமகிழ்ந்தெதிர்சிலைத்தமாதோ. ௪௪

காட்டழல்கனன்றுபொங்கிக்கடுவளிப்புடைப்பிற்சூழ
மோட்டிளமுல்லைமெல்லென்முகிழ்முகைவிரிந்தபைந்தார்ச்
சேட்டிளங்குமரர்காத்திசெல்வவென்றிறைஞ்சநம்பன்
நாட்டநீர்புதைத்திரென்றொளியழல்பருகினானால். ௪௫

எரிபகைந்தன்னதேமாவிளந்தளிர்கோதுசெங்கட்
கருநிறக்குயில்வாய்வைத்தகாம்பிசைகேட்டுமாழ்கச்
சுரிகுழற்பவளச்செவ்வாய்த்தோகையரோகைகூர
நிரைபுரந்தினிதின்மீண்டானீணிறக்கொண்மூவண்ணன். ௪௬

அரவின்மேலாடியவத்தியாயம் முற்றிற்று.

ஆ௳ திருவிருத்தம் ௨௪௫.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

# ௮-வது, வேய்ங்குழலிசைத்தவத்தியாயம்.

---

கலிச்சந்தவிருத்தம்.

கண்ணுந்திருமுகமுங்குளிர்கமலம்புரைமடவார்
வண்ணந்திகழெயிறூறுதெண்மதுவுண்பவர்நிகரா
உண்ணுந்தனிநறைதோளியொருகோடிவெண்டளவின்
தண்ணென்முகைசுழலும்படிதலைவந்ததுபைங்கார். ௧

குடிக்குங்கலை கடலிற்குயர் குன்றத்தலை பொழியா
இடிக்கும்புயல்கண்டோலவலவினமஞ்ஞைகளெல்லாம்
நடிக்கின்றன மகிழ்கூர்ந்தன காகத்தலை நடிக்கும்
வடிக்குங்கழைமுழங்கிற்கண்டென மகிழ்கோவியர் மானே. ௨

முற்றுங்கனியாழிக்கதிர்முழுதுந்தினை வெயிலால்
வற்றுஞ்சிலைமா மின்றுளிவளர் மாரியிற்றளிர்க்க
பற்றுக்குலத்தூடல்வாடுகர்பானின் மருண்மாரி
பெற்றின்புறுதிருவாவொளிபிறங்குந்தனிகர்ப்ப. ௩

மறைகற்றவர் மறையென்பனதேடத்துளிமருவின்
வெறிகக்கியதுளவப்புயல் விளையாடுறு தண்கான்
முறிமுற்றியகொடிமுல்லையென் முகைவிண்டனவாமேனோர்
செறிகற்பகவனமென்றருபுரிக்குஞ்செயப்புவைய. ௪

கலிவிருத்தம்.

நறைத்துளவமாமுகினைக்கலையஞானம்
மறத்தின்மகத்தரும்வகையாமளிதனை
மறைத்தெனமறைத்தறுவலைத்தெழுகருங்கார்
எறித்தவெயில்கான்றுவிண்ணெழுந்துடைமன்றே. ௫

புட்கொடியுயர்த்தபுயல்பொங்கிதழ்விரிக்கும்
கட்கமலவாய்மலரின்வைத்தசிறுகாம்பின்
உட்களியுமின்னமிழ்தமுறுமிசைகேளா
வட்கினவெனப்பொதிதடைத்தகுயில்வாய்கள். ௬

வெள்ளைமதிவாண்மறையரின்மிளிர்விளக்கம்
உள்ளரியவெங்கலியிலோர்முதல்விழுச்சீர்
தெள்ளுமறையின்றுறைசுழாமன்மறையெல்லாம்
என்றுநர்வினங்குருவியற்கைமையிகர்க்கும். ௭

வியவிருவிசும்புகதிர்மின்றுவிலையாடும்
புயறழுவின்றுபொலிவுற்றதொருதோற்றம்
உயர்வரையுயர்க்ககைதுற்றபொருண்மற்றங்
கியன்குணமனைப்புறவிலைகுகல்சகக்கும். ௮

கலிச்சந்தவிருத்தம்.

இவ்வண்ணமுறுங்காரினிலாற்றுவினைமேயாச்
செவ்வண்ணமணிக்குன்றுகள்சேர்க்கின்னமுதயிலாப்
பைவண்ணவராவோடெறிபாலாழிகடுப்ப
மைவண்ணன்மகிழ்த்தாடினன்மன்றற்சிறுகானம். ௯

இகலறவிமைக்குமொண்கேழிந்திரநீலங்கான்ற
திகழொளிபுடைசூழ்வெள்ளிச்செழுங்கிரிகடுப்பநீலுண்
டுகில்புனைவெள்ளைமேனித்தோன்றலைத்துணைவினாயர்
மகனெனவந்தவஞ்சமனத்தினான்சுமந்திட்டானே. ௩௧

கமழ்ந்தபூந்தெரியன்மார்பன்கையகப்பட்டானென்னாச்
சுமந்தனனேகுங்காலைத்தொல்லைவல்லுருவுகொண்ட
சமங்கடந்தொளிசெய்வெள்வேற்றானவன்றலையிற்குட்ட
உமிழ்ந்தனன்குருதிமாலரியுந்தனன்குப்புற்றன்னோ. ௩௨

விரைவிளையாடுமுல்லைமென்றொடைப்புதல்வரோடு
வரைவிளையாடுமார்பமால்விளையாடுமெல்லைத்
திரைவிளையாடும்யாற்றுச்செழுங்கரைமருங்குவண்டின்
நிரைவிளையாடுகானநீங்கியான்மறைந்தமாதோ. ௩௩

தண்ணறல்படுகான்யாற்றுத்தழைத்தபுற்கானஞ்சேர்ந்த
அண்ணலஞ்சேதாமைந்தரழைப்புழிமுழங்கரவாய
கண்ணும்வாண்முகமுஞ்செய்யகமலமொத்தலர்ந்தமைக்கார்
வண்ணனின்றழைப்பப்பொங்கிமகிழ்ந்தெதிர்சிலைத்தமாதோ. ௩௪

காட்டழல்கனன்றுபொங்கிக்கடுவளிப்புடைப்பிற்சூழ
மோட்டிளமுல்லைமெல்லென்முகிழ்முகைவிரிந்தபைந்தார்ச்
சேட்டிளங்குமரர்காத்திசெல்வவென்றிறைஞ்சநம்பன்
நாட்டநீர்புதைத்திரென்றானளியழல்பருகினானல். ௩௫

எரிபகைந்தன்னதேமாவிளந்தளிர்கோதுசெங்கட்
கருநிறக்குயில்வாய்வைத்தகாம்பிசைகேட்டுமாழ்கச்
சுரிகுழற்பவளச்செவ்வாய்த்தோகையரோகைகூர
நிரைபுரந்தினிதின்மீண்டானீனிறக்கொண்மூவண்ணன். ௩௬

அரவின்மேலாடியவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௨௩௫.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௮-வது, வேய்ங்குழலிசைத்தவத்தியாயம்.

---

கலிச்சந்தவிருத்தம்.

கண்ணுந்திருமுகமுங்குளிர்கமலம்புரைமடவார்
வண்ணந்திகழெயிறூறுதெண்மதுவுண்பவர்நிகரா
உண்ணுந்தனிநறைதேரளியொருகோடிவெண்டளவின்
தண்ணென்முகைசுழலும்படிதலைவந்ததுபைங்கார். ௧

குடிக்குங்கனைகடனீருயர்குன்றத்தலைபொழியா
இடிக்கும்புயல்கண்டோவலவிளமஞ்ஞைகளெல்லாம்
நடிக்கின்றனமகிழ்கூர்ந்தனநாகத்தலைநடிக்கும்
வடிக்குங்கழைமுகில்கண்டுளமகிழ்கோவியர்மான. ௨

முற்றுந்தனியாழிக்கதிர்முறுகுஞ்சினவெயிலால்
வற்றுஞ்சினைமரமின்றுளிவளர்மாரியிற்றளிர்த்த
பற்றுந்தவத்துடல்வாடுநர்பரனின்னருண்மாரி
பெற்றின்புறுதிருவாலொளிபிறங்குந்திறனிகர்ப்ப. ௩

மறைகற்றவர்மறையென்பனதேடத்துளிமதுவின்
வெறிகக்கியதுளவப்புயல்விளையாடுறுதண்கான்
முறிமுற்றியகொடிமுல்லைமென்முகைவிண்டனவானோர்
செறிகற்பகவனமென்னுபுசிரிக்குஞ்செயல்புரைய. ௪

கலிவிருத்தம்.

நறைத்துளவமாமுகினந்தலையஞானம்
மறத்தின்மகனெனும்வகையாரமரினணை
மறைத்தெனமறைத்ததுவளைத்தெழுகருங்கார்
எறித்தவெயில்கான்றுவிண்ணெழுஞ்சுடரைமன்றே. ௫

புட்கொடியுயர்த்தபுயல்பொங்கிதழ்விரிக்கும்
கட்கமலவாய்மலரின்வைத்தசிறுகாம்பின்
உட்கனியுமின்னமிழ்தமூறுமிசைகேளா
வட்கினவெனப்பெரிதடைத்தகுயில்வாய்கள். ௬

வெள்ளைமதிவான்மறையமின்மினிவிளங்கல்
உள்ளரியவெங்கலியிலோர்முதல்விழுச்சீர்
தெள்ளுமறைநின்றுதிகழாமன்மறையெல்லாம்
எள்ளுநர்விளங்குறுமியற்கையையனிகர்க்கும். ௭

வியலிருவிசும்புகதிர்மின்னுவிளையாடும்
புயறழுவநின்றுபொலிவுற்றதொருதோற்றம்
உயர்வறவுயர்ந்தநலனுற்றபொருண்மற்றுங்
கியல்குணமணப்புறவிலங்குதல்கடுக்கும். ௮

கலிச்சந்தவிருத்தம்.

இவ்வண்ணமுறுங்காரினிலாற்றுவினமேயாச்
செவ்வண்ணமணிக்குன்றுகள்சேர்ந்தின்னமுதயிலாய்
பைவண்ணவராவோடெறிபாலாழிகடுப்ப
மைவண்ணன்மகிழ்ந்தாடினன்மன்றற்சிறுகானம். ௯

வழங்குங்கலைமகள்காதலின்வளர்கின்றவெண்டோட்டுச்
செழும்பங்கயமலர்போலவுஞ்செந்தேனுகர்வரிவண்
டுழும்வண்டுளவணிவோன்கரத்தொளிர்வால்வளையெனவும்
எழுந்தங்கதுமதியேர்பெறவிருத்தந்ததுகூதிர். ௧௰

தண்டோட்டிணர்விரிகற்பகத்தழைகொய்தழிகவுள்வீழ்
வண்டோட்டியகளிறெட்டொடுவரைதாங்கியகடற்பார்
உண்டோட்டறுபொன்னந்துகிலுடுத்தோனெனத்திகழ்கார்
வெண்டோட்டிளம்பனைமீமிசையுயர்த்தோனெனவிளர்த்த. ௧௧

ஒள்வாளுமிழ்திகிரிப்படையுயர்வோனடம்புரியும்
முள்வாளெயிற்றரவம்மெனமுகிழ்விண்டனகாந்தள்
கள்வாய்மடுத்திளவண்டினங்களுலத்துணர்விரியாப்
புன்வாய்கிழித்தவனுமெனப்பொலிவுற்றனபூவை. ௧௨

வந்தாதவனிளஞ்செங்கரம்வருடத்தலையவிழும்
செந்தாமரைமலர்நின்றுதண்டேன்சிந்தியதோற்றம்
அந்தாமரைக்கண்ணன்மலரடிநின்றலைபுரட்டும்
மந்தாகினிபெருகிப்பொழிதருகின்றதுமானும். ௧௩

இத்தன்மையதண்கூதிரிவின்றீங்குழலிசையா
அத்தன்புனிற்றுமேய்ப்பதற்கலர்கானகம்படர்ந்தான்
மொய்த்தஞ்சிறைவரிவண்டினமுருகுண்டிசைபயில்பூங்
கொத்துங்குறமுறியுஞ்சிலகொய்தான்குழல்புனைந்தான். ௧௪

கதிராயிரம்பொழியாதவன்காய்வெஞ்சினந்திருகும்
முதுவேனலின்முளிபாதவமுகில்பெய்தலிற்றளிராய்ப்
புதுநாண்மலர்துளவப்புயல்புனையத்தரவந்தண்
மதுநாண்மலர்தளிர்பாதவமழைக்கீவனமானும். ௧௫

கலிவிருத்தம்.

மோடுடைநெட்டிலைமுடவெண்டாழையந்
தோடுடைநறுமலர்தோன்றல்கொய்வது
பாடுடைநெடுமடற்பனைக்கைவேழவெண்
கோடடிபிடுங்கியகோலம்போன்மரோ. ௧௬

தளிர்க்கவின்கவற்றியதடக்கைபோகுயர்
நளிச்சினைமலர்கொளநம்பிநீட்டுதல்
களிச்சுரும்பாற்றுபூங்கற்பகங்கொள
வளைக்கரநீட்டியவண்ணமானுமே. ௧௭

அலங்கொளிமணிதெளித்தன்னபைஞ்சுனை
நலங்கொள்வெண்டாமரைநம்பிகொய்வது
பொலந்தருக்கவர்ந்தநாட்புதுநிலாப்பொழி
வலம்புரிவாங்கியவண்ணங்காட்டுமே. ௧௮

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குருந்தமென்கண்ணிசூடுங்கோவலர்கொழுந்துசெய்ய
அரும்பவிழ்காந்தள்கொய்வதாடியகுரவைக்கந்தண்
முருந்தொடுமுல்லைசாய்த்தமுகிழ்நகையாயர்மாதர்
திருந்துபொற்றொடிசூழ்கையிற்றேமலர்தொடுத்தல்போலும். ௧௯

எழில்வளர்செம்பொன்மார்பனின்னணஞ்செவ்விவாய்ப்பக்
கழைவளர்வரைசாரெல்லாங்களிற்றிளங்கன்றுபோன்றும்
மழைவளர்கானமெல்லாமழவிடைபோன்றுந்தோன்றிக்
கொழுமுகையவிழ்மென்போதுகொய்தனன்மிலைந்தான்மன்னோ. ௨௰

கலிவிருத்தம்.

மழலைவண்டிசைமுரலவணர்பசுந்தெரியன்மது
ஒழுகநின்றுயர்வரையுமுருகநுண்டொளைகடொறும்
அழிபசுந்தளிநறவவமுதமுங்குமுழியெழ
எழுதரும்புயல்கழையினிசைநவின்றனனினிதின். ௨௧

படுமான்களுநரியபசியதண்டளிர்தழைய
அடைவுறுங்கழையினிசையமுதமஞ்செவிநிறைய
இடைமடந்தையர்களுசியிடையிளங்கொடியொசிய
மடவனம்பொருவமலர்வனமடைந்தனர்குழுமி. ௨௨

மருவிரிந்தொழுகுகுழன்மழையெனும்படிசரிய
இருவிசும்பொருவியெழுமிசையினெஞ்சகமுருகி
முரிதடந்திரையமுதுமுனிவுகொண்டணுகினர்கள்
அருமருந்தனையமொழியாமடந்தையாடைய. ௨௩

வேறு.

மழையெனமதங்கலுழுமாவுமரியேறும்
உழுவையுமுழைக்குலமுமொன்றியினமென்னக்
கழையினெழுகின்றகளிறன்னவனைநோக்கி
எழுதிருவுபோன்றுருகிநின்றவிசையோர்ந்தே. ௨௪

மாமறைமுதற்பொருள்வடித்தவிசைகேளா
காமர்நதியாவுமுயர்கங்கையெனலாகித்
தேமருவுதாமரைநிரைக்கைகொடுசிந்தித்
தாமரைமருட்டுமிறைதாண்மலர்தவழ்ந்த. ௨௫

பைத்தவரவத்துவளர்பச்சைமுகில்செவ்வாய்
வைத்தகழையேழ்தொளையும்வாரியமுதூறித்
தத்தவெழுமின்னிசைதலைப்படமுழங்காப்
புத்தமுதநுண்டுளிபொழிந்தபுயலெல்லாம். ௨௬

அஞ்சுவைபழுத்தவிசையஞ்சனநிறத்தோர்
மஞ்சமுதுபெய்வதெனமாதவனிசைப்ப
வெஞ்சுடர்பணிக்கதிர்விரித்ததழல்வெவ்வாய்
நஞ்சுபொழிவாளரவுநல்லமுதுகுத்த.

பூவின்வருநான்முகன்புணர்ந்துமகிழ்மாது
நாவின்மிசைநீத்துநடனன்குநவிலுற்றுள்
காவினறுநீழலமர்காவலனெடுங்கண்
தூவினகொழுந்தளிதொளைக்கணிசைகேட்டே. ௨அ

மங்கையொருபாகனுளமலியுவகைநன்னீர்
பொங்கியழனீள்விழிபுணர்ந்தவியவாஅ
அங்கமிசைசூடரவமாடலயர்வுற்ற
சிங்கலில்பரன்கழைதெரித்தவிசையோர்ந்தே. ௨௯

கலிநிலைத்துறை.

தெறித்தகன்றுவாய்வைத்தவம்மூலையுணதிரண்டு
சுறித்தபுல்லுணுகறவைபூங்கற்பகச்செங்கேழ்
முறிக்கொழுங்கவின்கவற்றியமுகிணைகைச்செவ்வாய்
மறைக்கொழுந்தின்வேயின்னிசையஞ்செவிமடுத்தே. ௩௦

குமரிவண்டுழுதுளவினன்குழலிசைகேளாக்
கமலநான்முகைகடந்தசெங்கைம்மலர்முகிழாத்
தமனியப்பசுந்தார்முடிவணங்கினரிமையோர்
அமிழ்துணுத்தருஞான்றினுமகமகிழ்ந்தனரால். ௩௧

வட்டவாயழற்றிகிரியான்வடித்தவேயிசையால்
பட்டபாதவந்தளிர்ப்பவும்பச்சிளந்தென்றல்
சுட்டசூடுறவெதும்புமத்துடியிடைமடவார்
கட்டுமின்றளிர்க்கண்ணிகள்வாடினகரிந்த. ௩௨

பழுத்தவேயிசைபாஞ்சுடர்தெரிப்பவான்பசுங்கார்
கிழித்தபொன்னெடுங்கிரிவளர்குங்குமங்குழைத்த
குழைத்தகுங்குமங்கரிந்தனகுழைபொருதலைக்கும்
மழைக்கட்கோவியர்வளரிளவனமுலைக்குவடு. ௩௩

வேரியந்துழாய்ப்படலையான்வேயிசைநவில
மாரிபெற்றெனமரனெலாங்குளிர்ப்பவுமலயச்
சாரன்மன்னுசெஞ்சாந்துவெண்டளவரும்பன்ன
கூரெயிற்றிளங்கோவியர்க்கனலெனக்கொதித்த. ௩௪

கலவமாமயிலெருத்துறழ்கண்ணன்வேயிசையால்
புலியுமானுமோரினமெனப்புகுந்தனவேனும்
அலர்சுலாவியவசைநடைத்தென்றலம்புலிவாய்
மலருமுல்லையங்கருங்குழன்மாவெனுடுமறலும். ௩௫

மதங்கொண்மா மருப்பொசித்தவன் மணிக்குழலிசையால்
வெதும்புவெங்கதிர் வெம்மையிற் றீரவும்பசும்பொன்
றுதைந்தபோ லுயர்ந்துசுணங்கணி முலையினார்க்கமுதம்
ததும்புதிங்களாந் தண்கதிர் தழுவெனக்கணமும். ௧௬

கருஞ்சகோண்மலர்க் கண்ணினார் குழலிசைகேட்ட
அருஞ்செவிக்கொலாமருந்தினைக் குயிலிசையழன்று
கருஞ்செனத் தகுநாவிளம்பிறை நுதல்பசந்த
வருந்திநுண்ணிடை மடைக்கைதையர்க்கென் கொலாமதிக்கின். ௧௭

பாக்குன்மேற் றுயில்பசும்புயல் பவளவாயமுதம்
மாந்தவெத்தவம்புரிந்ததின் மணிக்குழலென்றே
எக்குகோட்டிளவனமுலைக்கோவியரேக்கற்
றேய்ந்தவத்துணர்வல்லியிற்றுழைந்தனரயர்ந்தார். ௧௮

வேய்ங்குழலிசைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௨அ௩.

---

## ௩௰-வது, கோவியர் துகில்கவரத்தியாயம்.

### கலிநிலைத்துறை.

செழுந்துழாய்முடித் தீங்குழலிசையினுள்ளுருகிக்
குழைந்தகோவியர் குவிமுலைவெதும்பலிற்காமன்
பொழிந்தவெங்கணைமுகத்தெழுபூம்புகைப்படலம்
தழைந்ததாமெனவெழுந்தது தண்பனிப்படலம். ௧

பாட்டுவண்டிமிர்குழலினார் பசுங்குழலிசைப்பக்
கேட்டுமாலுறுமொளிவிழிக்கண்ணியர்வதனம்
தோட்டதாமரையென்பதாலெமைநோக்கலனிய
வாட்டமுற்றனவருபனியிறுத்தலமன்றே. ௨

ஐயதாமரையாயிதழ்மலரெலாங்கரியப்
பெய்யுமிர்ப்பனிப்பெருக்கால்வெம்மையிற்பெயரா
மையகூர்ந்தனர்வட்டவாயிரும்பினிலுளர்ந்த
செய்யவாரழற்செயிதழ்முளரியிற்சிறந்த. ௩

பனிவிலோத்திடமென்றுகொல்பட்டவெங்கனலின்
கணமுமென்றுகொல்கர்ப்பழகாமமுற்றுருகி
இளையமாதர்தங்கன்னியரெத்தினங்கொங்கை
தனிவெண்முத்தமுந்தவிழ்வனச்சாந்தமுந்தனந்த. ௪

பனியும்வீங்கிருப்பனிபொறுப்பரிதெனவெய்ய
கனல்விழுங்கிமெய்கனிந்துவீழ்திறத்தமற்றன்றே
நனிகரித்தனகளிபனிதவழ்தருஉக்கொழுந்தீம்
புனறவழ்ந்தெனப்பொதிந்தசெந்தாமரைப்போது. ௫

இன்னதண்பனிப்பருவநல்லினைநறுவொழுகு
கன்னியர்தழாய்க்கண்ணையெனக்கணவனுமென்ன
அன்னமென்னடையாயர்தங்கன்னியர்நோற்றார்
மன்னுவெம்பனிமால்வரைக்கன்னியைத்தொழுதே. ௬

பனிநிலாக்கதிர்பரப்பியழுத்தவெண்மணலால்
பனிவரைக்கொடிதிருவுருப்பாற்படவகுத்துப்
பனிமலர்த்தொடைசூடியும்பரவியுநோற்றும்
பனியிறப்பினிற்படர்புனலாடுவான்படர்ந்தார். ௭

தண்ணந்தாமரைத்தாளிருதடக்கையுமுகமும்
கண்ணுங்காட்டலிற்கண்ணனிற்றிகழ்தருநீல
வண்ணவார்புனல்யமுனையிற்படிந்தனர்வரிவண்
டுண்ணவின்னறவூற்றிருந்தொழுகுபூங்குழலார். ௮

குரவமெல்லரும்பென்னவெங்கூரெயிற்றரவின்
உரிவையன்னவாணுண்டுகிலொலிபுனலாற்றங்
கரையின்வைத்தனர்கமழலர்தண்டுறைகமழ
விரையொடந்துவர்மெய்துவர்த்தாடினர்மன்னோ. ௯

அருப்புநாண்மலர்த்தொடைபரிந்தாடியபின்னை
கரைக்குறும்பெறியமுனையந்திரைவரிக்களிவண்
டிரைக்குமுல்லையங்கோதையரிடைசெறித்திருண்ட
விரைக்கருங்குழல்வேற்றுமைதெரிந்திலமாதோ. ௧௦

சுண்ணமாடியதுணைமுலைக்கன்னியர்படிய
நண்ணுபன்மலர்நாற்றமுநரந்தமுங்கமழ்ந்து
வண்ணமன்றியுமொத்தனவணரிருங்கூந்தல்
தண்ணந்தீம்புனல்பெருகியயமுனையந்தரங்கம். ௧௧

திங்கள்வாணுதற்கன்னியர்தேனவாங்கூந்தற்
கொங்குவிம்முறுகுவிமுகைமுல்லைமெல்லிணரும்
பொங்குமல்லியின்விரியல்வெண்டோடுமேற்போர்த்துக்
கங்கையொத்ததுகல்லெனமுழங்குகாளிந்தி. ௧௨

யாணர்க்கோங்கின்மென்முகிழ்முலையெழுதுகுங்குமமும்
வாணிலாமதிமுகத்தியர்வாரொலிகூந்தற்
றாணமாகியவாய்மலர்ச்சுண்ணமுமவாவிச்
சேரணையாற்றையுநீர்த்ததுதொல்லைநீர்யமுனை. ௧௩

தெளிவிசும்புலாங்கதிரவன்றிருமகளென்று
அளவளாய்த்திகழம்புயநறுமலர்கடுத்த
களிதடங்கிளையமுனைமாநதிப்படிந்தெழுந்த
முளையெயிற்றிளங்கன்னியர்முழுமதிவதனம். ௧௪

களிக்கருங்கயலன்னகட்கடைசிவப்பூரக்
குளிக்குமேழையர்குங்குமக்குவிமுலைவளாகம்
இளைக்குந்தாமரைக்கேழ்கிளர்நறுமலர்மணத்தல்
இளைத்தல்போன்றனசெழுந்துழாய்க்கருமுகில்செங்கை. ௧௫

கற்றைவார்குழற்கன்னியர்கதிரிளங்கொங்கை
முற்றந்தோய்தருமுழுநெறிக்குவளையம்பசுந்தோ
டுற்றகண்ணனல்லொள்ளொளிசிறனுமுண்ணிறைந்து
பொற்றமாணமையும்புறத்திடைதவழ்வதுபோன்ற. ௧௬

ஆட்டுகுங்குமக்கொழுங்களியளாயசெங்கமலம்
சேட்டிளங்கதிர்முலையெனவொழிந்தவெண்டிங்கள்
காட்டுவாணுதற்கன்னியரெழுதுசாந்தழிக்க
மோட்டுவெம்முலைமுளரியென்றளிகுலமொய்ப்ப. ௧௭

அமிழ்திற்றோன்றியவம்மலர்த்திருமகளேய்ப்ப
இமிழ்திரைப்புனலாடுமவ்வின்னகைமடவார்
உமிழ்கிலாத்திகழ்பூந்துகிலொருங்குகைக்கொண்டு
கமழலர்த்துறைகடம்பின்மேலேறினன்கண்ணன். ௧௮

ஆவியந்துகில்வாரினனலர்கடம்பிவர்ந்த
ஆவியன்னவன்றன்னையவ்வரிவையர்நோக்கிப்
பூவைவண்ணவெம்பூந்துகில்வழங்குதியென்றுப்
பூவைபோல்விளைபுத்தமுதுகமிழற்றினரால். ௧௯

ஆவமாநதித்துகிலொழிந்தாடினீரதற்குக்
கரையிவர்ந்துநீர்கைதொழத்தருகுதுமென்ன
முருகுவிம்மியகோதையர்முகமுகநோக்கி
உருகுகாதலுநாணுமீதூர்ந்தனரொல்கி. ௨௰

இருகரத்துதாழ்கூந்தலாரிறங்கியமுகத்தர்
சொரிதரும்புயறந்தெழுமின்னென்னநடுங்கிப்
பரவையல்குலோர்பங்கயச்செங்கரமறைப்பக்
கரையிவர்ந்தொருகையினுற்றொழுதனரன்றே. ௨௧

ஒருகையாற்றொழுதேனுடரித்தடக்கணீர்செங்கை
அரிதல்வேண்டுமென்றஞ்சனவண்ணனின்றுரைப்பக்
குருகிளங்கொடிமறைந்தனர்சிலர்சிலர்குழைந்து
முருகுவிம்மியமெய்ம்மலர்த்தண்டுறைபடிந்தார். ௨௨

எந்துகோட்டல்குன் மறைதரவிருள்கனிந்தொழுகும்
கூந்தல்சுற்றியுங்கொய்தழைசுற்றியுங்குளிர்தேன்
பாய்ந்ததாமரைப்பாசடைசுற்றியுமெதிர்ந்து
காந்தண்மென்முகிழ்கவற்றிருகையினுந்தொழுதார். ௨௩

அலர்க்கருங்குழற்கன்னியரகன்மதியடைந்து
நலத்ததாமரைநாண்மலர்குவிவதுகடுப்ப
மலர்க்கைகூப்பினர்வணங்கலுமறிகடலகடு
கலக்கியின்னமுதளித்தவனளித்தனன்கலிங்கம். ௨௪

மகிழ்ந்துகொண்டவம்மாசிறாசுடைபுனைதோறும்
நெகிழ்ந்துசோர்தாகிச்சலுநெகிழ்ந்தநோக்குதவி
முகிழ்ந்துவீங்குறும்முலைமுயங்குவமெனவகன்றுன்
திகழ்ந்தவால்வளைகொண்டெறிபாற்கடற்சேர்ப்பன். ௨௫

கோவியர்துகில்கவரத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩0அ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## க0-வது, வேள்விமங்கையருணவளித்தவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

கோழைநாகமுங்குருந்துங்கொன்றையும்
தாழ்சினைமரவமுந்தழைத்தகானிடைத்
தோழரொடின்னிரைதுரந்துசென்றனன்
ஆழிவாய்த்துயிலொழியண்ணலென்பவே. க

பூந்துணர்முருகுலாம்பொதும்பர்பற்பல
நீந்தினனிளையவர்நெகிழ்தண்பூங்குலைக்
காந்தளஞ்சாரலினெய்த்துக்கண்ணனைக்
கூர்ந்ததுபசியெனக்குழைந்துபோற்றினர். ௨

வளர்த்தனரங்கழன்மறைவலாளர்சோ
றளிக்கெனக்கண்ணனின்றறைந்திட்டானெனக்
கிளக்கினல்குவரெனக்கிளந்தகாலைவாய்க்
களிப்புடையிளையவர்கடிதின்மேயினர். ௩

தம்மின்வெள்வல்சிவெந்தழற்கட்பாந்தளின்
பைம்மிசையாடியபச்சைமாமுகில்
நும்முழைவிடுத்தனனென்னறுவன்றனர்
செம்மையந்தாமரைத்தெரியலார்க்கரோ. ௪

கூறுமவர்தன்மை நவமுத் தூய்வெள்ளியின்
றேறுமவர்போர்மைசெனை வென்னரியிலெனை
ஊறுமகவைத் திருவடைக்கூடுமும்
பூரணவான்முகத் தின்முகமென்கூறுமாகாக. ௫

வேதியர்முக்கணெம்பெருமான் வெள்ளிவேதியர்
சேகரமாயக்குழைக்கண்கூறானனரக்
காகவிர்முக்கியாக்குமவர்பர்போவ்
மாதப்பாலத்திரான்வழுங்கிறுவோர. ௬

முல்லையங்கோதை சயர்முதிர்சுவைத்துவை
முல்லைமென்முகைபுகைமுகாலைக்கொள்ள
மெல்லன்மாமைறையவர் தட்பவத்தனர்
மெல்லியேதளிறுன்மருங்கிலெனன்பவே. ௭

பயின்றன்மென் மொழியமலன்முதலையும்
துயல்வரச் சூடியோர் தேர்ட்டதாமரை
இயல்பெறச் செங்கைகொடுத்துசெல்வனேக்
கயன்மலேப்பன்னகன்கண்டோநகிறார். ௮

பூரல்வான்முகத்தினர் பூரறுன்டப்பின்
வாவெளில்கூத்தியல்கடல்வார்துவை
ஆழமுற்சாலிகடைபின்னென்றனன்
காவெழுவிதெகாண்டுறங்காக்குவையனே. ௯

அதகவாங்கைடகமைடயினக்துணர்
முனிருவரெனவவர் முனிவுசெய்கவர்
புனையவிற்சாயவிர்போயினென்றனன்
கலைவிரிசுத்தலார்கண்ணிறுரோமா. ௰

கண்ணைறுபகத்துணர் மைசமுகத்தினர்
சுண்ணமேனவெய்திசாதுகானதிற்றிசேம்
பெண்ணைறிவிலகளிபோகதுபோயெடு
உண்ணெவிழ்காதவிழுருவிறுமோமா. ௧௧

நிறைமொடிமீண்டனரிலவுசெய்கதிர்
வளைமறைநதவெயுமேலேவெண்பிறை
சொரிதலைவளைவர் தேரட்டுமுல்லையக்
தெரியலுழக்குங்கழற்செக்கசேறைனன். ௧௨

வெள்ளியங்கைப்பருணையளித்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௩௨௦.

ஸ்ரீ [illegible]

# ௧௧-வது, கோவத்தனமெடுத்தவத்தியாயம்.

## கலிவிருத்தம்.

உற்றுநீரொழுதுடனுயிர்த்தபேதையர்
அந்தண்வாரைகையமுதருந்தியின்புறும்
இந்திரன்மகிழவாங்கியற்றியீட்டினன்
பைந்தொடைநந்தர்கோன்பண்ணிகாரமே. ௧

ஆவயின்மாயவனறிந்துமென்செய்வான்
மேவினைநீயெனவிளம்பநந்தர்கோன்
பூவைபோல்வண்ணயான்புரியவேட்டது
தேவர்கோன்பூசனையென்றுசெப்பினான். ௨

சேணுலாமிந்திரன்சீற்றமீங்கினிக்
காணலாமென்றுசெங்கமலவீட்டுறை
வாணிலாமென்னகைமணந்தசெம்மணிப்
பூணுலாமார்பினன்புகன்றன்மேயினான். ௩

பண்டுசெய்வினையலாற்பரவுதெய்வமொன்
றுண்டெனிற்றன்பயனுதவவல்லதோ
அண்டர்கோன்பூசனையாற்றுகின்றநால்
கண்டிலதொருபயன்கருதுங்காலையே. ௪

எவ்வினையேனுமொன்றிழைக்கினீறிலா
தவ்வினையேபயனளித்தல்செய்யுமால்
செய்வினையல்லதுதெய்வமென்செயும்
மவ்வலம்பசுந்தொடைமார்பமற்றரோ. ௫

செழுமறையவரொடுசெம்பலானினம்
விழைதருமுணவெலாம்வெறுப்பநல்கிடாப்
பொழிமழைதவழூஉம்பொன்னங்குன்றினை
வழிபடலினிதெனவள்ளல்கூறினான். ௬

திருத்துயில்பெற்றவச்செம்பொன்மார்பினான்
உரைத்தவாறேமனனுவந்துநந்தர்கோன்
அருச்சனைபுரிந்தனனருவிமாலைதாழ்
பொருப்பினைவெண்டிரைப்புவிகளிப்பவே. ௭

கன்னலின்றீஞ்சுவைக்கனியின்குப்பையும்
பொன்னெடுங்குன்றெனப்பொலிந்தசோர்தலை
கொன்னவில்வெள்ளியங்குன்றமாமெனச்
செந்நெல்வெள்ளடிசிலோர்திசைமலிந்ததால். ௮

உண்டுறியின்னமுதுடனுறையும்பாற்கடல்
கண்ணுறங்கின்றமேதாக்காட்சியாமென
வெண்ணெய்வெண்டயிரொடுவிளங்கவோர்தலை
அண்ணலான்பொழிந்தபாலலையெறிந்ததால். ௯

வெடித்தனன்மல்லிகைவிரியல்வாசிகை
தொடுத்தனர்விரைகமழ்சுண்ணத்தூவினர்
மடுத்தனர்தீம்புகையினியதேறுக
வடித்தனர்மைநுழைவையிரிசைத்தனர். ௧௦

அவிழ்ந்ததாமரைமலரிலையசெங்கணன்
சிவந்தகோவர்த்தனமாகிசெய்யொடு
குவிந்தவால்வல்சியுங்கூட்டுண்டவ்வழி
உவந்தனனெனச்சிலவுரைவழங்கினன். ௧௧

ஆரமிழ்தன்னகல்லடிசின்மாந்தியோர்
கார்வரைமகிழ்வுறுகாண்பிறேறுவேறு
வேரியங்குருந்துநாப்பிமலன்வெண்ணிலா
மூரலின்வழிமொழிந்திட்டானரோ. ௧௨

உண்டதாலாய்த்திறத்துவந்தேனாமென
விண்டதாற்றுதல்யப்பிற்றுமென
அண்டர்பாலவாயினையன்புற்றேத்தினர்
வண்டமிழ்போதுதூஉய்வணங்கினரரோ. ௧௩

மூழ்கிவிரிமெல்லிணர்முல்லையாயர்கோன்
மகன்மொழிகேட்டனன்மலைவழுத்தினன்
நகையுடைத்திலெந்தொகாட்டுந்தேசத்தனன்
அகவிருளகம்புகாத்தளிக்குமண்ணலே. ௧௪

ஒருமகன்காப்பதுவுமயர்பொற்கோட்டதோர்
கருவரைகாப்பதுவுங்காணத்தக்கதால்
வருகமாமுகிற்குலம்வாரிவற்றிடப்
பருகுபுசொரிகெனப்பணித்திட்டானரோ. ௧௫

ஏழ்பெருங்கொண்டலுமெழுந்துவானிலை
யூழியினிறுதியிற்சரிகெயாலெனச்
சூழ்கழலிந்திரன்சூழியானையின்
தாழிருங்கடக்கையிற்றுறைகான்றவே. ௧௬

இடியினிலவெருவுறாவிடித்தியின்றுமின்
கொடியினிற்கரித்துமெய்குலைகுலைந்திடும்
கடிமகன்மாரியிற்கரந்குமல்வழிப்
படிமனியானிரைபட்டதென்சொல்கேம். ௧௭

சாய்த்தவஞ்சென்னியதளர்ந்தகாலன
காத்திளங்கன்றினைக்காந்தமெய்யன
ஆத்திரண்மறுகினவலமந்துற்றன
பார்த்தன்மான்றேர்க்கொருபாகன்றன்னையே. ௧அ

முடிந்ததோவூழியம்முதல்வனண்டமாங்
கிடிந்ததோவுலகியலிறந்துபோயதோ
கடும்புயலின்னதுகண்டிலேமென
நடுங்கினர்கோவலர்நனிகலங்கினர். ௧௯

ஆழல்வளைத்தநாளாவிகாத்தனை
கார்முகில்வண்ணநீகாப்பவேண்டுமிம்
மாரியுமென்றனர்மல்லன்முல்லையந்
தாரவன்சேயடிதாழ்ந்துபோற்றினர். ௨0

வம்மினீர்யாவருமறுகுமாவெலாம்
தம்மினிவ்வழியெனத்தண்டுழாய்முகில்
செம்மையந்தாமரைச்செங்கையொன்றினல்
பெய்ம்முகிறவழ்வரைபிடுங்கினனரோ. ௨௧

கலிநிலைத்துறை.

காவற்றொழில்பூண்டுலகேழையுங்காக்கவந்தோன்
ஆவக்கிடரொன்றணுகாவகையாழிமேய்ந்த
தூவற்கருங்கார்சொரிகின்றவம்மாரிகாத்தான்
கோவத்தனமோர்குடையாமெனக்கொண்டுநின்றே. ௨௨

பாரேழுதவும்பனிமாமலாண்ணலோடும்
ஈரேழுலகத்துயிர்யாவையுமீன்றநம்மான்
ஓரேழ்பகனின்றுயாண்டம்வெடிப்பவார்த்துக்
காரேழ்பொழியுங்கனைவெம்பெயன்மாரிகாத்தான். ௨௩

பாட்டாயிரம்வீழ்ந்திளவண்டினம்பாடுமுல்லைச்
சூட்டாயிதழ்ப்பூந்துளவோடுமிலைந்ததொல்லோன்
விட்டிலங்குகுழையின்னொலைத்திருவின்வீசலின்றகருமேகமே. ௨௦

குண்டலத்திறெறுகொற்றவன்மருடகோடிசிந்துராயணிகொழித்
தெண்டிசாமுககடுங்களின்றெறிராட்டுவெள்வளைகழித்திடா
வண்டினைத்திமிழுமாலைவேள்மகதர்மானவெண்கவரிதுரைகுலாய்
வெண்டிலைக்கடல்சிவப்பவோடினசிரிந்தபாய்குருதிவெள்ளமே. ௨௧

குடுபொன்முடிதாணிந்துவாணிவைதாழ்நுவெண்குடைகவிழ்ந்துபோர்
ஆடல்வன்மகதானைவருத்தொலையவண்ணனின்றநிலையெண்ணிநல்
பாடல்சால்பரிதிவீழ்ந்துவட்டமதிபட்டுவானவரொடுங்குநாள்
சேடனென்றுலகிசைத்திடத்தனிநிறுத்துநிற்குநிலைதோற்றுமே. ௨௨

பொங்கைதமிமிசையுயர்த்துவெள்ளிவரைபோலநின்றதிறலண்ணல்கண்
சேர்ந்துபாகனதுசென்னிமண்மிசைதெறித்திடப்பசியபுல்லியற்
கூந்தன்மாபுரளவிண்கிழித்துயர்குன்றின்வீழசனியேறுபோல்
ஏந்துதோண்மகதனூர்ந்ததேர்மிசையிருப்புலக்கைகொடுமோதினான். ௨௩

கெட்டெயிற்றபலபேய்குனித்திடநெடுஞ்சிலைக்கடைகுழைத்துமேல்
விட்டவிட்டகணையாவும்விண்ணுறவிலக்கிநின்றவளைமேனியான்
வட்டவான்முகடளந்தபொங்கர்மலிமகதர்மன்னனைவளைத்திடாக்
கட்டினான்வருணபாசம்வீசிநனிகண்டவானவர்களிப்பவே. ௨௪

விளைவதுண்டிவனைவிடுதியாலெனவிரைத்துழாய்முகில்விடுத்திடா
அளிபரந்துசுழல்பாரிசாதமலரங்கணவானவரிறைப்பவால்
உளைவயப்புரவிபூண்டதேர்கடிதினூர்ந்துமீண்டமரிலெய்துநல்
வளமனைத்தினையுமாறிலாமதுரைமன்னவன்பெறவழங்கினான். ௨௫

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வாளினைநோக்குஞாஞ்சில்வலத்தினன்சிக்கயாத்த
தோளினைநோக்குமிற்றசுற்றமைவரைவைநோக்கும்
கேளினைநோக்கல்செய்யான்சினைவரால்கெளிறுபாயப்
பாளைவாய்விரியும்பூகப்படப்பைசூழ்மகதவேந்தே. ௨௬

பாந்ததன்பழியைநோக்கும்பாந்ததன்பழியேபோலச்
சுரும்பொடுவண்டுபாடச்சொரிமதஞ்செருக்கித்துஞ்சாக்
கருங்களிற்றீட்டமெல்லாங்களத்திடைக்கவிழ்ந்துதுஞ்சி
இரும்பெருங்குருதிச்சேற்றினிடையிடைக்குவிதனோக்கும். ௨௭

அற்றதன்புகழைநோக்குமற்றதன்புகழேபோலக்
கற்றைவெண்ணிலவுகான்றகவிகையுங்கவரிக்காடும்
ஒற்றைவெள்வளையுஞ்சிந்திமொழுகொளியோடைநெற்றிக்
கொற்றமால்களிருமாய்க்குங்குருதியாறொழுகனோக்கும். ௨௮

நிழலும்வெண்டிங்களன்னநித்திலக்கவிகைவேந்தர்
அழலவிருளையசெங்கணரியனையிருந்தனோக்கும்
புழைபடுதடக்கையற்றுப்பொன்வரைதளங்கவீழ்ந்த
கழைசுளிசிறுகணல்வாய்க்களிற்றினைக்கிடந்தனோக்கும். ௨௯

அடல்விடைநடந்ததென்னவரிளங்குமரர்மூத்தக்
குடையொடுபிச்சம்பெய்தகுளிர்நிழல்குறுகநோக்கும்
படுபசுங்குருதியார்ந்தப்பணியிருவிசும்புபோர்த்து
மிடைதருபருந்தினீழன்மேயதோர்வண்ணநோக்கும். ௩௦

மானவேன்மகதர்மார்பின்மன்றலந்தெரியன்மூசித்
தேனுகர்பறவைசூழச்செருக்களம்படுத்தனோக்கும்
ஆனைசாய்த்தொழுகுகின்றவரத்தநீராறுமூழ்கி
ஊனுகர்பறவைசூழவோங்கலிற்கிடத்தனோக்கும். ௰௧

எழுயர்களிற்றுமன்னரெறியும்வெண்கவரிக்காற்றின்
தாழ்பசுந்தெரியலாடச்சமர்க்களங்குறுகனோக்கும்
வீழ்தருவளைவாய்ப்புள்ளின்விரிசிறையெறிந்தகாற்றின்
சூழ்சுடர்மாலையாடத்துஞ்சினர்கிடந்தனோக்கும். ௰௨

வடிமலர்த்தும்பையார்த்துவாளமாமுழவத்தேற்ற
முடிகெழுவேந்தர்கொற்றமுரசுகண்டுயிலனோக்கும்
கடவுளரெழுந்துதுன்னக்கல்லெனக்கலித்துமல்லற்
சுடர்தவழ்விசும்பிற்றெய்வதுந்துபிமுழங்கனோக்கும். ௰௩

இன்னனபலவுநோக்கியெள்ளினரசின்வாழ்க்கை
மன்னியசிறப்புவாய்ந்தமாதவம்புரிதனன்றென்
றுன்னினன்மற்றென்செய்வானொளிறுவெள்ளருவிமாலைப்
பொன்னெடுங்குன்றநோக்கிப்போவதுபுரிந்தான்மன்னோ. ௰௪

வெல்லலுந்தோற்றலும்வினையிலதெவர்மாட்டைய
செல்லனீதவத்தினென்னச்செறிந்தவாளரசர்தேற்றக்
கொல்லியவெழுந்தகூற்றிற்கொடுஞ்சமம்புரியநாடி
மல்லலைத்தெழுந்ததோளாண்மகதநாடெய்துற்றானால். ௰௫

சராசந்தனொடுபொருத வத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௭௨௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨௨-வது, முசுகுந்தற்கருள்புரியத்தியாயம்.

### கலிச்சந்தவிருத்தம்.

முதிருங்களியினவண்டினமூசத்தகைதொடுதார்
ததைபைந்தொடைபுனைகின்றசராசந்தனல்வலத்தால்
பதினேழ்முறையிவ்வாறெறிபடைவெள்ளமொடெய்தா
மதுரைக்கடியாண்முற்றினன்மலைந்தாடமர்தோற்றான். ௧

பின்னுஞ்சமர்புரிதற்கடல்பெருகும்படைதிரட்டா
மன்னும்பொழுதினிலின்றொருடைமகதித்தனியாழோன்
பொன்னங்கிரிபுரைதோட்பசும்புலவுப்படையவனன்
தன்னைக்கடிதடையாவமர்தலைப்பெய்திடவுரைத்தான். ௨

இளைத்தானிடன்மகதன்பொரவினிலெய்மொடுவெம்போர்
விளைப்பாரியெனச்செஞ்சினவேல்யாதவரெல்லாம்
களித்தாரெனநூக்கோடிகடற்றுனைகொண்டெழுந்தான்
வளைத்தான்விரிபுனற்றுண்டகழ்மதுரைக்கடியரணம். ௩

மலைக்குந்திறல்யவனன்படைவளைக்குமமொருபால்
அலைக்குஞ்சினமகதன்படையொருபாலினியடையின்
கலக்குற்றிடுநகரமெனக்கதிர்கான்மரகதப்பா
சிலைக்கொத்தவிழ்துளவத்தொடையெம்மானினைத்தனனால். ௪

கார்மேவியபரவைத்திரைக்கடறன்னகட்டிடையே
ஈரைந்தெனப்பகர்யோசனையிடனல்கவவ்விடத்தின்
ஓராயிரம்பெயரோன்விசும்புறைதச்சனைக்கூவாச்
சீர்மேவியதுவரைப்பெயர்த்திருமாநகரமைத்தான். ௫

சிந்தாமணியொன்றேவுயர்செம்பொற்றிருநாடன்
பைந்தாதுணவளிகோடிபரந்தாடியவந்தண்
மந்தாரமலர்ச்சோலையுமழைமட்டிழிந்தொழுகும்
அந்தார்புனையிமையோருறையத்தாணியும்விடுத்தான். ௬

விரைமட்டுறுதண்டாமரைவிரியக்கதிர்விரியாத்
திரைபட்டவெங்கதிரொமெனத்திகழ்கின்றனசெஞ்சுட்
டரவெட்டையும்விழைவிப்பனவருமாமணியுடனே
வரவிட்டனனளகைக்கிறைவளங்கூரிருநிதியம். ௭

எண்ணேற்றனவெறிவண்டிரையேழ்பாரையுங்கடப்ப
விண்ணைத்திடைபறக்கின்றனவிழுப்புள்ளியல்படைத்த
பண்ணுற்றனபால்போல்வனபழிதீர்பசும்பச்சை
வண்ணத்தனகலினப்பரிவருணன்விடுத்தனனால். ௮

செறிவுற்றபல்வளத்தாலருஞ்சிறப்பெய்துமந்நகர்வாய்
நெறியுற்றதண்மடற்றாமரைநிலவத்திகழ்செம்பொன்
மறுவற்றொளிர்வரைமார்பினன்மதுரைத்திருநகர்க்கண்
உறைவுற்றவர்தமைமாயையினுனரவகையுய்த்தான். ௯

சீர்முற்றியமதியாமெனத்திகழ்தம்முனையொன்றோர்
போர்முற்றுமிந்நகர்காக்கெனப்புகலாப்புயல்வண்ணன்
கார்முற்றியமதுரைக்கடியெயிலின்கடைக்கண்ணுற்
றேர்முற்றியபடையேய்தலனெழுந்தோடினனன்றே. ௧௦

மணிகுண்டலம்வெயில்சிந்திடமணிமார்பினிற்றிகழ
அணிகின்றனைபைந்துளவத்தொடைவணிதார்துயல்வரவின்
பணியுங்கதிர்கான்றுடகப்பசும்பொற்றுகிற்குலவத்
திணிதோளொருநான்கொண்மணிச்சிகரங்களிற்றிகழ. ௧௧

உருவப்பசும்புயல்போலெழுந்தோடுந்திறங்காணாப்
புரையற்றதண்டமிழ்யாழ்முனிபுகல்கண்ணன்மற்றிவனென்
றெரிகக்குசெங்கதிர்வேற்படையவனென்பசும்பொற்றார்த்
ஆகத்தடந்தேர்தாண்டலன்றொடர்ந்தோடினன்மாதோ. ௧௨

செய்ப்பட்டசெங்கமலம்புரைசெம்பொற்கழல்சேர்ப்பக்
கைப்பட்டனனெனவோடியொர்கருங்கல்லளைபுகுதா
மெய்ப்பட்டதான்மறையுச்சியின்மிசைவீற்றிருந்தருளும்
மைப்பட்டகண்புயலொப்பவன்மறைந்திட்டனன்மன்றோ. ௧௩

ஆரத்திரள்பொழிமாலைவெள்ளருவிக்கிரிமுழையின்
காரொப்பவற்றொடர்ந்தேகியசாலக்கதிர்வேலான்
சீருற்றவைந்துளவோனெனச்செங்கண்டுயில்கின்ற
மூரிச்சிலைவலந்தாங்கியமுசுகுந்தனைக்கண்டான். ௧௪

எயில்வந்துவெம்படைமூற்றவுமிகல்வெங்களத்தெய்தா
அயில்வாளமர்தருகின்றிலையறியாய்பிறவொனக்கொல்
துயில்கின்றனையிவனேயெனச்சுடர்கின்றசெங்கதிர்போல்
வெயில்சிந்தியவெவ்வாய்வடிவேலோன்றனையுதைத்தான். ௧௫

அழித்தார்கலியுலகேழையுமணியுற்றதனுந்திச்
சுழித்தாமரைமலரிற்றருதாளவப்புயலேபோல்
எழிற்றாமரைவிழிதுஞ்சியவிகல்வேன்முசுகுந்தன்
விழித்தானெதிர்பார்த்தானுடல்வெந்தான்விறல்யவனன். ௧௬

என்றூமுனைமுசுகுந்தனென்றிசைப்பானவனென்றைப்
பொன்றூழியொன்றருட்டாக்கடற்புவிகாத்தசெங்கதிரோன்
அன்றன்விருப்பொடுகூறலுமறைவாணரிறபவாழ்
பன்றுண்மதியெனத்தோன்றியபழநான்மறைமுனிவன். ௧௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொய்யுந்துணர்ப்பூந்தொடைமார்பகுன்றேறொட்டுங்கடாக்கலுழி
பெய்யுங்காடக்களிறெட்டும்பேதுவரயாவும்பொறையுயிர்ப்ப
வையம்புரக்குந்தனிச்சவிகைமாந்தாதாவின்றிருமைந்தன்
எய்யுஞ்சிலைக்கைமுசுகுந்தனென்னுநாமத்தினன்மன்றே. ௧௮

அலைக்கருஞ்சேனுமிழ்பாந்தளாகுமக்தபுவிமுற்று
மாலைக்கவிகைநிழலொதுங்கிமலர்த்தாரிமையோர்குறையிரப்பக்
காலைக்கனல்போலுருத்தவுணர்களத்திறக்கவிழக்கற்பகப்பூஞ்
சோலைத்திருநாடளிதளித்தான்சுடர்செய்வடிவேற்படையோனே. ௧௯

குருகின்பெயரால்விளங்குமுதுகுடுமிநெடுமால்வரைகிழியத்
திருகுசினவேற்படையெறிந்தசெம்பொற்றொடித்தோட்டிறன்முருகன்
முருகுகமழ்தாமரைப்படைமுழுதுங்காப்பத்தோன்றலுமல்
பருகுபசும்பொற்கழலானைப்பார்த்தாரிமையோர்பகர்குற்றார். ௨0

மருவின்சாயன்மடமகளிர்மைந்தர்யாருமாங்கிறந்தார்
புரவுபூண்டிங்கெமையளித்தாய்பொழியுங்கதிர்மாமணிச்சுடிகை
அரவிற்கிடந்தபுயலன்றியளிப்பாரில்லைதனிவீடு
தருதும்பெறநீவேட்டவாஞ்சாற்றென்றமரரிசைத்தனரால். ௨௧

அழிவின்றுயர்ந்ததனிமுத்தியல்லால்வரங்களனுகுதற்கு
விழைவொன்றில்லான்பன்னெடுநாள்விண்காத்துறங்காவேல்வேந்தன்
ஒழிவின்றுயர்ந்தவின்னுடருந்தவுமுறக்கத்தினனாகி
மழைகண்டுயிலுமலைமுழைஞ்சின்மலர்த்தாமரைக்கண்டுயின்றனனால். ௨௨

மலைச்செஞ்சிகரமெனப்பணைத்தமல்லற்றடந்தோளவுணர்குலம்
தொலைச்சிக்குடிவேற்றலையிற்சுடர்ப்பூவாகைநறுந்தெரியல்
மிலைச்சிப்பசும்பொனாடளித்தவேந்தனியலார்விரிச்சுநொன்
றலைச்சங்கணிந்ததடக்கைமுகிற்கன்பனன்பினுழைசெய்தான். ௨௩

பதுமப்பொருட்டுவட்டவணைப்பாவைமணக்குந்தடமார்பில்
கதிர்கொப்புளிக்குமணிதிகழக்கவின்செய்மகரக்குழைதாழ
உதிரங்குமட்டிணங்குகட்டுமொளிறுவடிவேன்மன்னவற்கு
வெதிர்நின்றிசைத்தசெங்கனிவாய்விமலனருளால்வெளிப்பட்டான். ௨௪

அருணமணிகள்விளிம்படுத்தவம்பொனுடைத்திருமருங்கும்
தருணவெயில்கான்மணிமார்புந்தாடோய்தடக்கையொருநான்கும்
இருணன்ககற்றுமதிமுகமுமிருளுஞ்சுருளார்குழற்காடும்
கருணைபொழியுஞ்செங்கமலக்கண்ணுமெதிர்கண்டுவந்தனனால். ௨௫

தழைக்கும்பரிதியொருகோடிதலைவந்தெறிக்குந்தகைபோற்கண்
வழுக்குற்றிடநின்றிமைத்திடுபேர்வனப்பாருருவமுந்தொழின்மற்
றிழைக்கின்றவருட்சிறக்கின்றயாரைநீயென்றெறிகங்கை
சுழிக்குங்கமலமலர்ப்பொற்றாடொழுதுகுழைவுற்றேத்தினனால். ௨௬

முரியுந்திரைப்பாற்கடற்றுயிலுமுகுந்தன்யாமேபனிமுருகு
சொரியுந்தாரோயளவிலவெந்தோற்றம்புவியின்பொறைதவிர்ப்பான்
குருதிவடிவேல்வசுதேவன்குமாரனென்னத்தோன்றினமால்
வயமிங்குணக்குத்தரவடைந்தேம்வழங்கென்றிசைத்தான்மறைமுதல்வன்.

ஊழியிருபத்தெட்டிழைவொழுகும்வடிவாள்வசுதேவற்
காழிவளருங்கூழியமலன்றோன்றியளிக்குமெனத்
தாழ்வின்முதியகர்க்கமுனிசாற்றிக்கிடந்தவுரைசூழ்ந்தான்
குழுமுன்னாங்குளிர்ப்புற்றான்றுளித்தான்கண்ணீரிலைசொற்றான். ௨௮

இறக்குமுடலம்யானெனப்பட்டிறந்துபோயவித்துணைநாள்
பிறப்பின்மக்கட்பிறப்பம்மபெறுதற்கரிதாலினிப்பிறவாச்
சிறப்புநெறிதந்திடல்வேண்டுந்தெவிட்டாவமுதேயருட்கடலே
துறக்குமுனிவருளக்கமலத்துறவாத்தெய்வசுடரொளியே. ௨௯

யாழின்மிழற்றுமாதர்முதலெல்லாப்பொருளும்போயதுவும்
ஆழித்தடக்கைமுதல்வனருளால்விளைந்ததென்றறிந்தேன்
வீழ்தலிலன்மற்றனியொன்றின்வீழ்ந்தேனமரர்முடிசூடி
வாழிவளைகான்மறைமுடிமேல்வைத்தின்றூட்டாமையே. ௩௰

பொலந்தாமரையினாசிருக்கும்பொன்னைக்கொழுந்தின்றூலையுழக்க
மலர்ந்தாய்பிழிதாதுறைக்கின்றமன்றற்றுளவமணிமார்பா
நிலந்தாய்விசும்பிற்றவழ்கங்கைநீர்பூத்தலர்ந்ததாண்முளரி
அலந்தார்க்களிக்கலாகாதோவமலாவெனநின்றிறைஞ்சினனால். ௩௧

காட்டியிறுவந்துநகன்றுகன்றுலைம்மாநறுந்தாமோய்
வேட்டமாடுந்திறந்தன்னைவிளைந்தபாவந்தவமியற்றி
வாட்டிமறையோர்குலத்துதித்துவந்தெம்மடிசேர்கெனப்பணித்தான்
ஆட்டுந்திரைமாக்கடல்கலக்கியமுதமமரர்க்களித்தோனே. ௩௨

உழுதாயிரம்வண்டலம்பநறவூற்றுந்தொடைமார்பினன்கையின்
தொழுதான்குழைந்தான்றுள்ளினன்றுள்ளிப்புனல்கட்டுணைபனிப்ப
அழுதானுவகைத்தடங்கடலினாழ்ந்தான்வீழ்ந்தானனிமுதல்வன்
எழுதாமறையின்முடிபுனைந்தவிருதாள்சென்னிமிசைப்புனைந்தான். ௩௩

விடைபெற்றெழுந்தானெற்றிசையும்விழியிற்பார்த்தானிற்பனவும்
நடைபெற்றனவுங்குறைந்தவைகாடிக்கலிவீற்றிருந்ததெனப்
படைபெற்றோங்குதடம்புயத்தான்படரும்வதரிகாச்சிரமம்
அடைவுற்றொழியாவாசையைவேரறிந்தோர்விருந்தாயினனன்றே. ௩௪

கலிநிலைத்துறை.

கோட்டிருஞ்சிலைகுனைகடல்வெதும்பவெம்பகழி
மாட்டிறுநெருமடங்கல்போன்மறுவைவந்தெய்தி
சூட்டிருஞ்விளங்கெயிற்புறஞ்சூழ்பவர்தொழில்
ஆட்டிருஞ்பலவைத்தின்றடுகளத்தாட. ௩௫

வேழவெண்மருப்பொசித்தவன்வெண்டிரைப்பாயல்
ஆழியன்னவன்றன்னெடுமாடல்வேல்யவனன்
பாழிவெம்படைபடுத்தனன்பலபொருளெல்லாம்
சூழுங்கட்டெயிற்றுவரையில்விடுத்தனனெழுந்தான். ௩௬

முளைத்தவெண்பிறைக்கோட்டகார்முகிலெனவதிர்வ
களித்துவண்டுவீழ்கடாத்தநீள்கழையெனக்கனல்வ
வெளிற்றிளம்பனைக்காத்தநின்வெங்கரிநிரைத்து
வளைத்தெதிர்ந்தனன்வால்வளைகலிப்பவேன்மகதன். ௩௭

கரைக்குறும்பெறிகடல்புரைகதழ்சினத்தானைப்
பெருக்கினானிணம்பில்குவேற்படைச்சராசந்தன்
நெருக்கவோடினனிலைக்களமிழந்தவன்கடுப்ப
அரக்கர்வேரறவடற்சிலைகுழைத்தபோரண்ணல். ௧௮

அருவிமாலையந்தடவரைக்குடையெடுத்திரும்
கருவிமாமழைகாத்தவனிதியெலாங்கைவிட்
டொருவவார்குழையொன்றணிந்தவனொடுமோடிப்
பருவமாமுகில்போலவோர்பருப்பதம்படர்ந்தான். ௧௯

காரிரும்புயல்களப்படுபாளைவாய்க்கமுகின்
ஆரழுவியவகன்பணைமகதநாடாளும்
மூரிவேற்படைமன்னவன்முளரியாற்பொத்தும்
சாரல்வெற்பெலாந்தயங்கழலூட்டினன்மன்னோ. ௨௦

மோட்டிருங்கடல்புழுங்கவெம்முனையடுபகழி
வாட்டினனொடுவாள்வளைமேனியான்றன்னை
ஊட்டுவெவ்வழலுண்ணுமென்றெழுகுநீர்மகத
நாட்டகந்தனிப்புரப்பவனடந்தனனகாம். ௨௧

கப்புவாயிப்பிகான்றவெண்முத்தொடுசெங்கேழ்த்
துப்புவெண்டிரைசுழித்தெறிதுவரையம்பதியின்
மைப்புயற்குலந்தவழ்தருவரைமுகடிவர்ந்து
குப்புற்றொருகுழையினன்றன்னொடுகுழகன். ௨௨

முசுகுந்தற்கருள்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௭௬௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨௮-வது, உருக்குமிணிமணத்திறமுரைத்த வத்தியாயம்.

---

### கலிவிருத்தம்.

ஆநத்தநாடுதனியாளுமடன்மன்னன்
ஊனுற்றவேல்விறலிரேவதனுயிர்த்த
தேனுற்றசின்மொழியிரேவதியைமைதீர்
வானுற்றதண்பனையுயர்த்தவன்மணந்தான். ௧

சேறுற்றநாண்முளரிசெம்முகநகைக்கும்
வீறுற்றதண்பணைவிதர்ப்பன்மகள்பைந்தேன்
ஊறுற்றமென்மொழியுருக்குமிணிதன்னை
மாறற்றபொற்றிகிரிமான்மணமயர்ந்தான். ௨

என்றுமுன்வெந்திறலிராக்கதமணத்தால்
பொன்றொழிமாமுகிற்புணர்ந்தனணற்கிற்பான்
அந்நீர்மையாவையுமறைந்தருள்கவென்று
மன்றாதரத்தொடுவழங்குமுனிகூறும். ௩.

விண்ணுற்றதண்டலைவிதர்ப்பவளநாடன்
மண்ணுற்றசெக்கர்மணிமானுமெழின்மாதைப்
பண்ணுற்றவண்டுபடுகைத்துளவமாலைக்
கண்ணற்களிப்பதுகருத்துறவினைந்தான். ௪

வீடாதவென்றிகெழுவேந்தனதுநாட்டம்
நாடாவவன்புதல்வனைச்சிலையவேலான்
வாடாதவாகைமலர்மாலைதலையாத்த
ஓடாவயப்படையுருக்குமியுரைப்பான். ௫

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரியல்வெண்டோட்டுமுல்லைவேயிலைசவடித்தசெங்கட்
கரியவற்குதவவெண்ணைக்கரும்புறழ்கிளவியாளைச்
செருமுகங்கடந்தவென்றித்திறற்சிசுபாலனென்னும்
வரிசிலைவடித்ததிண்டோண்மன்னவற்கீதுமென்றான். ௬

துப்பிதழ்முளரிச்செங்கட்டுளவினான்செவ்விகேட்டு
வெப்புறழ்காமமேன்மேல்விளைதரவிரைமென்சாந்தம்
அப்பினும்வெதும்பாநின்றவலர்முலையணங்குமுன்னோன்
செப்பியமாற்றங்கேட்டுச்செவிமுதல்வெதும்பினாள். ௭

கவிமதங்கடந்தயானைக்கவின்குடியிருந்தகொம்மைக்
குவிமுலைப்பவளச்செவ்வாய்க்கோற்றொடிகாதல்கூறி
உவவுவெண்டிங்களன்னவொருமறையவனையாங்குப்
புவிபொதிகமலப்பொற்றாட்புயனுழைவிடுத்தல்செய்தாள். ௮

உப்புநீர்ப்பரவையெல்லாமொண்மதுப்பரவையாக்கும்
குப்பைவெண்மணலிற்செய்தகுளிர்மதுக்கலுழிதூற்றும்
துப்பிதழ்மலர்ப்பூஞ்சோலைசூழ்தருதுவரையெய்திச்
செப்பினன்கண்ணற்கண்டுசென்றவம்மறைவலோனே. ௯

புடைதவழ்வானயாற்றுப்பொங்குவெண்டிரையேபோலக்
கொடிபலநுடங்குமாடக்குண்டினபுரத்துவேந்தன்
மடமகண்மறிமானன்னமதர்வைமென்னோக்கிமற்றுன்
தடவரையகலத்தோயத்தழைத்தனள்காதன்மன்னோ. ௧௦

ஆங்கவடன்னையையவாயிரம்பகுவாய்நாகம்
தாங்குபேருலகின்மன்னர்த்தருக்கறப்பொருதுவென்ற
தேங்கமழலங்கன்மாலைத்திறற்சிசுபாலனென்னும்
வாங்குவிற்றடக்கையாற்குவழங்குவாளிருக்கின்றாரால். ௧௧

விழவயர்நாளின்முன்னாள்வெற்பிளங்கன்னிதன்னை
வழிபடவெழுவலாங்குவந்தெனைக்கவர்ந்திலானேல்
அழலிடையவிந்துதோன்றியஞ்சனவண்ணன்செய்ய
எழில்வரையகலந்தோய்வலென்றனளணங்கனாளே. ௧௨

என்னலுமுந்நீர்வேலியிருநிலவலயங்காக்கும்
மன்னவர்யாருங்காணமானவேல்விதர்ப்பன்காதற்
கன்னியைக்கவர்ந்துகோடுங்காண்டிநீயென்றுகண்ணன்
கொன்னவில்புரவித்திண்டேர்கொணர்கெனக்கூறினானால். ௧௩

நிலப்பொறைதவிர்ப்பவந்தோனிலமுதருளுக்கவேண்டிக்
கலித்தெழுகடலந்தானைசூழ்வரக்கமழ்தேன்சான்ற
இலைப்பசுங்கோதைதூதாமிருபிறப்பாளனோடு
சிலைப்புறுகலினவாமான்றேரிவர்ந்தேகலுற்றான். ௧௪

கடற்படைகளுலவந்துகளத்தெதிர்வேந்தர்கொற்றம்
முடித்துமென்முருகார்முல்லைமுடித்தலர்கூந்தற்கன்னி
தொடுத்ததாரெம்பிதோளிற்சூட்டுவித்திடுதுமென்னா
அடற்பெருந்தானையோடுமலாயுதனெழுந்துசென்றான். ௧௫

ஊனகுபரிதிவைவேலுாவிறல்விதர்ப்பவேந்தன்
கானகுமலர்த்தார்மைந்தன்கட்டுரைகடக்கலாற்றான்
தேனகுமாலையம்பொற்றிறற்சிசுபாலற்கீவான்
மாநகர்புனைகவென்றுமணிமுரசறைவித்தானால். ௧௬

திருமகள்வளர்தலானுந்தெண்டிரைவேலிஞாலத்
துரைபெறுமன்றலாலேயோங்கியதிறத்தினானும்
சொரிகதிர்ப்பனிவெண்முத்தந்தோற்றுபுசுடர்தலானும்
மரைமலரென்னத்தோன்றும்வளநகர்மன்னினாரே. ௧௭

விண்ணிகர்குடுமிமாடவீதிவாய்நிரைத்தபைம்பொன்
கண்ணவிர்கமுகும்பொன்செய்கதலியும்விளங்குதோற்றம்
பெண்ணமுதோடுமுந்நீர்ப்பிறந்தபொற்பாரிசாதம்
மண்ணிடைவிழவுகாண்பான்வந்ததோர்மாட்சித்தாமால். ௧௮

மாமழைதவழுமாடமழைமுதிர்சூற்கொண்டீன்ற
தாமவெண்டாளமாலைதயங்கொளியுமிழுந்தோற்றம்
தேமொழிமன்றல்வேட்டதிறற்சிசுபாலனென்னும்
நாமவேற்றடக்கையானைநகையசிபுரிவபோலும். ௧௯

பொன்னிழ்க்கோதைமாதர்புரிகுழல்கமழூட்டும்
இன்னகிற்புகைவெண்மாடத்திடைவிராயெழுந்தோற்றம்
கன்னியந்துளவமேகங்கள்ளவிழ்சமைவீட்டு
மின்னிளைக்கோடல்காண்பான்மேகம்வந்திண்டல்போலும். ௨0

தாமரைத்துறந்தசெங்காற்றனர்நடையன்னமேபோல்
கோமளக்கிண்டுமாதர்குழைமுகத்தடருந்தோற்றம்
காமருகமலைமாதைக்கமலலோசனன்கொண்டேகல்
தேமருகமலங்காண்பான்றிரண்டெழுசெல்விமாறும். ௨௧

பைந்தொடைமுருகுநாற்றும்பகட்டெழிற்பரிதிமார்பின்
அந்திவான்மருப்புத்திங்களனைசிராமன்னை
உந்துநீருலகம்விற்குமொளிமணியோடைநெற்றிச்
சிந்துரக்களிறுகல்யானைத்திறற்சிசுபாலன்வந்தான். ௨௨

மாக்கடல்வண்ணன்வந்தலனைப்பிறழுமுழுவெண்டிங்கள்
ஒக்குமுகத்துக்கன்னியிகற்சிசுபாலன்பால
தாக்குவனென்றுபொங்குமடற்சராசந்தனேறிக்
கோக்கனையெழுந்துசெம்பொற்கொடிநகர்குழீஇயதன்றே. ௨௩

இருபிறப்பாளனென்கொலெய்திலனின்றுமென்றே
வரிமிடற்றளிவீழ்தாமணத்திலினைருமெல்லை
முருகுகொப்புளிக்குஞ்செய்யமுளரியம்போதுபூத்த
கருநெறிக்குவளையன்னகண்ணிடனுடிற்றன்றே. ௨௪

துளிக்கருங்கொண்டலென்னத்தோன்றிழுதுகையெல்லாம்
அளிப்பவன்விடுக்கப்பட்டாங்களிக்குலமாற்றுறுண்டேன்
துளிர்க்குமாயிரமென்றேட்டுத்தாமரைத்தெரியன்மார்பன்
களிக்கயலன்னவுண்கட்கண்ணிமுன்னெய்தினானால். ௨௫

மறுவறுசிறப்புவாய்ந்தமாமறையாந்தணாளன்
முறுவல்வாண்முகமேமாந்தண்முழுமதிபோன்றதேனும்
எறிகதிர்ப்பரிதியாயிற்றினிவாக்கத்தைநாற்றும்
செறிதொடிமடந்தைசெவ்விந்திருமுகமுளரிக்கன்றே. ௨௬

கொந்தழலுமிழும்வெவ்வாய்க்குருதிவாய்ப்படையினேடும்
பைந்தடத்தலர்ந்தநீலப்பனிமலரெதிர்ப்பவாற்றுச
சிந்துரிமழைக்கட்பேதைசெவிமுதல்குளிர்க்குமாறு
வந்தனன்கண்ணனென்றுமறையவன்வழங்கினானால். ௨௭

வெயில்பொரவாட்டமுற்றமென்றளிர்ப்பசியவல்லி
புயல்பொழிதுவலைமாந்திப்பொங்கெழில்படைக்குமாபோல்
மயிலெருத்துறழுமேனிமாயவன்வரவுகேளாக்
குயிலெனமிழற்றுமாதுகொழுங்கவினெய்தினாளே. ௨௮

புரிவளையலறிமுத்தம்பொழிபுனற்றடங்களெல்லாம்
விரைகமழ்கமலப்பூத்தவிதர்ப்பநாடளைதல்செய்தான்
குரைதிரைப்பரவைமுந்நீர்க்குவலயம்வந்துதோன்றும்
ஒருபெருங்கமலம்பூத்தவுந்தியந்தடத்துநம்பான். ௨௯

பொழிமதவருவிமாலைப்பொருப்பின்வெண்கோடுகொண்ட
எழுவுறழ்தோளினானம்மின்னனைக்கனிவாய்மாதின்
விழவினுக்கடைந்தானென்றுவீங்குநீர்விதர்ப்பங்காக்கும்
கழைகுனிகளிநல்யானைக்காவலனெதிர்கொண்டானால். ௩0

ஆயிரம்பகுவாய்நாகத்தறிதுயிலேற்குஞ்செய்ய
ஆயிரங்கண்ணினான்வந்தடைதலுமிடைந்தபாண்வண்
டாயிரமலம்புதாரிவ்வண்ணலோர்காணக்கண்கள்
ஆயிரம்பெற்றிலேமென்றகங்கனிந்துருகிநிற்பார். ௩௧

வலம்புரிபொறித்தசெங்கைமலைமலர்தனிவெண்கேழ
வலம்புரிதிகழத்தாங்கிவருவனுமிகையென்றேயோ
வலம்புரிதாங்கல்செய்யான்வந்தனனிலவுகாலும்
வலம்புரித்தடக்கையானேவாழியிவ்வள்ளலென்பார். ௩௨

ஆழியம்பொருப்புவேலியவனியோரேழுமொற்றை
ஆழியேகாக்குந்தீவாயாழிமற்றென்கொலென்றோ
ஆழிகைத்தாங்கல்செய்யானடைந்தனனாழியானே
ஆழியந்தேரிற்றோன்றுமாயிளங்குமாரனென்பார். ௩௩

நாமெலாம்பண்டுசெய்தநற்றவமுடையேமாயின்
தாமரைமலரினீங்கித்தண்பணைவிதர்ப்பங்காக்கும்
கோமகன்மனையிற்றோன்றுங்கொழுங்கயற்கருங்கட்செவ்வாய்க்
காமருவனப்பினாளைக்கவருமிக்காளையென்பார். ௩௪

எழுதருஞ்செவ்விவாய்ந்தவீங்கிவன்றனக்கேயந்தண்
முழுமதிபுரையுமொண்முகத்தவளுரியளென்பார்
மழைமதர்நெடுங்கட்செவ்வாய்மாணிழையவட்கேமற்றித்
தழைவிரிதுளவத்தண்பூந்தாரவனுரியனென்பார். ௩௫

கருங்கடலன்னசாதல்லைசம்பிகலனைத்துநீண்ட
கருங்கடலன்னகண்ணார்கருந்துழாய்ப்படலைமாலைக்
கருங்கடல்வண்ணன்றன்னைக்காண்டொறுங்கதிர்கள்பொங்கு
கருங்கடற்படுவெண்சங்கங்கையினுந்தொழியநிற்பார். ௩௬

துணங்குமென்மருங்குநோவதுண்ணெழில்வாய்ந்தமாமைச்
சுணங்கணிந்தேந்துகொங்கைத்தோகையர்துகவாரி
மணங்கமழ்கடம்பினேறுமாயனைக்காணுந்தோறும்
அணங்குசாவுரியினன்னவந்துடனெகிழ்கிற்பார். ௩௭

அலங்குவெண்மதியைவென்றவண்ணல்வாண்முகத்தைதமானும்
மலர்ந்தசெங்கமலமென்றுமதிப்பதோர்மதிகொலென்பார்
பொலங்கிரிமருளவீங்குபுயத்தொடுபொருவுமென்ன
இலங்கொளிநீலக்குன்றமெத்தவம்புரிந்ததென்பார். ௧௮

செஞ்சுடர்விரிக்குமின்னுத்திரண்டெழுதோற்றம்போல
மஞ்சிவர்குடுமிமாடமறுகுதோறீண்டுமாதர்
நெஞ்சகமுருகாநிற்பநித்திலநகுவற்செவ்வாய்
அஞ்சனவண்ணனங்கோமகன்மணிக்கோயில்புக்கான். ௧௯

உரைப்பரும்பொலிவிற்றாகியோசனைநாறுதெய்வ
மருக்கமழ்மாலைக்காங்கேசார்மலர்மணங்கொளுத்துமாபோல்
அரக்கிதழ்க்கமலநீங்கியாசரிற்பிறந்தமன்றற்
புரிக்குழற்பவளச்செவ்வாய்ப்பூவையைப்புணைதல்செய்தார். ௨௦

முள்ளரைமுளரியன்னமுழுநகைமுகத்திருடன்
வள்ளைவார்காதிற்றாழ்ந்தமணிக்குழைகுலாயதோற்றம்
இள்ளையிற்சிறந்தபாலான்செல்வன்மேற்றாதுபோக்கும்
பிள்ளையஞ்சுரும்புவந்துபேசுவபோன்மற்றம்மா. ௨௧

முருகுணமழலைவண்டுமூசுபூங்கூந்தற்பேதை
அரியார்ந்தகன்றவாட்கணஞ்சனமணிந்ததோற்றம்
நிரைபடிந்தெழுந்தகாரிற்றிகழ்பவனுருவக்காந்தி
பருகினதெவிட்டிக்காலும்பான்மையேபோலுமாலோ. ௨௨

ஒடிக்கவஞ்சுடர்கால்பச்சையொண்மணியாரந்தாழ்ந்து
வடிக்கருங்கண்ணிகொம்மைவரிமுலைத்திகழுந்தோற்றம்
கடற்புவிபொதிந்தசெம்பொற்கனைகழற்காளைகாமர்
அடைத்துழாயலங்கன்மாலையணிந்ததுபோலுமன்றே. ௨௩

கழைக்கரும்பனுக்குமின்சொற்கன்னிமென்மருங்கிற்சாம்பு
குழைத்தெழுகொங்கைமுன்றிற்குங்குமமெழுகுந்தோற்றம்
அழைத்தமால்களிறுகாத்தோனம்பகட்டகன்மார்வம்
தழைத்தசெம்மணியின்காந்திதவழ்ந்ததுபோலுமன்றே. ௨௪

புரிகோட்பிரங்குசொல்லாள்புணர்முலைக்களிநல்யானைச்
சொரிகதிர்ப்பனிவெண்முத்தஞ்சுடர்தரச்சூடுந்தோற்றம்
பெருமதவரைநீள்கோடுபிடுங்கினான்குவவுத்திண்டோள்
வரையொடுமலையத்தும்பைமலைந்தனபோலுமாதோ. ௨௫

மலர்தலையுலகங்காத்தோன்மலரடிகங்கைசேர்ந்த
அலகெலாமுயிர்த்தாள்பொற்றுநறுநாமென்றுநாடி
அலைதவழ்யமுனைசெய்யவடிமலரடைந்ததேய்க்கும்
நிலைநுதல்புனையுநீலச்சில்லரிச்சிலம்புமன்றே. ௨௬

மருப்பிளர்திங்களன்னவாண்மருப்பொசித்தமைக்கார்
விருப்பிளந்தோகைவெவ்வாய்வேற்படைவெள்ளஞ்சூழ
அருப்பிளமுலையாரீண்டவாடகப்பசும்பொற்கோட்டுப்
பொருப்பிளங்கன்னிகோன்புபோற்றுவான்போயாண்மாதோ. ௪௭

முதுமறைமுதலிசெம்பொன்மொய்வரைமார்வமேவி
விதுபுனைசடிலன்றாயவிரிஞ்சனுதியமைப்பூத்துப்
பொதுமலியருளினோம்பிப்புரக்குநம்மன்னைதண்பூ
மதுவருகூந்தற்கன்னிவணக்கமேற்கொளல்வியப்பே. ௪௮

கன்னிநன்னகரினெய்திக்கள்ளயாவுயிர்க்குமந்தண்
கன்னியந்துளவுருடுங்கண்ணனேகணவனாகக்
கன்னிநீயருள்செய்கென்றுக்கண்ணுதல்வேட்குங்கொங்கைக்
கன்னியையுலகமீன்றகன்னியாங்கேத்தினாளால். ௪௯

சில்லரிச்சிலம்புபாடக்கிங்கிணிசிலம்பக்காஞ்சி
ஒல்லெனவொலிப்பச்செம்பொனொழுகுமாலிமயமீன்ற
வல்லியைவலங்கொண்டேகிமடநடையன்னமன்னாள்
எல்லிலங்காழித்திண்டேரேறுவானெண்ணிநின்றாள். ௫௰

நறையகிலாவியுண்டுநாந்தருமலருநாறி
உறைமுகிலாவியுண்ணுமொலிகருங்கூந்தற்கற்றை
செறிதொடியிடக்கையேந்திச்செம்மலெங்கிறுத்தானென்றுக்
கறையுறுவடிவேலன்னகண்மலர்பாப்பினாளால். ௫௧

சூழ்படைகிழியத்தெய்வச்சுடர்மணிப்பொலந்தேர்தூண்டி
ஆழ்கடலவனியாளுமாசருங்காணவாங்குப்
போழ்படுதிங்களன்னபுதகிலாக்கற்றைதாற்றும்
காழிளமுலையினாளைக்கவர்ந்தனன்கமலக்கண்ணன். ௫௨

வெண்டலைப்புணரியாடுய்விரிகடல்கலக்கிக்கொண்ட
பண்டருகிளவியாளைப்படைக்கடல்கலக்கிக்கொண்டு
கொண்டலங்கொழுந்துமின்னுங்கொடிதலைமணந்தொத்தான்
வண்டுணமலர்ந்ததெய்வமரகதத்துளவத்தாரான். ௫௩

ஆலமுற்றிருந்தவெள்வேலடற்சராசந்தனாதி
மாலைவெண்கவிகைவேந்தர்மறலிவாளாவிற்சீறிக்
கோலவெந்தூணியாத்துக்கொடுமாங்குழையவாங்கிக்
காலியற்புரவித்திண்டேர்கதுமெனக்கடாஅய்ச்சூழ்வுற்றார். ௫௪

கலிநிலைத்துறை.

மாற்றுசவென்றிமறமன்னர்மலங்கிவீற்று
வீற்றுகவோடவிறற்பால்வளைமேனிவள்ளல்
கூற்றுடவாடுங்கொடித்தேர்கடிதோட்டியாங்கே
எற்றுனிடிக்குமிடிபோலவின்றெறித்தான். ௫௫

மாரமன்னதோன்றன்மறவாவரிவில்வணைக்கும்
சராசந்தனேறெடுதனியேதெனச்சென்றுதாக்க
ஆராகின்றெழுந்தோனரவக்கடந்தேரினக்கண்
குராமன்றுநீழற்குழற்கொம்பினைக்கொண்டெழுந்தான். ருசு

வாடாதவென்றிசெழுவாகவினைவண்ணனன்வில்
கோடாதமுன்னங்குலைவுற்றுவிற்கோட்டல்செய்யான்
ஆடாதவெம்போரினியாதுதமென்றெதிர்க்க
ஓடாததானைமகதர்க்கரசோடினுறல். ருஎ

கார்வாய்க்கிழிக்குங்கதிர்பின்னையோனையவந்த
போர்வாய்த்திகிரிப்புயல்வவ்வினனென்றுவாடும்
தார்வாய்த்தினிதோட்சிசுபாலனைச்சென்றுசார்ந்து
சீர்வாய்மகதத்திருநாட்டிறைதேற்றலுற்றான். ருஅ

மல்லுங்களிறுங்கடந்தானெடுமாறுடன்று
செல்லுஞ்செருத்தோறுடைந்தேனெதிர்சென்றுதாக்கி
வெல்லுந்திறனுமொருகால்விளைவுற்றதன்றே
சொல்லுந்திறனென்கலங்கேலெனச்சொற்றுதீர்த்தான். ருகூ

முனைகாண்மதியிற்றிகழ்வாணுதன்முல்லைமூரல்
இளையாளைமாயனெழுமாற்கவர்ந்தேகநோக்கி
விளையாதசீற்றம்விளைவுற்றனனீள்விசர்ப்ப
வளநாடன்மைந்தன்வடவானலம்போலெழுந்தான். ௬0

தெரிவுற்றமுல்லைக்குழலாண்டனைச்செற்றுநீக்கேன்
விரையுற்றமுல்லைக்குழலங்கையைமீட்டிலேனேல்
முருகுற்றபைந்தார்முடிமன்னவர்முன்னைமீண்டு
வரையுற்றமாடமணிமாநகர்வாரலேனல். ௬க

வாட்டானையெல்லாமெழுகென்றுவில்வாங்கிமான்றேர்
ஓட்டாவழல்வாயுமிழ்வாளிதெரித்துசெல்லா
காட்டாமலைமேனுறைகின்றவணங்கைமுன்றேன்
தாட்டாமரைக்கட்கரியோனெறுதாக்கின்றான். ௬உ

பூத்துந்தியந்தாமரைவாய்ப்பொழிலேழொடேழும்
காத்தெங்குநின்றகருணைக்கடன்மேற்கனன்று
கோத்தண்டமுற்றுங்குறுங்கச்சிலைகொண்டெறிந்து
தீத்தும்முவாளிசிலசிந்தினன்றீயொடொப்பான். ௬௩

வாரும்பசுந்தேன்படிந்தஞ்சிறைவண்டுபொற்று
தாருஞ்செழுந்தார்புனம்பகட்டாமார்பன்
தேரும்பரியுஞ்சிலையோடுதனித்துசிந்தக்
காருங்கடலும்புரைவான்சிலைகால்குழைத்தான். ௬௪

அருந்தாமணிப்பூண்டெயல்கொல்கைமைக்கொளித்த
அருந்தாய்மருங்கிலமுதன்னவன்முன்றுதித்தான்
செருஞ்சோரிகான்றுநிகழ்கின்றகொல்வாள்விதிர்த்து
கருங்குறாகத்துயிர்தீர்த்தவன்முன்னடைத்தான். ௬௫

வில்லற்றவாளோடெதிர்த்தன்றவிட்டபாயன்
கல்லிற்கதிர்காண்டெறிவெஞ்சினவெஃகமேந்தச்
சொல்லற்கவென்றுகொடியின்னினவயங்குகோதை
மல்லற்கமழ்ந்தருள்மலைமுவண்ணனைவேண்டினாளால். ௬௬

ஐயாறுவென்வேல்விறலோனையொர்க்குமேறுங்கி
வாறாறுகக்குங்கொடித்தேர்மிசைமன்னையாத்துத்
தேறாறுதாமஞ்செறிகுஞ்சிகுலைறத்தஞ்செய்தான்
மீறாறுவேலைக்கடல்வெம்பவில்வாங்குமேசய். ௬௭

பால்வண்ணனாங்குப்படுவெஞ்சமரேற்றுநின்ற
கோல்வண்ணவல்விற்குலமன்னவர்பாறவென்று
சூல்வண்ணமேகக்கொழுந்தாமெனத்தோற்றம்வாய்ந்த
நீல்வண்ணநேமிநெடியோனுழைமெய்திறானே. ௬௮

வீக்குஞ்செயற்குமுனியாவருவேலினானை
யாக்கும்பிணிப்பினிலைடதின்றுமகற்றியாவும்
காக்குங்கருணைக்கடன்முன்னமுதித்தகாளை
சேக்குங்குவளைத்தடங்கண்ணியைத்தேற்றினானால். ௬௯

கலிவிருத்தம்.

பொருப்புறழுமாடமலிபோசகடமென்னும்
திருக்கிளருமாநகர்திறப்படவியற்று
உருக்குமியுறைந்தனனுருக்கமையகம்பொன்
தருக்கிளர்துறக்கநிகர்தன்னகர்தனக்கே. ௭௦

தன்னிகரில்கற்பகதருக்கொணர்கருங்கார்
பொன்னெழுகுவல்லிகொடுபோவதாகடுப்ப
மின்னெழுகுபூணணியுமெல்லியறனைக்கொண்
டின்னெழில்சிறந்தநகரின்புறவடைந்தான். ௭௧

அரும்புகதிர்முத்தலைசுருட்டுநெடுமுந்நீர்
விளிம்புதிகழ்மாநகரமேவிவிரிபொற்று
தளைத்தளியலம்பலரினன்னமெனவாழ்வான்
இளம்பவளவல்லியொடுவின்னெழில்சிறந்தான். ௭௨

வேழநகர்மன்னர்முதல்வண்டிசையுடுத்த
வெழிருநிலத்தரசர்யாவருமிறுப்ப
வாழிநெடுவானவர்வழுத்துமணிவண்ணன்
ஆழிதருமின்னமுதமன்னவளைவேட்டான். ௭௩

இக்கதையிசைக்குநரிசைப்பதுவிருப்பால்
புக்கினிதுகேட்குநர்கள்பொன்னிதழ்விரிக்கும்
செக்கர்கமலத்தவடிருந்தருள்வழங்க
மக்களொடுமிப்புவிமகிழ்ந்துறைவர்மாதோ. ௭௩

உருக்குமிணிமணத்திறமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௮௱௭.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨௪-வது, பிரத்துமனனவதரித்தவத்தியாயம்.

---

### எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

தெண்டிரைத்துயின்றநம்பிசெம்பொனாரமார்புதோய்
வண்டாற்றுகோதையவ்வயிற்றுவந்துதித்தனன்
துண்டவெண்பிறைக்கொழுந்துசூடுநக்கனென்னுதற்
கண்டிறந்தகாலையிற்கரிந்திறந்தகாமனே. ௧

ஊற்றிருந்துபச்சிரத்தமொழுகுகின்றபரிதிவேற்
சீற்றமிக்கசம்பரன்றெரிந்துவெய்யபகையென
மாற்றருஞ்சிறப்புவாய்ந்தமன்றல்வேனிலானையவ்
ஈற்றறைக்கரந்தெடுத்திருங்கடற்படுத்தினன். ௨

அலைகுளித்தவேனிலானையாங்குமீன்விழுங்கவோர்
வலைஞன்மற்றுமயிலைவீசுவலையகப்படுத்திட
நலமிகுத்தநீதெனுநயந்துபோர்கடந்தவேற்
றலையலங்கல்வாகைவேய்ந்தசம்பரற்குநல்கினன். ௩

மட்டருந்திவண்டுபாடுமன்றன்மாலைமார்பினன்
அட்டிலிற்கொடுப்பவட்டின்முதல்வியாயமர்ந்திடும்
இட்டிடைத்தடங்கொள்கொங்கையாதிமீன்குறைத்தலும்
விட்டிலங்குகுழவிமீனுள்விழிகளிப்பநோக்கினள். ௪

மெல்லென்முல்லைமூரலாள்வியக்கெடுத்தகாலையாழ்
வல்லமாதவத்தனெய்திவாணெடுங்கண்மங்கையிவ்
வெல்லிலங்குகுழவிமாயனீன்றதோன்றல்வேனிலஞ்
செல்வனின்மணாளனென்றுதேர்ந்துதன்மைசெப்பினன். ௫

இளங்களிச்சுரும்பர்கோடியேடலாவுமுகைகிழித்
துளர்ந்துபாடவூறுமட்டுறைத்தமாலைவேனிலான்
விளங்குவானிலாவுகுத்தவெண்பிறைக்கொழுந்துபோல்
வளர்ந்தனன்றளர்ந்தநுண்மருங்குன்மாதர்மையலே. ௬

காளையாயகாலையிற்கருப்புவிற்குழைத்தபோர்
வேளையோர்தணிந்தநீலவெற்பெனப்பணைத்ததின்
டோளைநோக்கிநீலமூந்துளங்குகொற்றம்வாய்ந்தகூர்
வாளும்வென்றகண்ணிகாதல்வாரிவீழ்ந்தழுந்தினள். ௭

கன்னல்வில்லிசெங்கயற்கருங்கணாள்குறிப்பறிந்
தன்னைநீவிழைந்ததென்னையம்மவென்றியம்பலும்
மன்னனீயெனக்குமாயன்மைந்தன்வேனிலானென
மின்னுனுண்மருங்குலாள்விளைந்தவாவிளம்பினள். ௮

நஞ்சளாவியமுதுதோய்ந்தகாமவேற்கருங்கணாள்
கஞ்சனைக்களைந்துவென்றகண்ணன்மைந்தவின்னுலாம்
மஞ்சிலங்குமின்னினன்னவாள்வலங்கொள்சம்பரன்
வெஞ்சமங்கடத்தியென்றுவிஞ்சையொன்றுநல்கினள். ௯

அரிமழைத்தடங்கணாளளித்தவிஞ்சையெய்தலும்
விரைகொழித்ததும்பைசூடிவேனிலாளிவல்லைபோய்ப்
பொரவழைப்பவிழிசிவந்துபொருமடங்கலேறுபோல்
எரியழற்சினத்தினனெதிர்ந்துபோரியற்றினன். ௧௦

தண்டமொன்றுதாங்கியும்பர்தலைபனிப்பநெடியமூ
தண்டகோளமதிரநின்றடித்தசம்பராசுரன்
துண்டமாகமின்னெனச்சுடர்ந்தவாளின்வீட்டினன்
வண்டுபாடவாய்நெகிழ்ந்தவாகைமாலைசூடினன். ௧௧

வெளிமுகங்கிழித்தெழுந்துமின்னினன்னமாதொடும்
துளிமதுக்கடுக்கையான்றுளங்கவெய்தவேனிலான்
அளிகிடந்தலம்பவாயவிழ்ந்தகண்ணிமாயன்வாழ்
நளிகடற்கிடங்குடுத்தநன்னகர்க்குநண்ணினன். ௧௨

வேழவெம்படைத்தடக்கைவேனிலானிறுத்தலும்
கேழ்கிளர்ந்ததண்ணிலாக்கிளைத்தசங்கினோடுகூர்
ஆழிதாங்குசெங்கைநங்களையனென்றுகோனகர்
காழணிந்தவெம்முலைக்கருங்கணார்மயங்கினார். ௧௩

அழலுகச்செயிற்றுவாளராவணைத்துயின்றமால்
எழில்விளங்குதேவிநோக்கியிந்நறைக்கரந்தபைங்
குழவிகோலமன்னதேர்ந்தல்கோலமென்றுமுலைசுரந்
தொழுகுபாலினிலநெகிழ்ந்துருகிநின்றிரங்கினள். ௧௪

அறிந்தமாயனென்றுமாங்கறைந்திலன்னிருப்பவேல்
எறிந்தமைத்தடங்கணாண்முன்னெய்தினின்வயிற்றிடைப்
பிறந்ததோன்றலிவனெனப்பிறந்தவண்ணமோதினன்
உறழ்ந்துமென்னரம்புளர்ந்தவொற்றைமாதவத்தினன். ௧௫

காவிவென்றுவேல்பொருங்கருங்கயற்கணீருகக்
கோவைமுத்தணிந்தன்னகொங்கைபாற்சொரிப்பவின்
றாவியன்னமைந்தனைத்தனங்கையிற்றழீஇயினள்
ஓவியப்பொலங்கொழுந்துவைப்பசும்புளோமே. ௧௬

மலைச்சுமாழியானுமாழிமாலைகற்குமன்னனும்
நிலைக்கைமன்னன்மன்பெருஞ்சிறப்புவாய்த்தசேவியும்
கலித்தவெண்டிரைத்தடங்கடற்கருவயிர்த்ததும்
குலைக்கொழுங்கையன்பிணிற்குலைமுத்துபுல்லினரோ. ௧௭

வேறு.

எழில்வளர்மாயாவதியெனும்பேர்பெற்றிருந்தவவ்வின்னகைமங்கை, தழைவளர்தோளிவெழுதிங்கரும்புகன்னவிரேளிளிற்கதுவத், தழுவுதற்கடங்காத்தடமுலைமுகட்டிற்றண்மலர்த்தார்வடுப்பொறிப்ப, விழைவினிற்றழுவிவிழிசவர்வனப்பின்வேனிலஞ்செல்வன்வீற்றிருந்தான். ௧௮

பிரத்துமனைவதரித்த வத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௮௫௫.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨௫-வது, சத்தியபாமையை மணம்புரியத்தியாயம்.

### எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொத்தலைதவழுங்குழைசடல்பொடித்தகுழலியஞ்செங்கதிர்ப்பரிதி, ஒத்தொளிகிளைக்குஞ்சமந்தகமணியோ டொருதனித்திகிரியான்றனக்கு, முத்தவெண்கவிகைமன்னவர்பசும்பொன் முடிபொரச்சிவந்தபூங் கழற்காற், சத்திராசித்துவித்திலமுதுவற்சத்தியபாமையைத்தந்தான். ௧

என்னலும்பின்னற்றிரைமுகஞ்சிவப்பவெழுந்தமாமணிகிடந்திமைக் கும், பொன்றுறையலங்கன்மார்பினென்றனக்குப்பொழிகதிர்மணியொடு துவர்வாய், அன்னமென்னடையவளைங்கிளையாசனைளித்தனிதருளொ ன்றை, மின்னகுபரிதிவேலினென்கிளப்பமெய்த்தவன்விளம்பலுற்றனனால்.

எரிமணிச்செஞ்சுட் டாலணைதுயிலு மிறையவரிறைவன்மார் வத் தாத், திருமணிகடுப்பப் புனைகேமன்மூலைத்துச செம்பொன்மால் வரைவ லத்திரியும், ஒருதனியாழித் தோவற்பாலி யுடைத்திரையாழியேழுடுத்த, பெருநிலங்காக்குஞ் சத்திராசித்துப் பெற்றனன்சமந்தக மணியே. ௩

விழுத்தவப்பேற்றுலடைந்தமாமணியைவிளமதுத்தளித்தபூத்தரா ன், கழுத்திணிற்புனைந்துவருதலு மற்றைச்சடிகர்மாக்களேறக்கினர்கண், வழக்குசெஞ்சுடர்செய் பரிதியஞ்செல்வன்வருமெனத் திருமறுமார்பன், தழைத்தவெண்ணிலவு பொழிமதிக்கவிகைச சத்திராசித்தெனக் கிளந் தான். ௪

விரிகடல்வயிறுகீண்டுசெங்குருதிவெள்ளம்வந்தெழுந்தெனத்தவழும்
எரிகதிர்க்கற்றைசொரிமணிபிறப்பவெறுழ்வலியாவுகாலயர்த்த
வரையினிற்கலச்கும்வலயபுரித்தடக்கைவள்ளலம்மன்னனைநோக்கித்
திருவிழைபவளச்செய்யவாய்திறந்துசெம்மணிதருகெனக்கிளந்தான். ௫

செறிவிருட்குறும்புதிசைத்திசையிரியத்திகிரியொன்றுருட்டுசெங்கதிரோன், மறைதாத்திகிரிவழங்கியதடக்கைமாதவுருவினுன்றனக்கு, உறுபொருள்வேட்கையுடையனுய்க்களித்தவ் வுலப்பொருதோளினுனொரு நூற், றருபதுதுலாம்பொனுடொறுமீனு மழன்மணி கொடுக்கிலேனென்றான். ௬

வெள்ளிவெண்டிங்கண் மீமிசைகவிப்பவிளங்கிளஞாயிறு நடந்தாங், கொள்ளொளியெறிக்குஞ் சமந்தகமணிபூண் டொற்றைவெண்கவிகைமே னிழற்ற, எள்ளருந்துப்பிற் சத்திராசித்துக் கிளவலாமெழிற்பிரசேனன், வள்ளுகிரிமாவழங்குதண்சாரல்வரையிடைவேட்டமேலெழுந்தான். ௭

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அருவரைச்சாரல்வேட்டமாடுழியழன்றுபொங்கி
கிரையுளையரிமானேறுகிழல்சுளிகளிறுமானும்
வரிசிலையுழவற்கொன்றுமழகதிர்ப்பரிதியென்ன
எரிசுடர்க்கற்றைதூற்றுமெழின்மணிகவர்ந்தன்றன்றே. ௮

கோக்களிற்றுழவன்மார்பிற்குருதிநீர்தெறித்ததென்னத்
தீக்கடைதவழ்ந்தசெங்கட்டெறுசினவரிமாத்துஞ்சத்
தாக்கினன்மணிக்கைகொண்டுசாம்பவன்பிலத்துநண்ணித்
தூக்கினன்குழவியாடுந்தொட்டின்மேற்சுடரமன்றோ. ௯

தம்பியைக்காண்கிலானுற்சத்திராசித்துமாழ்கி
வெம்புசெஞ்சுடர்செய்சீர்சால்விழுமணிப்பொருட்டுப்பற்றித்
தம்பிவெண்கோடுகொண்டதொடிபொலிதடக்கையானே
எம்பியைச்சவட்டினுனென்றெடுத்தெடுத்தியம்பலுற்றான். ௧௦

கடங்கலுழ்களிற்றுமன்னன்கரைவதுகேட்டுக்கண்ணன்
தடங்கிரிச்சாரலெய்தித்தாமவேற்காளைமாணடு
கிடந்ததுமரிமாத்துஞ்சிக்கிடந்ததுமெண்கொன்றுங்கு
கடந்ததுங்கண்டுமற்றந்நடைவயினடந்தான்வல்லே. ௧௧

இருட்பிலமொன்றுதோன்றவிருள்படுபிலத்தினெல்லைக்
கரைக்குறும்பெறிந்துபொங்குகருங்கடற்றுளைநிற்பத்
திரைத்தலைபிளந்துதோன்றுஞ்செங்கதிர்ப்பரிதிநாண
உருத்தெறிஞானநந்தவுருவினனுள்ளேபுக்கான். ௧௨

குழவியின்விளையாட்டாகக்குழவியம்பரிதிபோலும்
எழின்மணிசுடரநோக்கியிந்நிலைவெற்பின்
ஒழுகொளிவிரியுநம்மானுற்றனனுகத்துவன்னென்
றழுதனளழைத்தாண்மற்றவரும்பெறற்குழவிக்கைத்தாய். ௧௩

அருசனைத்தடக்கைவள்ளலாறுதனையழைத்தல்கேளா
கருதகொப்புளிக்கும்பேழ்வாய்க்குதலைநாகமேபோல்
வெருவினன்றிருவியெண்ணின்வேந்தனுவந்தெழுதலாகா
மருசனன்றன்னொடேற்றுமல்லமர்மலைதல்செய்தான். கரு

வெலற்கருங்களிறுபோலவெந்திறலெண்ணின்வேந்து
மலைத்தலுமவனைவீறேழ்மைம்முகின்மாரிகாத்தோன்
கொலைப்படையெடுக்கவில்லான்குங்குமக்குவட்டினீக்கிச்
சிலைத்தழும்பிருந்ததோளாற்செருச்சமம்புரிந்தானன்றே. கசு

ஒல்லெனவுருமின்வெம்போருழந்தனுவொன்பானவைகல்
செல்லலுமெண்ணின்வேந்துதன்னிதிற்றெளிந்துகொற்ற
வில்லிறைவிலங்கைசெற்றவிறல்கெழுதடக்கைவீரன்
அல்லிகொளீயீக்கென்றேவடைந்தனன்றேத்திருறைதல். கஎ

பணிபுரைசீற்றத்துப்பிற்பஃறலையாக்கன்குடும்
துணிகவிர்மருடபந்திதுணியவெஞ்சிலைகால்கோட்டும்
அணிமணிக்குன்றமன்னனலர்கதிரெறிக்குஞ்செக்கர்
மணியினுக்கடைந்தவன்னமணியிதழ்விண்டுசொன்னான். கஅ

வெண்மணிசுழிக்குந்தெண்ணீர்வியன்றலைவிதர்ப்பவேந்தன்
கண்மணியனையநங்கைகாதலங்கொழுகற்காங்குப்
பெண்மணியோடுழக்கீர்ப்பிறந்தசெங்கதிரினன்ன
ஒண்மணியெண்ணின்வேந்தனுவப்பொடுமுதவினான். க௯

எண்ணின்வேந்தளித்தசாம்பவதியெனுமிலவச்செவ்வாய்ப்
பண்கனிமழலைத்தீஞ்சொற்படாமுலைப்பவளவல்லி
கண்கவர்மணியினோடுகொண்டகலினங்கக்கொண்டு
மண்கவர்கமலத்தாளான்மாகடலென்னமீண்டான். உo

பன்னிருவைகல்காறும்பாயிருட்பிலத்திலெய்லை
துன்னியதானைநம்பிதோன்றுதல்காண்கலாமே
மன்னியகாமெய்திமாவலாவருள்செய்கென்றுக்
கன்னியைத்துளவுருடுங்கன்னியைப்பரவிற்றன்றே. உக

மிக்குலவருவிபோலச்செய்யபூங்கண்ணமாடி
அந்தளிர்தொடுத்தகோதையழிகடக்கலுழிபாய
இத்திரிகிலவெற்பினெழிறுபெறப்பினைத்தோளான்
வந்தனன்புனைகிவேலிமாநகர்மகிழமன்றே. உஉ

கனிர்கடல்கடைந்துவானோர்நாட்டினார்க்கமுதுதக்கி
அனைகவர்க்குண்டவம்மானனைக்கணத்தழைத்தல்செய்யாத்
தனையவிழ்கலைகண்மாலைசத்திராசித்துக்காங்கு
விலைதிறமுறுகக்கூறிவிழுமணிகந்திநைதல். உக

பிழைத்தனமென்றுவேந்தன்பிழைத்தவப்பிழைப்புத்தீர்ப்பான்
விழைத்தகுமணியினோடுவெண்டலைப்புணரிவேலை
தழைத்ததெள்ளமுதின்சாயற்சத்தியபாமைதன்னை
மழைப்புயலன்னமேனிவள்ளலுக்குதவினானே. ௨௫

பொன்னிதழ்க்கமலவீட்டுப்பொற்கொழுந்தணிந்தமார்பன்
கன்னலுமமிழ்துங்கூட்டிக்கவின்குழைத்தெழுதுபாவை
அன்னமென்மருங்குற்செவ்வாயலர்முலையணங்கைவேட்டு
மின்னகுமணியைமீட்டும்வேந்தனுக்கருளினானால். ௨௬

சத்தியபாமையைமணம்புரிந்தத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௮௭௬.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨௯-வது, சததன்னுவாவைக்கொன்றவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அனலுமிழ்திகிரிமாயனறிந்தனனிருந்துமைவர்
புனையரக்கில்லஞ்சேர்ந்துபொன்றினாரென்னவோடும்
பனைவலனுயர்த்தசெங்கட்பாணிறவண்ணனோடு
நனைகவுட்களிநல்யானைநகர்க்கெழுந்தேகினானே. ௧

கங்கையாள்காதன்மைந்தன்கல்லென்வெண்டரங்கவேலை
அங்கண்மாஞாலங்காக்குமம்பிகைபுதல்வன்மற்றை
வெங்களிச்சிறுகண்யானைவிதுரனாற்றவையீன்ற
நங்கையென்றிவரைக்கண்டுநம்பியாங்கிருந்தான்மன்னோ. ௨

களிமுகச்சுரும்புண்கோதைகாந்தினிமகனுஞ்செய்ய
இளவொளிப்பரிதிவைவேற்கிருதவன்மாவுமற்றாங்
களையுறையரியேறன்னவடற்சததன்னுவாவின்
வளமனைகுறுகிமெல்லவகுத்துரையாடலுற்றார். ௩

மாறிலாய்நினக்குநேர்ந்தமடைமதர்நெடுங்கணாளைத்
தேறல்பாய்தெரியன்மாலைத்தேவகிகுமரற்கீந்த
தாறுபாய்களிநல்யானைச்சத்திராசித்தையின்னே
கோறல்செய்தவன்கைக்கொண்டகுருமணிகோடியென்றார். ௪

அணிபுரைபணைமென்றோளாரலர்கதிராரந்தாழ்ந்த
பணைமுலைபொருததாரான்பள்ளிகொள்களிறுபோலத்
துணர்விரியமளிமீதுதுஞ்சுழியெருக்கித்துஞ்சா
மணியினைக்கவர்ந்தான்மற்றமானவேற்றடக்கையானே. ௫

ணைறுங்கோதைசோரச்சத்தியபாமைநெஞ்சம்
ழனைனச்சோர்ந்துமாழ்கிச்சுடர்செய்வேற்றந்தைதன்னை
ணெய்பெய்தோணியிட்டாங்செய்தினன்கொழுநன்றன்பால்
றுறுபுலவுவாட்கட்புலம்புமுத்துகுப்பநின்றாள். ௬

டனன்விளைந்தவன்னைங்கிளர்கடலுலகங்காப்பச்
வாளாவப்பள்ளிநயிற்கலைவதுறந்ததொல்லோன்
ட்டுவெண்டிங்கண்மேனிமுன்னவன்றன்றோடொல்லை
டினன்கொடிஞ்சித்திண்டேருற்றனனகரமாதே. ௭

ஞாக்ருலகங்காக்குமொருகணித்திகிரிமாயன்
கனனென்னவோடும்வயிறுரிதவழவஞ்சிக்
க்குழல்வேலிறுனைக்கொண்டுரிமணிகைக்கொண்ட
கெளிற்றுத்தாளைக்காவலன்கலக்கமுற்றான். ௮

ழக்தலைபின்னரோர்தம்வரிமுலைக்கோடுபாய்ந்து
த்தண்படலைமாலைக்கிருதவன்மாலைவண்ணனி
ற்சினந்திருகுகூர்வாயாழியாறுடும்வெம்போர்
முத்துமென்றியம்பிநுனல்வெழுவுறழ்தோளிறுறல். ௯

ஏயாறுபசும்பொற்கோட்டுப்பொருப்பொடுபொருதயானைக்
வளர்குழவித்திங்கட்கோட்டடியசழ்ந்தகொற்றத்
சினகேசியாறுடெங்ஙனம்பொருதுமென்று
லைத்தடக்கைமன்னன்வழங்கநெஞ்சழுங்கினைத்தான். ௧௦

ாவரிமிடற்றவண்டுவிளைகமழ்முகைவாய்வின்ன
ாவெரிபசும்பொற்றுதண்டுறங்குபூந்தாமமார்வன்
உவிளங்காமார்பிற்காந்தினிபுதல்வன்றன்பால்
ாமழைவண்ணன்றன்மேலெதிர்பொரவிலையதுமென்றான். ௧௧

லயெழுசழலின்வெம்பியாடமருழந்தமல்லர்
ாலையுறப்பனைத்துவீங்குருங்குமகுவவுத்திண்டோள்
லயோடுமலையவல்லார்மண்ணினில்விசும்பின்மற்றை
ஙினினுளார்கொலென்றுமைபலவுதவிறுறல். ௧௨

ப்சமர்விழைவுதீர்த்துகாந்தினிபுதல்வன்றன்மேல்
சறவிளங்குசெங்கேழ்மணியிளையெறிதல்செய்யா
னைநூறுதாவுமுனைவயப்பரவியூர்ந்து
ல்வேற்றடக்கைமன்னன்பொருக்கெனப்போயான்மன்றே. ௧௩

டங்கதுழ்களிற்றன்றனைக்காயழல்கவிழ்க்குஞ்செங்கண்
டங்கவேறன்னதுப்பின்வால்வளையன்னமேனிக்
காடுஞ்சிலையுழவறுடுகொடிஞ்சியந்தடந்தேரூர்ந்து
ஞாடர்ந்தனவணிபொத்துஞ்சூழ்கழற்காலம்மானே. ௧௪

ஒளிமதிகமலத்தோடுமுறவுகொண்டுலவுமாபோல்
தளையவிழ்முளரிக்காட்டிற்சங்குருலுளைந்துருளும்
வளவயன்மிதிலையெல்லைமருவலும்பரிமாவீழக்
களிமதக்களிற்றுமன்னன்கால்வலிகாட்டினானல். ௧௫

நொறில்வயப்புரவித்திண்டேர்நூக்கலன்கண்ணனோடிக்
குறுகினனாழிவெந்தீக்கொழுந்துவிட்டெரிந்தாலன்ன
எறிசுடராலக்கனேமியெறிந்தனனிரியல்போய
உறையுறுவேலினான்றன்கருந்தலைதடிந்தான்மன்னோ. ௧௬

கட்டுயின்மேயகூர்வேற்காவலனொருவற்கொன்று
கெட்டுறக்கெய்தினான்பானிழன்மணிசாண்கிலானல்
விட்டொளிர்மணிச்செஞ்சூட்டுவிடவாப்பள்ளிநீத்து
வட்டவெண்டிரைப்பார்போற்றும்வலம்படுதிகிரிப்பெம்மான். ௧௭

திரைமுகங்கருகவென்றிச்சிலைகடைகுழைத்துநீண்ட
வரைமுகமுருக்குமுல்லைவணைபசுங்கழைவாய்வைத்த
கருமுகில்வண்ணனீங்குக்காண்கலன்மணிமற்றென்னா
முருகுவீற்றிருந்தபைந்தார்முன்னவற்கியம்பினானல். ௧௮

இளவெயிற்கற்றைகாலுமெரிமணியிவன்றேத்தின்றேல்
வளகமொருவன்கைப்பால்வைத்தனனாகல்வேண்டும்
களிமதிமுகத்தாய்நீபோய்நாடுதிவருவலென்னா
வெளிமுகடுடைக்குமாடமிதிலைசென்றெய்தினானே. ௧௯

ஒக்கிருந்தாழைநெற்றியொண்பழன்வருக்கைபோழ்ந்து
தீங்கரும்பெருத்திற்றாழ்ந்ததேற்றிறால்சிதையவீழும்
வீங்குநீர்மருதவேலிமிதிலைமாநகரங்காக்கும்
வாங்குவின்மருவுதோளான்வழிபடவைகினானல். ௨0

சொரிமதக்களிறுபோலத்துள்ளிவீழருவிமாலைத்
திருமணிசெய்குன்றோங்கித்திகழ்தருமிதிலைமன்னும்
ஒருகுழையொருவன்றன்பாலொளிமணிச்சுடிகைநெற்றி
அரவுயர்கொடியனான்வந்தடற்கதைபயின்றானன்றே. ௨௧

கேழ்கிளராரமார்பிற்கிருதவன்மாவுங்கொற்றக்
காழணிகதிர்மென்கொங்கைக்காந்தினிபுதல்வன்றானும்
எழுயர்களிநல்யானையிகற்சததன்னுவாலை
ஆழியான்றுணித்தல்கேளாவஞ்சினர்பாறலுற்றார். ௨௨

பண்ணெழுவண்டுபாடும்பனிமலர்ப்பாரிசாதத்
தண்ணிழலடைந்தசூர்வாட்சத்திராசித்துக்காங்குக்
கண்ணகன்ஞாலமுண்டுகெற்றிலையாலிற்றுஞ்சும்
அண்ணலம்பசும்புட்பாகனருங்கடன்புரிவித்தானல். ௨௩

கலிவிருத்தம்.

அத்தலைவிரிதிரையாழிமீமிசைப்
பைத்தபாம்பணைத்துயில்பரமவானவன்
முத்தவாணகைமுகமுளரிநோக்கினர்
உத்தவன்முதலினருரைசெய்தாரரோ. உச

எழில்வளர்காந்தினிபுதல்வனிவ்வழி
ஒழிதலிற்போலுமாலோங்குவெண்ணிலாப்
பொழிசருவலம்புரிபொறித்தசெங்கையாய்
மழைவளங்காந்ததிம்மல்லனுடரோ. உரு

கார்வளங்காத்தலிற்காசிமன்னவன்
ஆரருட்சுவர்க்கனையாங்கழைத்திடா
வர்வளங்காந்தினியென்னுமின்னகைப்
பேரெழிற்கன்னியைப்பெட்பினல்கினன். உசு

அங்கலுழ்மேனியவ்வணங்கின்வெம்முலை
பொங்கியபுகழினன்புணர்ந்துவைகலால்
மங்குறேய்மழைவளமல்கின்றோங்கிய
கங்கையந்தீப்புனற்காசிநாட்டகம். உஎ

தாதையையொத்தவத்தண்ணந்தாரினன்
போதரின்மழைவளம்பொலியுமீங்கெனு
ஓதலுங்காந்தினியுயிர்த்ததோன்றலைத்
தூதினலழைத்தனன்சுடர்செய்நேமியான். உஅ

எரிமணித்திறத்திறலெனையுந்தேறலன்
ஒருகுழையொருவனவ்வுருவமாமணி
தருகெனக்கரியவன்சாற்றநல்கினன்
பரிவுறுகாந்தினியயந்ததோன்றலே. உகூ

சேட்டிளங்கதிர்புரைதெய்வமாமணிச்
சூட்டுவாளராவணைத்தோன்றல்கைக்கொளாக்
காட்டினனவைக்களங்கண்டுவப்புற
மீட்டவற்களித்தனன்விருப்பினெனபவே. ௩0

சததன்னுவாவைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬0௧.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்.

## உஎ-வது, காளிந்தியைமணந்தபடலம்.

### கலிவிருத்தம்.

அளைத்தகவனர்ந்தவாளரியின்மாண்டக
வெளிப்படுமைவளைக்காணவீழ்ந்திளங்
களிச்சுரும்பாற்றுதார்க்கமலலோசனன்
துளிப்புயலெனவளைதுவைப்பமேகினான். க

நேரிலாவச்சிரநிலவத்தாங்கியும்
சோர்மதுக்கற்பகச்சோலைதுன்னியும்
காரிவர்மாளிகைகடவுளிந்திரன்
ஊர்பெறுமிந்திரப்பிரத்தமேவினான். உ

தருமனொடுளர்வளித்தநயற்கைதொழாப்
பொருசிலைவிசயனைப்புல்லியேனையோர்
இருவரும்பணிந்தெழவிளிதுவந்தனன்
மருடருபிறப்பிலிமகிழ்சிறந்தரோ. ௩

களிகொண்மாதவத்தினர்காணவெஃகிய
துளிமுகில்வண்ணனின்றோற்றங்காணிய
அளியமெத்தவமுனமாற்றினேனெனத்
தளையவிழ்நெஞ்சினன்றருமனேத்தினான். ௪

இந்திரநீலமொத்தெறிக்குமேனியன்
இந்திரப்பிரத்தநின்றெழுந்துவேட்டமேல்
இந்திரன்சிலையெனவிலங்குபூந்தொடை
இந்திரகுமாரனோடேகினானரோ. ரு

### சந்தக்கலிநிலைத்துறை.

அளிகோடிவிளையாடுமந்தாரநறுநீழலளியெய்தவோர்
இளவஞ்சியெனமாதரின்சொற்பசுங்கிள்ளையெனவெல்லுலாம்
வெளிசேர்கமஞ்சூற்கருங்கொண்டனேய்கின்றமின்னென்னவோர்
களியன்னமெனநின்றகாளிந்திவிளையாடல்கண்டானரோ. சா

அரக்குண்டசெந்தாமரைப்போதுநிகர்செங்கையலர்மீதிலோர்
விரைக்கொந்துமலர்தாங்கிவிளையாடுவாள்செவ்விவிழிகண்டுபோய்
திரைக்கொந்தலம்புங்கடற்கட்பொலம்போதுஇசழ்மாதெழா
வரக்கண்டநாளிற்களித்தான்மணிக்கோலவரைமார்பினான். எ

பிறைக்கூரெயிற்றாடலரவிற்றிருத்தாள்பெயர்த்தாடுவோன்
குறிப்பாலடைந்தாடல்விசயன்பசும்பொற்கொழுந்தென்னவோர்
வெறிப்பாரிசாதத்தினிழனின்றமடமாதைவினவிம்முதார்
அறற்கோதைநீயாரைவிழைவென்னுளாரென்றனைந்தானரோ. அ

பரிதிக்குமகளோர்பசுங்கொண்டல்போன்மன்னுபாலாழிசேர்
விரைகக்குதுளவக்கருங்கொண்டன்மணமெய்தவிழைவேனெனத்
திரையுற்றவமுதாறுசேதாம்பன்மலரன்னசெவ்வாய்திறந்
துரையற்றபொன்னங்கொழுந்தன்னவெழினங்கையுரையாடினன். ௯

பண்டோயுமழலைப்பசுங்கிள்ளையினமென்றுபாலெய்தவாய்
விண்டாளையம்பொற்றடந்தேரின்மிசைகொண்டுமீண்டெய்தினன்
வண்டாயிரங்கோடியிசைபாடிமுகைவிண்டுமழைமட்டுவார்
தண்டாமரைச்செல்விழுலையானைவிளையாடுதடமார்பினன். ௧0

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஏர்முகந்தெடுக்கலாகுமிளமுலைமலராள்கொண்கன்
நீர்முகந்தெழுகார்தோயுநெடுங்கொடித்தடந்தேர்தூண்டிப்
போர்முகங்கடந்துபொன்னம்பொருப்பெனவளர்தோட்பார்த்தன்
கார்முகங்குழையவாங்கிக்காவெரியூட்டினனால். ௧௧

அரிவயிறாரத்தேனுண்டாற்றுதண்கானமெல்லாம்
எரிவயிறாரநுங்கியீந்ததுவெண்ணெய்வாரித்
திருவயிறாரமாந்துசெம்மன்மைத்துனற்குத்திண்டேர்
வரிவயிறார்ந்தபாந்தள்வடிக்கணைத்தூணிவல்வில். ௧௨

வீறுசால்வரிவிற்பார்த்தன்வெவ்வழலூட்டுகின்ற
நாறிணர்க்காவினுவிகல்கியநிறத்தினுலே
தேறுநீர்நிலமீங்கென்னத்தெரிவருமாடஞ்செய்தான்
மாறிலாமயனென்றோதுமன்பெருந்தச்சன்மன்னே. ௧௩

வான்பொழிகாலமெல்லாம்வலம்புரித்தடக்கைமாயன்
ஊன்பொழிவடிவேலவருவப்புறவாங்குவைகிக்
கான்பொழியலங்கன்மாலைக்காமர்காளிந்தியோடும்
தேன்பொழிகைதைவேலித்திருநகர்க்கெய்தினனால். ௧௪

தெளிந்தவாறெழுகுகங்கைத்திருந்திரமாந்தி
வளர்ந்தமந்தாரத்தம்பொன்மலர்மழையமரர்தூற்றக்
களங்கனிவண்ணத்தண்ணல்கற்பகக்கொழுந்துபோல
விளங்குகாளிந்திமன்றல்விதியுளியியற்றினனே. ௧௫

காளிந்தியைமணஞ்செயத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬உ௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# ௨அ-வது, மித்திரவிந்தையைமணம்புணரத்தியாயம்.

---

### அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மருவுயிர்த்தலர்ந்தமாலைவாள்வசுதேவன்றன்னோ
டொருவயிற்றுதித்தநங்கையுயிர்த்தவள்வரிவண்டூத
விரையெடுத்தெறிபூங்கோதைமித்திரவிந்தைதவையம்
திருவயிற்றொருபால்வைத்தசெம்மன்மேல்விழைதல்செய்தாள். ௧

வரிச்சிறையுவணப்பைம்புள்வலவயினுயர்த்தகார்மேல்
விருப்புறுமிளையாடன்னைவீறுசாலவந்தியாளும்
அரத்தமுண்டொளிருங்கூர்வேலடல்செய்விந்தானுவிந்து
உருத்தெழுசினத்தபாந்தளுயர்த்தகாவலற்குநேர்ந்தார். ௨

சொவ்வைவாய்பதித்தமுத்தக்கோவையிற்றிகழுறால்
அவ்வளைத்தளிர்க்கைமாதினரும்பெறன்மன்றல்வேட்டுக்
கவ்வைநீர்வேலிகாக்குங்காவலர்குழாத்தோடுற்றான்
வெவ்வழனச்சுநாகவெல்கொடியுயர்த்தவேந்தே. ௩

காரெழில்கவற்றுங்கூந்தற்றைபுனைந்தியற்றுக்காமர்
ஏர்குடியிருந்துவீங்குமிளமுலைக்கொடியனாளை
ஆரமர்கடந்தகூர்வாளரசவைபணிக்கப்புக்கு
வார்மதுக்கமழும்பைந்தார்மாயவன்கவர்ந்துகொண்டான். ௪

மொய்வரைதுளக்குங்காற்றுமுகந்தெறிசிறைப்புட்பாகன்
மௌவலங்குழலினாளைவௌவினனிற்றல்கண்டான்
வெவ்வராவுயர்த்தோனுங்குவிழச்சமம்புரியகில்லான்
தெவ்வடுசிலைக்கைமன்னர்திரளொடுசென்றான்மன்னோ. ௫

வெம்மதஞ்செருக்கித்துஞ்சாவெண்பிறைக்கோட்டுவேழம்
கைம்முகந்தெடுத்தவேழக்கரும்பொடுக்கடக்குமாபோல்
வைம்முகமணிந்தவேற்கண்மாதொடுவடவைகாலும்
செம்முகத்திகிரிமாயன்றேரிவர்ந்தேகினானால். ௬

நடாக்கரும்பெழுதிநட்டநாகுவேயன்னமென்றோட்
படாக்களியிளமென்கொங்கைப்பவளவாய்மயிலனாளை
விடாக்களிச்சுரும்புண்கோதைவிதியினிற்புணர்ந்துவேட்டான்
கடாக்களிறழைப்புவந்தகாயழற்றிகிரிமாலோன். ௭

மித்திரவிந்தையைமணம்புணரத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯௨௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## உகூ-வது, சத்தியையமணம்புரியத்தியாயம்.

---

### எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

குளிறுவெண்டரங்கக்குரவைவான்பசும்பொற்குடுமிமால்வரையினுன்மறு
அளறெழக்கடையவிளையமுதன்னவலர்முலைச்சத்தியைதன்னைக் [கி
களிறுமாய்செந்நெற்கழனிசூழிடந்தகோசலநாடுகாத்தளிக்கும்
ஒளிறுவேற்றடக்கைநக்கினசித்தென்றுரைபெறுமன்னவனுயிர்த்தான். க

எழிருங்கடலுங்கூப்பிடப்பாவையெழுந்தெள்ளமுதினைவெருட்டி
எழிசைகடந்தமழலையந்தீஞ்சொலிளநகைப்பவளவாய்மகளை
எழிருங்குன்றமெதிர்பொருதுடையவேந்துதோட்கோசலத்திறைவன்
எழ்விடைதழுவுமெறுழ்வலிபடைத்தாற்கீகுதுமெனவுரையிசைத்தான்.உ

செறிதிசைதழுவுகொற்றவேற்றானைத்திரளினர்திங்கள்வெண்குடையர்
மறிதிரைதழுவுகுழவிவெங்கதிர்போல்வயங்குநீண்முடியினர்தெய்வ
நறுவிரைதழுவுமாலைதாழ்மார்பர்நாகிளவிடைபுரைநடையர்
இறுவரைதழுவுதிணிபுயத்தரசரெழுவிடைதழுவுவானிறுத்தார். ௩

இடியுருமேற்றிற்சிலைத்தெதிர்நடக்குமேழ்விடைதழுவுவானேற்ற
படுகளிச்சுரும்புபடிந்துழக்கிழிந்தபனிமலர்ப்பசுந்தொடைமார்பும்
குடவரைபொருவுதிணிதடந்தோளுங்கூர்நுதிக்கோடுழக்கலங்கி
வடியிருநெடியகுடுமிவேற்றடக்கைமன்னவர்மதவலியழிந்தார். ௪

வாளைவெம்போர்க்குவருகெனப்பிரமமழைக்கணூர்மனங்கவர்வனப்பின்
வேளையீன்றெடுத்தவேரியந்துளவோன்விற்றிறல்விசயனேடெழுந்து
பாளைவாய்க்கமுகின்பழக்குலைசிதறப்பகட்டிளவாரலொடுமெறலிக்
காளையங்கயல்பாய்கமழலந்துறைசூழ்கோசலநாடுசென்றடைந்தான். ௫

வெண்டயிருறைத்தகாரிரும்பித்தைவிரைகமழ்முல்லையம்பசுந்தார்
அண்டர்தங்கொழுந்துதெண்டிரைப்பிறந்தவாரமுதன்னவஞ்சாயற்
பண்டருமழலைப்பவளவாயணங்கின்பணையிளவனமுலைதழுவக் [னல்.
கொண்டலினேறேழுருவுகொண்டோரேழ்கொல்சினவிடைதழீஇயின

திலகவெண்கவிகைமன்னவனுவந்துசெஞ்சிலைவளங்கொள்பொற்கோட்
மலைபகவிடிக்குமத்தமால்யானைமணிமருப்பொசித்தகார்வண்ணற் [டு
இலவிதழ்குவிகமூட்டிவைத்தன்னவின்னகைச்செய்யவாய்க்கருங்கட்
தலவமாமஞ்ஞைகடுக்குமஞ்சாயற்கதிர்முலைக்கன்னியைக்கொடுத்தான். ௭

குரைதிரைப்பரவையமுதவாய்நிறைசெங்குடம்புரைசெருத்தலானினமு
விரிநிலாச்சொரியும்வாலுளைப்புரவிவெள்ளமுமழிமதக்களிற்றுத் [ம்
திரளுநீள்கொடிஞ்சித்தோதுதொகையுஞ்சினைப்பசுந்தெரியல்வேந்துதவ
ஒருதனிமூவாவறுகுணப்பெருமானுறைதருதிருநகர்க்கெழுந்தான். ௮

மழைக்கருங்கண்ணு டன்றெடுகமஞ்சுன் மழைமருண்மேனியானெ
ழலும், தழைத்தகூர்ங்கோட்டுத் திரளிமிலேறு தழுவுவான்படர்ந்திகவழி
ந்த, புழைக்கைமால்யானைப் புரவலரீண்டிப் பொருதொறும்பொருதொறு
முடையக், குழைத்தனன்வரிவிற் குழைத்ததண்கானங் கொந்தழலூட்டு
பொற் குரிசில். ௧

உடைதிரையிடறுவலம்புரிமுழங்கவொளிறுவெண்சங்கினங்கலிப்பச்
சுடர்விடுபவளக்கொழுங்கொடிநுடங்கத்தூச்சிறைமடவனம்பூத்த
முடமுதிர்தடந்தாண்முள்ளிலைத்தாழைமுருகுவந்தெதிர்கொளமுந்நீர்க்
கடல்விளிம்படுத்தகன்னிமாநகரங்கருங்கடல்வண்ணன்வந்தடைந்தான்.

சத்தியையைமணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯௪௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௩௦-வது, பத்திரையைமணம்புரியத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தழலும்வெஞ்சினவாட்படைவசுதேவன்றங்கைதண்டுளிமுகில்வயிறு
கிழிபடவிவந்ததண்டலைவேலிக்கேகயநாட்டினுக்கிறைவன்
எழில்வரையகலம்புணர்சுதகீர்த்தியீன்றசெவ்வாய்ப்பசுங்கிளிபோ
மழலையந்தீஞ்சொற்பத்திரைபூவைவண்ணன்மேற்காதல்கூர்ந்தனளால். ௧

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தெளித்தொளிவிரிக்கும்பச்சைத்திருமணிகுயின்றுவென்னக்
கிளைத்தபைந்துளவோன்செவ்விகேண்மையிற்கேட்டஞான்றே
வளர்த்தபைங்கிளியினம்மென்மழலைகேட்டுவக்குமேனும்
நளிப்புயற்கூந்தல்யாழினல்லிசைகேட்கிலாளால். ௨

திகழ்மணிவண்ணன்செவ்விசெவிமுதலுற்றபோதே
நகுமணிதழைந்தபொற்பூணலந்தகப்புனையுமேனும்
தகைபடுவொருகாழ்முத்தந்தயங்கிணர்க்கோங்கின்யாணர்
முகிழெனமுகிழ்ந்தகொங்கைமுன்றிலிற்புனைகலாளால். ௩

அஞ்சனவண்ணன்செவ்வியஞ்செவிப்பட்டவன்றே
அஞ்செனக்கிடந்தவம்பினுடமர்கடந்தகண்ணிற்
கஞ்சனமெழுதுமேனுமஞ்சனம்புரைபைங்கூந்தல்
அஞ்சுமற்றஞ்செஞ்சாந்தமணிமுலையெழுதவம்மா. ௪

கொத்தளிகொழுதுகஞ்சக்கொழுமுகையனையசெவ்வி
அத்தகுகாதனங்கையாக்கமுங்குறிப்புநாடி
முத்தவெண்கவிகைப்பைந்தார்முன்னவன்கருங்காரன்ன
மைத்துனத்தோழற்கீவான்மனத்தினில்வலித்தல்செய்தான் ௫

பொன்னிணைமார்தூற்றப்புரிவளையலறமுந்நீர்
இன்னமுதனையசாயலேரிளமுலையினளை
முன்னவனளித்தல்செய்தான்முழுங்கழல்சான்றதாகக்
கன்னியந்துளவுருடுங்கார்முகில்வண்ணற்கன்றே. ௬

மாமலருறைவோனாதிவானவர்வணங்கியேத்த
நாலையம்புணரிதீர்த்துக்கல்லறவிறுத்துநம்பி
சுரியிருங்கூந்தனங்கைதோணலமினிதுமாந்திக்
கரையிறந்தோங்குமின்பக்கடலகத்தழுந்தினானால். ௭

முடப்பசுந்தாழையீன்றமுழுமடன்முருகுகான்று
கடற்படிபுலவுமாற்றுகண்ணகன்புரிசைமூதூர்
இடிக்குரன்முரசமார்ப்பவிளமழைக்கொழுந்துபோல்வான்
சுடர்த்தொடியுடுத்தசெங்கைத்தோகையோடெழுந்துசென்றான். ௮

பத்திரையைமணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௪௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௩௧-வது, இலக்கணையைமணம்புரியத்தியாயம்.

---

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எழில்வளர்தளிர்மாமேனியிலக்கணையென்னுநாமத்
தொழுகரித்தடங்கணாளையுயிர்த்தனனுவரிமேய்ந்த
மழைதிடந்துறங்குசோலைமத்திரநாடுகாக்கும்
நிழல்வளர்திங்களன்னநித்திலக்கவிகைவேந்தே. ௧

தன்னறலைத்திற்றோன்றுந்தண்ணிழனோக்கியன்றிக்
கண்ணுறலரிதாய்வெய்யகடுவிசைக்கறங்கிற்பொங்கி
விண்ணிடைக்கொட்கநிற்கும்விழுக்கயற்பொறிநீர்வேலி
மண்ணகம்வியப்பச்செய்தான்மணிமுழவனையதோளான். ௨

குடவரையன்றிமற்றைக்கோதைவெள்ளருவிசூடும்
நெடுவரைபொடிக்குமொற்றைநேமியஞ்செல்வன்சூழும்
வடவரைவணக்கினானும்வணக்கருந்தன்மைத்தாய
தடநெடுஞ்சிலையுமொன்றுதந்தனன்பசும்பொற்றாரான். ௩

சிலைகடைகுழைத்துச்செய்யசெங்கயல்சிதையவெய்தாற்
கிலமலரன்னசெவ்வாயிலக்கணையுரியளென்றே
மலைமதம்பட்டாலன்னமத்தமால்களிற்றுமன்னன்
உலகுடைமன்னர்க்கோலையுவப்புறப்போக்கினானால். ௪

முத்தரிச்சிலம்புபோலமொய்த்திளவெகினமார்ப்பச்
செய்த்தலைக்கமலமாதர்சீறடியழகுகாட்டும்
மத்திரநாட்டுமன்னன்மன்னெயிலுடுத்தகழூதூர்த்
தத்துநீர்ப்படுசெங்காரப்பத்தரணிபர்வந்துதொக்கார். ௫

அயின்முகப்பகழிபோலவணிமணிக்குழைமேலோடிக்
கயலெனப்பிறழ்ந்துசெய்யகமலமொத்தலர்ந்தவுண்கட்
குயிலினைக்குயிலாப்பொன்னங்கொழுந்தினைக்கொழுந்தாரோதி
மயிலினைப்புனைந்துசெம்பொன்மாளிகைக்கொணர்தல்செய்தார். ௬

அருவிபெய்மலயச்செஞ்சாந்தலர்கதிராரந்தாழ்ந்த
வரைமருளகலத்தப்பிவார்கழனரலவீக்கிக்
குரைகடற்சுறவின்கோலக்கொடுங்குழைதுளங்கவார்த்துப்
பொருகயறுணித்துமென்றுபுரவலர்குழீஇயினரால். ௭

உலைமுகம்பழுத்தசெம்பொனுடைமாக்களிறுசாய்த்துக்
கொலைமுகம்பழுத்தகூர்வாட்கொற்றவனொருவனெய்வான்
மலையெனக்கிடந்தவல்விலெடுத்தனன்வணக்கலாற்றான்
நிலவுகொப்புளிக்குமுத்தநெடுமுடிவணக்கிநின்றான். ௮

அலங்குசெங்கதிரிற்சூழ்ந்தவணிமணிவலயமின்னப்
பொலங்கிரிகடுக்குந்திண்டோட்புரவலனொருவன்போந்து
வலம்படவெடுத்தவார்வில்வணக்கிஞாணேற்றவாற்றான்
இலங்கொளிவிரிக்கும்பொன்ஞாணேற்றினனணிந்துநின்றான். ௯

கடற்பெரும்புவனங்காக்குங்காவலனொருவன்வார்வில்
எடுத்துநாணேற்றிமின்னினெரியுமிழ்ந்திலங்குவாளி
தொடுத்தனன்றொடுத்தவம்பின்றொடைநனிவாங்கலாற்றான்
வடித்தபூந்தொடையல்வாங்கிமணிமுடிதிருத்தினனால். ௧௦

சரிந்துதார்புரளவொள்வாட்டடந்தவக்கிரன்வில்வாங்கிப்
பருந்துசூழ்முகத்தவாளிபணைத்ததோள்கழியவாங்கி
விரிந்தநீரகத்திற்றோன்றுமீனதுநிழலைநோக்கும்
இரும்பெருவானைநோக்குமிலக்கமோர்ந்தெய்யகில்லான். ௧௧

அள்ளிலையணிந்தவெள்வேலடற்சிசுபாலனெய்த
ஒள்ளழற்பகழியோடியுறுகயலுறாதுவிண்வாய்
கள்ளவிழ்பாரிசாதக்காடலைத்தொழுகுகங்கை
அள்ளுசெங்கயலின்மேலேதொடர்ந்துதாய்வீழ்ந்தன்றம்மா. ௧௨

வில்லிடப்பசும்பொனாம்விற்கடைகுழையவாங்கி
மல்லனீர்மகதங்காக்குமணிமுடிவேந்தனெய்த
கொல்சினப்பகழிவிண்ணிற்கொட்குமீன்கழியவோடிப்
பல்சுடர்வானமீனின்பாற்படப்படர்ந்ததன்றே. ௧௩

கட்டவிழ்சிலைப்பூந்தாமங்கதிர்நிலாமுடியிற்றாழ
வட்டவார்சிலைகால்கோட்டிமல்லடுதிணிதோள்வீமன்
விட்டவெம்பகழிபொங்கிவிழுக்கயல்பிழைத்துவிண்வாய்
முட்டிவெண்டிங்கள்வாழுமுயன்முகங்கிழித்துச்சென்ற. ௧௪

எரிமணிக்குழைபொற்றோளினெழுதுசாந்தழுதுமின்ன
அருவரைபுரையுமார்வத்தாரமும்பூணுமொல்க
வரிசிலைதளரவாங்கிவாளரவுயர்த்தோனெய்த
தெரிகணைபொறிமேனுடிச்செவ்வனேயெழுந்தேகிற்றே. ௧௫

கற்பகந்தளிர்த்ததேபோற்கதிர்மணிக்கடகங்கான்ற
பொற்றசெங்கதிர்கள்சூழும்பொங்கெழிறபொருதோட்கன்னன்
விற்கடைகுழையவாங்கிவிட்டகோல்பொறியின்மேலே
உற்றுறாதாகிச்சென்றதுயரிருவிசும்புபோழ்ந்தே. ௧௬

நிழல்புனலகத்துநோக்கிநின்றவவ்விலக்கைநாடி
அழிபெருங்குருதியாடியவிர்தல்போற்பற்பாகக்
குழையொளிதவழவாங்கிக்கொடுஞ்சிலைப்பார்த்தன்விட்ட
முழுவிறற்பகழிசெஞ்சேன்மோந்துகொண்டேகிற்றன்றே. ௧௭

திகழ்மணிக்குவட்டின்வீங்கிச்செஞ்சிலைவடித்ததிண்டோட்
டகைமலியாசரின்னதன்மையாகிநின்றார்
அகலிருவிசும்பிற்சூழ்ந்தவள்ளிருட்பிழம்புசீத்து
நகுகதிர்ப்பரிதிவட்டநடுவண்வந்துற்றதாங்கே. ௧௮

பார்நனைமதத்தயானைப்பருஉச்சுடர்ப்பனிவெண்முத்தம்
கூர்நுதிக்கோடுகொண்டகொற்றவன்பொற்றதாமம்
வார்மதுத்துளிப்பச்செக்கர்மணிதிருமார்பின்மின்னக்
கார்முகிலென்னச்சென்றுகார்முகம்வணக்கினான். ௧௯

விடம்பொதிமிடற்றுப்புத்தேள்வெஞ்சிலையிறுத்தவீரன்
கொடுஞ்சிலைகுழைத்தவாறுங்குழைத்துநாண்கொளீஇயவாறும்
அடுங்கணைதுரந்தவாறுமார்கொலோதெரியக்கண்டார்
கடுங்கயறுணிந்துமண்ணிற்கவிழ்ந்ததுகண்ணிற்கண்டார். ௨௦

ஒளிமணிவிசும்பினெல்லென்றொலித்தகாருவரிமேய்ந்த
துளிமுகிலதிருமாபோற்றுந்துபிதுவைத்தசூழ்ந்து
களிமுகச்சுரும்புமூசாக்கற்பகக்கனகப்பைம்பூ
வெளிமுகம்புதையமொய்த்துவிண்ணவர்சிதறியார்த்தார். ௨௧

ஆடகப்பசும்பொற்றிண்டோர்செலாங்காணவாய்பொற்
பாடகப்போதுசூழ்ந்தபன்மணிச்சிலம்புபாட
நாடகமயிலஞ்சாயலனிளவல்லியொல்கிச்
சூடகத்தளிர்ப்பூங்கோதைசூட்டினள்கன்னற்கன்றே. ௨௨

தருமலரமார்தூற்றத்தாக்கணங்கனையாடண்டேன்
சொரிமலர்நறுமென்றொங்கல்சூட்டுதல்கண்டுநோனார்
குரைகடல்வெதும்பவல்விற்கோட்டியகுழகன்றன்மேல்
விரிதிரைக்கடலந்தானைவேந்தர்போர்விளைத்தார்மாதோ. ௨௩

கான்குலாமலங்கல்சூடிக்கடைகுழன்றிருண்டகூந்தற்
றேன்குலாமழலையாளைச்செறிமணித்தேரிற்கொண்டு
நான்குதோளுடையானுகிம்பிவிற்குழைத்துச்சென்றான்
மான்குழாநடுவட்செல்லும்வள்ளுகிர்த்தாக்குப்போன்றே. ௨௪

தேர்விட்டுக்களிறுவிட்டுத்திண்டிறற்பரிமாவிட்டுக்
கார்விட்டுத்திகழ்தடித்திற்கனன்றெறிபடைகள்விட்டுத்
தார்விட்டுமலர்ந்தமார்பிற்றருக்குடைமன்னரெல்லாம்
போர்விட்டோடப்பவாளிபொழிந்தனன்புயலோடொப்பான். ௨௫

பொலமுகடுடைந்ததென்னப்பொருகடற்படுவெண்சங்கம்
அலறவார்முழவுவிம்மவதிர்குரன்முரசமார்ப்பக்
கலுழனின்னமுதுகொண்டுகாண்டகச்செல்லுமாபோல்
சிலைநுதலணங்கைக்கொண்டுசெம்மன்மாநகர்சென்றுற்றான். ௨௬

முத்துடைக்கோட்டுவேழமுரிதிரைப்பவளந்தன்னோ
டொத்தவெங்குளம்பிற்பாய்மாவொழுகொளிவயிரக்குப்பை
பித்திகைப்பிணையன்மாலைபெண்மணிபிறகொண்டெய்தி
மத்திரநாட்டுமன்னன்மலர்மகண்மகிழ்நற்கீந்தான். ௨௭

அளவில்வெங்காதற்பௌவத்தளறெழுவழுந்தலுற்ற
இளமயிலன்னசாயலிலக்கணைமன்றலாற்றி
முளையிளமுல்லைமூரன்முறுக்கிதழமுதந்துய்த்தான்
தளையவிழ்ந்தடைந்தோர்க்கிறிறளியின்புகருநந்தொல்லோன். ௨௮

நெய்ம்முகமணிந்துகாய்ந்துமிழுமிழ்தழல்வாய்நேமிக்
கைம்மலரணிந்தசெங்கட்காரணனின்னவாறே
அம்மலர்முருகுவிம்மியகில்வயிரூர்ந்தகூந்தற்
பொம்மல்வெம்முலையினார்தம்புதுமணம்பொருந்தினனால். ௨௯

இலக்கணைமணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௭௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௩௨-வது, நரகாசுரனைக்கொன்றவத்தியாயம்.

---

கலிச்சந்தவிருத்தம்.

வாட்டானையனரகாசுரன்மாயப்பொருதம்மென்
பாட்டாயிரங்களிவண்டறைபைம்பொற்றொடைபுனையா
வேட்டான்பதினாறாயிரம்விரைக்கோதையர்தமைவெஞ்
சூட்டாடரவணைகண்வளர்துளவப்பசுங்கொண்டல். ௧

என்றோதுநரகாசுரனெனும்வீரனையமரில்
கொன்றோர்பதினாறாயிரங்குலமாதரைமலர்மேல்
மின்றோய்கருமுகில்வேட்டதுவிளம்பாயெனவேந்தன்
நன்றோகையினுரைசெய்குறநவின்றான்முனியண்ணல். ௨

அழிவெம்மதம்பொழியோங்கலினையிராவதப்பாகன்
மழைவண்ணனையடைந்தன்னைதன்வார்காதணிமகரக்
குழைதன்னொடுபணிமாலைவெண்குடையுஞ்செழுங்கொடியும்
கழிவெஞ்சினநரகாசுரன்கவர்ந்தேகினனென்றான். ௩

வின்னூங்கியதோண்மாயவன்விண்ணந்தனிபுரக்கும்
மன்னன்புகல்வதுகேட்டெழில்வளர்சத்தியபாமை
என்னூங்கதிரிளமாமுலையிணர்ப்பூங்குழலோடும்
பொன்னங்கிரியெனத்தோன்றியபுள்ளின்னெருத்திவர்ந்தான். ௪

பிளக்கும்பொலமுகடாங்கெனப்பிறழ்சங்கதிர்தரவான்
விளக்குங்கதிர்சூழ்குன்றினைவிரிசெஞ்சிறைக்காற்றால்
துளக்கும்பசும்புள்ளூர்ந்தனன்றுனைவிற்படர்ந்தெழுபார்
அளக்கும்புயலவுணர்க்கிறையாண்முற்றினனன்றே. ௫

புயறோய்வரையரண்சிந்திடப்புடைத்தான்பொருகதையால்
வெயிறோயெரியரண்கட்டறவியனேமியின்விழுத்தான்
உயர்நீரரணெறிகாற்றரணுடனும்படையாறோர்
அயில்வாளியினழித்தான்புகுந்தறுத்தான்முரபாசம். ௬

மழைமுற்றியநெடுவெற்பரண்மாநீரரண்வாளில்
சுழல்காற்றரண்சுடுதீயரண்சுழல்வாட்படையாறோ
டழிவுற்றமைகாணாவிழியழல்சிந்துறவெகுளா
முழைவிட்டெழுவயமாவெனமுரன்வந்தெதிர்முனைந்தான். ௭

புலவுஞ்செறிபலவுங்கமழ்பொருவெம்படைவழங்காக்
கொலைவெஞ்சினவரவாமெனக்கொதித்தாடமருடனும்
மலையுஞ்சியதிணிதோண்முரன்மன்றற்றொடைகமழும்
தலையுஞ்சையுமுன்கண்டவன்றனியாழியிற்றடிந்தான். ௮

முரன்மாய்தலுமுரன்மைந்தர்கண்முரணுஞ்சினமுதிர்ந்தோர்
எரிகான்றழல்செங்கண்ணினரெழுகாளையர்குழுமா
வரையானெடுமழைகாத்தவம்மழைவண்ணனைவளையாச்
சரமாரியிற்பொழிந்தார்பொருதடக்கைச்சிலைகுழைத்தே. ௯

மழுவிற்பொருகுலிசத்தினின்மாயாவலந்தழையா
எழுவிற்பணைத்தெழுதோள்வலத்தெழுவீரர்தமெழிலார்
செழுவிற்பொழிசரமாரியுஞ்சிரமுந்துணிசெய்தான்
குழவிப்பிறைபுரைமால்கரிக்கூர்வெண்மருப்பொசித்தோன். ௧௦

மாலைக்கதிர்வேல்வெம்படைமால்வெஞ்சமமாற்றா
தோலக்கடலுடைந்தாலெனவுடைகின்றமைகாணாக்
காலக்கதழெரிகட்கடைகாலக்கனன்றெரியும்
சூலப்படைநரகாசுரன்சூழ்தானையொடெழுந்தான். ௧௧

வில்லார்வடிவாளார்சினவேலாருருமிடிக்கும்
சொல்லார்கடையெழுவெங்கனல்சொரிகின்றசெங்கண்ணார்
பல்லாயிரமடற்றானவர்பரிதேர்கரிகடவா
செல்லார்மழைகாத்தான்றனைத்தெழித்தாரமர்விளைத்தார். ௧௨

பச்சைக்கிளிசிறப்பாய்பரிபவளக்குளம்பற்ற
கச்சைக்கருங்களிற்றொண்பிறைக்கதிர்வெண்மருப்பற்ற
அச்சற்றனபொன்னங்கொடியணிதேர்கறையகிலின்
செச்சைத்தடம்புயத்தான்சினத்திகிரிப்படைதொடவே. ௧௩

விழுந்தார்சிலர்திரைவேலையில்விரியுந்திரைக்கடல்வாய்
அழிந்தார்சிலர்விண்கீறியவகன்குன்றிடைக்கவிழ்ந்தார்
கொழுந்தாரளையளைந்துண்டுமைக்கொழுந்தாமெனத்திகழும்
செழுந்தாரவனிவர்புள்ளினஞ்சிறைக்காலினின்மறுகா. ௧௪

நடையிற்சினவிடையிற்றிகழ்நரகாசுரன்விண்ணோர்
அடையத்தெருமாலுற்றிடவயனண்டகடாகம்
உடையத்தனியொருவழலுயிர்க்குஞ்சுடரிலைவேற்
படையைத்தருகருளன்பெரும்பணைத்தோளினிலெறிந்தான். ௧௫

மறிவெண்டிரைவடவானலமறுகக்கொழுந்தழல்வெம்
பொறிசிந்துபுவருவெந்திறற்புலவுப்படைகருளன்
செறிகுன்றுறழ்தோளுற்றதுசினமாமதகரிமேல்
எறிதண்ணறுமலர்மென்றொடையெனலாயதுமன்னோ. ௧௬

செஞ்சோரியிற்படிகின்றதுசெறியூன்சுவைப்பதுகார்
நஞ்சுறுவதழல்கால்வதுநகுமின்பொழிகுவதோர்
வெஞ்சூலமதெடுத்தான்மதவெற்பாமெனநடந்தான்
பஞ்சாயுதமுடையான்முனம்படுவெங்கொலையவுணன். ௧௭

பெருகாழியிற்குருதிப்புனற்பெருக்கெண்டிசைபிறங்கக்
கருகார்கலிசுவறச்சிலைகால்கோட்டியகண்ணன்
முருகாயிரம்வரிவண்டுணைமூலைகவிண்டலர்தண்டார்
நாகாசுரன்முடிவெங்கதிர்நகுநேமியிற்றடிந்தான். கஅ

தகைசானிலமகளவ்வழிதண்டாமரைமயில்சேர்
அகன்மார்வனைப்பணிந்தேத்தினளளிப்பாயினியென்று
நகுதார்முடிநாகாசுரனைறவிம்மியதுடலை
முகைவாயவிழ்திருநாட்டினின்முகக்கும்பொருளளித்தே. ககூ

மந்தாகினியொடுபொங்கொளிமணிவார்கழலலம்பும்
செந்தாமரைபுகழ்பார்மகள்செஞ்சொற்செவிதிளையா
நந்தாவலந்தழைத்தோங்கியநாகாசுரன்மதலைக்
கந்தாதவிழ்துளவப்புயலபயங்கொடுத்தனனால். உ0

கந்தப்பியகளியானையின்கதிர்மாமருப்பொசிக்கும்
சந்தப்பெருவரைத்தோளவன்சமரின்றலையிமையோர்
சிந்தப்பொருதிறற்றுனவர்திலகன்பெருஞ்சிறப்பார்
அந்தப்புரமோர்மாதியமைறநோக்கினனன்றே. உக

வளர்தங்கிருஜிலவைப்பினின்மறமன்னவரெல்லாம்
துளங்கப்பொருதவுணர்க்கிறைதோளாற்றலிற்கவர்ந்தோர்
விளங்கும்பதினாறுயிரார்வெண்மாமதிவதனத்
திளங்கன்னியர்தனைவேட்டவணிருக்கின்றமைகண்டான். உஉ

கழுவுற்றமென்றாசும்புனைகலனும்பலநல்கா
எழிலிற்றிருமாவிற்றிகழிளங்கன்னியர்தம்மைச்
செழுவிற்பொழிதிருமாமணிச்சிவிகைத்தலைசிறப்பால்
மழையிற்பொலிதருமாயவன்மல்லற்பதிவிடுத்தான். உங

மால்கூர்ந்தவவ்வயிராவதமாபிற்பிறந்தனதீம்
பால்வெண்ணிறத்தனவாளெழுபனிவெண்பிறைமருப்பேர்
நால்குற்றனநான்கிற்றிடுமெருப்பானனைகவுண்மா
ஆலம்பொழிபகுவாயாவனையான்கவர்ந்தனனால். உச

## கலிவிருத்தம்.

கட்கமழ்ந்ததார்களுலுந்திண்புயம்
மட்பகுங்கொடிக்களித்தமாயவன்
விட்புலச்சிறப்பெய்தமேதகு
புட்கழுத்தினிற்போயினனரோ. உரு

ஈன்றசெங்கதிர்க்குழவியெய்தல்போல்
தோன்றவெவ்வெயிற்சுடர்செய்குண்டலம்
ஆன்றபொற்புலாமதிதிக்கீந்தனன்
கான்றதும்புதார்க்கண்ணனென்பவே. உசு

ஆடனேமியானையதண்டுழாய்
சூடுதிண்புயந்தோயுமின்னனாள்
பாடல்வண்டுலாம்பைம்பொற்கற்பகக்
காடுகண்டுளங்காமுற்றனளரோ. ௨௭

காரிருங்குழற்கலவமாமயில்
ஒருஞ்சாயலளுள்ளநோக்கினான்
வேர்பிடுங்கினான்வேரிமாமலர்ப்
பாரிசாதகம்பைம்பொன்மார்பனே. ௨௮

கள்ளுளாந்துணர்க்காமர்கற்பகம்
கொள்ளனீயெனக்குழூஉவானுளோர்
தள்ளருந்திறல்சாயமாறிலா
வள்ளல்வால்வளைவாய்வைத்தானரோ. ௨௯

செய்யபொற்றருக்கொண்டுசெவ்விசால்
ஐயபொற்கொழுந்தன்னமாதொடு
மையவேலைசூழ்மல்லன்மாநகர்
வெய்யபுள்ளின்மேல்விமலனெய்தினான். ௩0

நாகணைத்துயினம்பிவம்புலாம்
போகிதழ்ப்பசும்பொன்னங்கற்பகம்
பாகின்மென்மொழிப்பவளச்செய்யவாய்த்
தோகையாடவோர்சோலையாக்கினான். ௩௧

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

உருவம்பதினாறாயிரங்கொண்டொற்றைத்திகிரிநெடுமாயன்
குரவங்கமழ்ந்துநெறிந்துகடைகுழன்றுமுருகுகூட்டுண்டு
வரிவண்டுறையுங்கருங்கூந்தன்மாதர்பதினாறாயிரவர்
திருவமணமோர்காலையினிற்சிறப்பவினிதுபுரிந்தனனால். ௩௨

காதல்கனியக்கனியநலங்கனிந்தகதிர்மாமுலைக்கனிவாய்
மாதர்மகிழமந்தாரவனங்கடொறுமென்மாதவிப்பூந்
தாதுபடுந்தேன்பந்தர்தொறுந்தனியாடினனன்மழைகாத்த
கோதையருவிதவழ்பசும்பொற்குடுமிவிலங்கற்குடைநம்மான். ௩௩

நம்பால்விழையுநாகணையானம்பால்விழையுமெனநறிய
ஐம்பான்மகளிரெல்லோருமன்பான்மகிழவாய்வஞ்சிக்
கொம்பால்வகுத்தசிறுமருங்குற்குவளைத்தடங்கண்மடமாதர்
வம்பாற்றிகழுமுலைதழுவிமலராள்கொழுநன்வைகினனால். ௩௪

நரகாசுரனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧0௨.

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

## ௯௩-வது, உருக்குமிணியூடநீர்த்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலர்வீற்றிருந்தமடமாதுமானக்கவரிமருங்கிரட்டக்
குலவத்தொடுத்தமல்லிகைப்பூங்கோதைகமழமந்தார
அலரிற்றவழ்ந்தபசுந்தென்றலக்கீங்கொழுந்துமுருகுயிர்ப்ப
நிலவுப்பயன்கொண்முற்றத்துநெடியோன்செம்மாந்திருந்தனனால். ௧

அவிர்முத்தாய்ந்துஞ்செவிகவருமம்மென்மழலைக்கிளிசுமந்தும்
திவவுத்திகழ்யாழ்நரம்புளர்ந்துஞ்சிவந்ததளிர்க்கைசிவப்பூரக்
கவரியிரட்டுமுருப்பிணிவெண்கதிர்வாண்முறுவன்முகநோக்கி
உவரியமுதுபடக்கடைந்தவுரவோனொன்றுங்குறைசெய்தான். ௨

அரிமாசுமந்தவட்டவணைவலங்கவாசுவீற்றிருக்கும்
திருமால்வேந்தர்பலர்நினதுசெவ்விவிழையவெய்யநை
உருமார்த்தனபோன்முழங்குகளிற்றெறன்றுருடற்றுமமர்வெருவி
விரிமாக்கடலுளமர்ந்தேனைவிழைந்தாயென்கொன்மெல்லியலே. ௩

எவர்மற்றென்னைவிழைகிற்பாரேற்றூண்மிசைவாழ்க்கையன்றி
உவவுமதியிற்கிளர்ந்துகவினொழுகுமுகத்தாயெனக்கலங்கிக்
குவவுக்கதிர்மாமுலைசுமந்துகுழைந்தமருங்குற்கொடிகுழைக்கும்
கவரிசோரத்தொடிசோரக்கையாறற்றுவீழ்ந்தனளால். ௪

அளிக்குநெகிழ்பூங்குழலணங்கையள்ளியிருகையாலணைக்கும்
துளிக்குங்கண்ணீரொருகையாற்றுடைக்குந்தூநீரொருகையால்
தெளிக்குஞ்சிறிதுதெளிந்ததற்பின்செவ்வாய்திறந்துசிலகிளக்கும்
களிக்குங்காடக்கடாக்களிற்றிற்கதிர்வெண்பிறைக்கோடொசித்தானே.

கொடிவார்புருவங்கூத்தாடக்குருகுபாந்தநெடுவானில்
பொடியார்வளர்நாண்மதிநுதல்வேர்பொடிப்பப்பவளவிதழ்துடிப்பக்
சடியார்குவளைமலர்க்கருங்கட்கடைசேப்பூரப்புலந்துரைக்கும்
வடியாரமுதமென்மழலைமாதர்க்கிவ்வாறியம்பினனால். ௬

மாதுவடவையழற்கவெனவண்டுஞ்சுரும்புமெழுந்தாற்றும்
கோதைதிருத்திநுதனீவிக்கொழிக்குஞ்சுடர்ப்பூண்கைசெய்யக்
காதுகடந்துகடைசிவந்துகளித்துமதர்த்துக்கருங்குவளைப்
போதுகடந்தவாட்டடங்கட்பூவைகொழுநற்போற்றினளால். ௭

முற்றத்துறந்துபற்றின்றிமுருகுபருகுமதுகரம்போல்
பெற்றபெற்றவழியருந்துபெரியோரன்றித்திருவுந்திப்
பொற்றகமலத்துலகேழும்பூத்தோய்செல்வக்களிமயக்கம்
உற்றமாக்கணினையெங்ஙனுணர்வுபடைத்துவிழைகிற்பார். ௮

எடுபடும்பூந்துளவமுகிலெல்லாவுலகுமிறந்துபட
நீடுதடங்கோட்டாலிலைமேனீலப்புயல்போனிமிர்பசும்பொற்

கோடுபிடுங்கித்திகிரிவரைகொன்றுநெடுவானடையவனைத்
தாடுதிரைக்கொத்ததிர்கடலிலார்க்குவெருவியமர்ந்தனையால். கூ

ஆலக்கருஞ்சேறுமிழ்பகுவாயரவிற்கிடந்தவாரமுதே
நீலப்பொருப்பேயருட்கடலேநெடுநீர்வேலியுலகளிக்கும்
மாலைத்திகிரிமழைமுகிலேமணியிலொளியுமலர்மணமும்
போலத்திகழ்வாயெங்குநினைப்புகலார்க்கென்சொல்புகலம்மா. கo

அண்டமெலாமன்னுயிரெல்லாமகத்தும்புறத்துங்காந்தமரும்
புண்டரிகக்கட்பொருவிலிநின்புகழேயன்றியயவில்லை
பண்டைமறைகள்பறைவதெனிற்பவர்செஞ்சடையோன்மலருறையுள்
கொண்டவொருவனேனோர்நீகுறித்தபணிசெய்குநரலரோ. கக

அழியாவுயிர்யாவையுந்தருநாளமர்ந்தகமலமலர்வேட்கை
ஒழியாப்போலவிழுத்தவத்தோருள்ளக்கமலத்துறைசுடரே
மொழியால்வழுத்தற்கெளிதோநின்முழுச்சீரொன்னவருள்பெருகி
வழியாவிதழ்த்தாமரைமலர்க்கண்வள்ளலுள்ளமகிழ்சிறந்தான். கஉ

அலைவாயெழுந்தமணிகொழிக்குமஞ்செங்கதிர்கடவழ்ந்தனபோல்
சிலையாரலங்கற்றிருமார்பிற்றேங்கொள்கலவைச்செழுஞ்சாந்தம்
முலையாலெழுதுமடமாதின்முறுவன்மாந்தியின்புற்றான்
மலையாற்பொழியுமழைகாத்துமண்காத்தளிக்குமறைமுதலே. கங

உருக்குமிணியூடறீர்த்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். கoஉடு.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ஙச-வது, பிரத்துமனன்மணம்புரியத்தியாயம்.

---

### அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பின்னற்றிரையினமிழ்தென்னப் பெருந்தேவியர்மற்றெண்மரொடு, பொன்னங்கொடிபோன் மடக்கிளிபோற் புயல்வாய்ப்பிறழும் புதுமின்போல், மன்னும்பதினாறாயிரமென் மழலைமடவாரொ ரோவொருவர், பன்னற்கரும்பண் புடைப்புதல்வர் பதின்மர் தமையீன் றெடுத்தனரால். க

தெய்வக்கமலமலர்துறந்துதெண்ணீர்விதர்ப்பநாடளிக்கும்
வைவேற்றடக்கைமன்னவர்பொன்மனைவந்துதித்தமடமாது
பௌவத்திரையிற்கிளைக்குமிளம்பவளக்கொடிபோல்விளங்குமொரு
கொவ்வைச்செவ்வாயமுதருமென்குதலைத்தீஞ்சொன்மகப்பெற்றாள். உ

மன்றற்கோதைதிருவயிறுவாய்த்தசாருமதியென்னும்
கொன்றைக்குழலைக்கொழுங்குருதிகுமிழியெழுவேற்கிருதவன்மா
என்றிப்புவனமீரேழுமிசைக்குந்திறன்மன்னவனுயிர்த்த
வென்றிக்களிற்றுவிசாலாக்கன்விரிதார்புனைந்துவேட்டனனால். ங

## தரவுக்கொச்சகக்கலிப்பா.

வார்சிலைக்கையுருக்குமிநல்வாமதனில்வந்துதித்த
ஆரமுதின்மென்சாயலரும்பெறன்மாமகள்வேட்டுச்
சோரிபடிந்துண்டுதசைசுவைத்துநிணம்வாய்பில்கிப்
போர்விழைந்தவேலரசர்போசகடத்திறுத்தனரால். ௪

மொய்க்குமிளங்களிவண்டுமுருகுயிர்க்குமலர்த்தாது
விக்குநறுத்தளிபருகுவிரைக்கோதைமணம்வேட்டுச்
செய்க்கமலத்தலரன்னசெங்கணெடுமால்பயந்த
மக்களின்மீனேறுயர்த்தமதவலியுமாங்கிறுத்தான். ௫

கூற்றிருந்துவிளையாடுகுடுமிநெடுவேன்மன்னர்
வீற்றிருந்தமாடத்துவிரைகமழும்பசுந்தேறல்
ஊற்றிருந்தபூங்கொடிபோலொழுகிநிலாவழியுமதிக்
கீற்றிருந்ததனையநுதற்கிளிமொழிசென்றெய்தினளால். ௬

எழிற்குழையொன்றொல்கியணியெருத்தலைப்பவிருடுங்கு
குழற்பிணையல்புறந்தாழக்குடங்கைநிறைந்தடங்காத
மழைத்தடங்கண்மடமாதுவட்டவாய்த்திகிரிவலம்
தழைத்தபுயறருதோன்றறடம்புயமேநோக்குற்றாள். ௭

மெல்லியல்வாளரித்தடங்கண்மீனேற்றுக்கொடியோன்றன்
மல்லியலுந்திணிதடந்தோண்மணிவரையிற்றவழ்தோற்றம்
அல்லியம்பூந்துணரூதுமலிநாணிற்றொடுத்துலகம்
கொல்லியவோங்கியகுவளைக்கொழுமலரேபோன்றதால். ௮

எறிக்குநிலாக்கொழுந்தென்னவேயொழுகுபொறிநுதல்வேர்
உறைப்பவுருத்தொளிர்கின்றவொள்ளொளிமென்னகைமொக்குள்
மறைத்துநறைக்குழறாழமழைமின்னிற்றிகழ்வாளைக்
குறிப்பறிந்தவிளவேனிற்கோமைந்தன்கவர்ந்தனனால். ௯

அள்ளிலைப்பூணணிந்தேந்துமம்பகட்டுவரைமார்பின்
ஒள்ளிதழ்வெம்முலைமுளரியோங்கெழின்மெல்லரும்புபொர
முள்ளரைத்தாமரைமுகையான்மூவுலகுந்தனிபொருத
கள்ளொழுகுபசுந்தாரான்கலவியினிற்களித்தனனால். ௰

கரும்புகடைகுழைத்துநறுங்கார்முல்லைமெல்லரும்பால்
இரும்புவனம்பொருதழித்தவெழுவுறழுந்திணிமொய்ம்பன்
விரும்புறவின்னமுதூறும்வெண்டோட்டுப்பணிமுல்லை
அரும்புறழுமுன்னெயிற்றாட்கிருத்தனுதித்தனனால். ௧௧

செருக்கியவெண்பிறைக்கோட்டுத்திருகுசினமால்யானை
உருக்குமிதன்மகனுயிர்த்தவோடரிக்கட்செங்கனிவாய்ப்
புரிக்குழலைத்தயங்குமெழில்பொலியும்வலம்புரிபொறித்த
அரக்கெறிதாமரைமலர்க்கையநிருத்தற்களித்தனனால். ௧௨

என்றனுமாயனைமுனிவுற்றிருக்கின்றேன்மால்பயந்த
மன்றலந்தாரவன்மகற்குமகட்கொடைநேர்ந்ததனைகுணம்
குன்றனையாயெனவேந்தன்கூறுதலுந்தங்கைமனம்
நன்றுவப்பநல்கினனென்றுமுனிவரனவில்வான். ௧௩

அள்ளிலைவேல்வலனுயர்த்தவிருத்தன்மணமாற்றக்
கள்ளவிழும்வெண்டோட்டுக்கரும்பனைமீமிசையுயர்த்த
வெள்ளிவரையனையானும்வேதவிழுப்பொருட்படிவப்
புள்ளுயர்நீள்கொடியானும்போசகடத்திருத்தனால். ௧௪

கழுகுசுலவுறநிணம்வாய்சான்றுகமழ்கருங்குருதி
ஒழுகுநெடுவேற்றடக்கையுருக்குமிகாதலினுயிர்த்த
புழுகொழுகுகருங்கூந்தற்பொற்கொழுந்தையழல்சான்றாய்
அழகொழுகுதிணிதடந்தோளிருத்தன்வேட்டனனால். ௧௫

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மோடுசான்மன்றலாற்றிமுருகனனுறையுநாளில்
பீடுசால்பிறைவெண்கோட்டுப்பிணர்ப்படுபனைக்கைநால்வாய்
ஓடைவேய்களிநல்யானையுருக்குமிதன்னொடின்புற்
றாடினான்குதுவென்றியலப்படையண்ணன்மன்னோ. ௧௬

முள்ளெயிற்றணங்கினன்னார்முகிழ்முலைக்கோடுபாய
ஒள்ளிணர்கிழிந்தபைந்தாருருக்குமியிருகால்வெல்ல
வெள்ளியங்குன்றம்போலும்விளங்கொளிமேனியானைத்
தெள்ளொளிமுறுவறோன்றச்சிரித்தனன்கலிங்கவேந்தன். ௧௭

குமுதமென்முகைவாய்விள்ளக்குரூஉச்சுடர்க்கற்றைகாலும்
அமுதவெண்டிங்களென்னவவிரொளிவிரிக்குமேனி
விமலன்மற்றொருகால்வெல்லவென்றனன்யானேயென்னா
உமிழ்கதிர்ப்பரிதிவைவேலுருக்குமியுரைசெய்தானால். ௧௮

சந்தனப்படப்பைவேலித்தண்பணைவிதர்ப்பவேந்தன்
மைந்தன்மேல்வென்றிநாட்டிமன்னவருரைத்தாராக
வெந்திறன்ஞாஞ்சிறாங்குவிமலனேவென்றானென்னா
அந்தரவாணிமற்றொன்றாயிடையறைந்ததன்றே. ௧௯

நீணிறப்பாவைவேலிநெடுநிலம்புரக்கும்வேந்தர்
பான்மையிலாடலுற்றபல்படைத்தொழிலுஞ்சூதும்
ஆனினம்புரந்துகான்சேராயர்நன்கறிவாரென்றுங்
கூனுகுகுடுமிசேற்றையுருக்குமியசிசெய்தானே. ௨0

இருட்டறச்சுடருஞாயிறெழுந்துசூழ்பசும்பொற்குன்றம்
வெருட்டியகுவவுத்திண்டோள்வெந்திறலிராமன்சீறிச்
சுருட்டுடற்பாந்தள்வேந்துசுமந்தபார்மன்னருட்க
உருட்டினனெழுவினாலவ்வுருக்குமியுவ்விமன்னோ. ௨௧

சுடர்மணிக்குழைவில்வீசிச்சுழன்றெருத்தலைப்பக்காமர்
கடிமலர்க்கண்ணிசிந்தச்சலிங்கனுங்கோடுவானை
அடியொருபத்திற்பற்றியணிமணிக்கடகக்கையால்
படரொளிமுத்தமன்னபன்னிரையுகுத்தல்செய்தான். ௨௨

ஏற்றுவண்டறைந்துசெவ்வியிளமுகைகிழியப்பாய்ந்து
காற்றுதேன்கமழும்பைந்தார்கைபுனைகருமென்கூந்தற்
கோற்றொடிப்பாவையோடுங்குருதிவேற்றனையோடும்
ஆற்றலந்திகிரியம்மானணிநகரடைந்தானன்றே. ௨௩

பிரத்துமனன்மணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧0௪௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௯௫-வது, அநிருத்தன்மணம்புரியத்தியாயம்.

---

கலிச்சந்த விருத்தம்.

குழவிப்பிறைபுனைவானவன்கூத்திற்சதிர்முழவம்
முழவிற்றிகழ்தோள்வாணன்மைம்முகிலாமெனமுழக்கத்
தழைவுற்றதொர்மகிழ்வாற்பொருதந்தாவளமுரித்தோன்
விழைவுற்றதென்றருவேமெனவிண்டானிதழ்ப்பவளம். ௧

கருணைக்கடலென்மாநகர்காப்பாயெனக்கரைந்தான்
எரிகக்கியசூலப்படையிறைகாத்தனனுறைந்தான்
உரவுத்திரைவிடமுண்டவனுழைச்சென்றுமற்றொருநாள்
செருவேட்கையன்வாணாசுரன்சிலகட்டுரைபுகன்றான். ௨

இடியுற்றனநெடுவான்கிழித்தெழுமேழ்பெருங்குன்றும்
பொடிபட்டனவென்றோளொடுபொருவெஞ்சமர்புரியாப்
பிடிமற்றிலையெனக்கிம்புரிபிறங்கும்பிறைவெண்கோ
டடியற்றிடப்பொருதோடினவடல்வாய்களிறெட்டும். ௩

வளர்திண்புயந்தினவுற்றனவாட்போர்பெறுகலனால்
கிளர்வெள்ளியம்பனிமால்வரைகிழவோயுயர்கொற்றம்
விளையுஞ்சமரினையல்லதுவிளைக்கின்றவரிலையால்
தளராவிறல்செழுவாளமர்தருவாயெனக்கிளந்தான். ௪

ஆரணீறெழுமுனஞ்செற்றவனைமென்னகைமுகிழா
இருநீர்வரைப்பினிலென்னினுமெறழ்மிக்கவனெய்தா
வரையாவையுந்திரண்டாலெனவளர்ந்தோங்கியபுயத்தாய்
செருவாற்றலினின்றேடெனச்செல்வாய்திறந்திசைத்தான். ௫

துன்னாவமர் துன்னப்படுமெனத்தோட்குலம்பணையா
அன்னான்வருமெந்நாளெனவற்றங்குநின்னுடல்சேர்
பொன்னார்கொடிவீழ்வுற்றிடுபோதாமெனப்புகல
மின்னாமெனத்திகழ்வேலினன்விளையாமகிழ்விளைத்தான். ௬

அனையானெயிலரண்காவல்செயான்மாமலைமடந்தை
புனைவார்முலைகுழையப்புணர்பொழுதத்துடலசுரன்
ஊனமோகைசெய்மகள்காணுபுமயலேறினண்மருவத்
தனைநேர்தருமுமையாளருடனழையாவுரைதருமால். ௭

சின்னாளினின்கனவின்றலைதிமிரக்கருங்களிற்றின்
மன்னாநறுமலர்ப்பூங்கணைமழையிற்பொழிமதனன்
தன்னாண்மையொடுறுபேரெழிறகுமாடவனொருவன்
நின்னாய்நலநுகர்வானவனின்காதலனென்றாள். ௮

தனிவிற்றிறல்வாணாசுரன்றருகன்னியன்னனமே
கனியிற்சுவைகனிமென்மொழிகரும்பன்னவள்கனவின்
பணிமுத்தணிந்திருகுன்றெனப்பணைத்தேந்தியதிணிதோள்
அநிருத்தனைமணந்தெவ்வழியகன்றானெனவிழித்தாள். ௯

என்னாருயிர்த்துணைநீயிவணிருந்தென்னைகொலம்ம
பொன்னார்வளைகழல்வுற்றனபுனைபூந்துகில்சோர்வ
கொன்னேநெடுநிலவுத்தழல்கொல்கின்றதுகுலையா
இன்னேயெனதுயிர்தேயுமென்றிசைத்தாளழலுயிர்த்தாள். ௧௦

மொழிகுற்றதெனிவ்வாறுருமொய்தாரவன்றனைநீ
விழைவுற்றனைபோல்வாய்மனம்விழைவுற்றதையெவனோ
அழிமட்டுமிழ்வனைபூங்குழலறைவாயெனக்கிளந்தாள்
செழுமுத்தெனவிளவாணகைதிகழ்சித்திரரேகை. ௧௧

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கள்ளவிழ்கோதைகண்டேன்கனவினிலொருவன்றன்னை
அள்ளிலைப்பூணினான்றனகம்பகட்டாரமார்பும்
புள்ளுணவிரிந்தபைந்தார்ப்பொன்வரைபொருவுதோளும்
ஒள்ளொளிநகையுமாவியுண்டவென்றுருகினாளால். ௧௨

முழுமதிமுகத்துநங்கைமூவகையுலகின்மூவா
அழகுவீற்றிருந்ததிண்டோளாடவர்தம்மையெல்லாம்
கிழியினிலெழுதிக்காட்டக்கிள்ளையங்கிளவிவாளா
எழுதியபாவைபோலவிருந்தனளென்பமன்னோ. ௧௩

அரவுடனெளியவாடுமஞ்சனவண்ணன்றன்னைத்
திருமணிதெளித்துத்தீட்டிச்சித்திரரேகைகாட்ட
எரிமணியாரந்தாங்கியிணைத்தெழுமுகிழ்மென்கொங்கைக்
கருமணிக்கூந்தற்கன்னிகண்டுகண்களிமீக்கூர்ந்தாள். ௧௪

நவுயர்கொடியின்றனைத் துகிலினைக்கொண்டுகிட்டி
இருமருங்கெண்ணவிக்குமிளமுலைத்தோளிகாட்டச்
செறிகதிர்க்குழலிக்கோட்டுத்திங்களிற்றிகழுகன்னர்
சுறுதுகல்வதிதாகண்ணிணைகழுகக்கோட்டினால். ௧௫

கனியுறழ்மழலைமாதுகண்கவர்செவ்விவாய்ந்த
அனிருத்தனுருவுதீட்டியணிபெறக்காட்டலோடும்
கனியுற்றகாணிறைமேகலாக்கிப பொருத்தஞ்சாய்த்தான்
இனிநிற்றன்குழுதவாயின்படிவனிவனென்றுசொற்றாள். ௧௬

கோங்கரும்பென்னவீங்குகுவிமுலைக்கன்னிகூறும்
தீங்கரும்பன்னவஞ்சொற்செவிமுதற்சார்தலோடும்
ஆங்கவன்றன்னைத்துஞ்சுமமளியினேடுவல்லிப்
பூங்குழற்றோகையன்னாள்புணர்ப்பினிற்கொடுவந்துற்றாள். ௧௭

சயனுயர்துகிலின்றகட்டெழுந்தகாளையாங்குத்
துயிலொரீஇயெழுந்துதுஞ்சார்சுடர்மணிவிளக்கமென்னக்
குயில்வருத்தகியபொன்னங்கொழுந்தெனமருங்குநின்ற
மயில்வியல்வதனநோக்கிமதிகொலென்றயிர்த்தல்செய்தான். ௧௮

முறுவல்வாணிலவேயன்றிமுகிழ்நகைநிலவுபாய்ந்து
கறைநகமழுகுழுதப்போதுகலந்திகழ்புரிவுநோக்கிப்
பொறிநுதல்வியப்பதின்றுபொற்கொழுந்தனையபேதை
மறுவில்வாண்முகமென்றெண்ணிமனத்துண்மகிழ்வுபூத்தான். ௧௯

அழிவாயமிழ்துபெற்றவாயிரமுளரிச்செங்கட்
குழகழற்குரிசிலன்னசுடரிலைநெடுவேற்காளை
காழகிற்கழுமவுண்டுகடைகுழன்றிருண்டுநெய்த்த
தாழ்குழற்கழுமுற்றெய்தாத்தடமுலைதழுவினானல். ௨௦

கடந்தலைப்பிடியோடாடுங்கொல்லினைக்களிறுபோலக்
காத்தழலுமிழும்வேலான்கங்குலும்பகலும்விள்ளான்
மாந்தளிர்குழைவுடாவழிக்கழகொழுகுமேனி
மந்திரமுழுவதுமாந்தியிருந்தனன்காமன்றேறு. ௨௧

நவர்ப்பவின்கனிகளந்தீஞ்சுவைப்படுமழலைப்பேதை
துவப்பகும்பொன்னங்கொம்பிற்றயங்குமெய்வனப்புமண்கட்
சிவப்புமென்முறுவற்செவ்வாய்த்திருமலர்விளர்ப்புநெஞ்சத்
துவப்புறுபுணர்ச்சியுண்மையுணர்த்தினவாயிலோர்க்கே. ௨௨

காற்றுமுகடையுமற்றுகன்னுதற்கன்னிமன்னும்
தோற்றமுங்கண்டவாற்றுற்றுணைபுணர்செவிலிகாட்டும்
ஆற்றல்வேலாசகாவென்றகன்கடைகாப்போரண்மிச்
சாற்றலுங்கன்னிமாடஞ்சார்ந்தனன்வாணன்மன்றே. ௨௩

வாள்விரிபசும்பொன்பூத்தவரிமுலைகிழித்தபைந்தார்த்
தோள்வரையுறைக்குந்தேறல்சூழ்ந்துணவரிவண்டாட
ஆள்வழக்கொழிக்குமுன்கணமுதுறழ்சாயலோடு
காளைகூத்தாடல்கண்டுகட்கடைசிவந்தான்மாதோ. ௨௫

களிச்சுரும்பாற்றுகோதைகடைசிவந்தகன்றுநீண்டு
விளர்ப்புறுநீலவுண்கண்வேல்பொரவிழைந்துவைகும்
அளைத்தலையரியேறன்னவாசிளங்குமரன்றன்னை
வளைத்தனாடுபோராடவாட்படைவயவர்மன்றே. ௨௬

கரும்புகால்குழைத்தகாளைகாமருபுதல்வன்வெம்பி
இரும்புசெயுலக்கையொன்றங்கெடுத்தனனிகலலோடும்
பொரும்புலிப்போத்திற்றுஞ்சுபொழிமதக்களிறுபோல
அரம்பொருநெடுவேன்மள்ளராருயிர்தொலைவுற்றால். ௨௬

மயிலொடுமாறுகொண்டமாதராஞ்சாயற்கன்னி
கயன்மலைப்பன்னநீலக்கண்ணிணைமாரிகாலப்
புயலுறழ்மேனியானைப்பொருசினத்தவுணர்வேந்தன்
அயிலெயிற்றரவின்பாசத்தார்த்தனன்சிறைசெய்தானே. ௨௭

திங்களோர்நான்குதண்ணந்தேனெடுத்தொழுகுபைந்தார்
ஐங்கணைக்கிழவன்பெற்றவரும்பெறற்புதல்வர்காணேம்
எங்குளன்கொல்லோவென்றயாதவர்நாடுங்காலைத்
துங்கயாழ்முனிவன்வந்துசொல்லினன்விளைந்தவாறே. ௨௮

தாட்படுதுளவப்பைந்தார்த்தனிமுதல்குமார்வெள்ளம்
கோட்புலிக்குழாத்திற்பொங்கிக்குரைகழனரலவீக்கி
வாட்படைவிதிர்த்துத்திண்டோள்வலங்கெழுவாணன்றன்மேல்
ஞாட்பினுக்கெழுந்ததாழிநாலெனும்பாவைநாண. ௨௯

மல்லலஞ்சிறப்புவாய்ந்தவால்வளையலறமன்னும்
வெல்கொடிமகரமோங்கவேனிலஞ்செல்வன்றன்னை
கல்லெனக்கலிக்குநீலக்கடற்புறத்தெழுந்ததோற்றம்
ஒல்லெனவொலிக்கும்வேலையுடைந்ததுபோலுமாதோ. ௩0

கலிவிருத்தம்.

நாணுறத்தாமெலாகலந்தகப்பிறங்கிய
வாணன்மற்குலவுதோண்மாயவன்றுணிப்பன
காணியவரையெலாங்கண்ணுறல்போன்றன
கோணைவெங்களிற்றினங்குழீயாங்கெழுபவே. ௩௧

பாழிசான்முழுமடற்பனைவலன்னுயரிய
தாழிருந்தடக்கையான்றண்மதிபோன்றுமாங்
காழியந்தேர்கடாயழல்சினந்திருகிய
ஊழிவெம்பரிதிபோலுடன்றெழுந்தனரோ. ௧௨

வெண்டலைப்புணரிபோல்விரைசெலக்கவினமா
மண்டுவெம்படைக்கடன்மருங்குறவெழுந்தனன்
எண்டிசைத்தலைவரோடிமையவர்தொழுதெழத்
தெண்டிரைத்துயிலெழுந்திகிரியஞ்செல்வனே. ௧௩

மின்னுநேர்வாட்படைமிளிரவண்டிமிர்துழாய்
இன்னெழின்முகிற்கொழுந்தெழுமுனைங்கெழுதரு
கொன்னவில்படைக்கடற்கொழுந்துபோயவுணர்கோன்
பொன்னெயிற்சோணிதபுரத்தினிலிறுத்ததே. ௧௪

புரிவளைமுழக்கினார்பொலமுகடுடைபடச்
செருவிளைகாதலிற்செலவயர்கொடிப்படை
உருமினைப்பாறவானேறெங்குபொன்னிஞ்சுழ்
அருமிளையெறிந்ததாலாழியிற்குழுமியே. ௧௫

கலிச்சந்தவிருத்தம்.

தேராயிரம்பரியாயிரஞ்செம்பொற்புகர்முகவெங்
காராயிரமொருபால்வரக்கனல்கட்கடைகதுவாப்
பாராயிரந்தலைதாங்கியபகுவாயரவென்ன
ஓராயிரம்புயத்தானவனுடன்முனைமர்க்கெழுந்தான். ௧௬

முரசங்கடலெனவார்த்திடமுகில்போன்முழவிமிழப்
புரிசங்கதிர்தரக்கட்கடைபுகைகூபகன்னனும்வான்
உருமேறெனக்கும்பாண்டனுமூழிக்கடையுடைக்கும்
அரவக்கடல்பொருதானையொடமர்வேட்கையினெழுந்தார். ௧௭

ஆர்க்கும்புயல்கிழித்தோங்குநெட்டலைக்குலமடையக்
கூர்க்குந்தழலுமிழ்குண்டுகட்குறுந்தாட்பெரும்பூதம்
பார்க்குந்திசைதொறுந்தோன்றிடப்பாய்வெள்விடையிவரத்
தார்க்கொன்றைதண்ணறவூற்றுசெஞ்சடைவானவனெழுந்தான்.

இடிக்குஞ்சினவுருமேறெனவிருங்குன்றகம்பிளக்கும்
வடிக்கும்பனிமலர்த்தார்நெடுவடிவேலவனுயர்வான்
வெடிக்கும்படிவளையார்த்திடவிறன்மஞ்ஞையின்முந்நீர்
பொடிக்குங்கதிரிளஞாயிறுபோலக்கனன்றெழுந்தான். ௧௯

காராடுமின்புரைவாட்டிறற்கண்ணன்படைக்கடலும்
தாராடுதிண்டோட்டானவன்றானைப்பெருங்கடலும்
போராடினவிணைமாந்தியபுள்ளின்குலமுருபுண்
நீராடினகவந்தக்குலனின்றாடினநெடிதே. ௨௦

குருகின்பெயர்புணர்மால்வரைகொன்றோங்கியகொற்றத்
திருகுன்றெனப்பணைத்தேந்தியவெறுழ்த்தோட்சுடரிலைவேல்
முருகுங்கமழ்முருகுண்டளிமூரல்பூங்கணையவனும்
திருகுஞ்சினமொடுவெஞ்சரந்தெரிந்தாரமர்புரிந்தார். ௪௧

சுழிக்குங்கடுங்குருதிப்புனல்சொரிகின்றதொரலத்தால்
உழக்குந்திறலமர்மேம்படுமுருமொப்பவனொடுகால்
குழைக்குஞ்சிலைக்கும்பாண்டனுங்கொலைக்கூபகன்னனுங்கார்
கிழிக்குங்கொடித்தடந்தேரினிற்கிடைத்தாமடர்த்தார். ௪௨

மாலைப்பனிமதிவெண்குடைவாணசுரான்மகனும்
நீலப்புயல்கிழியாவெழுகிழன்மின்னெனத்திகழும்
காலக்கதிர்வேற்சாம்பனுங்கடைநாட்பொழில்கனற்றும்
ஆலப்பகுவாய்வெஞ்சினவரவிற்கனன்றடர்த்தார். ௪௩

காற்றுமெனக்கனலாமெனக்கனல்சிந்துகட்பேழ்வாய்க்
கூற்றுமெனவருவாரணைக்குருதிப்புனல்கமழும்
வேற்றானையும்வாட்டானையும்விற்றானையுந்தாத்தா
எற்றானிகற்பெருஞ்சாத்தகியிளவாளரியனையான். ௪௪

ஓடும்புனன்மந்தாகினியுடைந்தாலெனவுடலம்
கோடும்பிறைக்கதிர்தங்கியகுளிர்வேணியிலரவம்
சூடுங்கறைமிடற்றண்ணலுந்தொலைவாளெயிற்றரவத்
தாடுங்கருமுகில்வண்ணனுமமராடினரம்மா. ௪௫

துளவப்பனிமலரந்தொடைசூடுந்தனிமுதற்கும்
தளைவிட்டலர்தார்க்கொன்றையந்தார்சூடுகண்ணுதற்கும்
விளைவுற்றதுபெரும்போரெனவிண்மொய்த்தனர்விரைநா
றிளமட்டுமிழ்மந்தாரமெல்லிணர்சூடியவிமையோர். ௪௬

## வேறு.

நீற்றணியணிந்தவனெடுங்கிரிதூக்கும்
காற்றின்வடிவெங்கணைகடுப்பொடுதூர்ந்தான்
எற்றையரிமானெனவிகற்களிறுகொன்றோன்
மாற்றினனவ்வாளியைவடிக்கணைதொடுத்தே. ௪௭

தண்ணெனிலவுக்கதிர்தவழ்ந்தசடிலத்தோன்
விண்ணகடுதீயவழல்வெங்கணைதொடுத்தான்
அண்ணலரவிற்றுயிலமர்ந்தகருமேக
வண்ணன்வருணப்படையின்மற்றதுதுணித்தான். ௪௮

பழுத்தொழுகுவெங்கொலையபாசுபதமென்ன
வழுத்துபடைசெந்தழலின்வண்ணனனிவிட்டான்
சுழித்துநறைபாய்துளவுசூடுமுகில்வண்ணன்
அழற்றுதிறனாணனதம்படையின்மாய்த்தான். ௪௯

செங்குருதிதோய்கணைதெரிந்துதிறல்வல்வில்
அங்குவளைசாத்தகியடுந்திறலையஞ்சி
பொங்குதிணியுந்துருபொருக்கெனவிழிந்தாங்
கைங்கரனிரிந்தனனமர்க்களன்விரைந்தே. ௫௦

ஆவித்தல்செய்யுமடலம்பினெயிலர்நாள்
வேவச்சிரித்தமலைவில்லியைமயக்காத்
தாவற்றவென்றிகெழுதானவரைமாய்த்தான்
தீவிட்டெரித்திடுசினத்திகிரிமாயன். ௫௧

பாடற்சுரும்புழுபசுந்துளவுசூடும்
கோடுற்றசெங்கைமுகில்விற்கடைகுழைப்ப
ஓடற்கமைந்தவமரூன்றுசுழல்கட்பேய்
ஆடற்கிவர்ந்தநிணமார்ந்துலவுபேய்கள். ௫௨

வானப்பரப்பினில்வயங்குமிருகோட்டுக்
கூனற்பசும்பிறையெனச்சிலைகுழைக்கும்
வேனிற்குமன்னனைவெரீஇவரைபறந்த
தானுற்றவேன்முருகனொக்கமடமஞ்ஞை. ௫௩

கும்பாண்டன்வென்றிகெழுகூபகனனென்போர்
வெம்பாவமாத்தொழில்விளைத்துவளைமேனி
வம்பார்மலர்த்தெரியல்வள்ளல்படையாலே
தம்பாடவிந்துபொருதானையொடுசாய்ந்தார். ௫௪

வண்டாடுதாரவுணர்மாளநெடுவல்வில்
கொண்டாழிமாயனொருகொண்டலெனநிற்றல்
கண்டானவற்கெதிர்கடாயினன்மணித்தேர்
தண்டாமவாணனுயர்சாத்தகியைவிட்டே. ௫௫

ஐந்நூறுசெங்கரமடற்சிலைகுழைப்ப
ஐந்நூறுசெங்கரமழற்கணைதொடுப்ப
பைந்நாகபாரமுழுதும்பதைபதைப்பப்
பைந்நாகணைத்துயில்பாம்பொருளொடேற்றான். ௫௬

புள்வாய்கிழித்தபுயல்புட்கொடியின்மேலும்
கள்வாய்மலர்க்கொடிகலந்தவகலத்தும்
தெள்வார்திரைப்புவிதிளைப்புறுபுயத்தும்
வெள்வாள்வலத்தவுணன்வெங்கணைபொழிந்தான். ௫௭

தடக்குஞ்சரத்திடர்தவிர்த்தமணிவண்ணன்
கடக்குஞ்சரத்தொடுகெடுத்ததிறல்வாணன்
விடுக்குஞ்சரங்களும்விழச்சிலைகுழைத்துத்
தொடுக்குஞ்சரங்களுமறக்கணைதொடுத்தான். ௫௮

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தழைத்தபைந்துளவமாலைத்தனிமுதனெடியசார்ங்கம்
குழைத்தனன்வாணன்வல்விற்குறைத்தனனவனுமான்றேர்
அழித்தனன்பாகன்சென்னியறுத்தனன்பகுவாய்ச்சங்கம்
முழக்கினனெடுமுதண்டமுகடுகீண்டொழியமன்றே. ௫௯

வாட்டிறல்வாணனற்றாய்வாளமாமுழவநண்ணித்
தோட்டபூங்கூந்தருழத்தாத்துகிலின்றிநிற்பக்
கோட்டலன்வரிவில்வேழக்கோடடிபிடுங்குகொண்டல்
நீட்டருஞ்செவ்விவாய்ந்ததிருமுகங்கோட்டிநின்றான். ௬௦

தொடுசினப்படையுமின்றித்துனைவயப்புரவிபண்ணி
விடுகொடித்தேருமின்றிவிழுப்பிணக்குவாலின்றோறும்
இடறியுங்குருதிச்செஞ்சேறிழுக்கியுங்களத்தினீங்கி
வடியிடுநெடுவேல்வாணன்மாநகர்வந்துசார்ந்தான். ௬௧

மூன்றுகான்மூன்றுசென்னிபெற்றதுமுழங்குசெந்தீக்
கான்றதுபுவனமூன்றுங்கனற்றுவதாயவெப்பு
வான்றவழ்குடுமிவெள்ளிவயங்குமால்வரையனுங்குத்
தேன்றவழ்துளவப்பைந்தார்ச்செல்வன்மேற்சினந்துவிட்டான். ௬௨

கடற்புனல்சுவறவாங்கிக்கனைகடல்கவைஇயஞாலம்
சுடக்கனன்றெழுந்ததீயிற்றோன்றுமவ்வெதுப்பின்முன்னே
நடுக்கியகுளிர்வெப்பொன்றுநனிமுறுவலித்துநம்பி
விடுத்தனனுலகமெல்லாம்விதிர்விதிர்ப்பெய்தமன்றே. ௬௩

காரழனஞ்சமுண்டகண்ணுதல்கடிதுவிட்ட
கூரழல்வெதுப்புமற்றைக்குளிர்ப்புறுவெதுப்புக்காற்றா
தேரொழிற்கமலமாதினிளமுலைபொருததிண்டோள்
ஆரொழிற்றிகிரிமாயனடிதொழூஉப்பரவிற்றன்றே. ௬௪

விடம்பொழிபடைகளெல்லாம்வேண்டுவமுகந்துகொண்டு
தடஞ்சிறைப்பறவையன்னதயங்குதார்ப்புரவிபூண்ட
கொடிஞ்சியந்தடந்தேரேறிக்குரைகடற்றானைசூழ
மடங்கலேறன்னவாணன்மண்டமர்க்களத்தினுற்றான். ௬௫

தோமரங்கணிச்சிநேமிசூலம்வேல்பிண்டிபாலம்
நீமுகத்துமிழுமொள்வாள்சிலசிலதடக்கைசிந்த
மாமரஞ்சிலகையோச்சமால்வரைசிலகைவீசத்
தாமரைக்கண்ணன்றன்மேற்சமர்த்தொழில்விளைத்தல்செய்தான். ௬௬

ஊன்சுவைத்துதிரமாந்தியொளிறுவேல்வாணன்றிண்டோள்
நான்கொழித்தொழிந்தவெல்லாநளியழற்றிகிரிதாங்கிக்
கான்குறைத்திடுதல்போலக்களப்படத்துணித்தல்செய்தான்
தேன்சுழித்தொழுகுதண்ணஞ்செழுந்துழாயலங்கற்றேவே. ௬௭

தணிப்பருஞ்சீற்றத்துப்பிற்றானவர்தலைவனுங்கு
வணக்கியசிலைகளோடும்வாங்கியபடைகளோடும்
பணைத்தெழுபஃறோட்கானம்படுகளப்பாப்பின்வீழ்த்துத்
துணிக்குமாயவனையேத்திச்சொல்லுமம்மழுவலானே. ௬௮

நின்றுடைமாயைதன்னானெடிதறிவழிந்தபல்லோர்
என்னையேபேறாயேத்திப்பெருஞ்செல்வந்துய்ப்பர்
உன்னையேபுகல்புக்கோர்மற்றவைப்பிற்பேரின்பவீடு
தன்னைநன்கடைவர்றிறனியறனிறுத்தச்சார்ங்கத்தாய். ௬௯

கைப்படுமழுநுவீசிக்கடுநுகர்கசடர்போல
மைப்படுகளத்தேன்மற்றைவானவர்ப்பேணிநின்னை
மெய்ப்படுபெருந்தேவென்றுவிழைகிலார்விழலர்யோகர்
எய்ப்பறநினைத்தந்நெஞ்சத்தியையநோக்குறுவரந்தாய். ௭௦

பாரத்தலைவானீள்பங்கிபனிமுகிலைகடுவீனை
தாரத்தலைசுழல்கும்திக்குத்தாழ்குழைச்செவிவிண்கொப்பூழ்
விராட்டுருவாயவேதவிழுப்பொருளேபூம்பொய்கைக்
கராத்துயிர்செகுத்தவாழிகாரணனீயேயன்றே. ௭௧

வாமனாகித்தொண்டனேன்முன்வழங்கினேன்கருணைவள்ளல்
பொருசினக்கனகன்காதற்புதல்வனுக்கருள்செய்தென்ன
அருள்செயல்வேண்டுமாவிவ்வடுதிறலாற்குமென்ன
வீரியனார்க்கடுக்கைமாலைவிண்ணவனிறைஞ்சிச்சொற்றான். ௭௨

வல்விறற்கனகன்மைந்தன்மாபின்வந்துதித்தோர்தம்மைக்
கொல்கிலமென்றியாழுங்கொடுத்தனம்வரமாமேரு
வில்லிநீவிளம்புமாறும்விழுமிதென்றுலகங்காக்கும்
அல்லியங்கமலக்கண்ணனருள்சுரந்துரைக்கலுற்றான். ௭௩

இந்நெடுந்தோள்கணான்குமீறிலாவரத்தினோடு
மன்னுகவென்றுவெள்வேல்வாணனுக்களித்தல்செய்தான்
கொன்னிளம்பரிதிபோன்றுகுருதிநீர்குடித்தவாழி
மின்னுவிட்டெறிக்குஞ்செங்கைமேலவனுவந்துமன்றே. ௭௪

வாளுகிர்நுதியிற்பொல்லாவாட்டிறற்கனகன்மார்வம்
கீளவோர்செம்பொற்றூணங்கீண்டுவந்தெழுந்தசெங்கட்
கோளரியவனிபோற்றுங்குரைகழன்முளரிவாணன்
தோளொருநான்கினோடுதொழுதனன்பாவிநுனைக். ௭௫

படுமதக்களிறுசூழப்பாய்பரிவெள்ளமீண்ட
இடிமுரசதிரப்பொற்றேரேறிவண்டிரைக்கும்பைந்தார்
அடலிருத்தன்றன்னோடாம்பலிற்கமழுஞ்செவ்வாய்
மடமயிலன்னசாயன்மகளையாங்குதவினேனே. ௭௬

குளிர்மதிகங்கைசூடுங்குரிசிலோடெறுழ்வேல்வாணன்
வளநகரடையவாணன்மடமகண்மணந்தமார்பத்
திளவிடையனையான்கல்லெனிருங்கடல்வேலிமூதூர்
துளவணிபடலைமாலைத்தோன்றலோடுவந்துசென்றான். ௭௭

அநிருத்தன்மணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௧௨௫.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௬௪-வது, நிருகனுக்கருள்புரியத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வான்விளையாடநீண்டமாமயில்குராங்கமேய
கான்விளையாடியுண்ணீர்காமுறுக்களித்தசெங்கட்
டேன்விளையாடுபைந்தார்த்திருமறுமார்பன்மைந்தர்
மீன்விளையாடுகூவன்மேயினரொன்பமன்றே. ௧

கூற்றுநீர்க்கூவறன்னுளொருபெருங்கோம்பிகாணா
ஏற்றிளவரிமாவன்னவிளையவரெடுக்கலாற்றார்
சாற்றினர்சென்றுமுட்டாட்டாமரைப்பொகுட்டின்வாழும்
கோற்றொடிக்குவவுக்கொங்கைக்கோடுழுமார்பினாற்கே. ௨

விம்மிதப்பட்டுமைந்தர்விளம்புதல்கேட்டலோடும்
கைம்மலையழைப்பவந்தகருணையங்கமலச்செங்கண்
மைம்முகில்வண்ணனேகிமலையெனக்கிடந்தவோமான்
செம்மலர்முளரியங்கைநீண்டினன்வாங்கினானால். ௩

காண்டொறுங்களிப்புநல்குங்களியமுதனையான்செங்கை
தீண்டலுமமானாகித்திரைதவழ்பரவைமுந்நீர்
ஈண்டெழுபரிதிபோலக்கிளரொளியுருப்பெற்றாங்கு
நீண்டழுதண்டகோளரிலவுறத்தோன்றிற்றன்றே. ௪

எறிகதிர்க்குழவிஞாயிற்றேர்பெறவிளங்குவானை
அறிகிலான்போலநின்றவமலனீயாரையென்ன
நிறையுயிர்தோறுநின்றநினக்குநானுரைப்பதென்றே
மறைதுணிவரியநம்பமன்னன்யானிருகனென்பேன். ௫

கல்லினான்மாரிகாத்துக்கணநிரைபுரந்தசெங்கண்
மல்லலேறனையாய்பைம்பொன்மாரியிற்பொழிந்ததல்லால்
தொல்லைவானகத்துமீனுந்தொடுகடன்மணலுமாற்ற
வெல்லையஞ்செஞ்சேதாவீந்தனன்மறையவோர்க்கே. ௬

மன்னியவெள்ளிவெண்ணூல்வலம்படக்கிடந்தமார்பின்
பொன்னிழ்க்கமலப்பைந்தார்புனையுமோரந்தணன்
இன்னிளம்புனிற்றாவந்தென்னினிரைகலந்ததாக
அன்னதோரந்தணாற்கறிந்திலென்வழங்கினேனால். ௭

புனிறுசேர்பருவச்சேதாப்புனைதொடுகவர்ந்துசெல்லும்
தனிமறையவனுமற்றைத்தாமரைத்தாரினானும்
எனதெனதென்றுகூறியிகறவினன்புரிந்தானென்றுக்
கனலெனக்கனற்றிமிக்கெண்கடைத்தலைகுறுகினாரே. ௮

அம்மறைக்கிழவமற்றிவ்வானினைதென்றுதேற்று
தாயிதழ்முளரிப்பைந்தாரந்தணற்குதவினேனா
றாயிரஞ்செஞ்சேதாவளிக்குவனெனவுங்கொள்ளான்
ஆயவெஞ்சீற்றத்தானவ்வந்தணனகன்றுபோயான். ௯

ஒருதாபுனிற்றுவேட்டீருவனருளாயென்ன
நீகொடுபெற்றுயின்றநெடுமறைக்கிழவன்றானும்
ஆறுநாறுகற்றுவாயிரப்பதென்றலும்
கூழல்வடிவேன்மன்னகொள்கலெனென்றுசென்றான். ௧௦

இறப்புவந்தடைந்ததாகவென்னையம்மறலிநோக்கி
அறப்பயன்பெரிதுநெஞ்சத்தறிந்திலையிற்றுபாவத்
திறப்பயனென்னிற்சாலச்சிறிதுபூந்தெரியல்வேந்தே
முறைப்படக்கூறல்வேண்டுமுன்னெதுநுகர்வதென்றான். ௧௧

தீதுமுன்னுகர்வலென்றுசெப்பினன்செப்பலோடும்
ஓதியாய்வீழ்தியென்னவீழ்ந்தனனுலகுக்கெல்லாம்
ஆதிநின்மலர்க்கைநீண்டவவ்வருத்தீர்ந்தேனென்றுக்
கோதைநீண்முடியிற்றாழ்ந்துகொழும்பொன்றுடைய்திறைஞ்சல். ௧௨

கார்முகில்வண்ணத்தண்ணல்காதலர்வதனைநோக்கி
ஆழல்வெய்யநஞ்சமருக்கிதுந்தீர்ச்சியுண்டாம்
ஒருநான்மறைவலாளருறுபொருளுசர்ச்சியொன்றால்
தீர்வதென்றெனைச்செவ்வாய்திறந்தனன்கூறினனே. ௧௩

நிருதனுக்கருள்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௧௫௮.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்.

குளிர்மதிகங்கைசூடுங்குரிசிலோடெறுழ்வேல்வாணன்
வளங்கரடையவாணன்மடமகண்மணந்தமார்பத்
திளவிடையனையான்கல்லெனிருங்கடல்வேலிமூதூர்
துளவணிபடலைமாலைத்தோன்றலோடுவந்துசென்றான். எஎ

அநிருத்தன்மணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ககஉரு.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## கூசு-வது, நிருகனுக்கருள்புரியத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வான்விளையாடநீண்டமாமயில்குரங்கமேய
கான்விளையாடியுண்ணீர்காமுறுக்களித்தசெங்கட்
டேன்விளையாடுபைந்தார்த்திருமறுமார்பன்மைந்தர்
மீன்விளையாடுகூவன்மேயினரென்பமன்றே. க

கூற்றுநீர்க்கூவறன்னுளொருபெருங்கோம்பிகாணு
எற்றிளவரிமாவன்னவிளையவரெடுக்கலாற்றார்
சாற்றினர்சென்றுமுட்டாட்டாமரைப்பொகுட்டின்வாழும்
கோற்றொடிக்குவவுக்கொங்கைக்கோடுழுமார்பினற்கே. உ

விம்மிதப்பட்டுமைந்தர்விளம்புதல்கேட்டலோடும்
கைம்மலையழைப்பவந்தகருணையங்கமலச்செங்கண்
மைம்முகில்வண்ணனேகிமலையெனக்கிடந்தவோமான்
செம்மலர்முளரியங்கைதீண்டினன்வாங்கினானால். ங

காண்டொறுங்களிப்புநல்குங்களியமுதனையான்செங்கை
தீண்டலுமமானுகித்திரைதவழ்பரவைமுந்நீர்
கீண்டெழுபரிதிபோலக்கிளரொளியுருப்பெற்றாங்கு
நீண்டமுதண்டகோளகிலவுறத்தோன்றிற்றன்றே. ச

எறிகதிர்க்குழவிஞாயிற்றேர்பெறவிளங்குவானை
அறிகிலான்போலநின்றவமலனீயாரையென்ன
நிறையுயிர்தோறுநின்றநினக்குநானுரைப்பதென்றோ
மறைதுணிவரியநம்பமன்னனன்யானிருகனென்பேன். ரு

கல்லினுன்மாரிகாத்துக்கணநிரைபுரந்தசெங்கண்
மல்லலேறனையாய்பைம்பொன்மாரியிற்பொழிந்ததல்லால்
தொல்லைவானகத்துமீனுந்தொடுகடல்மணலுமாற்று
நல்லியலஞ்செஞ்சேதாவீந்தனன்மறையவோர்க்கே. சா

மன்னியவெள்ளிவெண்ணூல்வலம்படக்கிடக்குமார்பின்
பொன்னிதழ்க்கமலப்பைந்தார்புனையுமோரந்தணாளன்
இன்னிளம்புனிற்றாவந்தென்னினநிரைகலந்ததாக
அன்னதோரந்தணாளற்கறிந்திலென்வழங்கினேனால். ௭

புனிறுசேர்பருவச்சேதாப்புனலொடுகவர்ந்துசெல்லும்
தனிமறையவனுமற்றைத்தாமரைத்தாரினானும்
எனதெனதென்றுகூறியிறைவனென்புரிந்தானென்னக்
கனலெனக்கனற்றிமிக்கென்கடைத்தலைகுறுகினாரே. ௮

அம்மறைக்கிழவமற்றிவ்வானினதென்றுதேற்றாத்
தூயிதழ்முளரிப்பைந்தாரந்தணற்குதவினேனா
னாயிரஞ்செஞ்சேதாவளிக்குவனெனவுங்கொள்ளான்
ஆயவெஞ்சீற்றத்தானவ்வந்தணனகன்றுபோயான். ௯

வருறுபுனிற்றுவேட்டநீகுவனருளாயென்ன
நீவிரொடுபெற்றுநின்றநெடுமறைக்கிழவன்றானும்
ஆறுதாறுகற்றாவாயிரப்பத்தென்றாலும்
கூழல்வடிவேன்மன்னகொள்கலெனென்றுசென்றான். ௧௦

இறப்புவந்தடைந்ததாகவென்னையம்மறலிநோக்கி
அறப்பயன்பெரிதுநெஞ்சத்தறிந்திலேயிற்றுபாவத்
திறப்பயனென்னிற்சாலச்சிறிதுநூத்தெரியல்வேந்தே
முறைப்படக்கூறல்வேண்டுமென்னதுநுகர்வதென்றான். ௧௧

தீதுமுன்னுகர்வலென்றுசெப்பினன்செப்பலோடும்
ஓதியாய்வீழ்தியென்னவீழ்ந்தனனுலகுக்கெல்லாம்
ஆதிநின்மலர்க்கைநீண்டவவ்வுருத்தீர்ந்தேனென்னக்
கோதைநீண்முடியிற்றாழ்ந்துகொழும்பொன்னாடெய்தினானால். ௧௨

கார்முகில்வண்ணத்தண்ணல்காதலர்வதனநோக்கி
ஆழல்வெய்யநஞ்சமருந்தினுந்தீர்ச்சியுண்டாம்
ஒருநான்மறைவலாளருறுபொருணுகர்ச்சியொன்றால்
தீர்வதன்றென்னச்செவ்வாய்திறந்தனன்கூறினானே. ௧௩

நிருதனுக்கருள்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௧௩௮.

ஸ்ரீ [illegible]

## ௧௭-வது, நம்பிமூத்தபிரான்கோகுலமடைந்த வத்தியாயம்.

---

கலிநிலைத்துறை.

கரும்பனைக்கொடிக்காவலன்முல்லையங்கானம்
பொருந்திநந்தகோன்பூங்கழற்றாமரைபோற்றா
அரும்புமென்னகையசோதைதனந்துணரசோகின்
திருந்துசெந்தளிர்ச்சீறடிசென்னியிற்சேர்த்தான். ௧

கிளரும்வெள்ளியங்கிரியொடுமாறுகொண்டெழுந்து
வளருந்தன்னிணைமணிப்புயம்விழைந்துநன்மாமை
விளருங்கோவியர்வெம்முலைமணந்தனன்வரிவண்
டுளரும்பூந்தொடைமார்வனவ்வொருகுழையொருவன். ௨

மழைக்கணேழையர்மன்றலம்பூங்குருண்மானத்
தழைத்தநாண்முகைத்தளையவிழ்ந்துகுத்ததாதாடிக்
குழைத்தகொம்பினிற்குலவிவாழ்கருங்குயிற்பிள்ளை
அழைப்பவின்னிளவேனில்வந்திறுத்ததையன்றே. ௩

குரவவார்குழற்குறுநுதற்கோவியர்குழாத்தோ
டுருவவொண்சுடர்பரப்பியவொருகுழையொருவன்
விரவுமீனெடுவிரிகதிர்விதுநடந்தென்ன
அரவவண்டிமிரிளமரக்காவுசென்றடைந்தான். ௪

திரைக்கடற்படுமமுதெனத்திசைத்திசைதெய்வ
மருக்கமழ்ந்திளவண்டொடுசுரும்பினம்பாய்ந்து
விரிக்கும்பூம்பொழில்விளைதருவாருணிநறவம்
கரைக்குமாமதக்களிறனான்பருகினன்களித்தான். ௫

விரைசெய்காவினில்விளைமதுத்துளிதெறித்தென்ன
முருகுவிம்மியமுளரிவாண்முகம்வியர்ப்பூரப்
பொருவின்மாதரோடாடுவான்பூம்புனலாட
வருகவென்றனன்மறிதிரையமுனையைமகிழ்ந்தே. ௬

மழைக்கடாக்களிறன்னவன்வருபுனலாடக்
கழைத்தகாலையில்யமுனைவந்தடுத்திலதாக
இழுத்தகூர்ங்கொடுங்கலப்பையாலிர்க்குதுமெனவண்
டுழக்கிழிந்ததாரவனினைத்துழியொழுகியதால். ௭

கொய்யுநாண்மலர்விரைகமழ்யமுனைகொய்யாது
செய்யபொற்றுணர்த்தேந்தொடையொன்றுடுசெறிந்த
நெய்யிருங்குழலிரேவதிகொழுநற்குநெய்யா
ஐயநீலநுண்டுகிலிரண்டளித்ததையன்றே. ௮

கங்கைவெண்டிரைகலந்தெனக்கண்கவரழகு
பொங்குதன்னுருப்பொழிதருநிலவொளிபூப்பக்
கொங்குவிம்மியகுளிர்மலர்க்கொழுங்கரையமுனை
செங்கணேறனன்றிளைத்தனன்கோவியர்செறிய. ௯

நூறுகாவதநாற்றிசைத்தாமரைவிரித்து
நாறுதண்டுறைதழுவியநளிபுனற்றடமும்
ஆறுஞ்சோலையுமாய்ச்சியர்நலனுகர்ந்தாறி
ஏறனனிருதிங்கள்வீற்றிருந்தனனிப்பால். ௧௦

நம்பிமூத்தபிரான்கோகுலமடைந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௧௪௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௩௮-வது, பவுண்டரனைக்கொன்றவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாட்டளிகொழுதுபைந்தார்ப்பவுண்டரனென்னும்வேந்தன்
நாட்டுமாயலங்கல்சூடிச்சங்கொடுதிகிரிதாங்கிப்
பூட்டியொண்மணிமற்றொன்றுபுட்கொடியுயர்த்துவெய்ய
வாட்டிறல்வாசுதேவன்யானெனவைகினானே. ௧

காசிலக்குருநாட்டேந்தல்கண்ணுதலவனைப்போற்றி
ஏசிலாச்சங்கநேமியிருங்கதைபிறவுமெய்தி
ஆசறவினிதுவாழ்ஞான்றணிகெழுயாழின்வல்ல
தேசுடைமுனிவன்கூற்றாற்சினந்துபோர்கெழுமிநின்றான். ௨

செங்கதிர்க்கற்றைகாலுந்திகிரியுஞ்செல்வன்யானே
சங்கொடுதழல்வாய்நேமிதாங்குதல்விடுத்தாலுய்ந்தான்
அங்கவைவிடுகலானேலாடமர்க்கெழுகவென்று
வெங்கடக்களிறட்டாற்குவிடுத்தனன்தூதுமன்றே. ௩

சேட்டிளம்பரிதியென்னத்திகழ்வெயிற்குப்பைகாலும்
சூட்டராவணையினானைத்தூதரைக்கேட்டலோடும்
கோட்டினனிலவுகாலுங்குறுநகையெறிவேற்றானை
ஈட்டமொடெழுந்துமன்னனெயிற்புறத்திறுத்தானன்றே. ௪

பாழிசான்முழவுத்திண்டோட்பவுண்டரவாசுதேவன்
ஊழியாரழலிற்சீறியொலிகடற்றானைசூழத்
தோழமைகொண்டகாசிவேந்தொடுசுடருந்தீவாய்
ஆழியம்படைக்கைதாங்கியமர்க்களங்குறுகினானால். ௫

பண்ணைமகளிகல்யானைப்பவுண்டான்வதனநோக்கி
வெண்ணிலாமுறுவல்கோட்டிவிடுதிவெந்தழல்வாய்சான்ற
ஒண்ணிறநேமியென்றாங்குரைத்தனைவிடுதுமென்னா
மண்ணைமுழுவத்திண்டோண்மாலவன்விடுத்திட்டானால். ௬

ஊற்றிருந்துதிரமாரியொழுகுசெந்தழல்வாய்நேமி
சீற்றமொடெதிர்ந்துவெய்யசெருத்தொழில்விளையாநின்ற
பாற்றினஞ்சுழலும்வைவேற்பவுண்டரவாசுதேவன்
மாற்றருஞ்சிறப்புவாய்ந்தமணிமுடிதுணித்ததன்றே. ௭

விட்டிருவினையுநீங்கிவேரியந்துளவமாயன்
கட்டெழிலுருவநாடிக்கைபுனைந்திருந்தவாற்றால்
பட்டவெங்களிகல்யானைப்பவுண்டரவாசுதேவன்
வட்டவாய்த்திகிரிதாங்குமாலுருமரீஇயினானால். ௮

திங்களைநகுதல்போலத்தெண்ணிலாவிரிக்குமுள்வாய்ச்
சங்கொடுநேமிதாங்குந்தாமரைத்தடக்கையண்ணல்
வெங்கொலைப்பகழிதூண்டிவெல்படையழுவத்தேற்ற
கங்கைநாட்டிறைவன்சென்னிகாசிமாநகரின்வீழ்த்தான். ௯

கன்னியம்புரிசைசூழ்ந்தகாசிநாடளிக்குந்தோன்றல்
மன்னவர்மகுடகோடிமணித்தொகைபொருதுமின்கால்
பொன்னெடுவாயில்வீழ்ந்தகுலமணிச்சென்னிதந்தை
சென்னியென்றறிந்துமாழ்கிச்செய்கடன்கழித்தான்மன்னோ. ௧௦

காய்க்குலைக்கமுகவேலிக்காசிநாடளிக்குந்தோன்றல்
பேய்க்குலந்துணங்கைதூங்குபோரமர்க்களத்துநெய்த்தோர்
சாய்க்கமற்றெந்தைசெம்பொற்றார்முடிகடிந்தான்றன்னை
மாய்க்குவனென்றுமுக்கண்வானவற்பழிச்சினானால். ௧௧

துளிப்புயல்கிழித்தமின்னிற்சுடர்விடுசடிலத்தண்ணல்
வெளிப்படவங்கைகூப்பிவெஞ்சமர்க்களக்கணெந்தை
களிச்சுரும்பாற்றுபைந்தார்க்கதிர்முடிதுணித்தாற்கொல்ல
அளித்தியோர்வரமென்றேத்தியணிமுடிவணங்கினின்றான். ௧௨

மழலைவண்டாற்றுதாரோய்மாரணவினையிற்றென்பால்
அழலினைவளர்த்திமற்றவ்வழலிடைவெதும்பியூழித்
தழன்முனிந்தெழுந்ததேய்ப்பத்தடம்பிறையெயிற்றுப்பேழ்வாய்ச்
சுழல்விழிப்பூதமொன்றுதோன்றும்விண்கிழித்துமன்னோ. ௧௩

எழும்பிறையெயிற்றுப்பூதமெழுதருமறைவலோர்க்குத்
தழைந்தபேரன்பிலார்மேற்சார்தரவிடுத்தியாயின்
விழைந்ததுமுடிக்குமென்னாவெள்ளிவெண்ணிலவுகாலும்
குழந்தைவெண்டிங்கள்சூடுங்குரிசிலாங்கியம்பிச்சென்றான். ௧௪

கூழலொழுகுவைவேற்கோவிளங்குமாரனாங்கே
ஆழல்வளர்ப்பமற்றவ்வழலினோர்பசுங்கட்பூதம்
ஈரெழுபொழிலுமின்னேயெரிக்குமென்றிமையோரஞ்சக்
காரெழுமுருமேறென்னக்கனற்றிமிக்கெழுந்துசென்ற. ௧௫

தழைந்தவெஞ்சினத்திற்றங்கைதார்முடிதுணித்தானாவி
பிழிந்துணவிடுத்தவோடும்பிறங்குவெண்பிறைப்பற்பூதம்
விழைந்தசெங்கமலமாதின்மென்முலைக்கோடுபோழச்
சுழிந்துமட்டொழுகுதாரான்றுவரைபோய்ச்சுட்டதன்றே. ௧௬

கலிநிலைத்துறை.

சேதாமிடையச்செழுந்தீங்குழனின்றிசைத்தோன்
குதாடுகாலைச்சுடுகின்றதொர்பூதமூதூர்
போதார்துளவப்புயல்வண்ணபுரத்தியென்னாத்
தாதார்முளரித்திருத்தாணிழன்மாந்தர்சார்ந்தார். ௧௭

சேடுற்றஞாயிறொருகோடிதிரண்டதேபோல்
பாடுற்றதெய்வப்பரிதிப்படையண்ணல்பார்ப்பச்
சூடுற்றசெந்தீச்சொரிகட்பெரும்பூதமஞ்சி
ஓடத்துரந்ததழனேமியுருத்துமன்றே. ௧௮

விண்ணந்திகழப்பொடிக்குங்கதிர்காணைவெம்பி
நண்ணுந்திகிரிப்படையஞ்சிகடந்தபூதம்
கண்ணன்புரத்திற்றனையேவியகாமர்கங்கைத்
தண்ணந்துறைவன்றனதாருயிருண்டதன்றே. ௧௯

குறுத்தாட்பூதங்கொலப்பட்டவக்கொற்றவெள்வேல்
நறைத்தாமமார்பனகர்தீமடுத்தானேமி
உறைத்தாய்பிழிவண்டொருகோடியுழக்கவிண்ட
வெறித்தாமரைப்பூங்கொடிகேள்வனைமேயதம்மா. ௨௰

என்றுமுன்மன்னனிளங்கோவியரோர்கணிந்த
பொன்னார்திதலைப்புணர்வெம்முலைப்போகமாந்தி
மின்னார்ந்திலங்குவிதுமேனியன்வீற்றிருக்கும்
அந்நீர்மைசொல்வாயெனக்கூறினனைந்தவித்தான். ௨௧

பவுண்டரனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௧௬௬.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௩௯-வது, சாம்பன்மணம்புரியத்தியாயம்.

---

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆடமர்கடந்த குருதிவாட்டடக்கை யடனரகாசுரன் றோழன், காடு
றைவாழ்க்கைத் துவிதனென் றுரைக்குங் கடுந்திறற்கவிகுலத் தலைவன், ஓ
டைமால்யானை மணிமருப்பொசித்தோ னெக்கல்வீற்றிருந்தமாநகர்த, கா
டுமால்வரைவீழ்த் தழித்தனன்கடற்சார் நகர்கடல்கொளப்பரிந்தழித்தான்.

படுமதஞ்செருக்கிப்படர்சினவயிராவதப்பெரும்பகடுபண்ணமைந்த
மடநடைப்பிடியோடாடுதல்கடுப்பவால்வளைமேனியான்மகிழ்ந்து [ட்
கொடிபுரைமருங்குற்குவிமுலைக்கனிவாய்க் குழைபொருகுவளையங்கருங்க
சுடரிழையாயர்மாதரோடாடுஞ்சோலைசூழ்குன்றகம்படர்ந்தான். ௨.

சேயுயர்விசும்பின்விளங்குவெண்டிங்கட்செல்வனிற்றிகழ்பவன்றன்மேல்
காயழற்கதிரிற்கடுஞ்சினந்திருகிக்கவுளிழிகடாத்தவெண்பிறைக்கோட்
டாயிரங்களிற்றுவிறல்கெழுதுவிதனுச்சிலைநெடுமரந்துரந்தும்
மீயுயர்குடுமிமால்வரைபிடுங்கிவீசியும்வெஞ்சமம்விளைத்தான். ௩

பைத்தலைப்பாம்பிற்பாரகமேழும்பணைநெடும்புயத்தினிற்பரிப்போன்
முத்தவெண்முறுவல்வெண்ணிலாவிரிக்குமுளரிவாண்முகத்தினனெதிர்த்
தத்துவெள்ளருவித்தடவரைமுகட்டிற்றழங்கழலுருமுவீழ்ந்தென்னக்
குத்தினன்குருதிநீத்தம்வாய்கான் றுருக்கரசிறந்தனன்மன்றே. ௪

எழுஞ்சுடர்கடுக்கு மெரிமணிச்செஞ்சுட் டேந்துபாராயிரம் பருவா
ய், முழைஞ்சுகொப்புளிக்கும் விடத்தழல்பாந்து முகத்தழல்பாய்ந்தும்வெ
ந்தொழிய, ஒழிந்துநின்றதனுற் சேடனென் றுரைக்கு மோங்குசீர்ப்பெரு
ம்பெயர் படைத்த, செழுங்கதிர்விரிக்கு மொற்றைறவார்குழையோன் றிரு
வளர்துவரைசென் றடைந்தான். ௫

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கழைபுனைவரிவிற்காமன்கடல்விளையமுதினுலே
எழுதியதன்னகோலத்திலக்கணையென்னுமாதைத்
தழையுநற்றவத்தினீன்றாண் றழலெழவுயிர்க்கும்பேழ்வாய்
ஒழுகுநச்செயிற்றுப்பாந்தளுயரியகொடியான்மன்றே. ௬

எங்கினிச்சேறுநாமென்றிரங்குபொற்குன்றுசூழும்
அங்கதிர்ப்பரிதியண்ணுந்தகல்விசும்பாறுபார்க்கும்
குங்குமக்குவட்டின்வீங்கிக்குமுதநாறமுதச்செவ்வாய்ப்
பைங்கிளிமழலைமாதின்படாமுலைபணைத்தமாதோ. ௭

நஞ்சமுமமுதுங்காட்டிநம்மொடுநிகர்க்குமேகொல்
அஞ்சனக்கடன்மற்றென்றனைவயரிபரந்துநீரார்
கஞ்சமுங்கயலும்வென்றுகட்கடைசிவக்குமென்றால்
வெஞ்சிலைப்புருவவல்வில்விழிக்கிணையாவர்சொல்வார். ௮

எழுபெரும்புவிக்குமப்பாலிருளெலாமெழுந்துபொங்கி
முழுமதிதன்னைவந்துமுற்றியதன்மைகாட்டும்
மழைமுகக்கிழிக்குமின்னுமையருநண்ணுசுப்பிற்பாவை
குழைமுகஞ்சூழ்ந்துதாழ்ந்துகுழன்றுநெய்த்திருண்டகூந்தல். ௯

ஒடிக்குநுண்மருங்குலென்னவுருத்தெழுகுவவுக்கொங்கை
வடிக்கருங்கண்ணியாக்கமதித்தனன்வதுவைநாட்டிக்
கடற்புவிகாக்குந்தண்ணங்கவிகைமன்னவர்கட்கெல்லாம்
விடுத்தனன்முடங்கல்வெவ்வாய்விடவராவுயர்த்தவேந்தே. ௧௦

வரைமுகங்கிழியவீழுமண்டழன்மடங்கலென்னச்
செருமுகத்தேற்றதெவ்வர்திணிதடம்புயங்கள்போழ்ந்து
குருதிகொப்புளிக்குங்கூர்வேற்கோசலநாட்டுவேந்தன்
பொருகடற்பவளச்செவ்வாய்ப்பூவையைக்கருதிப்போந்தான். ௧௧

அவிழிணர்ப்பொலம்பூந்தும்பையாத்துவாளமரிலேற்ற
புவிபுகழ்மன்னர்செங்கைப்புண்டரிகங்களெல்லாம்
குவிதரிலவுதாற்றுங்குரைகழல்யாத்தகோன்றாட்
கவிமதங்கடந்தவண்மைக்கன்னிநாட்டிறைவன்வந்தான். ௧௨

உமிழ்கொழுங்குருதியொள்வாளொளிறுமின்பிறழவீசிச்
சமரொதிர்ந்தாடுமன்னர்தாருடைந்தோயச்செம்பொற்
சிமயமொத்தெழுந்துவீங்கித்திரண்டதிண்டோளிற்றேத்தார்
கமழ்நறாத்தூற்றவந்தான்காம்பிலிக்காவன்மன்னன். ௧௩

பாற்றினஞ்சுழலுஞ்செவ்வேற்பற்றலராவியெல்லாம்
கூற்றெறுமறலிவாரிக்கொள்ளைகொண்டுண்ணுநால்வாய்க்
கீற்றிளந்திங்களன்னகிளரொளிமுத்தவெண்கோட்
டாற்றலங்களிநல்யானையவந்திநாட்டதிபன்வந்தான். ௧௪

செருப்பெறுஞ்செருக்கினின்றதிசைக்கடாக்களிற்றின்கொற்ற
மருப்பிறப்பொருதமார்பன்வாரணவாசிமன்னன்
கருப்புமென்மழலைக்கன்னிகதிர்மணிமருப்புவென்ற
அருப்பிளங்கொங்கைவெம்போராட்டுவந்தடைந்தானங்கே. ௧௫

சிலையொடுபொருதுவென்றுசெக்கர்வானரும்புதிங்கட்
கலையொடுமலையநாடுங்கட்டெழினுதலினார்தம்
முலையொடுபொருதபோலமுகிறவழ்பசும்பொற்கோட்டு
மலையொடுபொருதமார்வன்மாகதன்வந்தான்மன்றே. ௧௬

அழிமதவருவிதூவுமண்ணலங்களிற்றினுச்சி
செழுமணிக்குடத்திற்றந்தெய்வமாக்கங்கைத்தூநீர்
தழையுநல்லழகின்வெள்ளந்ததும்புவாண்முகத்தினோய்ப்
பொழிமதுக்கமழ்பூங்கூந்தற்பூவையாட்டினரால். ௧௭

பூம்புகைகமழுமவண்டபுரிகுழன்முருகுவிம்மு
தேம்பிணையணிந்தானைத்திலகநன்கெழுதிப்பச்சைக்
காம்பெனப்பணைத்ததோளிற்கரும்பொடுவல்லிதீட்டி
ஆம்பல்வாயணங்கினுண்கணஞ்சனந்திருத்தினாரே. ௧௮

எழிலெரிபசும்பொன்செவ்வாயிலங்குசெம்பவளநீலக்
குழன்மணிக்கொத்துமுத்தங்கூரெயிறுகவெல்லா
அழகுவீற்றிருந்தநங்கைக்கழகெனவணியணிந்தார்
மழைமதர்நெடுங்கணேழைமருங்குலின்பாவமீதே. ௧௯

உவரியாரமுதத்தேறலூறுமென்மழலைப்பூவைப்
பவளவாய்மடந்தைகூந்தல்பாயிருளென்றுநாடாக்
குவிமுகிழ்பரந்தவண்டுகொழுதுபூங்காவென்றுள்ளத்
தவழ்கதிர்வதனத்திங்கடழீஇயெழிறழைந்ததன்றே. ௨௦

தெண்டிரையமுதின்சாயறிருமுகமுருகுவிம்மு
புண்டரிகங்கொலென்றுபுள்ளிமான்பிள்ளையெண்ணு
மண்டிலநிறைந்தமாசின்மதியெனமகிழ்ந்துநோக்கக்
குண்டலங்குலாயமீனிற்குரூஉச்சுடர்கொழித்ததன்றே. ௨௧

தேமருகோதையஞ்செஞ்சீறடிசிறந்ததெய்வத்
தாமரைமலரேசெய்யதளிரெலாமல்லவென்னுக்
காமருசுரும்புமூசக்களியிளவெகினம்போல
மாமணிச்சிலம்புபாடுமழலைவீற்றிருந்தமன்றே. ௨௨

கார்க்குழலாகமெல்லாங்கவர்ந்தெழில்கனியவீங்கி
ஈர்க்கிடைபோகலாகாவெதிரெதிர்பணைத்துவீங்கும்
வார்க்குலமறுத்தகொம்மைவரிமுலையாட்டுசுண்ணம்
போர்க்குமஞ்சுணங்குபோலும்பொற்புவீற்றிருந்ததன்றே. ௨௩

அருப்பிளமுலையஞ்சாயலணிமணிக்கதிர்மென்றோளின்
வரித்தபூங்கரும்பின்பாங்கர்மண்டகத்தவழுந்தோற்றம்
கருப்புவிற்குழையவாங்கிக்கடற்சுறவுயர்த்தகாளை
சுருப்புநாண்செவ்விவாய்ப்பத்தொடுத்ததுபோலுமன்றே. ௨௪

மழைக்கருங்கண்ணிசெங்கேழ்மாமணித்தொடிகால்கற்றை
நிழற்கதிர்தீட்டுவல்லிநேரெழுந்தெறிக்குந்தோற்றம்
எழிற்கழையன்னமென்றோளெழுதியகாமவல்லி
குழைப்பதுபோலுஞ்செய்யகுறுமுறிக்கொழுந்துமன்றே. ௨௫

சுனைமுகமவிழ்ந்தபொன்னந்தோட்டுமாமலரேயன்றிச்
சினைமுகநெகிழ்மென்பூவுந்திறப்படச்சேருமாபோல்
புனையிழைமடவார்குழப்போதினுந்தாதுவிம்மு
நனையினுமிகுத்துநல்லார்நறுநுதனடக்கலுற்றான். ௨௬

ளிர்மேனிமாதர் திருத்தகவிரித்தல்செய்த
துணைருறைப்பப்பூத்தகொப்புளம்போலப்பொற்ருள்
மெல்லரும்புதோன்றவனமெனவொதுங்கித்தீந்தேன்
ந்தாமநாற்றிவனைந்தோர்மாடஞ்சார்ந்தாள். உ௭

திங்கள்கான்றமுழுக்களியமுதமூழ்கி
ளிர்கின்றதென்னவிளங்கியதவளமாடத்
ந்தவிசின்வைகுமிருமிலவேந்தர்காண
ற்கோதைசென்றோர்மாலையின்வயங்கினுளால். உ௮

களிநல்யானைக்காவலனொருவன்செம்பொற்
ரப்பணைத்தோளிற்கோற்றொடியொருகாழ்முத்தின்
ளிதவழமாதராணைகளிலவுவந்து
சாவென்றுச்செங்கட்டாமரைபாப்பல்செய்தான். உ௯

நருதிவைவேன்மன்னவனொருவன்மார்வத்
ளிவயிரப்பூணினைக்குசெந்தளிர்க்கைதாங்கும்
ழ்க்குவளைதோன்றவேந்திழைநோக்குநோக்கம்
போலுமென்றுகட்கடைதிருப்பினுனால். ௩0

ங்களிறனோர்கொற்றவன்குவளைவென்ற
ங்கண்ணிசெக்கர்மணிக்குழைபெறிக்குமொண்கேழ்
ந்தலவச்செய்யவிளந்தளிர்க்கண்ணிநங்கை
ர்கொல்லோவென்றுத்தோட்டடந்துனைந்துநோக்கும். ௩௧

றுக்கிநோக்கியெறுழ்வலியாசர்வைகச்
தழுதவொண்ணுத்திருமுகஞ்சிறிதுகோட்டித்
ழுகுசெங்கட்டாமரைபாப்பினின்ற
ர்குழலினுளைவிளைவினன்வடிவேற்சாம்பன். ௩௨

கலிவிருத்தம்.

காடிவரிவண்டுபடுகோதைதபுனையாமுன்
டிநெடுங்கண்மயிலொப்பவளைவந்துற்
றடுபடுதாவனைடுத்தொழிதல்காறு
டவுயர்த்தவனோவெனவழன்றுன். ௩௩

ர்முகம்வணக்கியெழுகன்னன்முதல்பொன்னேந்
ளினர்களோராறுவர்நீயெழவிழிக்கும்
ருமுலையன்னவர்கள்போகவினியென்று
னிளவேறனையவேந்தவைவிளைத்தார். ௩௪

பிணையன்மார்பினவர்போகலெனவெவ்வாய்
ம்பசுழிபற்பலவிடுத்தனர்வளைப்ப
ம்பரியதேரினன்வளைத்தவரிவில்லன்
ம்பனமர்மேம்படுதருக்கினனிருந்தான். ௩௫

ஈரிருவடிக்கணையினாலெரிபசும்பொற்
றேர்புணர்பரித்தலைகள்சிந்திவிறல்சாயா
ஒரொருவடிக்கணையினாலுவரிமுற்றும்
பார்புகழுமோராறுவர்பாகருயிர்மாய்த்தான். ௩௬

நாற்றிசையுமுற்றியழனச்சிலையவெள்வேல்
ஆற்றலர்கள்கூற்றமெனவாடுசமராற்று
ஏற்றுடலும்வெய்யபுலியாப்புறுதல்போலக்
காற்றின்விசைகொண்டுபொருகாளைதனையாத்தார். ௩௭

வேறு.

தீப்படவிழித்தவெஞ்சீற்றக்கட்செவி
மீப்படவுயரியவேந்தனாதியோர்
பாப்பணைத்துயின்றவன்பயந்தகாளையை
யாப்புறுத்தணிநகரேகினாரரோ. ௩௮

வழிந்துதேனுகுதொடைமகதியாழ்பயில்
செழுந்தவனத்திறஞ்சென்றுகூறலும்
கொழும்பிறைக்கோட்டிளங்குஞ்சரங்கள்போல்
எழுந்தனர்யாதவரிகலுக்கென்பவே. ௩௯

சிலைத்தொழிலிளையவர்செருக்கிப்போர்க்கெழல்
விலக்கினன்குமரனைமீட்கும்யாமென
அலப்படைக்கொற்றவனுழுதழற்றெழு
கலைக்கதிர்மதியெனக்கடிதினேகினான். ௪௰

புகரணிபூணுதற்புழைக்கைமால்கரி
நகரணித்தாமுகிழ்நனைகுடைந்துதா
துகவரிமிடற்றளியுழுமொர்காவிடை
இகலரியேறனானிறுத்திட்டானரோ. ௪௧

ஒருகுழையொருவனுங்குற்றவன்றனைக்
குருகுலவேந்தொடுகூறவேண்டுநம்
வரவெனப்படர்ந்தவன்வல்லைகூறலும்
அரவுயர்கொடியினனவணடைந்தனன். ௪௨

பிறங்கிணருழுதிளம்பிள்ளைவண்டிசைத்
திறங்குபூநறவுவாயுறைப்பநீண்முடி
இறைஞ்சினன்மன்னவனிருந்தகாலையின்
நறுஞ்சினைமாரம்புரைநம்பிகூறுவான். ௪௩

குரைகழற்காலினங்குமரன்றன்னொடும்
உருமெனமுழங்கியவோடைமால்களிற்
றரசர்பல்லோர்பொரலறங்கொலன்னது
பொருவினங்கேளெனப்பொறுத்தல்செய்தனம். ௪௪

விடுகவேற்சாம்பனைவிடுத்திரில்லையேல்
உடல்சமம்விளையுமென்றுலங்கொடோளினிர்
படுமதஞ்செருக்கியபனைக்கைமால்களிற்
றடல்கெழுகுருதிவேலரசுகூறிற்றால். ௪௫

என்னலுநஞ்சுமிழெயிற்றுப்பாழிவாய்க்
கொன்னவில்பாந்தளங்கொடியினானொடு
மன்னியபெருவிறன்மன்னர்யாவரும்
மென்னகைமுகிழ்த்தனர்விளம்பன்மேயினார். ௪௬

கற்றைவெண்கவரியுங்கதிர்நிலாப்பொழி
கொற்றவெண்குடையும்யாங்கொடுப்பவேத்தியல்
உற்றிடும்யாதவருற்றநன்றெனாச்
சொற்றனரெழுந்தனர்துனைவினேகினார். ௪௭

மறுத்தனருரைத்ததுவல்லையேகினர்
நெறித்தபூந்தாரினர்நிலைமைநன்றெனா
வெறித்துணர்மராம்புரைவெள்ளைமேனியான்
கறுத்தனன்செய்யகட்கடைசிவந்தவே. ௪௮

முறம்புரைதழைசெவிமூரிமாநகர்
கறங்குநீர்க்கங்கையிற்கவிழ்க்கும்யாமெனாப்
பிறங்கலையமுனையைப்பெயர்த்தகாவலன்
மறங்கெழுநாஞ்சிலின்வாங்கினானரோ. ௪௯

விரைசெலன்மிதவையின்மிதந்துவெள்ளிவெண்
டிரைதவழ்கங்கையிற்றிருவமாநகர்
வரவொருகுழையினன்வாங்கவாகைவேல்
அரசர்கண்டஞ்சினரதிர்ப்புற்றாரரோ. ௫௦

பாம்புயர்கொடியினான்பசியபச்சிளங்
காம்பெனப்பணைத்ததோட்கன்னிதன்னொடும்
சாம்பனையுய்த்தனன்றவளமேனியான்
மேம்படுசேவடிவீழ்ந்திறைஞ்சினான். ௫௧

ஒன்னொளிநெடுநிலாவுதறுவாலுளைப்
புள்ளியிற்பொன்செய்தார்ப்புரவியீட்டமும்
பிள்ளைவண்டுண்மதம்பில்குமால்கரி
வெள்ளமுஞ்சிறப்பொடுவெறுப்பநல்கினான். ௫௨

முருகுலாங்கொம்பொடுமுருகனன்னசெங்
குருதிவேற்காளையைக்கொண்டுமன்னிய
திருநகர்க்கேகினன்செக்கர்மாமணி
ஒருகுழையுலாவருவலங்கொடோளினான். ௫௩

பூவலவின்றுறும்பொன்னைக்குட்டெயிற்
திருநகர்த்தென்றலைச்சேணிலோங்குரு
விரிதிரைக்கங்கையில்வீழ்தல்போன்றுமற்
றொருகுழையவன்வலிபுணர்த்துகின்றதால். ௰௪

சாம்பன்மணம்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௨௨௩.

ஸ்ரீகிருஷ்ணாசகாயம்.

---

## ௪0-வது, பதினாறாயிரந்திருவிளையாட்டுரை யத்தியாயம்.

---

### கலிநிலைத்துறை.

தண்ணந்தாமரைத்தலைவீற்றிருந்ததாரகைத்
தண்ணலெண்ணிரண்டாயிரமரிவையருவப்பக்
கண்ணுறுந்திறங்காண்குமென்றமிழ்தினிற்கனியும்
பண்ணமைந்ததீம்பாடல்யாழ்ப்பண்ணவன்படர்ந்தான். ௧

வளர்க்குங்கற்பகப்படப்பைவாய்வழிநுழைந்து
களிக்கும்வண்டுபூங்கற்பகக்கொடியெனமறுகத்
தளிர்க்குநல்லெழிறயங்கிழையோயொடெவ்வுலகும்
அளிக்குங்கார்முகிலமர்ந்துழியடைந்தனனன்றே. ௨

முழுதுணர்ந்தமாமுனிவான்வருதலுமெழுந்து
கொழுதிவண்டுறைகொழுந்தொடையமரர்கோமான்
உழுதபூங்கழற்காவினுணெண்டொடிக்கரத்தால்
தொழுதுவந்தவாறென்கொலென்றினனுரைசொற்றான். ௩

மறைவழுத்துநின்மலரடிவந்தடைந்தல்லால்
பிறவிமாக்கடலெங்ஙனங்கடப்பதுபிறவாச்
சிறியபச்சிளங்குழவியாயாலிலைச்சேக்கை
இறைகொண்முத்தொழிலிறைவவென்றேத்தினனகன்றான். ௪

மீட்டுமற்றொருமெல்லியல்கடிமனையிறுப்பச்
சூட்டரவணைத்துயின்றவனறிந்திலான்போன்று
நாட்டமின்னருள்பொழிதரநடந்தெப்பொழுதிங்
கீட்டுமாதவவெனவுரையாடல்கேட்டிகந்தான். ௫

விரித்தவெண்டிரைவேலிமண்பொதிந்தாள்விமலன்
திருந்துமில்லறச்செய்வினைதிறப்படக்காட்டி
அருந்தவத்தினேனடைதொறுமடைதொறுமாங்காங்
கிருந்தவண்ணமற்றெங்ஙனம்வகுத்தியாமிசைக்கேம். ௬

கஞ்சநாண்மலர்க்கடவுண்முன்கடவுணீராட்டச்
செஞ்சுடர்ப்பொலஞ்சேவடிசேயுயர்விசும்பின்
நெஞ்சுபோழ்படநீட்டியநேமியந்தடக்கை
அஞ்சனப்புயலொருத்திசேயிதழமுதருந்தும். ௭

கல்வினல்வருத்தன்னதோளரக்கர்போர்கடந்து
வில்வினலொருமெய்த்தவன்வேள்விகாத்தளித்தோன்
சொல்வினற்பசுங்கிளிபுரைசுடரிழையொருத்தி
இல்வினன்மறையேத்தியமுத்தழல்வளர்க்கும். ௮

தேன்வழங்கியசெழுந்துணர்முல்லையந்தண்பூங்
கான்வழங்கியகணநிரைமேய்த்தகார்வண்ணன்
வான்வழங்கியமதிநுதலொருத்திதன்மனைவாய்
ஆன்வழங்கும்வீழ்ந்தருமறையந்தணர்முகப்ப. ௯

தமரவெண்டிரைத்தடங்கடல்வரையினற்கலக்கி
அமரர்கூட்டுணவமுதுனவளித்தருளிறைவன்
குமரிவண்டுணக்குவிமுகிழுடைந்துதண்டேறல்
உமிழ்மலர்க்குழலொருத்திதன்மனைவிருந்தாட்டும். ௧௦

ஆட்டுவெண்டிரைக்கருங்கடலவனிமாதனையச்
சூட்டுசெம்மலர்த்தொடைபுனைமணிமுடிதுறந்து
காட்டினேனெனக்கருங்குயிற்கிளவியன்றுரைத்தல்
கேட்டமாயவனொருத்தியொடிருந்தறங்கேட்கும். ௧௧

துணரகற்பகஞ்சுரிமுகமுழக்கிவிண்டுளக்கிக்
கொணர்கரும்புயல்குழன்றுநெய்த்திருண்டுவார்ந்தொழுகும்
வணரிருங்குழல்வானுதலொருத்திதன்மனைவாய்
இணர்மணங்கமழிளமாச்சோலைமற்றிழைக்கும். ௧௨

விண்ணம்போழ்படவிரைமலர்ச்சேவடிநீட்டிக்
கண்ணகன்புனல்கன்றுதல்சடைக்கருள்கண்ணன்
வண்ணவார்குழலொருத்திதன்வளமனைப்புறத்துத்
தண்ணந்தாமரைதலையவிழ்மணித்தடம்வகுக்கும். ௧௩

மாமன்விட்டதோர்மழைமதக்கருங்களிறட்ட
தாமமார்பினன்றளையவிழ்தாமமோடிற்பூந்
தாமஞ்சூடியசுரிகுழலொருத்திதன்மனைவாய்
நாமவெஞ்சினநனைகவுட்புழைக்கைமாநடத்தும். ௧௪

பூத்தபொங்கர்பொங்கெரியுணப்பொருசிலைவாங்கும்
பார்த்தன்றேர்விடுபாகன்வெண்பனிநிலாமுத்தம்
கோத்தெனத்திகழ்கூரெயிற்றொருத்திமாநகரின்
றேக்குமின்பொழிசெழுமணிதுயின்றதேரூரும். ௧௫

பரியுருப்புணர்படுகொலையவுணனைப்படுத்த
கரியவன்கருங்கனிக்கயலிரண்டெதிர்கலந்து
பொருவபோன்றகட்பொற்றொடியொருத்திதன்மனைவாய்
உருவவானிலவொழுகுவாலுளைப்பரியுகைக்கும். ௧௬

நெடியமுதெயினீள்பொலம்பொருப்பினான்முருக்கு
கடவுள்வார்சிலையிறுத்தவன்கருங்கயல்வெருட்டித்
தடநெகிழ்ந்தசெந்தாமரைமலரின்மேனடந்த
வடிநெடுங்கணார்கொடிமனைவரிசிலைவடிக்கும். ௧௭

தெழித்துநாக்கடைகவ்வியுஞ்செந்தழல்சிதற
விழித்துநூக்கியுமூக்கியும்வெருவருவெம்போர்
இழைத்தமல்லர்தம்மெறுழ்வலிகடந்தபோரேறனார்
மழைத்தடங்கணாள்வளமனைமற்றெழின்வகுக்கும். ௧௮

பொழிந்தசெஞ்சுடர்ப்பொன்னகருறைநர்நெஞ்சம்
விழைந்துநாடியவிழுப்பொருணல்கினோன்விதுப்பூங்
கொழுந்தினல்வெழில்கவற்றியகுறுநகவொருத்தி
செழும்பொனில்லிடைத்திருத்தகச்செய்பொருடிருத்தும். ௧௯

திரைசெய்தெண்கடலெழுமிளம்பரிதியிற்றிகழும்
விரைசெய்தார்முடிவிண்ணவர்பரவவீற்றிருப்போன்
வரைசெய்மாமுலையொருத்திதன்வளமனைவளாகத்
தரசர்வந்துவந்தடிதொழவரசுவீற்றிருக்கும். ௨௦

விரியும்போதுறைவேதனும்வேதமுமானும்
பரியுநெஞ்சொடுபாடியுநாடியுந்தெரிதற்
கரியனாகியவண்ணலோரரிவைதன்மனைவாய்த்
தெறியுஞ்சொற்றிறனமைச்சொடுசெய்வினைதேரும். ௨௧

காட்டினண்ணுபுகண்கவர்காஞ்சனவுருக்கொள்
மோட்டுவெந்திறன்முழுவலிமானுயிர்முடியச்
சோட்டுவார்சிலைக்குரிசிலோர்கோற்றொடிமனையின்
வேட்டமாடுவானெழுமிகல்வேற்படைமிடைய. ௨௨

எழுபொருப்பெனவெழுதருமெழுவிடைதழுவித்
தழுமுற்றெய்திடத்தடமுலையொருத்தியைமணந்த
முழுமுதற்பொருண்முருக்கிதழொருத்திதன்மனைவாய்
மழலைமென்மொழிமக்கடம்மணவினைமன்னும். ௨௩

விரிந்ததாமரைப்பொகுட்டுறைவேதியன்முதலாத்
தெரிந்தநான்மறையந்தணர்தெள்ளிதின்வேட்டுச்
சொரிந்தநல்லவிதுய்ப்பவன்சுருண்டிறைநெறித்தூப்
புரிந்தவார்குழலொருத்திதன்மனைமகம்புரியும். ௨௪

காய்ந்தவெஞ்சினக்கறையணற்பிறையெயிற்றகல்வாய்ப்
பாந்தள்வல்விடம்பாய்ந்தநீர்த்தடத்துவீழ்ந்தாடும்
ஏந்தலேந்திளவெழின்முலையொருத்தியோடினிது
சாந்தளாவியதண்புனற்றடம்படிந்தாடும். ௨௫

சுரும்புசூழ்பசுந்தோட்டிணர்க்கற்பகம்பிடுங்கு
பெருங்கைவேழமோர்பிடிபுணர்ந்தாடுதல்கடுப்பக்
குரும்பைமென்முலைக்கோற்றொடியொருத்தியோடந்தண்
அரும்புவாயவிழிளமரக்காவகத்தாடும். ௨௬

மழலைவண்டுணமடல்வயிறுடைந்துதேத்திவலைப்
பொழிகருந்துழாய்ப்புயல்கதிர்மின்னொடுபுணர்ந்தாங்
கொழுகுநுண்ணிடைமடவரலொருத்தியோடொருத்த
குழவிவெண்பிறையிடறுசெய்குன்றினிற்குலவும். ௨௭

தாளதாமரைத்தாளலாற்கங்கையந்தரங்கம்
தோளினுந்தவழ்ந்தெனநிலாத்தூற்றுவெண்கவரி
வாளிரண்டெனமதர்விழியொருத்திநின்றிரட்டக்
காளமேகமன்னன்மலர்மெல்லணைகவினும். ௨௮

கருப்புவெஞ்சிலைக்காமவேள்கதிர்முடிவணக்கிப்
பொருப்புஞ்செய்யபொற்பொருப்பொடுபொருதமால்யானை
மருப்புமஞ்சுறமாணெழிற்சூதொடுமலைந்த
அருப்புவெம்முலையொருத்தியோடமர்ந்துசூதாடும். ௨௯

மழலைகேட்குநரின்றியேமரகதக்கொழுந்தின்
அழகெறித்தபைங்குழவியாயாலிலைக்கிடந்தோன்
எழிலிளங்கிளிபோலுமோரேழையீன்றெடுத்த
குழவியின்னமுதுயிர்த்ததீங்குதலைகேட்டுவக்கும். ௩௦

படுதிரைக்கடல்படிந்தெழுபசும்புயற்கொழுந்து
வடவரைத்தலைமணத்தல்போன்மடவரலொருத்தி
நெடுநிலாப்பொழிநித்திலப்பூண்சுமந்தேந்திச்
சுடுபொன்பூத்தவஞ்சுணங்கவிரிளமுலைதோயும். ௩௧

விரிந்தபைத்தலைவெள்ளிவெம்பாப்பணைதுயின்ற
கருந்துழாய்முகில்கார்நிறக்கட்செவிச்சேக்கை
பொருந்தியாங்கொருபுரிகுழல்புணர்முலைக்கோட்டின்
நரந்தமூழ்கியநறுமலர்ப்பிணையன்மேற்றுயிலும். ௩௨

மாயுமக்களென்மலிபொடியென்பணிவனைந்து
தூய்மைநீங்குமெண்டோளவன்றூய்மையெய்திடுவான்
சேயதன்னடித்தெய்வநீர்சென்னிமீத்தரும்
மாயனோர்மடவரன்மனைமஞ்சனமாடும். ௩௩

கிளைத்ததண்சுடர்கித்திலநேரும்வாண்முறுவல்
ஒருத்திபொன்னுரையொத்தநுண்டிதலைவெம்முலைமேல்
வரித்தகப்புரமன்றலங்கலவையிற்றோய்ந்து
விரித்ததீங்கதிர்வெண்மதிக்கடவுளின்விளங்கும். ௧௪

மொழியுஞ்சாயலுமுழக்களிவிளைக்குமாமுகின்
தழையுமற்றொருதளரியறடமுலைமுற்றத்
தெழுதுகுங்குமக்கொழுங்களியளாயெரிபசும்பொன்
ஒழுகுகுன்றுசேர்குழவியம்பரிதிபோன்றொளிரும். ௧௫

பாடல்சால்பசுங்கிளிபுரையொருமடப்பாவை
மோடுகொண்டெழுமுதிரெழின்முகிழ்முலைக்கோடு
சாடவிண்டதாருகுத்ததாதளைந்துவெஞ்சுண்ணம்
ஆடுமஞ்சனக்களிறுபோலணிபெறவிளங்கும். ௧௬

பணங்கொள்பாந்தளின்பஃறலைக்கிடந்தபார்வியப்பக்
கொணர்ந்தகற்பகக்கொழுந்தளிர்ப்பசுங்கொடிநோக்கி
இணைந்துவிம்மியவிளைமுலையொருத்திமென்றோளின்
மணங்கொண்மான்மதச்சாந்தினுல்வல்லிகின்றெழுதும். ௧௭

பாட்டுவண்டிமிர்பனிமலர்ப்பசுந்தொடைபரிய
மோட்டுவெண்டிரைமுத்தரிஞ்சிளமுலைமுயங்கி
ஊட்டியன்னவொண்டளிர்புரைந்தாலெனச்செங்கை
கூட்டிமற்றொருகோற்றொடிகருங்குழன்முடிக்கும். ௧௮

எழில்செய்நல்லணியேந்துபுநிற்பதையல்லால்
தழையுமாரமுந்தயங்கிழைபுனைவதுகடுப்ப
முழுநிலாப்பொழிமுத்துகமுயங்கிமற்றொருத்திக்
கழுதுகண்படுமவிரிழையங்கையாலணியும். ௧௯

இயலினிற்கழையோழிசையமுதுகவிசைத்த
மயிலெருத்துறழ்மாயனோர்மயிலியன்மடவாள்
கயிலெருத்திடங்கோட்டினன்கனியினிற்கனியப்
பயிலும்பண்ணமைபஃறொடையாழிசைபருகும். ௨௦

இன்னதன்மையவெண்ணிரண்டாயிரமுருக்கொண்
டன்னமென்னடையரிவையர்மனைதொறுந்தோன்ற
மன்னுகின்பெருமாயையாரறிகுவரென்றெ
நன்னர்யாழ்முனிநன்றுவந்தேத்தினனடந்தான். ௨௧

பதினறாயிரந்திருவிளையாட்டுரையத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௨௧௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## சஉ-வது, சிசுபாலனைக்கொன்றவத்தியாயம்.

---

### கலிநிலைத்துறை.

சேட்டிளம்பிறைக்கொழுந்தெனத்திகழ்தருபால்வெண்
கோட்டுவாரணங்கூப்பிடத்துயிலெழுகொண்டல்
மோட்டுமுட்புறமுருக்கின்மொய்யிணரெனவிரிந்த
சூட்டுவாரணங்கூப்பிடத்துயிலெழுந்தனனால். க

இனைத்தெனத்துணிந்தெழுதிடாப்பழமறைக்குலங்கள்
அனைத்துமெட்டுதற்கரியதோராநந்தமயமாய்
நினைப்பரும்பரதத்துவமாய்நிறைந்தோங்கு
தனிப்பெருஞ்சுடர்தன்னையேநினைந்தனனிருந்தான். உ

கங்கைசேவடித்தாமரையொன்றுமேகலந்த
தங்கதிர்த்திருநகைமுகைமுளரியுமாய்பொன்
செங்கைமாமலர்முளரியுந்தீண்டினமென்றைப்
பொங்குவெண்டிரைப்பூம்புனன்முழங்கமூழ்கினனால். ௩

பொங்குவெண்டிரைபூத்திடுகவுத்துவம்பொழிந்த
அங்கதிர்க்குலந்தவழ்ந்தெனவருவரைமார்பில்
குங்குமக்கொழுஞ்சாந்தணிதிருத்தினன்குளிர்ந்த
திங்கள்வாண்முகந்தீட்டினன்றிருமணித்திலகம். ௪

வேலைவெண்டிரைமுகட்டினில்வெங்கதிர்பொடிப்ப
நீலவண்டுசூழ்தாமரைநெகிழ்ந்துதேன்பொழிதல்
போலவீர்ம்புனல்பூந்தொடித்தடக்கையாற்பொழிந்து
காலையாற்றுறுகடனெலாந்திறப்படக்கழித்தான். ௫

கலித்தவெண்டிரைக்கனைநீர்வளர்த்தகற்பகத்தின்
ஒலித்ததன்சினையொழுகுசெந்தளிர்நலங்கவற்று
மலர்க்கரத்தினான்மண்ணுறுகல்லைவுதிமண்ணி
நலத்தமுத்தழல்வளர்த்தனனென்மறைநெறியின். ௬

படுதிரைக்கடல்படிந்தெழுபசும்புயலென்றே
நெடுநிலைத்தவர்நினைந்திடநெகிழ்ந்தசெங்கமலப்
படலைசூடியபழமறையர்தனக்கெல்லாம்
சுடர்துளும்புவெண்முத்தொடுபொன்மழைசொரிந்தான். ௭

விழைவெறிந்தெழுவெகுளியைவேரொடும்பிடுங்கு
முழுதுணர்ந்தமாமுனிவரைச்சுரவரைப்பசுவைப்
பழுதில்காட்சிசால்பழமறைக்கிழவரைக்கையால்
தொழுதல்செய்தனன்மங்கலப்பொருள்பலதொட்டான். ௮

மற்றுகேசிலாமாகதமணிவரைமருங்கில்
எற்றுதெண்டிரையெழுதருமிளங்கதிரெறிக்கும்
கற்றைவான்வெயில்காண்டகவிளைப்பதுகடுப்பப்
பொற்றைபைங்கதிர்பொழிதருபொற்றுகிலுடுத்தான். ௯

வெறுத்தகாரிருள்விழுங்கிடுவெண்ணிலாக்கதிர்விட்
டெறித்ததன்பிறையிதயகின்றெழுவதேயேய்ப்ப
நெறித்தபோதுறைநேரிழைவனமுலையாரம்
பொறித்தமார்பினிற்பூண்டனன்பொழிகதிராரம். ௧௦

கானமுல்லையுங்காணாலாந்துளவமுங்கருவித்
தேனுண்வண்டொடுதேனவாங்கற்பகஞ்செறிந்த
பூநறும்பிணைபூமகள்புணர்புயப்பொருப்பின்
வானவில்லெனவான்மருடோள்வளைவளைந்தான். ௧௧

அறல்புறந்தருகருங்குழலாய்ச்சியர்மனைத்தாங்
குறிசெறிந்தநெய்பார்த்ததுகிடக்கமற்றுருகு
நறுநெய்பார்த்தனனல்லொளிதுவன்றுகண்ணாடி
மறுவில்வெண்ணிலாமதிமுகமலரநோக்கினனால். ௧௨

ஓட்டமைந்தசெம்பொற்கலனொழுகொளியாரம்
ஆட்டுவந்தவாளரவுரியன்னநல்லறுவை
வேட்டவேட்டனவிரையெடுத்தெறிதருதண்பூந்
தோட்டதாமரைத்துணையடிதொழுபவர்க்களித்தான். ௧௩

உவவுவெண்மதியுருவவொண்குடைமிசையோங்கக்
கவரிகால்செயக்கருங்கடல்வெள்வளைகடுப்பப்
பவளநல்லொளிபழுத்தவெண்குளம்புடைப்பசிய
இவுளிபூண்டதோரரிமணித்தேர்மிசையிவர்ந்தான். ௧௪

குரைசெய்வண்டொடுகொழுங்களிச்சுரும்பினங்கொழுதா
விரைசெய்கற்பகநறுமலர்விண்ணவர்பொழியத்
திரைசெய்வேலையிற்செழுமணித்திரளொளிதிளைக்கும்
அரசிருக்கைசென்றடைந்தனனரசெலாம்வணங்க. ௧௫

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அழியுமருவிக்கடாயானையழைப்பவருங்காரருள்பெருகி
வழியுமுளரித்திருநோக்கமாநீர்க்கங்கைப்பெருக்காறு
தழையுமெழிற்றருட்செம்முளரிதாழுமரசர்க்கருளிவெயில்
பொழியும்பசும்பொன்வட்டவணைபொலியவரசுவீற்றிருந்தான். ௧௬

வைத்தநெடுவேற்சராசந்தன்வைக்குஞ்சிறையிற்கிடந்தவளிக்
கொத்துமுராலும்பசுந்தெரியற்கொற்றக்கவிகைமுடிவேந்தர்
ஒத்தநூதனத்தலைவந்துடைக்குந்திரைமந்தாகினியின்
தத்துதளிபோன்முத்தமணிதயங்குகழற்காழ்ந்தனனால். ௧௭

மடங்கலனையபோராற்றன்மடங்கிமகதன்சிறைக்கிடந்த
விடங்கொப்புளிக்குநெட்டிலைவேல்வேந்தர்க்கருளவேண்டுமெனக்
குடந்தம்படுவானவர்மகுடகோடியுழுதபழந்தழும்பு
கிடந்தபசுந்தாட்கமலமலர்கிடையாவிறைஞ்சிக்கிளத்தினனால். ௧௮

கடவுங்கலினப்பரித்தானைநறுந்தாரரசர்குறையிரந்து
விடவந்திறைஞ்சுதூதனுரைவிரியாநிற்கும்வேலையின்கண்
பிடவம்புனைந்தவாயர்தவப்பேற்றினனல்யாழ்நரம்பு
நடவந்திருத்தான்முருகொழுகுதடந்தாமரையோன்றருதோன்றல். ௧௯

வேறு.

பௌவவெண்டிரையிற்பட்டபல்கரப்பரிதிபோல
எவ்வெலாத்திசையுமொண்கேழெறிப்பவந்தினிதுதோன்றும்
தெய்வயாழ்முனியைச்செய்யாத்திருமொழிகடந்துநின்ற
அவ்வெண்சொற்பொருளாவானின்றுங்கணன்கேத்திப்பின்னும். ௨0

தழைத்தபேருலகின்செய்கைதயங்கநீயறிதியன்றே
அழற்பொலிந்திலங்குகூர்வேலவரொன்செய்கின்றார்கொல்
விழுத்தவவென்றுசெந்தீவிழுத்தவெஞ்சினத்தபுள்வாய்
கிழித்தவனுலகமுண்டகிளரொளிப்பவளம்விண்டான். ௨௧

அரம்பொருகுடுமிவைவேலவராங்கிராசசூயம்
புரிந்திடவேட்கின்றாரற்பொழியருண்முளரிச்செங்கட்
கருங்கடல்வண்ணநீயேகாத்திடல்வேண்டுமென்று
நாம்புளர்ந்திசைக்கும்பாடனாரதனவின்றானன்றே. ௨௨

சோர்மதத்தெரியல்வேந்தர்தூதனின்றிசைத்தகூற்றும்
நாரதனவின்றபாட்டுநகைமுகமலர்ந்துகேளா
ஒருநல்லுணர்வின்மிக்கவுத்தவன்வதனநீலக்
கார்முகிற்கொழுந்துபோலுங்காரணன்கடைக்கணித்தான். ௨௩

பொற்றசெங்கமலமாதின்புணர்முலைபொருதமார்வ
ஒற்றைவெண்கவிகைநீழலுடைதிரைஞாலங்காக்கும்
கொற்றவன்வேள்விக்கேகிற்கொற்றவர்குறிப்புமாங்கே
முற்றுமென்றுரைத்தல்செய்தான்முழுதுணர்காட்சியோனே. ௨௪

உவவுவெண்டிங்களன்னவுத்தவனுரைத்ததீஞ்சொல்
செவிமுதன்மடுத்துமாந்தித்திவவுயாழ்முனிவன்றன்றோ
டவிர்கழலரசர்தூதற்கருளினன்விடைவிற்பார்த்தன்
இவர்மணித்தடந்தேர்ப்பாகனெழுந்தனன்வேள்விக்கென்றே. ௨௫

நேமியஞ்சிலம்புமற்றோர்கிழன்மணிச்சிலம்பிற்றோன்றத்
தாமரைமலர்த்தாளொன்றிற்றடங்கடலுலகம்வைத்த
தேமருதுளவத்தாரோன்றீம்புனல்யாறுங்குன்றும்
காமருகழனிநாடுங்கடந்தனன்போயினனால். ௨௬

அரந்தினைப்பிறந்தபொன்போலெழிற்றிதலைபூத்த
குரும்பைமென்கொங்கையார்தங்குழாத்தொடுமெய்தினானால்
கருங்கடலமுதினோடுகொண்டச்செல்லுமாபோல்
இருப்புவியளந்தாளானிந்திரப்பிரத்தமன்றே. ௨௭

நீலமாகடல்போலொற்றைநகேயியானையுகலோடும்
வாலுளைப்புரவித்தானைமறிதிரைக்கடலிற்சூழப்
பால்வளையறைவன்வார்ப்பல்லியந்துவைப்பவல்லே
கால்வளைவரிவில்லைவர்களித்தனரெதிர்கொடுற்றார். ௨௮

தம்பியரிறைஞ்சநின்றதடஞ்சிலைவிசயன்றன்னை
அம்பகட்டாரமார்பிற்புல்லினனவற்குமூத்த
வெம்புலாந்தெரியலாரைவணங்கினன்மனவாக்கெட்டா
தும்பர்பொன்மகுடகோடியுழுதின்றகழலெம்மானே. ௨௯

புண்டரிகங்கள்பூத்தபுயற்படங்கொழுந்துபோல
வண்டுழாய்முருகுநாற்றவந்துமுன்னிற்பப்பெற்றுப்
பண்டைநான்மறையுங்காணுப்பரமனைத்தருமனுங்கு
கண்டிலனுவகைக்கண்ணீர்கண்ணகநிறைந்தமன்றே. ௩௦

உண்மலிகுற்றமும்மையொருவிநெஞ்சொருப்பட்டூறில்
எண்பிரபத்திகிட்டையேயமாமுனைவர்காணும்
ஒண்மணியாழிக்கையுனுருப்புறங்காணலுற்றார்
கண்மழைவாரிநிற்றல்கழறலாந்தகைமைத்தாமே. ௩௧

துளிப்புயல்கிண்டமின்னிற்றேன்றெழின்மடவாருண்கண்
களிக்கயல்கடலிற்பாயுங்காட்சிபோன்மேனியெல்லாம்
திளைப்பவெண்டிரைப்பாலாழிச்சேர்ப்பனுள்ளார்செஞ்சோரி
குளித்தகெட்டிலேவலைவர்கோயில்சென்றெய்தினுல். ௩௨

வெஞ்சரங்கடந்தநீலவிழியிணைகளிப்பநோக்கி
நெஞ்சகத்துவகைவேலைநிறைந்தெழநின்றருந்தி
கஞ்சநாண்மலர்த்தாண்மற்றேர்கருங்கடல்படிகலேய்ப்பக்
குஞ்சரங்கோடுகொண்டகொற்றவன்வணங்கிநின்றுன். ௩௩

யாற்றிரைக்கங்கையல்லாற்படுபுனல்யமுனைவந்து
தோற்றுதல்கடுப்பக்கண்ணன்சூழ்கழற்காலிற்பைந்தேன்
ஊற்றிருந்தொழுகுகோதையுடுத்தமெல்லோதிதாழ
வேற்றிறலைவர்வேட்டவிளங்கிழையிறைஞ்சினுள். ௩௪

காதமோர்நான்குதெய்வக்கடிகமழுஞ்செஞ்சாந்து
மாதிரமெட்டுமுட்டமணங்கமழ்மலருமேந்திக்
கோதைவேற்றடக்கையைவர்கோதிலாவழிபாடாற்றத்
தாதுலாங்காணமுல்லைத்தாரவன்மகிழ்வுபூத்தான். ௩௫

உயர்மரச்சோலைவெந்தீயூட்டுநாண்டேரும்புமாற்றுல்
மயனுவந்திழைத்தசெம்பொன்மண்டபத்தலங்கலாழிப்
புயல்கரும்புயலினன்னபூங்குழற்பவளச்செவ்வாய்க்
கயன்மலைப்பன்னகண்ணூர்களிகொளவைகினுல். ௩௬

மதிசிலகழிந்தபின்னர்மதியுறழ்கவிகைமன்னன்
அதிர்கடலுலகமுண்டவஞ்சனப்புயலையெய்தி
எ[illegible]லாவிராசசூயமியற்றுவான்விழைகின்றேனால்
கதிர்மணிவண்ணத்தண்ணல்காத்திடவேண்டுமென்றான். ௧௭

குன்றுறழ்குவவுத்திண்டோட்கொற்றவன்மாற்றங்கேளா
மன்றலந்துளவமாலோன்மாதிரத்தரசையெல்லாம்
வென்றலாவிராசசூயமேதகப்புரியலாகா
தென்றுசெம்பவளவாய்விண்டினிதுரையியம்பினனால். ௧௮

மலர்ப்பசுந்தெரியன்மாலைமார்வமெய்யுணரார்தம்மால்
வெலப்படாவென்னைவென்றாய்மெய்யுரைப்பதனான்மற்றைச்
சிலைத்தொழில்வினைஞராலேதிசையெலாம்வெல்கவென்றான்
கொலைத்தொழிலவுணர்க்கொன்றகூரழற்றிகிரிப்பெம்மான். ௧௯

பசியபைந்துளவத்தண்பூம்படலையம்பரமன்றன்னைத்
தசைசுவைத்திலங்குமொள்வேற்றருமனெஞ்சுவந்துபோற்றித்
திசையெலாம்பொருதுவெல்வான்றம்முனைகடந்துவீங்கி
இசைசுமந்தெழுந்ததிண்டோளிளைஞரைவிடுத்தல்செய்தான். ௨௦

கலிநிலைத்துறை.

மின்னுங்கருங்கட்சுடர்கான்றெழுவெள்ளெயிற்று
மன்னுந்தழல்வாய்க்கொடுங்கூற்றுமலங்கமற்றத்
தென்னம்புலத்திற்படர்ந்தான்செருவேட்டெழுந்து
பொன்னங்குவட்டிற்பொலிதோட்சகதேவன்மன்றே. ௨௧

நெடுவானரும்புநிலவெண்பிறைக்கோடுசாய்த்த
தடவான்மருப்புத்திகழ்மால்கரித்தானைசூழக்
குடபாலெழுந்தான்குறுகாருயிர்கொன்றுருத்த
அடல்வாணகுலனமர்வெந்திறலாளியன்னான். ௨௨

சுடர்சூழ்பசும்பொனெடுங்குன்றுதுளங்கவீங்கிப்
படுபோர்விழைந்தபசுந்தார்த்தடந்தோள்பணைப்ப
வடபாலெழுந்தானுயர்வானுறமண்டுசெந்தீக்
கடிகாவளைப்பக்கடுவெஞ்சிலைகால்வளைத்தோன். ௨௩

தாழ்நீர்ப்பரவைதலைப்பட்டவெண்டிங்களனைச்
சூழ்தாரலங்கற்பனிவெண்குடைதோற்றம்வாய்ப்பக்
கீழ்பாலெழுந்தான்முகைபாய்ந்துகிழித்துவண்டு
வீழ்தாதருந்தவிரைவிம்முமையந்தாமவீமன். ௨௪

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எழிலிளம்பரிதிமார்பரேந்தெழிலிளைஞர்மற்றுங்
கழலுமிழ்ந்திலங்குவைவேலரசெலாமமரினெஞ்சி
மழலைவண்டுழலும்பைந்தார்மணிமுடிவணக்கவென்று
விழுநிதிக்குப்பைவாரிமீண்டனர்மீளிமொய்ம்பர். ௪௫

செஞ்சிலைவடிப்பவீங்கித்திரண்டுயர்பசும்பொற்குன்றம்
அஞ்சுறப்பணைத்ததிண்டோளடற்சராசந்தன்றன்னை
வெஞ்சமராழுவத்தேற்றுவெல்கலாத்தன்மைகேட்டுத்
துஞ்சலின்மணிப்பூண்வேந்தன்சூழ்ச்சிமிக்கிருந்தானம்மா. ௪௬

முத்தவெண்கவிகைமன்னர்முத்துடைக்கோட்டுவேழ
மத்தகம்பிளந்தகூர்வாண்மன்னவன்சூழ்ச்சிநாடி
உத்தவனுரைத்ததன்மையுரைக்கலுற்றனனால்வெய்ய
துத்திவாளரவினூடுஞ்சூழ்கழற்காலெம்மானே. ௪௭

அந்தணர்படிவந்தாங்கியாடமரிரந்துபெற்று
வெந்திறல்விளையும்வெம்போர்வீமனேவிளைப்பினல்லால்
மைந்துவீற்றிருந்ததிண்டோண்மகதர்கோன்கடலந்தானை
சிந்திடப்பொருதுவெல்லுந்திறத்தினர்யாவரென்றான். ௪௮

தண்டுறைக்கங்கைபூத்ததாமரைத்தாளினானும்
திண்டிறற்காற்றின்சேயுஞ்செருமலிவரிவிற்செங்கை
அண்டர்கோன்மகனுமற்றங்கந்தணர்படிவந்தாங்கி
மண்டுபோர்முற்றலாகாமதிட்கிரிவிரசம்புக்கார். ௪௯

பருந்தொடுகழுகும்வெந்தீப்பசிதணித்தொழுகுகூர்வேல்
அருந்திறன்மகதவேந்தனதிதியர்வரவுநோக்கி
இருந்துழிவிரைவினண்ணியிரந்தனர்விரைதேர்வண்டும்
சுரும்புமொய்த்தாற்றுதண்பூந்தொடையல்சூழ்குவவுத்தோளார். ௫0

இறலுறுகின்றபூதவுடம்பினாலிறத்தல்செய்யார்
உறுபுகழுடம்புகோடலுணர்ந்தவருறுதியன்றோ
புறவினுக்காகமற்றோர்பொன்னெடுந்திகிரிவேந்தன்
நிறைபுகுவண்மையின்றுநிலத்தின்மேனின்றதன்றே. ௫௧

முன்பொருகாலமூரன்முகிழ்த்தவாண்முகத்தனாகி
என்புமற்றொருவற்கீந்தானில்லைகொல்யாங்கள்கேட்ட
அன்பினிலருளவேண்டுமாடமர்கடந்தவெம்பி
மின்பொழிகுடுமியொள்வேல்வேந்தவென்றியம்பினரால். ௫௨

சொல்லினுஞ்சொல்லலாகாச்சுடர்விடுதோற்றத்தானும்
நல்லெழிற்றடக்கைவல்விநாண்பொருதழும்பினானும்
மெல்லிணர்விரியன்மாலைவேந்தரென்றறிந்தான்வீங்கு
மல்லனீர்மகதங்காக்குமாலைவெண்குடையான்மன்றே. ௫௩

மூவடிமண்வந்தேற்றோன்முதல்வனென்றறிந்துமிந்த
மாவலிசீர்த்தியின்னமன்னுபுகிலவுமம்மா
யாவரேயானுமாகவீகுதுமிரந்ததென்னாக்
கோவடுகுருதிவைவேற்கொற்றவன்கருத்துக்கொண்டான். ருச

பாட்டளிப்படலைமூசிப்பருமுகையுழுதுபைந்தேன்
கூட்டுணுமுளரியந்தண்கோதையீர்நீவிரின்று
வேட்டதுதருவலென்றான்விரியிருட்பிழம்புசீக்கும்
சேட்டிளம்பரிதிபோலத்திகழ்கடிமார்வனாங்கே. ருரு

விரிகடற்றானைமன்னவேட்டதுதருதியாயின்
ஒருவனொடொருவனாகியுடற்றுபோர்தருதிமற்றுச்
செருவிழைந்திறுத்தோமென்னாத்தெரிக்கலுற்றனனாற்செம்பொன்
தருமுதல்பிடுங்கிவந்ததடக்கைமாகளிறன்னானே. ருசு

மலர்ந்தபூங்கோதைமாதர்வாளரியொழுகுகண்போல்
உலம்பொருதிணிதோண்மன்னருரங்கிழித்துதிரமூழ்கி
அலங்குநெட்டிலைவேல்வீமனவனிவன்பார்த்தனம்பொன்
இலங்குபூண்மார்வகண்ணன்யாமெனக்கூறினானால். ருஎ

கேட்டலுமுறுவல்கோட்டிக்கிளர்ந்தெழுபெரும்போரஞ்சி
ஆட்டுவெண்டரங்கவேலையகத்தடைந்தனைநீயர்தண்
எட்டிணரலங்கற்பார்த்தனிளையனெதிர்ந்துவெம்போர்
வாட்டிறல்வீமனாற்றவல்லனென்றியம்பினானே. ருஅ

எழுகபோர்க்கின்னேயென்னாவெரியுமிழ்ந்திலங்குமொள்வாள்
உழுவனோர்வயிரத்தண்டமுளர்வளிமகற்குநல்கிக்
கழுகுசூழ்கதையொன்றேந்திக்கட்கடைகாலவெந்தீப்
பொழிதரமல்லன்மூதூர்ப்புறத்தமர்க்கெழுந்துபோயான். ருகூ

வெளிற்றிலம்பனையினன்னவிறல்செழுதடக்கைவெங்கட்
களிற்றொடுகளிறுசீறிக்கதிர்மணிமருப்புநெற்றி
குளித்திடப்பொருதல்போலக்கொலைசெழுகதையிற்றாக்கி
அளிக்குலமாற்றுதாராரருஞ்சமமாற்றலுற்றார். சுO

ஊழிவாயுருமேறன்னவுடல்சினங்கதுவத்தாக்கும்
பாழிசால்வயிரத்தண்டம்பஃறுணிபடுதலானே
ஆழியங்கதிர்சூழ்வந்தவாடகப்பசும்பொற்குன்றம்
தோழமைகொண்டதோளார்தொடங்கினர்நெருங்குமற்போர். சுக

கண்ணழல்பொழியவூழிக்காற்றெனக்கடைஞான்றியாவும்
உண்ணியவெழுந்தபேழ்வாயுருகெழுகூற்றமென்ன
மண்ணகமதிரநின்றமால்வரைதுளங்கமற்றை
விண்ணகம்பனிப்பவார்த்துவெஞ்சமம்விளைத்திட்டாரே. சுஉ

ஏறுழ்வலிசெர்த்தவாற்ருலிகற்சராசந்தன்றன்னை
விறல்கெழுதடக்கைவீமன்வெல்லுமாவிழைந்துநோக்கப்
பிறைபுரைகதிர்வெண்கோடுபிடுங்கியகருங்கார்வண்ணன்
குறுமுறிவிரிபைங்கோடுகொண்டனன்கீண்டாறுங்கண். ௬௩

விண்ணென்றுவிலங்கலன்னவீங்கெழிற்றோளாங்கொன்று
கண்ணொன்றுபுருவமொன்றுகருங்கழற்காலொன்றாக
மண்ணொன்றுமணிப்பூண்மார்வமகதனைப்பிளந்துமாய்த்தான்
பண்ணொன்றுபாடல்வண்டுபயின்றதார்ப்பவனன்றோன்றல். ௬௪

வேறு.

மதமால்கரியின்மருப்பொசித்தமாயனருளால்வலிதழைத்துக்
கதழ்வெஞ்சினவாளரிகடுக்குங்காற்றின்மதலைபணைக்கரத்தால்
பதினுயிரவெங்களிற்றுவலிபடைத்தோனுடலம்பகிர்ந்திடலும்
அதிராச்சிறப்பினெடுவானோரம்பொற்றுணர்தூஉய்ப்பராவினரால். ௬௫

வரையிற்பணைத்ததிணிதடந்தோண்மகதனிடுவெஞ்சிறைக்கிடந்த
பரிதிவடிவாளரசிருபதினாயிரத்தெண்ணூற்றுவரை
அருளின்விடுத்தான்முருகொழுகுமந்தண்மலர்க்கோட்டைந்தருவும்
குருதிகுமிழியெழவேழக்கோடும்பிடுங்குநெடியோனே. ௬௬

வாடுமலங்கற்றோளரசர்வந்துதொழுதுதமதுமுடி
சூடுதுளவக்கருங்கொண்மூதுணைத்தாட்கமலமலர்பூத்த
ஆடுதிரைமந்தாகினியினந்தீந்துவலைமுகந்தெறிப்ப
நீடுபொலிவுதழைத்துவகைநெஞ்சந்தளிர்ப்பப்பராவினரால். ௬௭

விடையுங்களிறும்பொருவநடைவெள்வேலரசர்மாசறுதூ
சுடையும்பசுந்தேனுமிழ்தொடையுமொளிர்பொன்முடியுமுருவமதிக்
குடையுங்கொடியுமுடையோராய்க்கொற்றவனையுமடலாழிப்
படையுந்திகழுங்கரத்தானைப்பரவித்தத்தம்பதியடைந்தார். ௬௮

ஆண்டகடற்பாராசாட்சியடையக்கடைக்கணருள்பொழிந்து
மாண்டபெரும்போர்ச்சராசந்தன்மைந்தற்கலங்கன்முடிகவித்தான்
நீண்டகனகவரைபொருதநெடும்பொற்றடந்தோட்கனகனுரம்
கீண்டுபொருதகரும்புள்வாய்கிழித்துத்தளர்க்கைசிவந்தோனே. ௬௯

உலருந்தருவுங்குழைப்பவமுதுகவேயிசைத்தவொருவனொடு
மலரும்பொழிறீமடுத்தோனுமற்பூத்துயர்தோண்மாருதியும்
கலினப்பரித்தேர்கடிதோட்டிக்கலிக்குங்கடல்போல்வெற்றிவளை
அலறநகர்சார்ந்தறத்தின்மகற்கறைந்தார்விளைந்ததிறமன்றே. ௭௰

பொடிக்குங்குழவிஞாயிறெனப்பொலிவுற்றுந்தித்தடத்துமுகை
வெடிக்குங்கமலமலர்ப்பொகுட்டுவிரிஞ்சனொடுமண்படைத்தளித்து
முடிக்குமுதல்வன்முன்னின்றான்முடியாப்பொருண்மற்றெவையென்றே
வடிக்குங்குடுமிக்கூரிலைவேன்மன்னனனைமயாமகிழ்வுற்றான். ௭௧

வேறு.

இழைக்குவனிராசசூயமெய்திடவேண்டுமென்று
அழைத்தனன்முனிவர்தம்மையகனிலத்தரசர்க்கெல்லாம்
விழுப்பொதிமுடங்கலாங்குவிடுத்தனன்வண்டுகோடி
உழக்கிழிந்தலரும்பைந்தாரொருதனிக்கவிகைவேந்தன். ௭௨

செங்கதிர்க்குழுவிமானத்திருமணிக்குழைவில்வீசக்
கொங்குடைந்தொழுகுதண்ணங்கோதைதாழ்மகுடமின்னப்
பொங்குளைப்பரிமாபூண்டபொன்னெடுங்கொடிஞ்சித்தேர்மேல்
அங்கண்மாஞாலவட்டத்தரசெலாமிறுத்தவன்றே. ௭௩

நுதியழல்வடிவேன்மைந்தர்நூற்றுவர்தம்மோடொற்றைக்
கதிர்மதிக்கவிகைநீழற்கண்ணிலாவரசன்வந்தான்
விதுரன்வந்திறுத்தான்வெற்றிவீடுமன்மேயான்மற்றை
அதிர்கடல்வரைப்பின்மன்னரார்கொலாங்கடைந்திலாதார். ௭௪

மாலைவாய்விளங்குதிங்கண்மாலைவெண்குடையான்வேள்விச்
சாலைவாய்வந்துமொய்த்தார்சதுமறைக்கிழவரெல்லாம்
வேலைவாயமுதமாந்திவிரைகமழ்பாரிசாதச்
சோலைவாயுறையுந்தேவர்தொக்கனர்விசும்பின்மாதோ. ௭௫

மலர்தலையுலகமேழின்மாண்டகுபொருள்களெல்லாம்
கலினவாம்புரவித்திண்டேர்க்கடுந்திறனகுலனுய்த்தான்
அலைவிளையமிழ்தமென்னவஞ்சுவையடிசிற்சாலைத்
தலைமையெய்தினனாற்காற்றுத்தருமழைத்தடக்கையானே. ௭௬

விரிகதிர்முத்தமன்றிவிளங்கொளிதழைத்தநீலம்
சொரிவதுகடுப்பவண்டுசூழ்தருமுளரிப்பைந்தார்
அருமறைக்கிழவர்தம்மையருச்சனைபுரிதல்செய்தான்
செருவிழைபரிஇவைவேற்றிறற்சகாதேவன்மன்றே. ௭௭

விண்ணெடுமுகடுகிண்டவிரைமலர்க்கமலபாதம்
அண்ணலங்கமலவீட்டிலந்தணன்விளக்கநின்ற
கண்ணன்மாமறைநால்கற்றகாட்சிசாலந்தணாளர்
தண்ணறுமுளரியன்னதாண்மலர்விளக்கினனால். ௭௮

அதிர்கடன்ஞாலவட்டத்தரசெலாங்கொணர்ந்தகற்றைக்
கதிர்மணித்திரளும்பொன்னுங்காண்டகக்குவித்தல்செய்யும்
நிதியறைக்கிறைமைபூண்டானிழன்மணிச்சுடிகைநெற்றிக்
கொதியழனச்சுநாகக்கொடிவலனுயர்த்தகோவே. ௭௯

பழுக்கும்வெங்கொலைவேற்றெவ்வர்பகட்டெழின்மார்வம்போழ்ந்து
விழுக்கொடுநிணம்வாய்ப்பில்கிமின்னெனப்பிறழும்வெள்வேல்
முழுக்கரும்புயமேய்செங்கைமுருகவிழ்பசுந்தார்க்கன்னன்
வழக்கமேற்கொண்டுநின்றான்வான்பொருண்முகந்துமன்றே. ௮௰

காசிபன்பரத்துவாசன்கண்ணுவன்மயித்திரேயன்
கோசிகன்பரசுராமன்கோதமன்வாமதேவன்
மாசறுவியாதனாதியாதவக்கிழவரோடு
பூசல்வண்டாற்றுதாரான்புரிந்தனனிராசசூயம். ௮௧

நெருப்புறழ்தோற்றஞ்சான்றநெடுந்தவக்கிழவர்தொன்னூற்
பரப்பெலாந்தெளியக்கற்றபழமறையந்தணாளர்
திருத்தகுகொற்றவேந்தர்திரண்டபேரவையின்முன்னம்
அருச்சனைபுரிதல்யார்க்கென்றரசுளத்தெண்ணினானால். ௮௨

மற்பழுத்தேந்துதிண்டோண்மன்னவன்குறிப்புநாடி
முற்படப்பூசையாற்றன்முருகுலாம்பசும்பொற்கோட்டுக்
கற்பகங்கொணர்ந்துவந்தகண்ணனுக்கன்றேயென்னுஞ்
சொற்புகன்றுரைப்பான்முற்றுந்துணிசகாதேவனங்கே. ௮௩

பூப்பவன்றானும்பூவாப்பொழிலெலாம்பூத்துநின்று
காப்பவன்றானுமூழிக்கடையினிற்கனலுந்தீயால்
தீப்பவன்றானுமாயர்தேமொழிமாதர்செங்கை
கூப்பிடத்துவாரிக்குளிர்மாத்திவர்ந்தகோவே. ௮௪

உலகெலாங்கண்ணனன்றியொன்றிலையுணருங்காலைக்
கலவமாமயிலெருத்திற்கவின்கனிர்தொழுகுமேனி
மலர்துழாயலங்கன்மாலைமாயனுக்காற்றுபூசை
அலர்தலையுலகுக்கெல்லாமாற்றியபூசையாமால். ௮௫

என்னவுமுவகைமீதூர்ந்தின்னெழிற்பவளச்செங்கால்
அன்னமுமயிலுமன்னவாய்வளைத்துணைவியோடு
மன்னவனெழுந்துசெய்யாள்வரிமுலைகிழித்தபைந்தார்க்
கன்னியந்துளவினானைக்கைதொழூஉப்பழிச்சல்செய்தான். ௮௬

எழுந்திறுமாந்துவிம்மியிணைமணிக்குடத்தின்வீங்கிக்
குழைந்தநுண்மருங்குதேய்க்குங்குவிமுலைத்தலைவிநின்று
பொழிந்தபொற்கலசநீராற்பொழிமதுக்கமழுந்தெய்வச்
செழுந்துழாய்க்கொண்டல்செம்பொற்சேவடிகழீஇயினானே. ௮௭

நாமவேற்றடக்கைவேந்தனல்வினைப்பயனென்சொல்கேன்
மாமறைமுடிவினின்றவலம்புரித்தடக்கைமாயன்
காமருகடவுட்கங்கைக்கடும்புனல்பூத்தபொற்றாட்
டாமரைவிளக்குபூநீர்சம்புவிற்றாங்கினானால். ௮௮

கருங்கடல்சிவப்பத்தோன்றுங்கதிர்மணிக்கிடந்தமார்பின்
திருந்தொளியாரம்பூட்டித்தேங்கமழ்கலவைபூசிச்
சுரும்புசூழ்தொடையல்சூட்டிச்சுடர்ந்தபொன்னுடைசாத்தி
அருந்தவம்பழுத்தவேந்தனண்ணலைவழிபட்டானே. ௮௯

நெறித்தபூங்குவளைமேனிநெடியவன்றனக்குப்பூசை
முறைப்படப்புரிதலோக்கிமுனிவருமவைபூத்தார்
அறத்துறையொழுகுசெங்கோலரசருமகிழ்ச்சிகூர்ந்தார்
திறற்சிசுபாலனொருவன்சிவந்தனன்பெரிதுஞ்செங்கண். ௩௦

நெடுமறைக்கிழவர்வைகநீணிலவலயங்காக்கும்
முடிகெழுவேந்தர்வைகமுற்படவழிபாடாற்றல்
படிமிசைபுரப்பாற்கேகொல்பார்த்திவன்செயனன்றென்று
விடுசுடுமுறுவனூறவெகுண்டனனெழுந்துநின்றான். ௩௧

இலைப்பசுந்தெரியன்மாலையிளையவனிசைத்தகூற்றால்
நலத்தகுமுதுநூற்கேள்விநல்லறக்கிழவனெஞ்சம்
கலக்கமுற்றனன்கொலம்மகாலமார்கடப்பவொன்றோச்
சிலைத்தழும்பணிதிண்டோளான்றீயனகிளக்கலுற்றான். ௩௨

நாட்டவோர்குலனுமின்றிநண்ணியகுணமுமின்றி
வேட்டவாறொழுகுகின்றான்வெள்ளைமுள்ளெயிற்றுப்பேழ்வாய்ச்
சூட்டராவாசுதாங்குதொன்னிலத்துயர்ந்தானென்று
கேட்டவாநன்றுமெய்ந்நூற்கேள்வியிற்சிறந்ததன்றே. ௩௩

நன்றுநீதென்றுநாடாஞெணிலத்துறைவான்யாங்கும்
பொன்றலில்வேதமின்னும்புரிந்தொருங்குணாகில்லான்
குன்றுகானுறைவார்வேட்குங்குணன்பசுப்புரப்போன்பித்தர்
மன்றநன்கன்னமேற்போர்வழுத்திறையிவன்வேறுண்டோ. ௩௪

நக்கவெண்முல்லைசூடிநாந்தமுமகிழுநாறு
மைக்குழலாயர்மாதர்வரிமுலைதழுவுதூர்த்தன்
முக்குறும்பெறிந்தமூவாமுழுத்தவமுனிவர்தம்மின்
மிக்கவனொவந்துவிளைக்கதுவிழுமிதாமால். ௩௫

வெய்யபோர்விளைக்கலாற்றான்வியனகாட்டிவிட்டு
மொய்திரையடைந்தான்றன்னைமொய்பெருமுழுவுந்திண்டோள்
ஐயதாராசர்முன்னொருச்சனைபுரியநின்ற
மையறுகாட்சிநாளும்வாழியபெரிதுமாதோ. ௩௬

### கலிநிலைத்துறை.

என்றுபற்பலவெவ்வுரையிகற்சிசுபாலன்
நின்றுரைத்தனனெடியவன்பேசலனிருந்தான்
நன்றுணர்ந்தவர்செவிமுதல்புதைத்தனர்நடந்தார்
வென்றிவெஞ்சிலையெடுத்தனர்பாண்டவர்வெகுண்டார். ௩௭

விறல்பழுத்தவொள்வேலவனேந்தினர்வெதும்பி
நறைகொழித்ததார்யாதவர்க்கெதிர்நடந்தார்
திறல்பழுத்ததிண்டோட்சிசுபாலன்வெஞ்சினவான்
உறைகழித்தனன்சேடகந்தாங்கினனுடன்றான். ௩௮

நன்மின்போன்றவிர்காந்தகவுழவனைப்பற்றிக்
கொன்மினுவினைக்குறைமினென்றுடனுநர்தம்மை
மின்மினின்மினென்றெழுந்தனனீனெறிகிடந்த
கன்மினுகமுன்கருங்கழல்வைத்தகார்வண்ணன். ௯௯

பாழிசால்கரும்பனைபுரைபாழியந்தடக்கைச்
சூழியானையின்சுடர்மணிநெடுமருப்பொசித்தோன்
ஊழியாரழல்வாயுமிழ்ந்தொளிறுசெம்முகத்த
ஆழியாற்சிசுபாலன்வன்றலையினையறுத்தான். ௧௦௦

சமரெதிர்ந்தவேற்றரியலர்கதிரொழிச்சாய்ந்த
திமிரமாமெனத்திசைத்திசையிரிந்தனராகக்
கமழலர்துணர்க்கற்பகநறுமலர்தூவி
அமரரார்த்தனராந்தாதுந்துபியதிர்ந்த. ௧௦௧

உருள்பொலங்கொடித்தேர்ச்சிசுபாலனதுடலின்
றிருள்பிளந்தெழுமெரிகதிர்ப்பரிதியோற்சோதித்
திரளெழுந்ததுதிரண்டபோரவையெலாங்காண
அருள்பொருந்துலகளிப்பவன்றுளடைந்ததுவே. ௧௦௨

மறத்தினுற்றிருமறுப்பொலிமார்பினுன்றன்னைப்
பிறப்புமும்மையினினைத்தலாற்பிறங்கழல்வாய்கான்
றெறித்தசெஞ்சுடராழியாலிறந்தவவ்வேந்தல்
நெறித்தபூந்தொடைநேமியஞ்செல்வனைநேர்ந்தான். ௧௦௩

எத்திறத்தினுமிலங்கொளிவிரிமணிச்சூட்டுத்
தத்திநாகணைத்துயில்பாற்பரனையுண்ணினைப்போர்
முத்தராகுவர்முத்துடைமூரிவெண்கோட்டு
மத்தமால்களிற்றரசவென்றருந்தவன்வழங்கும். ௧௦௪

எழுபுலப்பகையெறிந்தமாதவரும்வேதியரும்
மழைமதக்களிற்றரசருமனமகிழ்சிறப்பச்
செழுநிலக்கணெண்டிசையெலாந்தெள்ளொளிநிலவு
பொழிதனிக்குடைப்புரவலன்பூசனைபுரிந்தான். ௧௦௫

சூட்டராவணைத்துயில்பவனுந்தியங்கமலம்
காட்டுமந்தணன்கடுக்குமவ்வேதியரோடு
வேட்டதண்மதிவெண்குடைப்பெருவிறல்வேந்தன்
மோட்டுவெண்டிரைமுழங்குமந்தாகினிபடிந்தான். ௧௦௬

கள்ளவிழ்ந்தபூங்கற்பகத்திருந்தகாவலனை
எள்ளவீற்றிருந்தெண்டிசைவளாகமுநிழற்றும்
வெள்ளிவெண்குடைவேந்தனல்விடையளித்தனனுல்
வள்ளிதழ்ப்பொலந்தார்முடிமன்னவர்க்கன்றே. ௧௦௭

உகந்துபாந்தளங்கொடியினனல்லதையொருங்கு
திகந்தமுட்டியசெழும்புகழ்மன்னரெல்லோரும்
அகந்தழைத்தெழுமுவகையாதிர்திரைப்பரவை
முகந்தகாரெனமுரசொலிகறங்கவேயினரால். ௧௦௮

என்றிசைத்தலுமன்னனல்லிருநிலவேந்தர்
நன்றுவப்பொடுநடந்திடச்சராவுயர்த்தோன்
ஒன்றுநெஞ்சகமுவக்கிலன்போயவாறென்னே
மன்றகூறெனமாதவனுரைக்கலுற்றனனே. ௧௦௯

துளங்குவெள்ளிடைதுளும்புதண்புனலெனத்தோன்ற
விளங்குதண்புனல்வெள்ளிடைப்பரப்பெனக்காட்டும்
வளங்கொண்மண்டபமயனினிதிழைத்ததுவயங்கு
பளிங்கிற்செய்ததுபன்மணிகுயின்றதொன்றுளதால். ௧௧௦

விழுச்சிறப்புடைவியனிலாப்பரப்பெனவிளங்க
இழைத்ததண்புனலிடையெழுமரகதச்சுடரைத்
தழைத்ததோட்டறுகாமெனத்தகைபெறவளர்க்கும்
உழைக்கருஞ்சிறுகற்றினமுழையுழைநோக்கும். ௧௧௧

தெள்ளுநீரெனத்திகழ்தருதிருநிலத்திலங்கு
வெள்ளிவெண்கதிர்நித்திலம்விரியல்வெண்டோட்டு
முள்ளரைச்செழுமுளரிநாண்முகிழெனமுற்றுக்
கள்ளுண்வேட்கையிற்களியிளஞ்சுரும்பினங்களுலும். ௧௧௨

பட்டகாரிருள்பருகுசெம்பதுமராகத்தின்
விட்டிலங்கியசெங்கதிர்மீமிசைத்தவழ்ந்த
கட்டவிழ்ந்தசெந்தோட்டபூங்கமலமற்றென்றுப்
பெட்டநெஞ்சொடுபெயர்தருமடவனப்பிள்ளை. ௧௧௩

பொழியுமொண்கதிர்நீலமென்போதியனீலக்
கொழுமலர்க்குலமாமெனக்கொய்வதற்கெய்து
மழலையேழையர்குழுவெலாமதர்த்ததங்கருங்கண்
நிழலுமொண்ணறுநீலமென்றங்கரநீட்டும். ௧௧௪

இன்னதன்மையவிலங்கொளிமண்டபநடுவண்
மன்னும்வாளரிசுமந்ததோர்மணியணைபொலியப்
பின்னல்வெண்டிரைப்பெருநிலவேந்தர்வந்திறைஞ்ச
மின்னுநக்கவேன்மன்னவன்வீற்றிருந்தனனால். ௧௧௫

அச்சணங்குவேலினையருமரும்பவிழ்துளவப்
பச்சைமேகமும்பாங்குறவிருந்தபார்த்திவனை
நச்சராவலனுயரியநனைகவுட்பருஉத்தாட்
கச்சமால்களிற்றரசனுங்காணியவெழுந்தான். ௧௧௬

சருவிவாரெனக்கவினுநங்கண்ணனலவருதலான்
உருவமாமணியுலப்பிலவொளித்தலானுடைக்கும்
பரவைவெண்டிரைப்பாற்கடலாமெனவிளங்கு
திருவமண்டபம்புக்கனன்சினக்களிறன்னான். ௧௧௭

சூழ்ந்தபேரொளிதுளும்பியநிலவினைநீரென்று
தாழ்ந்தவந்துகிலிடைவயிற்றழீஇயினன்பளிங்கு
போழ்ந்தியற்றியநிலனெனப்பூம்புனலிடைப்போய்
வீழ்ந்தனன்பெருவேத்தவைமுகிழ்நகைவிளைப்ப. ௧௧௮

நகைமுகிழ்த்திடனகைமுகிழ்த்திடவெனநகுமென்
முகைதொடுத்ததார்மன்னவன்மொழிந்தனனாக
இகல்வினைத்திடுகரியவனின்னருட்கண்ணால்
மிகநகைத்தெனவிடுநகைபுரிந்தனன்வீமன். ௧௧௯

சுரும்புசூழ்தொடைத்திருவதன்வாத்திறற்றோன்று
கரும்பினன்னசொற்களிக்கயலன்னவாட்கருங்கட்
குரும்பைமென்முலைக்கோதையுமிகுளையர்குழாமும்
அரும்பவாணிலவணிநகைமுகிழ்த்தனரன்றே. ௧௨௦

விளைநகைத்திறங்காண்டலும்விளைநறாப்பருகிக்
களியளிக்குலமாற்றுதார்க்காவலற்கானான்
நளியழற்சினநச்சராவுயர்த்தவனானு
புனைவயப்பரித்தேர்கடிதோட்டினனொழிந்தான். ௧௨௧

இன்னதான்முனிந்தெழுயர்குஞ்சரநகர்க்கு
மன்னனேகியகாரணமாமருட்பொகித்தோன்
துன்னுசாலுவற்றொலைத்தமைகேட்டிமற்றென்று
முன்னைநான்மறைமுற்றியமுழுத்தவன்மொழிவான். ௧௨௨

சிசுபாலனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௫௮௯.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௪௨-வது, சாலுவனைக்கொன்றவத்தியாயம்.

---

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஊழிவெங்கனல்போலுருவெழுசீற்றத்தொளிறுவாட்படைச்சிசுபாலன்
தோழன்வெற்புறழ்தோட்சாலுவனென்பான்சுரும்புசூழ்தாமரைத்தடந்தூ
வாழிகல்வனத்தவிதர்ப்பநாடுதித்தமாழைமென்றேக்கிளையலங்கல்
ஆழியான்கவர்நாளுசேமமாற்றியழிந்தனன்யாதவர்க்கன்றே. ௧

அழிதருதிறத்தான்முனிவுமீதூர்ந்தலந்திறற்சாலுவன்சுரும்பு
கொழுதியபசுந்தார்யாதவர்மாபுகோனுமென்றின்னிளங்கேறல்
வழிதருகடுக்கைப்பசுந்தொடைபுனைந்தவார்சடைவள்ளலேவினைந்து
புழுதிவாய்மடுத்துப்பன்னிருதிங்கள்புரிந்தனனருந்தவமன்றே. ௨

எரியுமிழ்கனிச்சியிமையவன்வெளிப்பட்டென்னைநீவிழைந்ததென்றியம்ப
விரிதலைவிசும்பும்பாவைமாநிலனும்வெலப்படாவெருவருசெலவின்
ஒருபெருவிமானம்வேண்டுமென்றுரைப்பவுவந்தனன்மயனையவ்வாறு
புரிகெனலுமுருகெழுவிமானம்புரிந்தவனளித்தனனன்றே. ௩

அரும்புவெண்டிங்க ளணிந்தவனம்பி னழற்படுபுரத்தினை நகைப்ப, இரும்பினிற்புனைந்த தேழிரும்பொழிலு மிமைப்பினிற் படர்குவதாய, இருந்தெழில்விமான மிவர்ந்தனன்செருக்கிச் செருவிழை தானையோ டெழுந்து, கருங்கடல்வேலித்துவரைசென்றிறுத்தான்காலவேற்சாலுவன்கடுகி.

பன்மலர்ப்படப்பைபெறிந்தும்வெண்கோட்டுப்பச்சிளமதிமுதுகுரிஞ்சு
பொன்மதிற்குடுமிகொண்டுகாற்றிசையும்பொழிந்தசெந்தூளியாற்கரந்தும்
மின்முகங்கிழித்துவிளங்குகார்தவழும்வியன்சினைமாம்பலதுரந்தும்
கன்மழைசொரிந்துங்கறங்கிடிவீழ்த்துங்கலக்கினன்றுவரைமாநகரம். ௫

மூவெயில்கலக்கக்கலங்கியவுலகின்முதுநகர்கலக்குறல்காணூ
நாவலம்பசும்பொன்றேரொடைசூழ்கொற்றிநனைகவுட்கரிமருப்பொசித்த
காவலனுயிர்த்தகடற்சுறவுயர்த்தகாளையேமுதலியகுமரர்
பூவணியிலங்குகுடுமிநீடிலைவேற்போர்பொருதானையோடெழுந்தார். ௬

அருப்புநாளலங்க லமரோடவுண ராடியவடுசமங் கடுப்பச், செருக்கொடுமறலி யிருபெருஞ்சேனைத் திரளுமாடமர்த்தொழில் விளைப்ப, வரைத்தலைபொடிக்கு கதிரிருள்பினாந்து மாற்றல்போன்மகரவெல் கொடியோன், பொருப்புறழ்திணிதோட் சாலுவன்புணர்த்த புணர்ப்பெலாம் பொருக்கெனத் தொலைத்தான். ௭

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கொய்சுவற்புரவிமேலுங்கூந்தலம்பரித்தேர்மேலும்
மையிருங்குன்றமன்னமழைமதக்களிற்றின்மேலும்
பெய்கழலிளையர்மேலும்பெய்தனனப்புமாரி
ஐயபூந்தெரியன்மாலையங்கணைக்கிழவன்மன்னோ. ௮

பூங்கணைதுறந்துவெய்யபூத்தலைப்பகழிசிந்தும்
வீங்கெழிலலங்கற்றோளான்விற்றொழில்வியந்துநோக்கித்
தாங்கருங்கதழ்வெஞ்சீற்றச்சாலுவன்சிலைகைத்தாங்கி
ஓங்கெழில்வலவனைவாளூர்திமேற்கடாயினனால். ௯

உலைப்பிலவலத்தனூர்தியொன்றெனத்தோன்றுமாங்கே
பலப்பலவாகும்விண்மேற்பறக்குமட்பரப்பதாகும்
மலைத்தலையிவருமொல்லென்வாரியிற்பயிலுங்கண்ணின்
கலப்புறுங்காக்குமெங்குங்கறங்கெனச்சுழலுமம்மா. ௧௦

சூழ்சுடர்விமானம்வந்தோன்றியவிடங்களெல்லாம்
ஊழிவாயுருமுத்தீயுமுருகெழுகதிருநச்சுப்
பாழிவாயரவுமன்னபல்கணைபொழிந்துநின்றான்
எழுயர்களிநல்யானையாதவர்பெயர்ந்திலாரால். ௧௧

கருப்புவில்காந்துமற்றோர்கார்முகங்குழைத்தகாளை
இருப்புவன்மானஞ்சிந்தவெய்தனனின்றகாலைத்
தருக்கினோர்தண்டந்தன்னாற்சாலுவன்சேனைகாப்போன்
பொருப்பின்வீழிடியேதென்னப்புடைத்தலுமயங்கினானே. ௧௨

கலிவிருத்தம்.

மோட்டுவெண்டிரைநிலமுழுதும்வென்றவத்
தோட்டபூங்கணையினான்சோர்வுநோக்குறா
மீட்டனன்வலவன்மால்வேழவெண்ணிறக்
கோட்டினாலியற்றியகொடிஞ்சித்தேரரோ. ௧௩

மொய்யெனப்பணைத்தெழுமுழவுத்தோளினான்
ஒய்யெனமூர்ச்சனையொழிந்துதீர்தலும்
மையறுவலவனைநோக்கிமற்றுநின்
செய்வினையினிதெனச்செப்பன்மேயினான். ௧௪

இடிமுரசதிர்சமத்தேற்றஞான்றெலாம்
அடிபிறக்கிட்டிலாடல்செயாதவர்
விடுபரித்தேரினைவிரைந்துமீட்டனை
நெடுநிலத்தென்புகழ்நிலவுநீடியே. ௧௫

கொன்னவில்களிற்றுவெண்கோடுகொண்டெழும்
என்னைமுன்னின்றுநானென்னைகூறுகேன்
மன்னியபெருவிறன்மாமனல்கிய
நன்னுதற்பேதையர்நகைமுகிழ்ப்பரே. ௧௬

எனச்சிலகட்டுரையிறைவனீன்றருள்
வனப்புவீற்றிருந்ததோண்மைந்தன்கூறலும்
கனைத்தவெண்டிரைக்கருங்கடனிலம்புகழ்
தனித்திறற்றாருகன்றனயன்சாற்றுவான். ௧௭

தெம்மலைதிறத்தினான்செம்பொற்றேரவன்
சும்மைசால்களத்தினிற்றுளக்கமெய்துமேல்
வெம்முனைமுகத்ததேர்விசைத்துமீட்டன்மற்
றெம்முடைபறனெனவியம்பினானரோ. ௧௮

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாருகன்காதன்மைந்தன்சாற்றியமாற்றங்கேளா
ஆரமாற்றஞ்செய்தவடுபடைத்தலைவன்றன்மேல்
தேர்செலவிடுதியென்றான்செஞ்சிலைவளைத்துமற்றோர்
காரெனத்திகழ்ந்துநின்றகல்லெனக்கவினுந்தோளான். ௧௯

நெடும்பனைத்தடக்கையானைநிலவுமிழ்பிறைநவெண்கோடு
பிடுங்கிவெஞ்சினத்தபுள்வாய்பிளந்தவனுகைத்தவேகத்
தடஞ்சிறைப்பறவையன்னதலைமைசாலியலவைய
கடுஞ்செலவிவுளித்திண்டேர்கதுமெனக்கடாயினனே. ௨௰

நாலிருபகழிதாண்டிகலத்தருபசும்பொற்றிண்டேர்ப்
பால்கெழுபுரவிநான்கும்படுத்துவெம்பாகற்கொன்று
கோலுமிழ்வரிவிற்சிந்திக்கொடிமுதறுணித்துவெய்ய
சாலுவன்கடலந்தானைத்தலைவனைத்தலைகொய்தானும். ௨௧

சாம்பனுங்குருதிவைவேற்சாத்தகியென்னநின்ற
தேம்படுதாரினானுஞ்செஞ்சிலைகுழைத்தலோடும்
தாம்புடைத்தடக்கைவேழந்துணிந்தனகவிழ்ந்ததிண்டேர்
வாம்பரிவெள்ளமாய்ந்தவாட்படைமறிந்தவன்றே. ௨௨

இன்னணமிருபத்தேழ்நாளிருஞ்சமநடந்ததாக
அந்நிலையறத்தின்மைந்தனாற்றியவேள்விகாத்த
மன்னியபசுந்தார்மாயன்வாள்வளைமுழக்கம்விம்மத்
துன்னினன்முந்நீர்வேலித்துவரைமாநகரமன்றே. ௨௩

மாற்றலர்வளைந்தவாறுமாற்றருந்தறுகட்சீற்றத்
தேற்றரிமாவினன்னயாதவர்பொருதவாறும்
பாற்றிரைபடிந்தபச்சைப்பசும்புயல்வண்ணனோக்கிக்
காற்றெனக்கவினமான்றேர்களத்திடைக்கடாவினானால். ௨௪

தாப்புலிப்போத்தினின்றசாலுவனுலகமெல்லாம்
காப்பவன்பசும்பொற்றிண்டேர்கடாயதாருகன்மேற்காய்ந்து
பூப்பொலிந்தடுபோர்வேட்டுப்புழுங்கிவாய்புகைந்துவெய்ய
தீப்பொலிகுடுமிக்கூர்வேற்சினப்படைதெரிபுவிட்டான். ௨௫

மாறடுதிகிரிப்பெம்மான்மண்டுவெஞ்சினத்தவொள்வேல்
நூறுநூறாகிவீழநூறினனுனிக்கூர்ங்கோட்டுத்
தாறுமாய்களிற்றின்சீற்றச்சாலுவன்மார்பின்மேலும்
வீறுயர்விமானமேலும்வெங்கணைவெய்துதூர்த்தான். ௨௬

இடித்ததிரசனியேய்ப்பவிருங்கணைபொழிந்துமுந்நீர்
குடித்தெழூஉங்கமஞ்சூற்கொண்டற்கொழுந்தெனத்திகழ்ந்துநின்ற
வடித்தபூந்துளவமாயன்வாங்கியவரிவில்வீழ்த்
தொடிக்கரத்தெய்துவெய்யசொற்பலசொறலுற்றான். ௨௭

என்னுயிர்த்துணைவன்கொள்வானிருந்தபொற்கொடியைவவ்வி
மின்னுயிர்த்தொளிரும்வெய்யவேலவன்றனைத்துமித்தாய்
உன்னுயிர்க்கிறுதிசெய்யாதொழிகுவனல்லேனென்றுத்
தன்னுயிர்க்கிறுதிசூழ்ந்தசாலுவன்பிதற்றினானால். ௨அ

வெளிற்றுரைவிடுதியென்றுவெயிலுமிழோடையேற்றிக்
களிற்றுவெண்கோடுகொண்டகதிர்மணிவண்ணன்புண்ணீர்
குளித்ததோர்கதைகைத்தாங்கிக்கொம்மெனவடித்தல்செய்தான்
ஒளித்தனனேற்றுவெம்போருடன்றவில்லுழவன்மன்றே. ௨௯

தேவகிவிடுத்தோனாகச்சென்றுமற்றொருவனண்ணி
எவுமிழ்வரிவிற்செங்கையிகல்வசுதேவன்றன்னைத்
தாவுறுகலினமான்றேர்ச்சாலுவன்பிணித்துவெளவிப்
போவதுபுரிந்தான்கண்ணபோற்றெனப்புகன்றுநின்றான். ௩0

புகலுமச்செவ்விதன்னிற்புணர்ப்பினாலமைத்துவெய்தா
இகல்வசுதேவன்றிண்டோள்யாப்புறுத்தெய்தியாங்கு
மகிழ்சுரும்பாற்றுதாரோய்வல்லையேற்காத்தியென்றுத்
தகைசிறந்தொளிறுவாளாற்சாலுவன்றடிதல்செய்தான். ௩௧

மணிப்பொருப்புறழுந்தோளான்மலங்குவான்போன்றுகாட்டிப்
புணர்ப்பெனநெஞ்சினோடிப்பொருசிலைகுழையவாங்கித்
தணிப்பருஞ்சினத்துப்பொல்லாச்சாலுவன்றடக்கைவல்வில்
துணித்தனன்றுணியோடுதொலைத்தனன்கவசமன்றே. ௩௨

மீயுயர்தனிவியானம்வெங்கதையொன்றினாலே
ஆயிரந்துணியாய்வீழவடித்தனனடித்தலோடும்
காய்சினந்திருகிமற்றோர்கடுங்கதையெடுத்துஞாலம்
தாயசேவடியான்முன்னஞ்சாலுவன்றனிப்போந்தானால். ௩௩

எறித்தெழுபிறைவாயம்பாலெடுத்தவெங்கதையுங்கையும்
தறித்தனனாழிதூண்டிச்சாலுவன்மணித்தாழ்சென்னி
அறுத்தனனலமுறுமயிற்றலையெயிற்றுப்பேழ்வாயப்
பொறிப்படவரவினூடுபூங்கழற்காலம்மானே. ௩௪

மண்டுசெங்குருதியானும்வளரொளிமணியிற்செய்த
குண்டலம்பிறழ்ந்துகான்றகுருஉச்சுடர்க்கற்றையானும்
வெண்டலைப்புணரிசேப்பவீழ்ந்ததுதுணிந்தசென்னி
அண்டர்நின்றுகட்டின்மாரதிர்ந்ததுந்துபிமற்றன்றே. ௩௫

சாலுவனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௯௨௪.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்.

# ௪௯-வது, தந்தவக்கிரனைக்கொன்றவத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியச்சந்தவிருத்தம்.

நட்டசாலுவனிறந்துபோயதுவுநனிகடுங்குருதியாறுபாய்
வட்டவாயழல்செய்நேமியம்படைவலங்கொள்பச்சைமுகினின்றதும்
கட்டழற்கதுவநோக்கிவெங்கொலையகாளகூடவிடமொழுகிவார்
தட்டவாயரவமென்னவெய்தினெழுதந்தவக்கிரனுலம்பினான். ௧

மற்றுமாமன்மகனாகிநின்றுமெனைமாய்ப்பதற்குளம்வலித்தியால்
கொற்றமேவுசிசுபாலனீண்முடிகொலைக்களத்திடைதுமித்தியால்
உற்றநின்னைவிடுகிற்பனேயினியொறுத்திடாதெனவுரைத்திடா
வெற்றிமேயதொருகாலதண்டநெடுவிண்டுளக்கமுறவீசினான். ௨

கார்கிழித்துலவுமின்னுநாணவொளிகாலுமோடைநுதல்வேழமும்
தேரும்வாம்பரியுமூர்தலின்றியொருசெங்கணேறெனவிரைந்தெழாப்
பார்பனிப்பவெதிர்சென்றுகண்ணனுயர்பாரமார்பினிடையெற்றினான்
கூரழற்பரிதிசுற்றுவெற்பினொடுகுன்றெலாநிலைகுலுங்கவே. ௩

பொடித்ததண்குழவிமதிவடிம்பிடறுபொன்னெடுஞ்சிகரவெற்பின்மேல்
இடித்தகாரசனியேறுவீழ்ந்ததெனவெறுழ்படைத்ததொருகதையினால்
தடித்தெனச்சுடர்பரப்புபூணுலவுதந்தவக்கிரனுரத்தின்மேல்
அடித்தனன்புவியளிக்குமாழிமுகிலங்கண்வானவர்களிப்பவே. ௪

வளங்கொள்பொற்றுணர கற்பகத்தினை வளைத்துவேரொடு கொணர்ந்தபோர், இளங்களிச்சிறுகண் யானையன்னவ னெதிர்ந்துவெங்கதையினெற்றலும், விளைந்தபோரிலெதிர் தந்தவக்கிரன் விரிந்தபூந்தொடையன் மார்வகம், பிளந்துவீழ்ந்தன னெழுந்தசெங்குருதி பெருகுவெண்டிரை யலைப்பவே. ௫

அடுகளத்தின்விழுதந்தவக்கிரனதாக்கைநின்றுமொருசோதிவிண்
சுடர்தரக்கடிதெழுந்துசெக்கரொளிசொரிமணிச்சுடிகைவெய்யவாய்
மடைதிறந்தொழுகுநச்செயிற்றரவின்மகுடபந்திமிசைமேயநீர்
நெடுநிலப்பொறைதவிர்ப்பவந்ததனிநேமிமாயனடிநேர்ந்ததே. ௬

முன்னவன்பொருதிறத்தல்கண்டுசினமூளவெண்டிரைமுகந்தகார்
மின்னுநக்கவடிவாள்விதிர்த்திகல்விடூரதன்சமர்விளைத்தலும்
கன்னியந்துளவுசூடுகண்ணனழல்காலுமொற்றநெடுநேமியால்
அன்னவன்றலைதடிந்தனன்கடவுளலர்பொழிந்தமரர்வாழ்த்தவே. ௭

தந்தவக்கிரனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௪௨௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௪௪-வது, நம்பிமுத்தபிரான் திக்குயாத்திரை செய்தவத்தியாயம்.

---

### வேறு.

வாய்த்தசெம்முனி வலஞ்சுழியுந்தி மடுவினின்மலர்த்தநே யன்றிச், சாந்தனை றெடுத்துப் பாய்ந்தபூணுகத் தடத்திலுங்கிளைக்குமா போலத், தே க்துளியுறைப்ப நெகிழ்ந்தபூங்கமலச் செழுமலர்ப்பொருட்டா சிருக்கும், ம க்கிழைகொம்மை வரிமுலைமுயங்கு மேந்தல்வண்டுவரைசென் றிறுத்தான்.

நளியிருமுந்நீருடுத்தமாநிலமுநானிலம்பொறுத்தவாளரவும்
நெளியமாகடலந்தானைவந்தீண்ட நெய்ம்முகங்கமழுங்வேலைவர்க்
களையுறையாவமுயர்த்தவனொடுபோரடுத்திடநடுநிலையமைந்த
வளைமருண்மேனி யொருகுழையொருவன் வண்புனலாட்டின்மேலெழுந்தான்.

படுகளிப்பலகாற்பறைவபாண்மிழற்றப்பசிளந்தேறல்வாயுறைக்கும்
கடிமலர்கஞலிக்கருகிவார்ந்தொழுகக்காழ்படுகார்முகிலேந்தி
விடுசுடரிமைக்குந்திருமணியலைத்துவெள்ளிவெண்டிரைக்கடலுடுத்த
நெடுநிலமடந்தைகுழலெனக்கிடந்தநீள்புனல்யமுனையாடினனால். ௩.

அறுபதமுரல நறைகமழ்பசுந்தோ டாயிரமவிழ்ந்தசெங்கமலத், திறை கொள்காரன்னத் தொழுதியும்புரிசங் கின்றவெண்மணிகொழித் தெதிர்ந் த, மறிதிரையமுனை மாநதிப்பெருக்கும் வயின்வயின்மயங்கிய தண்ணந், துறைகெழுகங்கைமாநதிபடிந் துதொலைக்கைம்மாக்களிறெனநடந்தான்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கலைமதியியைந்தொனுங்கருங்கலையுடைமையானும்
நலமிகுதன்னைமானுமகிசாணியநண்ணி
மலர்தலையுலகமேத்துமாதவத்திருவமெல்லாம்
இலைவிரிசாலையின்றுமெழுந்தனரெதிர்கொண்டாரால். ௪

இன்னகைமுகத்தானன்றியெழில்வளருருவத்தானும்
நன்னகைமதியைவென்றானண்ணலுமெழுதலன்றி
மன்னுபூந்தவிசின்வைகுமாதவச்சுதன்சென்னி
புன்னுனைபடையாக்கொண்டுபோக்கினனென்பமன்னோ. ௫

சொல்வளங்கனியத்தொன்னூல்சொல்வதற்காயாங்கள்
நல்கியதவிசின்வைகுநற்றவக்கிழமையோனைக்
கொல்வதோறங்கோலென்றெக்குங்குமக்குவட்டின்வீங்கி
மல்வளர்தோளினற்குமாதவர்கூறலுற்றார். ௬

கலையினதகலமெல்லாங்கடந்தமாமுனிவற்காய்ந்து
கொலைபுரிந்ததற்குவெள்ளிக்குன்றுறழ்குவவுத்தோளாய்
உலகொழுக்கிறவாவண்ணமோங்கியபுனிதநன்னீர்ப்
பலதுறையாடல்வேண்டும்பன்னிருதிங்கட்காலம். ௭

மலைக்கும்வெஞ்சிற்றப்பொல்லாவற்கலனென்னும்வெய்யோன்
அலைக்கும்வந்தெம்மையெல்லாமறங்கடையவனையெய்தாக்
கொலைக்களப்படுத்தல்வேண்டுங்கொங்குலாய்முருகுவிம்மிச்
சிலைக்கவின்பெற்றபைந்தார்ச்செம்மலென்றியம்பினரால். ௯

பொருவிலாஞானவொள்வாள்பூமுகமழுங்கவெட்டி
இருவினைக்காடுசாய்த்தவிருந்தவர்வதனைநோக்கி
அருள்பொழிகமலக்கண்ணனன்னதுபுரிவேமென்றேத்
திரைவிலாபவளச்செவ்வாய்திறந்தனன்கூறுமாங்கே. ௧௦

தந்தையேயவர்தாகாதற்றனயராய்த்தோன்றுமென்று
முந்தையாரணங்களெல்லாமொழிதருதிறத்தாற்சூதன்
மைந்தனேசூதனென்றுமாபுவிநாட்டல்செய்தான்
அந்தமினலத்ததொன்னூலறிறபக்கிளக்குமாறே. ௧௧

கலிவிருத்தம்.

இலங்குவாட்படையில்வலன்காதலன்
அலங்கன்மாலையமாரைவென்றுபோர்
வலங்கெழீஇயவன்வற்கலனென்பவன்
விலங்கலாமெனவீங்கெழிற்றோளினன். ௧௨

செய்யபங்கியன்றீப்பொழிகண்ணினன்
மையிருள்வகுத்தன்னவண்ணத்தினன்
கையிலங்கியகட்டழலெஃகினன்
ஐயெனக்கனன்றற்றனனங்கரோ. ௧௩

ஆளிமொய்ம்பனசனியினார்த்தெழூ
தாளிமாரிசொரிந்தனன்றோன்றலும்
வாளிலங்குவலம்புரிமேனியான்
கோளிலங்குகொடும்படையுன்னினான். ௧௪

காத்திறுற்றகலப்பையினல்வளைஇ
இருப்புலக்கைகொண்டேந்தலடித்தலும்
பொருப்பின்வீழ்ந்தனன்பொன்றினன்மல்குசீர்
வரைப்புவந்திடவற்கலனென்பவே. ௧௫

மைந்துடைப்பகைமாட்டியவற்றைஞான்
றிந்திரற்கிமையோர்புனலாட்டல்போல்
பைந்துழாய்புனைபாற்கடற்சேர்ப்பனை
அந்தணீர்சொரிந்தாட்டினரந்தணர். ௧௬

மொய்சுடர்ப்பொன்முளரியினற்புனை
வைசயந்தியெனுநறுமாலையும்
கைசெய்பூணுங்கலையுமுதவினர்
நெய்சிறந்தொளிர்நேமியஞ்செல்வற்கே. ௧௭

நண்ணுமாதவர்நன்றுவழிப்பட
உண்ணிறைந்தவுவகையனாகிநீள்
வெண்ணிலாக்கதிர்வீசியமேனிய
அண்ணனீங்கினனவ்வழியென்பவே. ௧௮

முரிதடந்திரைமுத்தெறிதெண்கடற்
கரைமெலிக்குங்கவுசிகநீர்படிந்
தரசவன்னமமர்தருபூந்துறைச்
சரயுமாநதித்தண்புனலாடினன். ௧௯

வேறு.

நிலவிரிவெண்மணற்குன்றினெற்றிமேல்
குலவுசெங்காலனங்குமரிஞாழலின்
மலர்தொறுமறைதரவான்றிசித்திலம்
அலையெறியயாகைசென்றாடினனரோ. ௨0

யாணர்நீர்க்கோமதியெய்திவானதி
வேணவாத்தீர்த்தருள்வீங்குதண்புனற்
சோணையாற்றடைகரைதுன்னித்தண்கயாக்
காணியநடந்தனன்கமலக்கண்ணனே. ௨௧

ஆடியவெண்டிரைக்கங்கையாழியின்
கூடியதண்டுறைகுடைந்துமேதகப்
பாடல்சால்சிறப்புடைப்பரசுராமனற்
றாடொழுதேகினன்றமமார்வனே. ௨௨

தொழுதகுகமழலந்துறையின்மூழ்கின
எழுவகைத்தோற்றமுமிரியவேழ்வகை
ஒழுகுகோதாவிரியோங்குபெண்ணையா
றாழ்புனற்பம்பையென்பவற்றினாடினன். ௨௩

நிழன்மதிதவழ்வரைநெஞ்சுபோழ்ந்தெழும்
அழலவிரள்ளிலையலங்கல்வேற்படை
முழுவெனப்பணைத்ததோண்முருகற்கண்டுகார்
தழுவமீக்கிளர்தருசயிலநண்ணினன். ௨௪

விண்டொடர்குன்றொடுவிரியல்வெண்மடற்
கண்டல்சூழ்நதிபலகடந்துகாவலன்
தெண்டிரைநிலக்கொருதிலகமாகிய
தண்டமிழ்நாட்டகஞ்சார்ந்திட்டானரோ. ௨௫

## எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பண்படுமழலைச்சுரும்புபாய்ந்துழலப்பசுநறாப்பிலிற்றுவெண்டோட்டுத்
தண்கமழ்முல்லைத்தாரவன்பிடுங்குதவழ்மதக்கரிமருப்பேய்ப்பத்
தெண்கடல்பருகிக்கண்படுகமஞ்சூற்செழுமுகின்முகங்கிழித்தெழுந்து
விண்படுகுழவிமதிதவழ்சாரல்வேங்கடமால்கழறொழுதான். ௨௬

வரிமிடற்றறுகால்வண்டினம்பாடமடமயிலகவுபூஞ்சினைய [ன்
குராவமுங்குருந்துங்கொன்றையுங்குமிழுங்கோங்கமுநாகமுங்கொழுந்தே
அருவிபெய்தடங்காவமார்பொன்னாட்டாவருங்குளகருந்தமேனிவந்த
ஒருதனிமுதலவ்வும்பலோங்கலின்மீதோங்கெழிற்காஞ்சிசென்றுற்றான்.

தெள்ளொளிகிளைக்குமணிதெளித்தன்ன திங்களம்பொய்கையிற்றிகழும்
வெள்ளிவெண்ணிலவுத்திங்களிற்றோன்றிவிரையெடுத்தெறியும்வெண்
முள்ளரைமுளரிகங்குலுமலரமுழுவெயில்பொழிகதிர்கடந்த [டோட்டு
கள்ளவிழ்துளவப்படலைநம்பெருமான்கண்வளர்கோயினண்ணினனால்.

மாறிலாக்கடவுண்மணிகிடந்திமைக்கும்வளங்கெழுவெண்மணற்புளினத்
தாறுகால்வரிவண்டாயிரமாற்றவாக்கிதழாயிரம்விரிந்து
தேறல்பாய்முளரிப்பொகுட்டுவீற்றிருக்குஞ்செந்திருமணக்குமாபோல
வீறுசால்பவளக்கொடிபடர்ந்தேறிவீங்குநீர்க்காவிரிபடிந்தான். ௨௯

பிறைமுதுகுரிஞ்சவழியுமின்னமுதப்பெருக்கறாத்தண்ணறுஞ்சாரல்
உறையழற்றிகிரிமாலலங்காரனுருவவொண்காந்திமேற்றவழச்
செறிசுடர்வயிரத்திரளும்வெண்முத்துந்தெள்ளுநீர்யமுனையிற்றோன்றி
எறிதருசிலம்பாறெழுகுபூஞ்சோலையிடவமால்வரையடைந்தனனால். ௩0

இளைத்தவெண்டிங்கண்முழுநிலாத்தவழுமெரிமருளீர்ஞ்சடைக்கடவுள்
முளைத்தெழுமுளரிப்பொகுட்டுறைமுதல்வன்முழுவலிற்பணிந்தனரேத்த
கிளைத்தபூந்தெரியல்வேம்பணிவழுதிகிளர்கமண்டலுவின்மால்சேலாம்
வளைத்தபொன்னிஞ்சிமாடமார்மதுரைவளநகரினிதுநண்ணினனால். ௩௧

கடற்சுறவுயர்த்த காமனிற்கவினுங் கடுந்திறல்விசயன்கைத் தனுவா
ல், அடிப்பவஞ்ஞான்று மழவிடைப்பாக னழலவிர்புரிசடைக் காட்டில்,
பொடித்தவெண்டிங்கள் பொழியமுதளாவு பூந்திரைக்கங்கையின் வார்ந்
து, வடித்ததீந்தமிழ்தண் டுறைதொறுமணக்கும் வையையாநதிப்புனல் ப
டிந்தான். ௩௨

திண்டிறலரக்கன் பஃறலைசிதறச் செஞ்சிலைவளைத்தொரு நீலக், கொ
ண்டலங்கொழுந்திற் றிகழ்பவன்பசும்பொற் குழைகழற்றூட்டுகண் மணந்
து, கண்டவர்பிறவிக் கருங்கடல்கடப்பக் கதிர்மணித்திரளொடுத்தெறியும்,
வெண்டலைப்புணரிக் கருங்கடல்விளங்கு மேதகுசேதுவி னடைந்தான்.

கதிரொடுபனிவெண்மதிபுகாதோங்குகடிமதிளிலங்கைகட்டழித்த
மதவலிமலர்த்தாள்கைப்பினிற்றோன்றமல்லன்மந்தாகினிகடுப்ப
முதிர்கொளம்பவளக்கிளைசுழித்தெதிர்த்துமுழக்கொலித்திலம்வான்றி
அதிர்கருங்கடல்வெண்டிரைதவழ்ச்சாமெனத்திகழ்சேதுவிற்படுத்தான்.

அமுதமூற்றிருந்ததடங்கடல்பருகியமுதுவேறமைப்பதுகடுப்பத்
தமிழ்தருகடவுட்குறுமுனிவிழையுஞ்சண்பகவனத்தினிற்றவழ்ந்த [தன்
கமழலங்கென்றற்கொழுந்தெதிர்கொள்ளைக்களிவிளைந்தொழுகுதென்னமு
குமிழிபாய்திங்கட்பசுங்கொழுந்திடறுகோடியர்குலாசலமடைந்தான். ௩௫

இடிமணலெக்கர்மீமிசைச்செங்காலினவனஞ்செறிவதுகடுத்தும்
முடமுதிர்தடந்தாண்முள்ளிலைத்தாழைமுகந்தொறுமுருகுவாயுறைக்கும்
மடல்விளைத்தெழுதல்போன்றுமாமேனியலர்தாவாணிலாத்தவழ
விடுசுடர்வெயிலாரொருகுழையொருவன்விரிபுனற்பொருநலாடினனால்.

பொன்னவிர்குன்றம்பொருதமால்யானைப்புணர்நெடுமருப்பினின்றுக்க
நன்னிலத்தாளமணிசிதர்ந்தென்னநளிமணற்குன்றினிற்பாய்ந்து
மன்னியமுடவெண்டாழைமெல்லரும்பின் மருங்கெலாமன்றலூற்றிருந்த
கன்னியம்புன்னைமென்முகைகருலுங்கன்னியந்துறையடிந்தனனால். ௩௭

ஒழுகொளிவிரிக்குஞ்செம்மணிக்குப்பையோங்கிரும்பணுடவிதழைத்த
எழில்வளர்நாகபோகமீமிசைவந்திலங்கொளிமாகதங்கிளைத்துத்
தழையுமாபோலப்பொதியவிழ்விரிசெந்தாமரைக்கண்ணருள்பெருகிப்
பொழிதருதளவப்புயல்வளரநந்தபுரத்துவந்தடைந்தனனன்றே. ௩௮

தனிமுதலவற்குத்தற்பமாய்த்தாங்குதணைப்பில்சீரலப்படையொருவன்
மதிசதிர்விரிக்கும்வெள்ளிமால்வரையும்வயங்குபொற்கொடுமுடிவரையும்
எதிருயர்வில்லாவின்பவீடளிக்குமின்னிசைகேட்டுவந்திறைஞ்சும்
பதுதிரிபாவியிறைவனையணையிருங்கழல்பாவியேகினனால். ௩௯

வழுத்தருமலைநா டிகந்துகோகன்னம் வலங்கொடுவலவையிற் செந்நீ,
விழித்தபாம்புயர்த்த வெந்திறல்வேந்தும் வீழ்மணிச்சுரும்பினம் பாய்ந்து,
கிழித்தபூந்தொடையல் வீமனுங்கிடைத்துக் கிளைத்தெழுமருப்பிளங் களி
போல், பழுத்தவெங்கொலைய கதைகொடுமலையும் படுகளப்பரப்படைந் த
னனால். ௪௦

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கருகுழைத்தடங்கட்செவ்வாய்க்காதலக்கொடிக்குப்பைம்பொன்
விரிகுழைநெடுமந்தாரம்வேரொடுகொணர்ந்துநல்வேய்
வரைகுழைத்துருகவூதுமாலொடுநின்றவைவர்
ஒருகுழையொருவன்றன்னையூழ்முறைவணக்கஞ்செய்தார். ௪௧

வெருவருசெலவின்வீரர்வெஞ்சமம்விளைத்தபோதில்
ஒருவனேசெயலின்மிக்கானொருவனேவலியின்மிக்கான்
இருவிருதிகபோயாற்றமிருஞ்சமமொழிகவென்னக்
குருமணியிலமைக்குமொற்றைக்குழையினனுரைத்தல்செய்தான். ௪௨

கேட்டிலர்காற்றின்சேயுங்கிளைத்தமுள்ளெயிற்றுப்பேழ்வாய்ச்
சூட்டராவுயர்த்தவேந்துந் துளக்கமிலமர்விளைத்தார்
மோட்டுவெண்டரங்கமுந்நீர் முற்றிய துவரைசேர்ந்தான்
வாட்டிறல்விளங்குசெங்கைவாள்வளைமேனிவள்ளல். ௫௩

முல்லையங்கோதையோடுமுழுமதித்தோற்றஞ்சான்ற
நல்லெழினம்பிமீட்டுநைமிசாரணியநண்ணி
எல்லையில்வேள்வியாற்றியியற்றுமாதவத்தோர்க்கெல்லாம்
தொல்லைநூன்முடிவுதெள்ளித்துகளறத்தொகுத்துச்சொற்றான். ௫௪

மாறின்மெய்யுணர்வுதோன்றமன்னுமைம்புலனும்வாட்டி
ஆறறிமுனிவர்க்கெல்லாமருமறைதெரித்தபின்னர்
வீறுயர் துவரைமேவிவீற்றிருந்தனனாற்றேன்மட்
டூறுவெண்டோட்டபோந்தையுயரியகொடியான்மாதோ. ௫௫

என்னனுமுவந்துமன்னனிந்திரத்திருவில்லேய்க்கும்
கன்னியந்துளவப்பைந்தார்க்கருமுகில்விளையாட்டின்னம்
பன்னுவாயென்னலோடும்பகாருஞ்சிறப்புவாய்ந்த
மெய்ந்நிலைவிளங்கநாடும்விழுத்தவன்விளம்பலுற்றான். ௫௬

நம்பிமூத்தபிரான்றீர்த்தயாத்திரைசெய்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௪௭௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௫௫-வது, குசேலற்கருள்புரியத்தியாயம்.

---

### கலிநிலைத்துறை.

பாயும்வல்லிருள்பருகுமொண்கதிர்மணிச்செஞ்சூட்
டாயிரந்தலையலர்த்துபாம்பணைத்துயிலகற்றிக்
காயும்வெஞ்சினக்கட்செவித்தலையினின்றாடும்
மாயனன்பினன்குசேலனென்றுளனொருமறையோன். ௧

எனைத்தொன்றாயினுமெதிர்ந்ததுமிசைந்துவண்டிரைக்கும்
புனத்துழாய்முகில்பொன்னடிகருதுமம்மறையோன்
மனைக்கிழத்திவெம்பசியினால்வாடியமுகத்தாள்
பனித்தகண்ணினள்பவளவாய்திறந்தனள்பகர்வாள். ௨

பொன்பிறங்கியபுணர்முலைத்திருமகள்கொழுநற்
கன்பனாகியுமகன்றிலைவறுமைமற்றன்றே
மின்பிறங்கியவிழுமணிமார்பினுற்கண்டு
மன்பெரும்பொருள்வாரினைவருகெனவகுத்தாள். ௩

வடித்தநான்மறையந்தணன்மாயனைக்காணின்
கொடுப்பதென்னெனக்குறுநுதலறவர்பாற்கொடுவந்
திடித்தபாசவலிரந்தவெண்டுகில்பொதிந்தீந்து
நடத்தியென்னலுநகைசெயிலன்மென்மெலநடந்தான். ௪

தெரியுநான்மறையின்னமுந்தெரிவுறக்காண்டற்
கரியனாகியவரக்கிதழ்முளரியஞ்செங்கட்
கரியவன்றனைக்காணுறக்கடுகுபேரன்பு
விரியவேகினன்விழுப்பெருங்கோயின்மேயினனால். ௫

மன்னர்மன்னவர்மணிமுடித்திரள்பொருதுக்க
பொன்னிவர்ந்தொளிர்பொற்கடைமுன்றிறந்தேகிக்
கன்னியந்துழாய்க்கருமுகிலொருகனித்துவர்வாய்
அன்னமென்னடையரிவையோடிருந்துழியடைந்தான். ௬

உருகுகாதலன்பைப்பயவொல்கினன்வருதல்
முருகுவிம்முசெம்முளரியஞ்செங்கணானோக்கி
எரிபொன்சேக்கைநின்றெழுந்தெதிர்சென்றிவண்வருக
வருகவென்றுபொன்மார்புறத்தழீஇனன்மகிழ்ந்தான். ௭

களித்தசெங்கயற்கருங்கண்மாமாதுவெண்கவரி
வளைத்தளிர்க்கையாலிரட்டமாமணியணையிருத்தி
இளைத்திசாலவென்றிளநிலாவொழுகுநூன்மார்பின்
அளிக்குலஞ்செறிசெய்யதாரணிந்துபாகளித்தான். ௮

பயிற்றுநான்மறைக்குரவனம்மனையவள்பணியால்
வெயிற்குவெம்பியகானிடைவிராய்தாற்கேகிப்
புயற்கசைந்தொருபொதும்பரினிரவுநாமிருந்த
தயர்த்திபோலுமென்றளவளாயுசாவினனன்றே. ௯

முளைத்தவெண்ணிலாமுறுவல்வாண்முகத்தினனாகி
அளிப்பமற்றெனக்கென்கொடுவந்தனையன்ப
ஒளிப்பதென்னைநீயுதவுகென்றுள்ளாக்கூட்டும்
தளிர்க்கையாற்றுகில்வாங்கினன்றனிமறைமுதலி.[1] ௧௰

பொருள்விழைந்திவன்போந்றலனமையொருபொழுதும்
திருவிழைந்திவன்றிருமனைக்கிழத்திசெல்கென்ன
வரவுவந்தனன்மற்றிவற்களித்துமென்றள்ளி
விரைகமழ்ந்தபூந்துளவினான்பாசவன்மிசைந்தான். ௧௧

வாட்டநுண்ணிடைவடவரைக்குவடெனப்பணைத்த
மோட்டிளங்கதிர்முலைசுமந்தொழுகியதீம்பால்
ஊட்டுபேயினுள்ளுயிர்பிழிந்துண்டகார்வண்ணன்
மீட்டும்பாசவன்மிசைவதற்கெடுப்பவுள்விழைந்தான். ௧௨

ஊர்ந்தசாதலினொருமுறைநயருந்தியதிறத்தால்
ஏந்தலிந்திரனெனக்கருஞ்செல்வமெய்தினனெல்
மார்ந்தன்மற்றினியென்றுசெம்மலர்க்கரம்பிடித்தாள்
பூந்துழாய்வரைமார்பகமகன்றிலாப்பூவை. ௧௩

சுடநெகிழ்ந்தசெந்தாமரையவள்குறிப்பறிந்து
விடுசுடர்ப்பணிவெண்ணகைமுகிழ்த்தருள்சுரந்து
மடைதிறந்தசெங்கண்ணினென்மறையவன்றனக்கு
விடைபுரிந்தனன்வீறுசால்வேதியனெழுந்தான். ௧௪

அம்மவுய்ந்தனமுய்ந்தனமரும்பொருளெய்தல்
மம்மர்கூர்தரமறக்குவனமையெனமதித்தே
மும்மைசாலுலகளித்தருண்முளரியஞ்செங்கட்
செம்மனல்கலன்செல்வமென்றுவந்தனன்சென்றான். ௧௫

களித்தவண்டினங்களுலவாய்விரிந்துதண்டேறல்
துளித்தநாண்மலர்ச்சோலையுஞ்சுடர்மணித்தொழுதி
தெளித்தெனத்திகழ்நீம்புனல்வாவியுஞ்செறிந்து
பளிக்குமண்டபம்பல்குதன்மனையகம்படர்ந்தான். ௧௬

தெளிநிலாக்கதிர்சிந்தியவெள்ளிவெண்மாடம்
முளையிளம்பிறைதவழவிண்முகடுகீண்டோங்கி
அளகைகாவலனருநிதியறைதிறந்தென்ன
வளமலிந்தவம்மனையகநோக்கினன்மயர்ந்தான். ௧௭

விலகிவில்லுமிழ்மீன்குழாத்தொள்ளொளிவிரிக்கும்
கலைநிறைந்தவெண்மதியெனக்கவின்வழிந்தொழுகு
திலகவாணுதற்சிற்றிடைத்தெரிவையர்செறிய
இலகுபூணணிந்தில்லவள்வருதல்கண்டயிர்த்தான். ௧௮

பதியைநோக்கினன்பதிதொறும்பதிதொறுங்கிடந்த
நிதியைநோக்கினனேரிழைமடப்பிணைமருட்டும்
புதியநோக்கொடுபோதருமனையவள்வதன
மதியைநோக்கினன்மால்செயலிதுவெனவலித்தான். ௧௯

பெறலருந்திருப்பெற்றும்வெண்பிறைமருப்பொசித்த
இறைகருங்கடலிருநிலம்பொதிந்ததாட்கமல
மறவியொன்றிலன்மாட்சிசால்பெருநலமாந்தி
அறவிராப்பிரின்றனவிலாத்துணிநெறியடைந்தான். ௨௰

குசேலற்கருள்புரியத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௭௧௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# ௪௯-வது, சமந்தபஞ்சகத்திற்சென்றவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பரிதிவாளரவுதீண்டப்படுவதோர்காலநண்ண
அரசர்செங்குருதிநீராலடுதிறற்பரசுராமன்
நிரைபுகழ்தடமதாக்குஞ்சமந்தபஞ்சகத்திற்றண்டேன்
சொரிதொடையரசர்வெள்ளந்தொக்குடனடைந்ததன்றே. ௧

முளைத்தவெண்முறுவற்செவ்வாய்முகிழ்முலைமாதரீட்டம்
கிளைத்தசெம்பவளவல்லிக்கிளையெனப்பரந்துசூழ
வளைக்குலமலறநீலமாகடலெழுந்ததேபோல்
களிச்சுரும்பாற்றுமைந்தார்க்கண்ணனும்போயினனக்கண். ௨

ஆவியேயனையளாயவசோதையுமாவிபூத்த
காவியுங்கயலும்வென்றகடைக்குழையெதிர்ந்தவுண்கட்
கோவியர்குழாமுமொண்கேழ்க்குங்குமக்கலவைச்சாந்தும்
நாவியுங்கமழ்ந்துசெல்லநடந்தனனந்தகோனும். ௩

அங்கதிர்மழுவலாளனாக்கியதடமுன்போலக்
குங்குமச்சாந்துதோய்ந்துகுருதியின்றன்மைகாட்டத்
திங்கள்வாண்முகத்துச்செவ்வாய்த்தேவியர்குழாத்தினோடும்
கங்கைநீர்பூத்ததாளான்கடவுணீராடினானால். ௪

கொடிபுனைகொடிஞ்சிமான்றேர்க்குருகுலத்தரசும்வெய்ய
இடிமுழங்கோடையானையதுகுலத்தரசுமீண்டிப்
படிபுகழ்தெய்வநன்னீர்படிந்தொருபசும்பொற்கோட்டுக்
கடிமலர்ச்சோலைநீழல்கலந்துடனிருந்தபோதோ. ௫

புவிபுகழ்நந்தகோபற்போர்வசுதேவன்கண்ணுற்
றுவகைமீக்கூரவந்நாளோங்கெழின்மருதினூடு
தவழ்பசுங்குழவியோடியாடவந்தாதுசிந்தி
அவிழ்தொடையணிந்தமார்வமழுந்துறத்தழீஇக்கொண்டானே. ௬

கோல்வளையசோதைவந்துகுறுகலுமுலகமுண்டோர்
ஆலிலைப்பள்ளிதுஞ்சுமஞ்சனக்குழவியுண்ணப்
பால்சுரந்தூட்டுசெம்பொற்படாமுலைச்சாந்துதோயச்
சேலொடுபொருதவுண்கட்டேவகிபுல்லினாளால். ௭

கரும்புசூழ்பணிமென்முல்லைத்தொடையணிநந்தகோனும்
அரும்புவெண்டரளமாலசோதையுமவப்பநண்ணி
இரும்பனைக்கொடியினானுமேடவிழ்கமலச்செங்கட்
கரும்புயல்வண்ணத்தானுங்கைதொழுதிறைஞ்சினின்றார். ௮

குன்றெதிர்நிற்றலாகாக்குங்குமத்தோளினானை
அன்றெதிர்காணப்பெற்றவசோதையுநந்தகோனும்
சென்றெதிர்முளரிவென்றசெய்யகண்களித்துமுற்றாக்
கன்றெதிர்கறவைபோலக்கசிந்துளமுருகினால். ௯

வெயிலுழையறியலாகாவிரிமலர்க்காவினீழல்
கயலெனக்களிக்குமுண்கண்பரப்பினர்கருங்கட்டோகை
மயிலெனநின்றவாயர்மாதர்தங்குழுவையெல்லாம்
புயலெனநின்றசெங்கட்பொருவிலிபுல்லினானே. ௰

நஞ்சனைக்கொன்றபின்னுங்காய்ச்செழுவேந்தரோடு
வெஞ்சினந்திருகுவாட்போர்விளைத்தனமிருந்திட்டேமால்
வஞ்சிநுண்மருங்குணல்லீர்மறந்தனிர்கொல்லோவென்னாச்
செஞ்சுடர்விரிக்குந்தெய்வத்திகிரியஞ்செல்வன்செப்பும். ௧௧

இருந்துநாமெங்குழுங்களிடத்தினுமிருக்கின்றேமால்
உரைப்பின்மற்றும்மைநீங்கியுறைந்தமையுண்டுகொல்லோ
அருப்பிளமுலையீரொன்றுவரும்பவிழ்பசும்பொற்கோட்டுத்
தருக்கொடுதந்தநம்பிதன்னிலைதெரித்தான்மாதோ. ௧௨

அளித்தளித்துலகமீளவமைத்தருளிறைவனின்று
தெளித்தலுநெஞ்சந்தேறித்தெருமரலுழக்கறீர்ந்து
களிக்கயல்பொருவுமென்றுகடைசிவந்தகன்றகண்ணார்
தளிர்க்கரங்கூப்பிச்செவ்வாய்த்தத்தையிற்கிளக்கலுற்றார். ௧௩

வலஞ்சுழியுந்தியந்தாமரையினின்றுலகந்தந்த
அலங்கிதழ்முளரிச்செங்கணமலநீராழிவேலி
நிலம்பொதிகமலப்பொற்றாளிணைவதேயருள்செய்கென்னா
விலங்கிவில்லுமிழும்பூணார்வேண்டினர்வழுத்தல்செய்தார். ௧௪

அத்தலையவர்வேட்டவாறமுதன்னசாயற்
றத்தரிநெடுங்கட்பேதைதாமரைக்கண்ணன்வேட்ட
மைத்துனனன்னகூத்தன்மாதரோடளவளாவி
அத்திறனும்மைவேட்டானிறைவனென்றியம்பினாளால். ௧௫

தொடுத்தபூங்கோதையொன்றுசுரிகருங்குழலிற்சூட்ட
எடுப்பினுமம்மவோவென்றிரும்புயல்கிழித்தமின்போல்
நுடங்குறுமருங்குற்செவ்வாய்நறுநுதன்மாதர்தம்மை
வடித்தபூந்துளவோன்வேட்டவண்மையாங்குரைத்தல்செய்தான். ௧௬

குவிமுகிழ்விரிதார்மன்னர்குருதியான்மழுவலாளன்
தவழ்திரைஞாலம்போற்றத்தடம்புரியிடத்தினூடு
கவளமாக்களிறுசாய்த்தகண்ணனைக்கண்ணுற்றவர்
உவகையங்கண்ணீர்வாரவொருதடமியற்றியிட்டார். ௧௭

யாணர்வெண்டரங்கக்கங்கையாறெடுத்தொழுகுதாளின்
சோணமாநதியும்வந்துதோற்றியதோற்றமொப்பச்
சேணொளிமௌலிச்செக்கர்ச்சிகாமணிக்கதிர்கள்பாய
வாணிலாமணிப்பூண்மன்னர்மாயனைவணக்கஞ்செய்தார். கஅ

இமிழ்திரைப்பாவையீன்றவின்னகைக்குமுதச்செவ்வாய்
அமுதுகுமழலைத்தீஞ்சொலரிவைவீற்றிருந்தமார்வக்
கமழ்துழாயலங்கன்மாலைக்கண்ணனைக்கண்ணிற்காண
தமிழ்முனிதொடக்கமாயதபோதனர்சார்ந்துளாரால். கக

களிமதக்களிறுமாய்த்தகண்ணனைக்கண்ணினோக்கி
அளவறுஞானநந்தமருவமென்றறைவதென்னே
இளநிலாநகைத்துச்செவ்வாயின்னருள்பொழியுஞ்செங்கட்
டொளிமணியுருவிற்றென்னவுணர்ந்துணர்ந்துருகாநின்றார். உ0

சதுமறையிறுதியின்னுஞ்சழக்கறத்தெரிகலொல்லா
முதிர்பெருஞானநந்தமுத்தநம்விடக்குக்கண்ணுக்
கெதிர்தரலென்னையென்னையென்றிறும்பூதெய்தாவாங்
கெதுத்வமிழைத்தேமென்னவேங்கினாவசமுற்றார். உக

அவிழ்ந்தபூந்துணர்துய்த்தாழ்ந்தவமரர்பொன்மகுடகோடி
தவழ்ந்தசெங்கதிர்கள்பொங்குந்தனிமணியுழுதமாடல்
உவந்தவாளரவின்செஞ்சூட்டொளிர்மணிகிழித்துஞ்செக்கர்ச்
சிவந்ததாட்குழகன்பூசைசெய்தனன்செய்தவர்க்கே. உஉ

அழற்பொலிக்திலங்குகூர்வேலடல்வசுதேவனுற்ற
விழுத்தவர்தம்மைத்தாழ்ந்துவினையினல்வினையையெல்லாம்
ஒழித்திடும்வண்ணநீவிருரைமினோவெனவினவ
முழுப்பெருமுனிவர்மூரன்முகிழ்த்தனர்மொழியலுற்றார். உங

விரைகமழ்துளவினானைமெய்ப்பொருளென்றுநாடி
அருவினையெறிதல்செய்யாதவனையோர்மகவென்றெண்ணி
இருவினைவினையினான்மற்றெறிந்திடனினைத்தல்கங்கைத்
திருநதிவிடுத்தோராறுசென்றடைந்தாடல்போலும். உச

வியனிலமன்னதக்கவினைப்பயன்விழையாதாற்றின்
மயலறுமற்றபோதுமாண்டமெய்யுணர்வுதோன்றும்
உயர்வறவுயர்ந்தவுண்மையுணர்வுவந்துற்றகாலை
இயலிருவினையினீட்டமிரியுமென்றியம்பினாரே. உரு

வாவியங்கமலமெல்லாம்வந்துபோர்க்குதவினாலும்
காவிமுன்னிற்கலாற்றாக்கட்டழகுடையவுண்கட்
டேவகிகொழுநன்றேவர்திரண்டவிழுக்துமாந்த
ஆவியின்முனிவர்தம்மோடருமகமாற்றினானால். உசு

கறையணற்பாம்பினொடுகண்ணனைப்பாவியோன்வேல்
விறல்செழுவிதுரன்சென்றான்வெவ்வராவுயர்த்தோனாதி
நெறியில்வயப்புரவித்திண்டேர்நூற்றுவர்நடந்தார்மற்றை
அறன்மகனாதியாயவைவருமறிதிற்சென்றார். ௨௭

கறுத்தெதிர்நடந்தயானைக்கதிர்நிலாக்கழூஉவெண்கோ
டிறுத்தமாமல்லர்க்கிடியெனநடந்தவேந்தல்
நறைக்கொடித்தளவுசூடுநந்தகோனொடுநடந்த
அறற்குழலசோதைக்கன்பாலருஞ்சிறப்பாற்றினானால். ௨௮

கண்ணிணையிமைகாத்தென்னக்கண்ணனைக்காத்தல்செய்தீர்
எண்ணின்மற்றுமக்கியாங்களிழைத்ததையெவன்கொலென்னாத்
தண்ணறாப்பில்குமௌவற்றாரவன்வதனநோக்கி
எண்ணலார்க்கடந்தகூர்வாளிகல்வசுதேவன்சொல்வான். ௨௯

கரைக்குமாமதத்தயானைக்கஞ்சனான்முன்னரின்னற்
பெருக்கின்வீழ்ந்துதவிசெய்யப்பெற்றிலம்பின்னர்ச்செல்வச்
செருக்கினாற்செய்வதொன்றுந்தெரிகலமையவென்று
உருக்கமைந்தொளிசெய்செம்பொனுலப்பிலவழங்கினானால். ௩0

உருபசுங்குருதியொள்வேலுக்கிரசேனனுக்கு
நகுதருதளவப்பைந்தார்நந்தகோனுவந்துகொள்ளப்
புகைமுகந்தன்னதூசுபுவியிலைகொண்டபொற்பூண்
அகலிருவிசும்புவிற்குமாரமோடுபகரித்தான். ௩௧

நேசமொடளித்தநெய்யாப்பொற்றுகின்முதனிலாவு
தூசுநல்லணியும்பொன்னுஞ்சுடர்மணித்தொகையும்வாரிக்
காய்சினவரவின்றுத்திக்கணபணமகுடத்தாடு
மாசிலாமணியைநந்தன்மனத்திடைப்பொதிந்துசென்றான். ௩௨

காமருவேனினீங்கிக்கார்தலைப்படுதலோடு
மாமயில்குழீஇயபோலமைவிலைபெற்றவாட்கட்
டேமொழிமாதரீண்டச்செழும்புயலெழுந்ததேபோல்
தாமரைக்கண்ணன்முந்நீர்தழுவுமாநகர்சென்றுற்றான். ௩௩

சமந்தபஞ்சகத்திற்சென்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௫௨௭.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# ௪௭-வது, இறந்தகுழவிகளைக்கொணரத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கைதொழவடைந்தசெங்கட்கண்ணனையொருகானோக்கி
மைதொழுநிறநம்வள்ளன்மறைக்கொழுந்தாகுமென்னாச்
செய்தவக்கிழவரான்றுசெப்பியவண்ணமுன்னி
மெய்திகழறிவுசாலும்விறல்வசுதேவன்சொல்வான். ௧

விண்ணிடையொலியுங்காற்றினூறும்வெங்கனலிதன்பால்
ஒண்ணிறவொளியுநீரினுமைநறுஞ்சுவையுமோங்கு
மண்ணிடைமணமுநீயேமற்றுனைமகனென்றெண்ணா
தண்ணன்மெய்ப்பொருளென்றெண்ணுமறிவுதந்தருளவேண்டும். ௨

அண்டமுமவற்றுணின்றவாருயிர்த்தொகையுமற்றும்
எண்டகுமமரர்யாருமிறைவர்மூவருமொருங்கு
பண்டருமறையினேடிப்பார்க்கினின்னுடைமையாவர்
தொண்டரேமெமக்குவாளாத்தூயறிவுதவல்வேண்டும். ௩

யாவுமாய்நின்றநின்னையிறைவனென்றறிந்தாலன்றி
வீவிலாவினைகளெல்லாம்வீட்டுமாவேட்கலாமே
பூவைபோனிறத்தாயென்றுபுகலுழிப்பூவைபோலத்
தேவகிவந்துசெவ்வாய்திறந்தனள்செப்பலுற்றாள். ௪

துஞ்சியபுதல்வற்கொண்டுதுணையறுகுரவற்குத்தாய்
வெஞ்சினவுருமேறன்னவெகுளியங்களிநல்யானைக்
கஞ்சன்முன்கோறல்செய்தகருங்கடற்பவளச்செவ்வாய்
மஞ்சரைத்தருகவென்றுமனங்குழைந்துரைத்துநைந்தாள். ௫

இளங்கிளிமழலையன்னையிசைத்தசொல்கேட்டலோடும்
உளங்கசிந்துருகவின்னேயுய்த்துநீகாண்டியென்னாக்
களங்கனிவண்ணன்மற்றைக்கலைமதிவண்ணனோடு
வளங்கெழுசுதலலோகம்வல்லையிற்சென்றுசார்ந்தான். ௬

காவலனாகிமற்றுக்கண்ணகலுலகங்காக்கும்
மாவலியெதிர்கொண்டேத்திமலரடியிரண்டினானே
மூவகையுலகங்கொண்டமுழுமுதலுற்றவண்ணம்
யாவதோவென்னப்பூவைவண்ணனாங்கினிதியம்பும். ௭

ஆறறிமரீசிமைந்தரறுவருமலரோனீன்ற
நாறிணர்க்கோதைகொங்கையந்தனரென்றுதக்கார்
வீறினால்விரிஞ்சன்சாவவினைவினாலவுணராகி
ஈறிலாவுணர்வுகுன்றியிரணியற்குதித்தாரன்றே. ௮

சிறந்தவெண்முறுவற்செவ்வாய்த்தேவகியகட்டின்மீட்டும்
பிறந்தனர்பிறங்குஞாங்கர்ப்பெரும்படைக்கஞ்சன்வீட்ட
இறந்தனர்வந்துநின்பாலிருந்தனர்தருகவென்றுங்
குறைந்தவர்தமைக்கொண்டெய்தியுய்த்தனனன்னைக்கன்றே. ௯

நீட்டருஞ்செவ்விவாய்ந்தசெகுமகப்பலவுங்கண்டு
வாட்டடங்கண்ணீர்வாரவாரினளணைத்துமோந்து
மோட்டினக்குரும்பைவென்றமுலைசுரந்தொழுகுதீம்பால்
ஊட்டினள்முறுவன்மாந்தியுவந்தனள்பெரிதுமுள்ளம். ௧௦

உடைதிரைவேலைஞாலமுண்டவனுண்டபைம்பொன்
தடமுலையுண்ணப்பெற்றதவத்தின்வெஞ்சாபநீங்கிக்
கடவுளாகிமன்றற்கற்பகத்தருவினீழல்
அடைகலுற்றனரான்மற்றவ்வறுவருமுவகைகூர்ந்தே. ௧௧

இறந்தகுழவிகளைக்கொணரத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௯௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௪௮-வது, சுபத்திரைமணமுறைத்தவத்தியாயம்.

### கலிவிருத்தம்.

என்னலுமணிக்கழையிசைத்தமுகிறங்கை
மின்னிகர்சுபத்திரையைவென்றிகெழுபார்த்தன்
நன்மணமிழைத்ததுநவின்றருள்கவென்று
மன்னவனுரைப்பமறைமாதவன்வகுப்பான். ௧

ஆயிரமணிச்சுடிகையண்ணலாவேந்து
மாயிருநிலத்தினில்வளங்கொள்புனலெல்லாம்
தோய்தரவெழுந்துதழறும்முபடையொன்றோர்
சாயவில்வணக்கியதனஞ்சயனடந்தான். ௨

கன்னியுயர்பொன்னியொடுகங்கைமுதலாகப்
பன்னியநதித்துறைபடிந்துகடல்வண்ணன்
மன்னியசெழுந்துவரைமாநகர்மருங்கோர்
பொன்னெழுகுசாரல்வரைபோயினிதுபுக்கான். ௩

அத்தலையமர்ந்துறையருந்தவர்களெல்லாம்
முத்தெறிதடந்திரைமுழங்குதுறையாடா
மத்தமதயானையெனவந்தடையும்வல்வில்
வித்தகனைநண்ணினர்விழைந்ததுகிளைப்பார். ௪

தோடணிசெவிப்புனைசுபத்திரையைமுன்றேன்
ஆடரவுயர்த்திடுமவற்குதவநாடும்
நீடுபுகழ்வில்வலனுக்குதவவென்னும்
கோடுயர்தருப்புவிகொணர்ந்தபுயலென்றார். ௫

அவ்வுரைசெவிப்படலுமம்மென்முகைவிள்ளும்
மவ்வல்கமழ்வார்குழன்மழைக்கண்மடமானை
எவ்வகைமணம்புரிதனவெண்ணினனிருந்தான்
வெவ்வமர்கடந்தவரிவில்விசயன்மாதோ. ௬

வண்ணவளைமாதினைமணக்குநெறியென்னென்
றெண்ணினனிருந்தவனிரும்பெரியமுக்கோற்
பண்ணவருருக்கொடுபடர்ந்தனன்மலர்த்தார்க்
கண்ணனுறைகின்றதொருகன்னிநகரத்தே. ௭

அறிந்தனனிருந்துமிகலாளரியனனைத்
துறந்தவனடைந்தனனெனத்துளிமதுச்சோர்
நறுந்துளவமாலைபுனைநம்பிகிளையோடும்
செறிந்தடிபணிந்துயர்சிறப்பின்வழிபட்டான். ௮

பிள்ளையளியுண்ணநறைபில்கியமலர்த்தார்
வள்ளலுறைகைதவமனைத்தும்வறிதேனும்
உள்ளலனிலாச்சொரியுமோர்குழையணிந்த
வெள்ளைவளைவண்ணனும்விரும்பிவழிபட்டான். ௯

அன்னவ்வசுதேவன்மெய்யறந்தலைமணந்தோய்
நண்ணுமதியித்தலையிறென்றுமதியென்றே
உண்ணெகிழ்வுபூசனையுவப்பினுடனாற்ற
விண்ணரசுதந்தவன்விருப்பிலென்றுமேயினான். ௧௦

பின்னொருவினாட்குமணிமேகலைமிழற்ற
அன்னமெனநூபுரமலம்பவிளையாடும்
நன்னயசுபத்திரையைநச்சிலையவேற்கட்
கன்னியைமறைக்கொழுகுகாளையெதிர்கண்டான். ௧௧

அண்டமுழுதாளிதருமாடல்வரிவிற்கைக்
கொண்டல[illegible]யான்வலமருங்கு[illegible]வளர்தோளும்
மண்டலமிறைக்குமதிவாண்முகமுநோக்கா
வெண்டரளவாணகையும்வேல்விழிகளித்தான். ௧௨

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கிளைத்தசெந்தளிர்ப்பூஞ்சோலைகிளரெரியெழுந்துபொங்கி
வளைத்தணைகொடியசாபம்வளைத்தவன்மாதுறாக்கான்
களிக்கயலன்னவுண்கட்கன்னிதன்செய்யமேனி
தளிர்க்கவின்வாடவந்துதளிர்த்ததுகாமவெந்தீ. ௧௩

பொருதடஞ்சிலைக்குப்பார்த்தன்பொருவிலானேனுஞ்செய்ய
திருமலர்நெடுங்கட்பேதைதிருமுகத்தெழுதிவைத்த
இருபெருஞ்சிலைக்குமாரனிருகடைகுழையவாங்கும்
ஒருபெருஞ்சிலைக்குஞ்சாலவுரனழிந்துருகுமம்மா. ௧௪

அங்கனுழ்மேனிமற்றோரணங்கினைமணஞ்செய்கிற்பான்
வெங்கயல்பொருதுவென்றவில்வலான்மெல்லென்சாயற்
கொங்கவிழ்கோதைமாதர்குழைபொருதலைக்குழுண்கட்
செங்கயல்பொருதற்காற்றான்றெருமாலெய்திச்சாம்பும். ௧௫

பிறையினங்குழவிபோலப்பிறங்குமுத்தாரம்பூணான்
துறவினர்படிவங்கொண்டுதோன்றியவறிவிற்றோன்றல்
மறுவறுமதியமன்னமதிமருள்வனப்புவாய்ந்த
நறுநுதன்முறுவன்முத்தநகையெழுநலிவான்மாதோ. ௧௬

நறவுவாயுறைக்குமந்தணளினமுமதியுங்கூடி
உறவுகொண்டெதிர்ந்தபோதுமோசனையுடையுஞ்செவ்வி
முறுவல்வாண்முகத்தினைமுகந்தனன்கொண்டுபோகப்
பெறுவதோர்காலநோக்கிப்பெட்பொடுவைகினானால். ௧௭

போந்தைமீறுயர்த்தவென்றிப்புரவலனாதியாய
வேந்தெலாந்திரண்டோர்தெய்வவிழாவணிகாண்டற்கேகக்
கூந்தலம்பரித்தேர்க்கண்ணன்குறிப்பறிந்திருந்தபார்த்தன்
மாந்தளிர்மேனியாளைவெளவினன்போயினன்மன்னே. ௧௮

வில்லெனப்புகன்றுபொங்கிநெருப்பெழவிழித்துச்சூழ்ந்த
தொல்லெயிற்கடைகாப்பாளர்தொலையவெஞ்சிலைகால்கோட்டிப்
பல்லுளைப்புரவித்திண்டேர்பாகின்மென்மழலைதூண்ட
மல்லலைத்தெழுந்ததோளான்மணிநகர்வல்லைச்சென்றான். ௧௯

கலிநிலைத்துறை.

மழையொன்றுமின்னுக்கொடியன்னவம்மாதைவஞ்சித்
தழையொன்றுபார்த்தனுடன்கொண்டுநடந்தவண்ணம்
குழையொன்றணிந்தகுருதிப்படைவள்ளல்கேளா
அழலொன்றுவெங்கணரவென்னவழன்றுமிக்கான். ௨௰

விடப்பாழிவாய்வெவ்வரவக்கொடிவேந்தனுக்கே
கொடுப்பானிருந்தகுவளைத்தடங்கண்ணினை
எடுப்பான்கொல்வஞ்சித்திகற்பார்த்தனென்றேங்குநீலக்
கடற்பார்கலங்கச்செழுந்தாமரைக்கண்சிவந்தான். ௨௧

சீறற்கயாவுந்தெரிந்தோய்நறுந்தேங்கொடாரான்
ஊறுற்றகன்னியுறற்கெங்குரியாள்கொலென்று
மாறற்றதெய்வமணிவண்ணன்முன்மல்குசீற்றம்
மாறற்றவைமந்தவுரைகூறினனாற்றினானேல். ௨௨

நிழலுற்றவொற்றைக்குடையாளெனுநிலமேகத்
தெழிலுற்றமாயன்கொடைப்பாலன்யாவுமுய்ப்பக்
குழையுற்றபொன்னங்கொழுந்தன்னவர்கொம்பனாளை
விழைவுற்றபார்த்தன்விதியான்மணமாற்றினனால். ௨௧

சுபத்திரைமணமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௩௪௧.

ஸ்ரீகிருஷ்ணஜயம்.

---

## ௪௯-வது, மிதிலைக்குச்சென்றவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மதிதவழ்குடுமிமாடமறுகுசூழ்மிதிலைமூதூர்
எதிரிலாச்சுருதிதேவனென்னுநான்மறைவல்லோனும்
நிதைமலாலங்கல்வெள்வேற்சனகனுங்கமலச்செங்கட்
கதிர்மணிவண்ணற்கன்புகனிந்தனர்வைகினாரே. ௧

கசிந்துநெஞ்சுருகுவாரைக்கண்டருள்புரியவேண்டி
அசும்புபொன்றொடையம்மானரக்கிதழ்முளரிபூத்த
பசும்புயற்கொழுந்துபோலப்பழமறைமுனிவரோடும்
விசும்புவீழ்திருவிற்றூயமிதிலைமாநகரமேயான். ௨

பொருகடல்புலம்பமுல்லைப்புலத்தினில்வளர்ந்தநீலக்
கருமுகின்முருகுவிம்முகமலமுமொத்தசெங்கண்
அருண்மழைபொழிந்துதோன்றவகங்களிந்திருகுமன்பர்
இருவருமுவகைமீதூர்ந்தெழுந்தனரெதிர்கொண்டாரால். ௩

என்மனையடைதல்வேண்டுமென்மனையடைதல்வேண்டும்
தொன்மறைமுதல்வமுற்றத்துறந்தவர்துணைவவென்றுப்
பொன்மதின்மிதிலைவேந்தும்புரையறுமறைவலானும்
பன்மலர்தூவிப்பல்காற்பணிந்தனர்பரவினாரே. ௪

முத்தொழிலாத்தற்காகமூவுருக்கொண்டுநிற்கும்
வைத்தவாளரவப்பள்ளிப்பாற்கடற்பரமனங்கே
எத்தகையவர்க்குந்தோன்றாவிலங்குமீருருக்கொண்டாங்கண்
அத்தகையிருவரில்லுமடைந்தனனருளின்மன்னோ. ௫

பாவியும்பணிந்துமின்னம்பழமறைகாண்டற்கெட்டா
ஒருதனிமுதல்வனம்பாலுறுவதற்கமையாமுன்
புரிதவமென்கொலென்றுப்பொருவிலாச்செல்வராய
இருவருமுற்றவோகையாவரேயியம்பற்பாலார். ௬

உள்ளமுமுரையுஞ்செல்லாதோங்கியபரமாநந்த
வெள்ளமாய்நின்றதோன்றல்விரிதிரைக்கங்கைவெள்ளந்
துள்ளியகமலப்பொற்றாள்சுழித்துமட்டொழுகுமந்தண்
வள்ளிதழ்ப்போதுதூவிவாழ்த்தினர்வணங்கலுற்றார். எ

இருபிறப்பாளனேற்றவிலைமலர்கனிநீர்கொண்டு
புரிதலுற்றனனாற்பூசைபூம்புகையெடுத்துத்தெய்வ
விரைகமழ்மலருஞ்சாந்தும்விழுச்சுவையமுதுங்கொண்டு
வரையெனத்திரண்டதிண்டோண்மன்னவன்வழிபட்டானால். அ

வழிபடுமறைவல்லோனும்வாங்குவிற்றடக்கைவேந்தும்
அழிவில்பேரின்பமெய்தவருள்புரிந்தாழிவேலிச்
செழுநகரடைந்தான்றெய்வத்திருமறைவழுத்தநின்ற
முழுமணிவண்ணனென்னமுனிவரன்மொழிந்தான்மாதோ. கூ

மிதிலைக்குச்சென்றவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கருஎO.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ருO-வது, சுருதிகீதையுரைத்தவத்தியாயம்.

---

### கலிவிருத்தம்.

உரைகடந்தவொருதனிச்செல்வனைத்
தெரியநான்மறைசெப்புவதெங்ஙனம்
விரியமற்றதுவிள்ளுதல்வேண்டுமென்
றரசுகேட்பவருந்தவன்கூறுவான். க

கண்ணகன்றகடற்புவிகாத்தருள்
அண்ணலானையரசமற்றன்னது
நண்ணிமுன்னநாரணர்தங்கடேத்
தெண்ணுமீர்ந்தமிழ்யாழ்முனிகேட்டதால். உ

சனகனாதிதபோதனர்க்கீறிலா
வினையெறிந்துவிளங்குசனந்தன
முனியெடுத்துமொழிந்திடப்பட்டதால்
இனிதுகூறுதுமிங்கென்றியம்பினான். ங

உயர்நலத்திற்றருமுலகேழுமுண்
டயிலெயிற்றரவரவணைமீமிசைப்
புயலெனத்துயில்பூமகள்கொண்கனைத்
துயிலெழுப்பினதொன்மறைவாழ்த்தின. ச

வியக்குஞ்செல்வவிரைமலர்மென்பியல்
நயக்குமார்பகளிளமலர்த்துபாத
பயக்குமுத்திப்பரமவிம்மன்னுயிர்
மயக்குமாயையின்மாற்றிடவேண்டுமால். ௫

முடியுமாறுமொய்கதிர்ப்பட்டதும்
தொடியுஞ்செஞ்சுடர்தூற்றுபொன்றகல்போல்
படியுநீருங்கனலும்பவனமும்
நெடியவானமுநின்னைவதில்லையால். ௬

திருந்துநின்கதைத்தெள்ளமுதத்தினைப்
பரிந்துநாளும்பருகுவதல்லது
வருந்தியைம்பொறிவாடுறவீழ்சரு
கருந்துவார்கொலறிஞர்களாழியாய். ௭

பகைத்துநாடொர்பற்றுமாற்றுனை
அகத்துநாடோரயலிருவரும்
நிகர்த்துன்சேவடிநீழல்வந்துற்றனர்
மிகுத்தநின்னிலைவிள்ளவல்லேங்கொலோ. ௮

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மடலவிழ்கமலம்பூத்தமழைமுகிலனையாய்மற்றுன்
தடமலரனையசெம்பொற்றுணிழலடைந்தாரன்றே
விடமுமிழ்கனற்கட்பேழ்வாய்வெருவருமுருவக்கூற்றின்
அடுதிறல்வெருளிவேகத்தாழனூழ்கலாரே. ௯

விட்டலர்பசும்பொற்றேட்டுவேரியங்கமலத்தோனும்
எட்டிநின்னிலைமையின்னுயிற்றெனத்தெரிதறேற்றான்
வட்டவாய்த்திகிரிச்செங்கைவள்ளலவ்விரிஞ்சனீனப்
பட்டவர்தெரிகிற்பார்சொல்பார்க்கினின்னிலைமையம்மா. ௧௦

புனிதமற்றுன்னையல்லாப்பொருள்பரப்பிரமமன்றால்
எனவெடுத்துரைப்பதல்லாலீதுருவேதோற்றமின்றித்
தனிமுதலாகிநின்றசச்சிதானந்தமூர்த்தி
நினைவருஞ்சுடரோநின்னைநிகழ்த்துமாறறிகிலோமால். ௧௧

என்றனமறைகளம்மவிம்முறைமறைகளெல்லாம்
நன்றறிவியாதனல்யாழ்நாரதனவிலக்கேட்டு
மன்றமற்றெனக்குச்சொற்றான்மானவேயரசவென்றுத்
தன்றுணையின்றிநின்றதபோதனன்சாற்றினனே. ௧௨

சுருதிகீதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

௮௨ திருவிருத்தம் ௧...

---

## ௫௧-வது, விருகாசுரனைக்கொலைபுரியத்தியாயம்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இரப்புறுமிறைவற்றாழ்வோரிருநிதியெய்துமாறும்
திருப்புணரிறைவற்றாழ்வோர்செம்பொருள்விழையாவாறும்
விரித்திடவேண்டுமென்றுவிரிதிரைப்பரவைமுந்நீர்
வரைப்பெலாம்புரப்போன்கூறமாதவன்வழங்கலுற்றான். ௧

தருமனிவ்வண்ணங்கேட்பத்தழைந்தவீட்டின்பம்யாவர்க்
கருள்செயவிழைந்துநின்றேமாங்கவாவடையப்பட்ட
பொருளெலாங்கவர்வம்யாமேபுரவலவென்றுசெங்கட்
கருமுகிலன்னகண்ணன்கனியிதழ்விண்டுசொன்னான். ௨

ஆதலானழிவொன்றின்றியதிசயமாகிநின்ற
மேதகுபரமானந்தமேவுமாவிழைந்துநின்ற
தீதிலாவுணர்வினார்பாற்செறியுமவ்வெறுக்கையாவும்
தாதுலாந்துளவத்தாமத்தற்பரனகற்றுவானே. ௩

புயலுறழ்கவிகைமன்னபொருவிலாத்தனிவீட்டின்பம்
வெயில்பொழிமணியினோடுவெண்டிரைக்கடலிற்றோன்றும்
குயில்புணர்கொழுநனீவான்குன்றெனப்பணைத்தகொங்கை
மயிலியல்பாகத்தண்ணல்வளர்பொருள்வழங்குமாதோ. ௪

அரவணைத்துயிலுமம்மானளிக்கலான்விரைவின்யார்க்கும்
வரைமயின்மருவுபாகனளிக்கலான்வண்டுண்கொன்றை
விரைகமழ்வேணியீசன்விழைந்ததுவிரைவினல்கும்
ஒருகதையுரைக்குதுங்கேளொற்றைவெண்கவிகைவேந்தே. ௫

### கலிவிருத்தம்.

விரைந்துவிருகாசுரன்விளங்குதனதாகம்
அரிந்துபகலாறெரியழற்றலைசொரிந்தான்
கருந்தலையறுப்பவருகண்ணுதல்விலக்கா
வரந்தருதும்வேட்டதுவழங்கெனமொழிந்தான். ௬

துப்பினெடுமுத்தலைசுருட்டுசடைசுற்றும்
இப்புவியின்வாளினெவர்சென்னிமிசையேனும்
முப்புரமுருக்குதிறன்முக்கணிறையென்கை
வைப்பினவர்சாவுறவரந்தருதியென்றான். ௭

அன்னதுகளிற்றுரிவையண்ணலுமளித்தேம்
என்னவதுதேர்தரவிளம்பிறைபுனைந்தோன்
சென்னிமிசையேதனதுசெய்யகரம்வைப்பான்
உன்னியெழமுக்கணிறையோடினன்விரைந்தே. ௮

அளித்திடும்வரத்தினைவலித்திடவுகந்தேன்
துளித்திடுகடுக்கையொடுதாரிலவெறிக்கும்
இளைத்தமதிவேணியனெவ்வுலகுமோடிக்
களித்தவிமலைக்கொடியின்கோயிலடைந்தான். ௯

சிந்தவமுதத்துவலை திங்கண்முடிவைத்தோன்
வந்துபுகல்புக்கிடலும்வாளவுணன்முன்னம்
உந்துதிரைவேலியுலகுண்டமணிவண்ணன்
அந்தணரெழிற்குமாளுகியெதிருற்ருன். கO

வாட்டிறல்விளங்கவுணர்மன்னனைவழங்கா
ஓட்டமெவனென்னவவனுற்றதுகிளப்பத்
தீட்டரியவெண்முறுவல்செய்துகைபுடைத்துச்
சூட்டரவமீமிசைதுயின்றபுயல்சொல்லும். கக

வாய்விரியருக்கமலர்மாலைதலைசூடாக்
காயழல்பரந்தசுடுகாடெழிலரங்காப்
பேயொடுநடிக்குமொருபித்தனுரைமெய்யோ
ஆய்மறைசொறக்கனுரையாசுறுதலுண்டோ. கஉ

மின்ளெழுகுகொற்றவடிவேலுழவமற்றுன்
சென்னிகரம்வைத்ததுதெளிந்திடுதலன்றே
நன்னிலைமையித்திறமுணுடுதியெனத்தன்
மன்னியதடக்கைதலைவைத்தவுணன்மாண்டான். கங

நன்றெனமகிழ்ந்தமரர்நாண்மலர்பொழிந்தார்
வென்றிமழுவாளனும்வியந்தனனடந்தான்
மன்றல்கமழ்தண்டுளவமாயனுமகன்ருன்
என்றுமுனிபுங்கவனெடுத்தனனிசைத்தான். கச

விருகாசுரனைக்கொன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கடுகசு.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்.

---

## ருஉ-வது, பிருகுமுனிசென்றவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முருகுலாமலரினுன்கொன்மூளரியக்கண்ணினுன்கொல்
உருகெழுமழுவலான்கொலுயர்பரம்பொருளாவானென்
றருமறைமுனிவர்தேவரைத்தவித்துயர்தவாற்றற்
பிருகுமாமுனிவன்றன்னைப்பெட்பொடுவினுதல்செய்தார். க

மூவரின்முற்குணத்துமுழுமுதல்யாவனென்ன
ஓவறவினிதிணுய்வலுடன்றுமற்றேனுர்சாவம்
எவினன்னேரின்யாமுமெளியமோவுரைமினென்றுத்
தேவுமெய்த்தவக்குன்றன்னுல்சென்றனன்விரைந்துயன்றே. உ

அத்தனன்மலர்மேலானையடைந்தனன்வணங்காநிற்பத்
தந்தையையவணங்காநிற்றறக்கதேயென்னக்கட்டுச்
சிந்துபுளினக்குக்கோயிநீர்கெனச்சினந்துசெப்பிக்
கொந்தழன்மழுவலாளன்குளிர்வரைச்சாரல்சார்ந்தான். ௩

சார்ந்தனனன்னகாலைத்தழல்வணனுமையாள்கொங்கை
ஆர்ந்தனனின்பந்தூய்க்குமமைதியென்றறிந்தன்றோர்க்குப்
பேர்ந்திருகுறியும்வீழப்பெரிதுரைத்தகறலோடும்
ஓர்ந்துமுக்கணனுழைப்பவொய்யெனப்பெயர்த்தும்வந்தான். ௪

உற்றவிம்மறைவலோனம்முடன்பிறப்பென்றுவெவ்வாய்ப்
புற்றரவணிந்தோணீத்தோற்புல்லுவாறுறலுந்தீண்டேல்
நிற்றிநீதூய்மைநீத்தாயென்னலுநீடுசெந்தீ
நெற்றியிற்கண்டிறந்துநீடழலேற்றுகின்றான். ௫

மாதவனடுக்குறாதுவளர்கழற்பெருவிரற்கண்
வேதுறுசெந்தீயேவிவிழித்தழல்செகுத்துமற்றும்
ஓதுநான்மறையோர்போற்றுமுயர்பிராமணியதெய்வம்
ஆதனீயொழிகவென்றறைந்தனன்கடுகிச்சென்றான். ௬

அறங்கரைநாவினன்போயலம்புபாலாழிவந்து
பிறந்தவின்னமுதின்சாயற்பிறைநுதலரிவைவாழைக்
குறங்கின்மேற்சென்னிவைத்துக்கொண்டலங்கொழுந்துபோல
உறங்குமப்பரமன்மார்பினுதைத்தனனென்பமன்றே. ௭

தடங்கடலுலகமுண்டதனிமுதலெழுந்துமின்னின்
சுடர்ந்தபொற்றொடிசூழ்செங்கைத்துணைமலர்கூப்பிநீவந்
தடைந்தமையறிந்திலேன்யானருமறையந்தணாளா
இடந்தருபொறுத்தியென்றுகேண்மையினியம்பினனால். ௮

ஒருநிலைபெற்றவுள்ளத்துயர்முனிதலைவமற்றுன்
மருநிலைபெற்றபொற்றாமரையடிபட்டவாற்றால்
திருநிலைபெற்றதாலென்செய்யதார்மார்பமென்றான்
தருநிலைபெற்றவானந்தாழ்ந்தபொற்றாளம்மானே. ௯

கண்டனன்முனிவன்றெய்வக்கங்கையங்கறையினெய்தி
விண்டனநிகழ்ந்தவெல்லாம்விழுத்தவர்க்கிழவர்கேளா
ஒண்டிறலொழியானேவுயர்பரம்பொருளாமென்றுக்
கொண்டனர்கொண்டுநெஞ்சங்குழைந்தனர்பாவினோரே. ௧0

பிருகுமுனிசென்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௧0௯.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

# ௫௩-வது, இறந்தமக்களைத்தந்தவத்தியாயம்.

---

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரைசெய்பூந்துளவத்தண்டார்விண்ணவன்விளையாட்டின்னும்
உரைசெயவொன்றுகேட்டிவொலிகடலுலகந்தாங்கும்
வரைசெய்தோண்மன்னவென்றுவாண்முகமலர்ந்துவாரித்
திரைசெய்தெள்ளமுதங்கைப்பத்திருமுனிசெப்பலுற்றான். ௧

மோதுவெண்டரங்கவேலைமுற்றியதுவரைமூதூர்
ஓதுநான்மறைவலாளனொருவன்வந்துதித்தபோதே
காதலங்குழவிமாயக்காவலன்கடைக்கொண்டேகி
ஆதகாதரனேயென்னாவழுதழுதாற்றினானால். ௨

இளம்பசுங்குழவியோரெட்டிறந்துபாடெய்தவிவ்வா
றுளங்கசிந்துருகிமீட்டுமொண்பசுங்குழவிதுஞ்ச
வளங்கெழுவேந்தன்கொற்றவாய்தலிற்கொணர்ந்துசென்று
துளங்கியமறைவலாளன்சோர்ந்தனன்புலம்புவானால். ௩

அல்லலுற்றழுங்குகின்றவந்தணன்வதனநோக்கி
மல்லலங்குழவியிங்ஙன்மாய்ந்திடாவண்ணங்காப்ப
வில்வலாரில்லைகொல்லிவ்வியனகர்ப்பாப்பிலென்னாப்
பல்லுளைப்புரவித்திண்டேர்ப்பார்த்தனுங்கியம்பினானே. ௪

அருமறையந்தணாளனவ்வுரைகேட்டலோடும்
ஒருகுழையொருவன்றன்னிலோங்கலான்மாரிகாத்த
விரைமலர்த்தாரினானின்வில்வலாய்கொல்லோசெங்கட்
குரிசினீயென்றுநெஞ்சங்குழைந்தனன்கூறினானே. ௫

அலப்படையவனுமல்லேனதிர்புயன்மாரிகாப்ப
மலைக்குடையெடுத்துநின்றமணிநிறமாலுமல்லேன்
நலத்தகுமறைவலாளநானிகல்விசயன்மற்றென்
சிலைத்தொழில்காண்டியென்னாத்தேர்ந்துரையாடலுற்றான். ௬

எழில்வளர்குழவிதோன்றினினியுயிர்காப்பல்சாவா
தொழிவனேலழலின்மூழ்கியுள்ளுயிர்துறப்பலென்னா
மழலைவண்டுழலுந்தாரோன்வஞ்சினமுரைப்பக்கேட்டாங்
கழுகுரலந்தணாளனகன்மனைகுறுகினானால். ௭

அங்கமோராறுந்தேர்ந்தவந்தணனன்பின்வேட்ட
கொங்குடைந்தொழுகுமன்றற்குழல்கருக்கொண்டுபத்தாம்
திங்கள்வந்துற்றகாலைச்செம்மனீகாத்தியென்று
வெங்கொலைபழுத்தபோர்வில்விசயனுக்கியம்பிமீண்டான். ௮

வர்கணிந்தொழுகுமாதினீற்றறைமருங்குமுற்றும்
ஆரமர்கடந்தவெம்பியடுசரக்கூடமாக்கிக்
கூருறுபகுவாய்வெய்யகூற்றமுமகலுங்கியஞ்சக்
கார்முகங்குழைத்துநின்றுகாத்தனன்பார்த்தன்மாதோ. ௯

வேணவாத்தழைந்துமொய்த்தவெண்ணகைக்குமுதச்செவ்வாய்ப்
பூண்முலைமாதரெல்லாம்பொம்மெனப்பொருமியேங்க
மாணெழில்கனிந்தபேதைமாதிளவயிறுவாய்த்த
காண்வருகுழவிதானுங்காண்கலாக்கரந்ததன்றே. ௧௦

கூற்றுயிர்வாரும்வண்ணங்கொடுஞ்சிலைகுழையவாங்கிக்
காற்றுறழ்கவினமான்றேர்க்காளைநீகாத்தவாற்றால்
தோற்றியகுழவிமெய்யுந்தோன்றலதொளித்ததேயென்
றாற்றலனாகிமற்றவ்வந்தணனாற்றினானே. ௧௧

விற்றிறனன்றுகாப்பவில்வலாரிலைகொலென்னும்
சொற்றிறனன்றுகாத்ததொழிலுநன்றம்மவென்னாப்
பற்றலர்பரவுநோன்றாட்பார்த்தனைப்பலகானோக்கிக்
கற்றுணர்மறைவலாளன்கரைந்தனன்கலுழ்ந்தானன்றே. ௧௨

அலைதுறந்துயிர்த்தாழ்ந்தவந்தணன்குழவியீரேழ்
உலகமுந்தேடிக்காணாதொள்ளழற்புகுவலென்னா
மலைகொலாமென்னவீங்கிவனப்புவீற்றிருந்தவார்பொற்
சிலைகுலாந்திண்டோட்பார்த்தன்செந்தழல்வளர்த்தானங்கே. ௧௩

பாட்டிளஞ்சுரும்புமூசுபனிமலர்க்கானஞ்செந்தீ
ஊட்டியகுரிசின்மற்றாங்கொள்ளழற்புகுவானிற்பக்
காட்டுவங்குழவிதன்னைக்காண்டிநீயென்றுகண்ணன்
கோட்டினிற்செய்ததேர்மேற்கொண்டனன்போயினானால். ௧௪

ஆழிமால்வரையினப்பாலடரிருட்பிழம்பிற்செல்லா
ஆழியந்தடந்தேர்பூண்டவலங்குளைப்புரவிசிற்ப
ஆழியைவிடுத்தான்செஞ்சுட்டாயிரந்தலையநாகத்
தாழிவாய்த்துயிற்சிநீத்தவாயிரஞ்செங்கணம்மான். ௧௫

ஒள்ளழற்பரிதிகோடியுட்கும்வாளொளியநேமி
அள்ளிருட்பிழம்புடைக்கியலர்கதிர்க்கற்றைதூற்றப்
புள்ளியகவினமான்றேர்ப்பொருக்கெனப்பறந்துபொங்கு
வெள்ளிவெண்டரங்கமாடுவிரிகடலிறந்ததன்றே. ௧௬

கலிநிலைத்துறை.

பின்னல்வெண்டிரைப்பெரும்புறக்கடன்முகட்டிடையே
மன்னுசெங்கதிர்மணிமுடியாயிரங்கவித்த
பன்னகத்தின்மேற்பணைப்புயமெட்டொடுங்கிடந்த
கன்னியந்துழாய்க்கருங்கடல்கண்டனர்தொழுதார். ௧௭

துளும்புசெஞ்சுடர்மகுடமுந்தொடியும்வார்குழையும்
வளங்கொண்மால்வரைமார்புசேர்கவுத்துவவணியும்
கிளர்ந்தபேரொளிமின்செயக்கிடந்தவப்பெருங்கார்
தெளிந்தநல்லமுதருத்தெனவின்னுரைசெப்பும். ௧௮

கன்றுனாவியமாவெனுதிர்த்தெனவிளவிர்குற்றெறும்
கலைகளாகியநங்கையான்கானபதாகருதி
அலைகுலாவியவசனிலவசைப்பிறங்குறித்த
குலவுகடைவொழித்குழலிகனிவ்வழிக்கொணர்ந்தேதம். ௧௯

கறையுயிர்த்தசூர்த்தாரினிர்கனிகடன்குராவப்
பொறைநவிர்த்தநீர்வம்மிவென்றின்றுணைபுகலா
மறைவடிந்தவன்மாவெணுதிர்க்குழலிகள்பத்தும்
வழிநிறைக்கடலுயின்றருளிறையவனிந்தான். ௨0

சூழ்முகற்பொருள்முராரியந்சேவடிவணங்கி
மழைமதக்களிமேலிமருப்பொசித்தமாதவனும்
எழுவெலப்பலைத்தேந்துதோள்விசயனுமீளாக்
குழவியத்துமக்குலமறையவற்கவட்கொடுத்தார். ௨௧

உன்றுமின்றவக்குழவிகளெய்தலுமுயிர்த்தேதார்
துன்றுமின்றபேர்மகிழ்ச்சியைச்சொலவெவர்வல்லார்
மன்றுமின்றநம்மாயவன்மகிமபலவியற்றி
மின்றுமின்றனன்னிதித்திரன்வேதியர்க்களித்தான். ௨௨

வேலைமாநிலமெல்லியலரும்பொறைநிரை
ஆலமன்னவாளாவொடுபொருவிளையாடு
கிலமேனியனீர்விளையாட்டுவந்தனைக்கற்
கோலவார்குழற்கோதையர்குழாத்தொடுமணந்தே. ௨௩

இறந்தமக்களைத்தந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௧௨௩.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்.

## ௩௪-வது, புனல்விளையாட்டத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

போர்விளையாடுகூர்வேற்புரவலகேட்டியென்றுச்
சீர்விளையாடுபொற்பூந்திருப்புணர்மார்வத்தண்ணல்
மார்விளையாடுதண்ணங்காடுரும்மதுரைமூதூர்
நீர்விளையாடுவண்ணநிகழ்த்துவன்முனிவன்மாதோ. ௧

கலிவிருத்தம்.

எவ்வமற்றுறையெண்ணிரண்டாயிரம்
கொவ்வைவாய்ச்செழுங்கோதையரின்புற
ஒவ்வொருத்தருக்கொவ்வொருகாந்தனுச்
செவ்விவாய்ப்பத்திகழ்ந்தனன்செங்கணன். ௨

காந்தண்மெல்விரற்காரிகையாரொடும்
பாந்தண்மேற்றுயில்பண்ணவன்பல்பிடிக்
கூந்தன்மாவொடுகுஞ்சரமெய்தல்போல்
சாந்தளாவுதடத்தடைந்தானரோ. ௩

ஞாலமீனுநடந்துபன்மின்னொடு
நீலமேகநெடுங்கடலாடல்போல்
சேலுலாவுதட்டேவியர்தம்மொடு
கோலிவாவிகுடைந்தனன்மாயவன். ௪

வாங்குகோலமருங்கினர்வந்துற
ஒங்குறாபுரத்தாலினமாமெனப்
பாங்கர்மேவிப்படர்நடைகாண்டலும்
ஆங்குநாணியகன்றனவன்னமே. ௫

பூவின்மென்காத்தான்முனம்புள்ளடும்
காவிவண்ணன்வருவதுகண்டுகொல்
தாவினன்மலர்சார்ந்துறைபுட்குலம்
வாவிவிட்டுமறைந்தனவல்லையே. ௬

வேறு.

அல்லியந்தாமரையாவிசுற்றினர்
மல்லியம்பற்பலர்பாடல்யாழ்பலர்
முல்லையங்குழல்பலர்முழக்கினார்புகழ்
மல்லடுபுயத்தனைவழுத்தினாரோ. ௭

மந்தரநிகர்தருமலையினான்முனம்
அந்தரமழைதடுத்தாண்டவாண்டகை
எந்திரநீரொடுத்திலகுதோகையர்
சுந்தரத்தனவரைதூவினனரோ. ௮

விரைதருசிவிறிநீர்மின்னனார்தன
வரைதருமாற்றின்மாமாயன்றுரைநீர்
நிரைதருமழைக்கெழினிறத்தினன்றியும்
உரைதருதொழிலினுமுவமையாயினான். ௯

மங்கையர்துகிலுறமாயனங்கையால்
குங்குமச்சிவிறிநீர்கொண்டங்கெற்றலும்
அங்கரவல்குலினழகுதோற்றலால்
நங்கையர்வாவியினாணிமூழ்கினார். ௧௦

நீரிடைக்குளித்தெழுநேயமங்கையர்
வேரியங்குழலினிற்றுறைமேவலால்
ஓரொழுதினம்பொழிந்துருத்தவென்றெழு
காரின்மேற்பொழிவதோர்காட்சிபோன்மரோ. ௧௧

தொண்டைவாயினர்முகத்தோற்றல்பூந்தடம்
அண்டர்கோனடைதலுமதிசெயம்பெறக்
கண்டுசேதாம்பலின்காவிபூத்தெழு
புண்டரிகங்களும்பூத்தபோலுமே. ௧௨

மாக்கருங்கண்ணியர்வளர்ந்தவண்குழற்
றேக்கமழ்மலர்நனிசிதறவாடலால்
காக்களின்மாங்களுங்கமழும்வல்லியிற்
பூக்களும்பூஞ்சுனைபூத்தபோலுமே. ௧௩

மாக்கரும்புயல்புயமகிழ்ந்துநோக்குமவ்
வேற்கண்மங்கையர்முகம்விளங்கன்மீனமார்
பாற்கடனம்பியைப்பார்க்குமாசையால்
சேற்கணங்களுமலர்சேர்தல்போலுமே. ௧௪

விரைதருதாரினன்விளங்குதோளிணை
குரைதருபுனலவர்குடைந்துநோக்கலால்
திரைமிசைமாதரிற்சிதைந்துளேமெனு
வரைமிசைகுவளைபோய்மலர்தல்போலுமே. ௧௫

பங்கயவாவிநீர்படிந்தபாவையர்
குங்குமமான்மதக்குளிர்வெண்சாந்தளாய்ப்
பொங்குநீர்செந்நிறம்பொருந்துசோணையும்
கங்கையும்யமுனையுங்கலத்தல்போலுமே. ௧௬

கழையணிதோளினர்காமுற்றவ்வழிக்
குழகனைவளைத்தனர்குழுமியங்கையால்
எழிலியைப்புணர்ந்துநின்றியங்குமின்னெனத்
தழுவினர்வாசநீர்தாமுந்தூவினர். ௧௭

குருதிவேற்கண்ணினர்குங்குமத்தநீர்
பொருதிறன்மாயவன்புயத்திற்றூவுதல்
வருகதிர்நீலமால்வரையின்மீதிளம்
பரிதியின்கதிர்க்குழாம்பாய்தல்போலுமே. ௧௮

கன்னியர்துளவணிகண்ணன்மேனிமேல்
பொன்னவிரணியினர்பொழிதல்வாசநீர்
மின்னினங்களுநனிமிடைந்துமேகமேல்
துன்னுவெண்டாரைநீர்சொரிதரேற்றுமே. ௧௯

நீளொளிப்புயத்தினீர்நிறைந்தகங்கையாள்
தாளினிற்றவழ்ந்துநற்றகைபெற்றுளென
வாளினிற்பொலிவிழிவாணிப்பேர்நதி
தோளினிற்காண்வரத்தோற்றல்போலுமே. ௨௦

களிதருகண்ணியர்கரையின்மீதுறத்
தெளிதருபுனற்றுளிசிதறல்பூங்குழல்
தளிதருமுகிற்கணஞ்சார்ந்துதண்ணிலா
ஒளிதருமுத்தினமுகுத்தல்போலுமே. உக

இன்னணம்புனல்விளையாடியின்னகைக்
கன்னன்மென்றீங்கியசொல்லியருங்கண்ணனும்
வன்னநுண்டுகின்மலர்மாலைசாந்தெழிற்
பொன்னணிமணியணிபுனைந்துவைகினார். உஉ

வெண்ணகைமடந்தையர்விளங்குமல்லெழிற்
கண்ணனையருள்பொழிகமலக்கண்ணனை
அண்ணலையேகினைந்தழிவிலாநெறி
நண்ணினரத்திறனவிலுவாமரோ. உங

தரவுக்கொச்சகக்கலிப்பா.

பள்ளத்தினிற்பாய்ந்துபாய்புனல்போன்முன்னமனை
கள்ளத்தினுண்டநங்கள்கண்ணனுழைபோய்த்திரும்பா
உள்ளத்தராகியொப்பிலுருவமட்டவார்விரக
வெள்ளத்தினுள்ளமுந்திமெலிந்துசிலவிளம்புவரால். உச

மன்றலெறிநறுந்துளவமதுமாலைவேட்டுருகித்
தென்றலுழுவைப்போத்தாற்றெருமாலுற்றுமெனவே
கன்றுதொடுகனியுதிர்த்தகண்ணனெழில்காதலித்தோ
அன்றிலெழிற்குலமெல்லாமயர்ந்துறங்காதார்ப்பதுவே. உரு

பண்ணீர்மைகொண்டசெய்யபவளவிதழ்வாய்மலராள்
எண்ணீர்மைகொண்டிலகுமிருகடைக்கணுறவெளியேம்
உண்ணீர்மைகொண்டதனியொருமுகிலைவுண்ணினைத்தோ
கண்ணீர்மைசிந்தநனிகரைகின்றிகழுறுமே. உசு

ஆரமணியீஞ்செறிவாயணிவளைக்கைசோரநிற்பாய்
நீரதனினவியாதநெடுந்தழலையுள்ளமைப்பாய்
ஈரமுறுவெண்மதியமெழுவிரவினினிதுறங்காய்
வாரிதியேயெங்களைப்போன்மாயனையேன்வேட்டனையே. உஎ

கூறாய்கொன்மலைநீயுங்கோகநகைசேர்புயலின்
வீறாரும்புயக்குவட்டின்மேவமனம்வைத்தனையோ
மாறாதசாந்தெறிந்துமாமழைக்கணீரருவி
ஆறாகியொழுகுபரிசையாமேனிற்குதியே. உஅ

கண்ணனெனுங்கருணையலைக்கார்க்கடலைக்காணுமல்
எண்ணமிகயாக்கைகனியிளைத்தயருமெங்களைப்போல்
தண்ணெனுநீர்க்கடலாந்தலைமகனைக்காணுமே
வண்ணநதிகாணீரும்வற்றிமெலிவுற்றீரோ. உகூ

தாதலருந்தேமாவின்றளிரருந்துகோகிலமே
ஓதுநசையுற்றோர்களுனைவெறுப்பாரானாலும்
சோதநுதிங்கழையிசைத்தகொண்டலொத்துக்கூவுதலான்
காதல்பெறநினக்கென்னைகைம்மாறுசெய்குவமே. ௧௦

நந்தாதுவளியருந்துநாகணையின்மீதுதுயில்
கொந்தார்நறுந்துளவக்குரிசிலுடன்கூடினையோ
சந்தாடவியின்மிசைமேற்றவழ்ந்துவருந்தண்ணெனுஞ்சீர்
மந்தாநிலமெனுங்கால்வருத்துதனின்னீர்மைத்தோ. ௧௧

மூனிலவாலந்தண்முகமதியான்மோகவிருள்
சேரும்வகையேயெமக்குச்செய்தகன்றமாயவனை
ஈரமதியேநீயுமெய்தமதியுண்ணினைந்தோ
காரிருள்கால்சீக்கவருகலையிழந்துவாடுவதே. ௧௨

போதிருக்கும்புரிகுழலாள்புகழ்ந்துபுணர்மான்மருவும்
தூதுரைக்கவந்தனையோதோயானீங்கும்மையெனும்
தீதுரைக்கவந்தனையோசெங்காலமடவனமே
ஏதுரைக்கவந்தாய்நீயம்புதியென்றேதினரால். ௧௩

கலிவிருத்தம்.

கொத்தலர்ந்தகொழுந்தொடைப்பூங்குழற்
றத்தைமென்மொழியார்தவமென்சொல்கேன்
மத்தவெங்கரிமாய்த்தவம்மாயனை
இத்திறன்புகன்றெய்தினர்முத்தியே. ௧௪

நண்ணுமுத்திமாணுமந்தனைச்சொலின்
வண்ணமுற்றமணிநிறவண்ணனைக்
கண்ணிற்கண்டுங்கலந்துங்கழறியும்
உண்ணினைத்தும்வீடோங்கலிதுகொல். ௧௫

நல்லறத்துருவாகியநாயகன்
மல்லலுற்றவறம்பொருள்வாழ்வுடன்
இல்லறத்தினர்க்கின்பமுமுண்டெனச்
சொல்லலுற்றனன்போன்றுதுலங்கினான். ௧௬

பாரின்மேற்பகைபாற்றுபசுந்துழாய்
வேரியந்தொடைவிண்ணவன்வேட்டவர்
ஈரெண்ணாயிரரென்றுசொலெண்ணொடும்
சேருநூற்றிருநான்குதெரிக்கினே. ௧௭

மன்னுமொவ்வொருமங்கையரைத்தொடைத்
தென்னுநல்லெழிலேய்ந்தபுதல்வரைப்
பொன்னகர்ப்புலவோர்புகுந்தாரெனப்
பன்னுதெண்டிரைப்பாரிலளித்தனர். ௧௮

வாசகூறுமரிவையர்தங்களில்
பெருமைசேர்ந்துபிறங்குமுதன்மையோர்
உருவமார்ந்தவுருக்குமிணிப்பெயர்த்
திருவனுண்முதற்செப்புமவ்வெண்மரே. ௧௯

கண்ணனல்கியகாதலர்தம்மினற்
பண்ணமைந்தபரிதிகழ்மாரதர்
அண்ணலம்மலைங்கணைவேண்முதல்
எண்ணிரண்டொடிரண்டெனவென்பவே. ௨௦

கலிநிலைத்துறை.

அன்னமைந்தருக்கரும்பெயர்கூறினெங்கணைவேள்
பன்னரும்புகழ்சோவிருத்தனற்பானு
மன்னுநல்லெழிற்காந்திமான்சாம்பன்வேல்வருஉதன்
பொன்னங்குன்றெனப்புயப்பிரகபானுபுட்கரனே. ௨௧

அருணனற்கவிதேவபானுப்பெயராசன்
விருகன்சித்திரபானுவேன்மித்திராவிந்தன்
மருமலர்த்தொடைமதிச்சனந்தனன்சுரதேவன்
இருநிலத்தவர்புகழுகிர்க்குரோதனென்றிசைப்பார். ௨௨

தோடுவாய்விரிபூங்கணைவேளனுந்தோன்றல்
மாடநீணகர்மாதுலன்மகண்முலைமணந்து
பீடுசேர்பதினையிரங்கரிவலிபெறுஞ்சீர்
ஆடல்சாலநிருத்தனையளித்தனனன்றே. ௨௩

ஐயதாரணியநிருத்தனளித்தருளரசன்
வையமேபுகழ்வச்சிரன்வச்சிரனெனும்போர்ச்
செய்யதாமரைக்கண்ணினனொருவனுந்தெரித்த
வெய்யசாவத்திக்குயந்தனன்விளிவுறாதன்றே. ௨௪

வாரிசூழ்புவிமுழுவதுங்காத்தழிமதுப்பாய்
தாரினனெழில்வச்சிரனளித்தருடநயன்
காரினேர்கொடைத்தடக்கையான்கயல்விழிமடவார்
அரிஞன்மதனெனுமிறைபிரதிவாகென்ப. ௨௫

பிரதிவாகுவென்றுரைதருபெயரினன்பெறுஞ்சேய்
இரதிநாதனுமேக்கறுமெழிறிகழிறையோன்
கரதிசாமுகக்களிற்றினன்கவியிருள்காயும்
வாதிவாகரன்மானவேற்சுவாகுமன்னவனே. ௨௬

தேங்கொடாரினன்சுவாகுநற்றவத்தருள்சிறுவன்
ஓங்குமந்தாத்தடம்புயனுக்கிரசேனன்
வாங்குவிற்கையமன்னவன்மதலைவாளரவம்
தாங்குமிக்கிலப்புரந்தருடருசுதசேனன். ௨௭

இன்னவாறுநல்லறத்தினாயினாயக்
கன்னியந்தழாய்க்கருமுகின்மார்பினிற்பிறந்தார்
மன்னர்மன்னவயாவதர்யாவருமதிக்கின்
பொன்னிறைட்டகத்துறைதரும்புலவர்தங்குழுவே. ௧௮

வேறுவேறெடுத்தெதுகுலவேந்தர்பேர்விளம்ப
ஆறுகோடியாண்டாயினுமறைவதற்கரிதால்
மாறுநீங்கியமன்னவவொன்றுமேன்மருவு
நூறுகோத்திரமாயதவ்வெதுகுலநுவலின். ௧௯

ஆன்றசீர்திகழ்யாதவானப்பிலாவருக்
கூன்றநல்லறிவோதுவித்துயர்தருங்குரவோர்
மூன்றுகோடியும்பதிநெருநூறுமுன்மருவ
என்றவெண்பதுமெட்டுமென்றிசைக்குமெண்ணினரால். ௨௦

நோற்றிருந்தயனான்றுதிநுவலவுமெட்டா
நாற்றிருந்தியோகியருளத்துவட்டெழுமருதன்
போற்றிருந்தவர்புங்கவர்புவியினர்காண
வீற்றிருந்தனன்றுவரையினெங்கணும்விளங்க. ௨௧

கொன்பொருந்தயிற்கொற்றவகுசைகடற்புவிமேல்
தன்பெருங்கதைத்தெள்ளமுதந்தினைத்தவத்தால்
அன்பினஞ்செவியகமடுத்தருந்தினமழியா
இன்பமெய்துவானெதுகுலத்துதித்தனனிறையோன். ௨௨

இன்னமாக்கதைகேட்குநரிசைக்குநரவரும்
மன்னவேட்டனவேட்டனயாவையுமருவி
மின்னுலாமணிவேலைசூழ்விபுலம்வீற்றிருந்து
பின்னுமால்பரந்தாமமேபெறுகுவர்மாதோ. ௨௩

புனல்விளையாட்டத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௧௮௨.

௪0-வது, ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## சக-வது, ஸ்கந்தம்.

## க-வது, இருப்புலக்கைபெற்றவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

எண்டாப்பெரிதாகியயாதவர்குலனும்
மண்டுவெஞ்சமம்விளைத்துயிர்மடிதரப்புணர்த்துப்
பண்டைநீணெறிப்படர்தரக்குறித்தனன்பாவை
வெண்டிரைக்கடனிலப்பொறைதவிர்த்தருள்விமலன். க

தாதலர்ந்தசெந்தாமரைநறுமலர்மணந்த
கோதைசேர்தடமார்பினன்குறிப்பறிந்தாங்குக்
காதிகாதலன்முதலியமுனிவரர்களிவண்
டூதுமென்முருகுறைத்தபூங்காவின்வந்துற்றார். ௨

கண்ணன்காதலர்கழைசுளிகடாக்களிறனைய
தண்ணந்தாமரைச்சாம்பனைச்சூழ்ந்துகொள்பெண்ணுருவா
மண்ணிமாதவர்மருங்குபோய்மற்றிவள்பெறுவ
தெண்ணியோதுமின்யாவையுந்தெரிந்தநீரென்றார். ௩

விரித்தகட்டுரைகேட்டலும்விழுத்தவமுனிவர்
சிரித்துமின்னுமிழ்செம்மணிச்சூட்டுவாளரவம்
பரித்தபாரினில்யாதவருயிரெலாம்பருகும்
இருப்புலக்கையொன்றுயிர்க்குமென்றெடுத்திசைத்தனரால். ௪

உரைப்பருந்திறற்சாவம்வந்தெய்தலுமுயிர்த்த
இருப்புலக்கைகண்டென்செய்துமெனமனங்கலங்கி
விரைப்பசுந்துணர்வேந்தனுக்குணர்த்திமற்றதனை
அரத்திறுத்துப்பொருததிர்திரைக்கடலினிட்டனரால். ௫

வட்டவெண்டிரைவாரிவீழ்நுண்பொடியனைத்தும்
விட்டலர்ந்தவாட்கோரையாய்விளைந்தனவெய்ய
கட்டழற்பொறிகதுவுவாளரம்பொரவரிதா
இட்டகூர்நுதியிரும்பைமீன்விழுங்கியதன்றே. ௬

விற்றடக்கையோர்வேட்டுவன்வலையகப்பட்ட
மற்றம்மீனினைக்குறைத்தலுமாங்கதன்வயிற்றின்
உற்றகூர்நுதியிரும்புகண்டொள்ளிதென்றுவந்து
புற்றராவெனப்புழுங்குவெங்கணைமுகத்தமைத்தான். ௭

இருப்புலக்கைபெற்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ௲ திருவிருத்தம் ௧௬௮௧.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௨-வது, வசுதேவற்குநாரதர்தத்துவமுரைத்தவத்தியாயம்.

---

கலிநிலைத்துறை.

அன்னநாளினிலழல்சுடப்பசும்பொன்வார்ந்தன்ன
இன்னரம்புளர்யாழ்முனிவருதல்கண்டெழுந்திர்போய்
மன்னர்மன்னவன்யானைவேற்றிறல்வசுதேவன்
பொன்னந்தாதுதாழ்போதுதூஉய்ப்பணிந்தனன்புகல்வான். ௧

அரிதுமானிடயாக்கைபெற்றிடல்பெறும்யாக்கை
எரியுமின்னெனவிறந்திடுமிறந்திடாமுன்னம்
மாகதப்பசும்பாசடைத்துளவநாண்மாலைக்
கரியவன்றனக்கன்பரைக்காண்டலோவரிதே. ௨

விரிதிரைத்துயின்மெய்ப்பொருள்வெளிப்படுஞான்று
வருதிநீயொருமதலையாயென்றதையல்லால்
தருதியாலுயர்தருநெறியென்றுகேட்டிலனுல்
அருளவேண்டும்வீடுறுதிறனெனமுனியறைவான். ௩

மனுகுலத்தொருமதியெனத்தோன்றியவிடபன்
தநயர்நூற்றுவர்தங்களிற்கவிமுதலாக
வினையினீங்கியவிழுத்தவமுனிவரொன்பதின்மர்
சினவுவேற்றிறனிமிமகமியற்றுழிச்சேர்ந்தார். ௪

கலிவிருந்தம்.

புவிமீதுவணங்கிமகம்புரிவோன்
பவவேர்தெறுபாகவதர்க்குரிய
தவமாநெறிதான்மொழிவீரெனலும்
நவயோகியரோதினர்நல்லறனே. ௫

மதமாகரிமுன்சொலவந்தருள்கார்
கதையார்நறையுண்டுகருத்தொடுபல்
விதமாகும்வினைப்பயன்விட்டெழில்சேர்
பதநாளும்வணங்குநர்பாகவதர். ௬

அறைகின்றசராசரம்யாவுமெழில்
நிறைகின்றவுருத்திருநேயமுறும்
இறையென்றறிகின்றவிலங்குமுளத்
துறைகின்றவருத்தமபாகவதர். ௭

நிகரின்றிவளர்ந்தநெடுந்திருமால்
பகருந்தனிபத்திமைபாகவதர்
புகரொன்றியபுந்தியர்பேதையருள்
நகலொன்றியநட்பிகல்வான்கருணை. ௮

எண்ணும்முறையின்னனவன்னவர்பால்
நண்ணும்படிசெய்யுநலத்தினர்தாம்
தண்ணந்துணர்துன்னியதாமமணி
திண்ணம்புயசெப்புறுமத்திமரே. ௯

துதிபெற்றமலர்த்துளவோன்வடிவாய்
வதிவுற்றவுருக்களின்மாத்திரமே
இதமுற்றுறைகின்றனனென்றுதொழும்
விதமுற்றவர்மேவுபிராகிருதர். ௧௦

ர்மனையாரொடுமன்புசெயும்
ரெழின்மேவுசிறார்களொடும்
யோன்பொருள்யானெனதென்பதற
வார்களுமுத்தமபாகவதர். ௧௧

லைமலர்த்துளவத்தணியார்
லைகிகர்த்திடுமொள்ளொளிசேர்
லைவழுத்துநர்செய்யின்வினை
லையொழித்தவரார்வதுகேள். ௧௨

த்தையியற்றுகருத்தருளத்
முற்றவழுக்கறுமற்றவுடன்
ற்றறிவுற்றிடுமுற்றிடினோர்
ந்தொடுமொன்றுவர்பின்னமறார். ௧௩

யுற்றமனத்தொடுபேதைமையால்
வுற்றுவிகன்மம்விளைத்தவர்கள்
வுற்றசமன்படர்தள்ளவுளம்
வுற்றுவருந்துவர்கும்பிதொறும். ௧௪

வேறு.

பாகனைவாணிகணவனைப்
குநோன்புபுரிகுநராயினும்
வர்க்குளமாரிறைமாயனென்
ணைத்துநாய்ப்பயன்கொள்வரே. ௧௫

றுகின்றபுனிதமறைமுறை
கின்றங்கியற்றல்கருமமாம்
கின்றமறைமுறைசார்ந்திடா
கின்றதறையின்விகன்மமே. ௧௬

ருமமுமுள்ளுவதாற்றிடா
ன்வைகலகன்மமென்றாகுமால்
டாற்றுழிக்கார்நிறவண்ணன்மேல்
ன்பிலதேற்புகரெய்துமே. ௧௭

வண்டுறைதாருரவோய்புவி
முண்டமுதல்வனையேயன்பின்
தூயதொழில்புரிவோரொரு
மின்றிப்பயன்பெறுவாரரோ. ௧௮

யோகியர்கூறவிறையவன்
மாணிசையான்மக்களுய்யுமா
றுபோவதாமுளங்கொள
கூறுமெனவுநவின்றனர். ௧௯

அலகிலாவறிவாயவரும்பொருள்
உலகெலாமுடலாகவுவந்துறைந்
திலகுபேர்விராட்டென்னவுமுத்தொழில்
குலவுமும்மையுருவமுங்கொண்டதே. ௨0

பூவினன்புணர்புங்கவன்றன்கலை
மேவுபூசுரர்மிக்கமறைநபயில்
நாவினோர்நரநாரணனென்பவர்
தாவிலாததவம்புரிந்தார்முனம். ௨௧

தவமியற்றுதல்கண்டுசதமகன்
அவமியற்றவரம்பையர்தம்மொடு
நவமலர்ப்பொழினனங்கனனண்ணலும்
உவமையற்றமுனிவருணர்ந்தபோ. ௨௨

உருவமார்ந்தவுருப்பசியாதியாம்
அரிவைமாரப்படைப்பவரம்பையர்
பொருவிலாவவர்பொற்பினைக்காண்டலும்
பெருகுகாதலிற்பேதுற்றுப்போயினர். ௨௩

பூணினோடுபொருந்துமரம்பையர்
நாணினோடுநடந்தபினல்லெழில்
ஏணினோடிருந்தபுரந்தான்
பாணினோடுதொழுதுபாராயினன். ௨௪

எவர்களேனுந்தவமின்றியற்றுழி
அவர்களேயுமைத்தம்மனத்தெண்ணினோர்
பலமுறூர்பகைநீக்குவரென்னின்யார்
அவனிமேனுமக்குமனூர்செய்வரே. ௨௫

கலிநிலைத்துறை.

என்றுகூறியமுனிவரரேவலினிசைப்போர்
ஒன்றுமுருவிற்றோன்றலாவுருப்பசியெனும்பேர்
நின்றதேரிழைமுதன்மடவாரொடுநெடிய
குன்றின்வார்சிறைகொய்தவன்குறுகினனகாம். ௨௬

நாவியன்னதோர்நறைகமழ்நறைக்கருங்கூந்தற்
காவியன்னகட்கதிர்முலைத்திருமகள்காந்தன்
ஆவியன்னமீதுயரியவந்தணன்றனக்குத்
தூவியன்னமாயுரைத்தனன்றொன்மறைதோன்ற. ௨௭

மீனமாகியுமேதினியெடுத்தவன்பிறைக்கோட்
டேனமாதியாயிச்சையிற்பலவுருவியைத்து
மானவேலவமாலுலகளித்திடும்வகைநூ
றனைகோடியாண்டுறையினுமடங்குவதரிதே. ௨௮

## அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கேழ்கிளர்வெண்மைசெம்மைகிளரொளிப்பசுமைமற்றும்
சூழ்சுடர்க்கருமையென்றுசொல்லியவண்ணநான்கும்
ஊழிதோறடைவின்எய்தியுலகெலாங்காணத்தோன்றும்
வாழிநான்மறைக்குமெட்டாவலம்புரித்தடக்கையானே. ௨௯

ஓதியவண்ணத்தாதியூழியிற்பிரமசாரி
கோதறமுறுவமெய்திக்குலவுவன்மாயனென்றுப்
பேதவெவ்வினையொன்றுறுபெட்பொடுகருதும்யோகர்
ஏதவெம்பிறவிசோரின்பொடுநீடுவாழ்வார். ௩௰

எழிருபுவனமுண்டோனிரண்டெனவியம்புகின்ற
ஊழியின்வேள்விசெய்வார்க்குருவமுற்றுறைறவனந்நாள்
ஆழிசூழ்புவியின்மாந்தருமகமுறையியற்றிச்
சூழிமால்வேழங்காத்ததோன்றலைவழுத்துவாரே. ௩௧

பொன்னவிராடைமாயன்புகாறுமூன்றாமூழி
மன்னியகாலைச்செங்கோன்மணிமுடிவயங்குவேந்தர்
சின்னமோடுறைவணங்காட்டிருமறைமார்பினானைத்
துன்னுநாண்மலர்கடுவித்தொழுதனர்வழுத்துவாரே. ௩௨

கருதருங்கலியினம்மகார்முகிற்கொழுந்துபோலும்
திருமகள்கொழுநனைமகிழ்த்தனம்செய்யும்யோகர்
மருவுவரொருவீடென்னின்வழங்கியகலியினன்றாய்
ஒருதிருவுகமுமில்லையுரைக்கினிங்காசமன்றே. ௩௩

எனவிவைநிமியென்றோதுமிலங்குவேலரசுகேட்ப
வினையறுதவத்தின்மிக்கோர்விளம்பினர்விசும்பிற்போயார்
புனைமதிக்கவிகைச்செங்கோற்புரவலவென்றுகூறி
நனைமலர்த்தொடையநல்யாழ்நாரதன்மீட்டுஞ்சொல்வான். ௩௪

பொழிமழைபருவநாறுபொய்ப்பவெவ்வழலின்வெம்பி
எழுபரித்தேரோன்காலுமெரிமணிக்குப்பைபாய்ந்து
நிழலுறக்கிடந்துகாய்ந்தநெடுநிலம்பிளக்குமெங்கும்
முழுமணிச்சுடிகைச்சேடன்முகத்தழல்கனற்றுமன்றே. ௩௫

நிலவியவண்டம்யாவுநீறெழப்பாந்தள்வெந்தீ
உலைவவந்தெறியச்சிந்துமாறிமற்றொருநூறாண்டு
மலையொடுபொருதயானைமல்லலந்தடக்கையானக்
கலிகெழுகருவிவானங்கல்லெனப்பொழியுமம்மா. ௩௬

எற்றுநீர்பரந்துகோப்பவிறந்திடும்பூதமைந்தும்
மற்றிறவாதுநின்றமாயையின்றலைவன்றன்னைப்
பெற்றனமதலையாகப்பெறுவதென்பேறுசொல்லாய்
முற்றுநீருலகங்காக்குமுத்தவெண்கவிகைவேந்தே. ௩௭

பொறிமடமயிலிற்ரேன் றம்பூதனையுயிருந்திங்கட்
குறநுதற்பவளச்செவ்வாய்க்கோவியர்முல்லைமெல்லன்
முறுவலுமாந்துசெங்கண்முகிலேனின்மகனென்றுள்ளல்
இறுதியுமுதலுமில்லாவிறையெனத்தெளிதிமேலோய். கஅ

தாறுமாய்களிநல்யானைத்தடமருப்பொசித்தான்றன்னை
மாறுகொண்டெழுந்துபொங்கிமண்டமர்கடந்துவெல்வான்
சீறினர்வினைத்துவைவேற்றிறற்சிசுபாலனுதி
ஈறிலாநெறிசென்றுற்ருரெனையரொன்றுரைப்பல்யானே. நக

அல்லியங்கமலம்பூத்தவஞ்சனப்புயலிற்ரேன்று
மல்லலைத்தெழுந்ததிண்டோண்மாயனைக்கண்ணிற்கண்டு
புல்லியுமோர்துமன்பூத்துளங்களிப்பப்பெற்ருய்
சொல்லருநெறிநீசேர்தல்சொல்வதென்சுடர்செய்வேலோய். ச0

தரவுக்கோச்சகக்கலிப்பா.

என்றுமுதுமறைதெளிந்தயாழ்முனிவனேகுதலும்
வென்றிவயிரப்படையோன்வீதுவணிநீள்செஞ்சடையோன்
மன்றறிணிமரைமலரோன்மலர்தலைவான்வந்துற்றுத்
கன்றுகொடுவிளாவெறிந்தகார்வண்ணற்போற்றினரால். சக

உந்துதிரைசூழ்முந்நீருலகின்வன்பொறைதவிர்த்தாய்
ஐந்துதலையிட்டவொருநீற்றிருபாணுண்டகன்ற
எந்தைதனைதிருவுளமேலெய்துனதுதாமமெண
முந்தைதகெழுநான்மறையின்முதல்வனருள்பெற்றகன்ருர். சஉ

வசுதேவற்குநாரதர்தத்துவமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கஎகூக.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ந-வது, உத்தவர்தத்துவம்வினவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

களங்கனிவண்ணனைக்கண்டுகாதல்கூர்
வளங்கொளும்வானவர்வணங்கிப்போயபின்
விளைந்ததுமவ்வழிவிண்டுராதனுக்
குளங்கொளமுனிவரானேதினனரோ. க

மருவிரிதுளவணிமாயனேவலால்
கருதருநிலமுறுகம்பமாதியாப்
பொருவலியாதவர்பொன்றவெவ்வினை
தருபலநிமித்தமுஞ்சார்ந்தவாங்கணே. உ

கண்ணுறுதீயனகிமித்தங்கண்டன
அண்ணலங்கடற்றுறையாடுவோமெனத்
தண்ணறுந்துளவணிதலைவன்சாற்றினான்
எண்ணிலாயாதவரெழுதன்மேயினார். ௫

அவ்வழிமால்கருத்தறிந்தவுத்தவன்
செவ்வழிப்படர்தரச்சிந்தையுற்றனை
இவ்வழிநிற்பிரிந்திறையுமுய்கலேன்
உய்வழியென்னையுமுடன்கொண்டேகுவாய். ௬

பைத்தவெவ்வராமிசைப்பதம்வைத்தாடிய
வித்தகவென்றுமுன்வீழ்ந்துபோற்றுறும்
உத்தவனுளங்கொளவுரைத்தன்மேயினான்
தத்துவநெறிமுறைதலைவனுங்கரோ. ௭

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஊற்றினிற்களிறுதுஞ்சுமொளியினிற்பதங்கமாயும்
நாற்றத்தின்வண்டுவீயுஞ்சுவையின்மீனசமெய்தும்
ஏற்றதோரிசையினாலேயிறக்குமாலசுணங்கல்வி
ஆற்றலிற்புலன்களைந்துமடக்கிடல்வேண்டுமன்றே. ௬

ஐயமிலறிவினாலேயழிவின்றியகண்டமாகி
மெய்யெனும்பொருளாமெம்மைமேவுவான்கானனீர்போல்
வையகமாதியாயவழங்கியவுலகமெல்லாம்
பொய்யுறுபகுதியின்றுபோந்தவென்றெண்ணல்வேண்டும். ௭

கண்ணுறுபவற்றினாலுங்கருதநுமானத்தாலும்
எண்ணியுட்டெளிவுபெற்றிங்கேதமாமிவைகளென்றும்
நண்ணுநற்குணங்களென்றுநாடுதலொழிந்தியாவும்
தண்ணறைதுளித்ததாரோய்சமமெனக்காணல்வேண்டும். ௮

இனிவருமேழாநாளின்யாதவர்பொருதுமாய்வர்
பனிவருகடலுமிந்தப்பதியினைமறைக்கும்வெய்ய
துனிவருகலியும்பூமான்றுயருறப்பொருதுமென்னத்
தனிவருமாசுமாழ்கச்சாற்றினனன்மாயப்பெம்மான். ௯

என்றலும்பிரிவிற்கஞ்சியேங்கினன்குருவைநீங்கித்
துன்னியகாட்சியாலுஞ்சொல்லநுமானத்தாலும்
நன்றுளந்தெளிதலெங்ஙனவின்றருளெனமுன்போற்றி
ஒன்றுமுத்தவற்குநம்மானொருகதையுரைக்கலுற்றான். ௧0

உத்தவர்தத்துவம்வினவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௫௯.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## [illegible], ஆசிரியமாலைக்கத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தீதிலன் மகிழ்ந்தக் காத்திடுவனென் கவலையெல்லாம்
ஒதவருதவேடத்தொருவனை யநுமன்னகன்ன
நீதிசெய்யறம்பொன்காமமீனைந்திலென்றாமின்பம்
ஏதிலிலடையின்றாய்நீயெனமுனிபிலைசக்கறாந்துகல். க

தரைபுனல்கனல்கால்வானந் தபனன்வெண்டிங்கள்வாரி
வரையுறையயாவுமான்கான்வருகரிபதங்கமினம்
மூலனிகளைசெய்கின்றோன்மொய்குழற்றமரிதேனி
உரைதருபுநவுவேசிவுங்கவலயன்பிறரும். உ

உறைந்தநாற்சிலம்பினைமத்தநாதவன்டெம்பிற்றபிடம்
சிறந்தனவிவைவான்காலுஞ்சிக்கதைதர்க்குவென்றுக்கி
மறந்தருபிஃறுதீதாமற்றிதாங்கன்றுமென்றிய
கறிந்திலனின்பமூழ்ந்தேனைவ்வகையாசங்கேண்மோ. ௩

கலித்துறை.

பரிவின்வெட்டிறுங்கல்விறும்பயன்பொறுத்தளித்தும்
புரியுநல்வகைமொறுதிர்பொருதிடாதசலத்
தருவிராடவிக்களிமூதலியவளித்தும்
இருதிறத்தையுமெனக்கறிவித்தருகுளாயே. ௪

களிகொளும்முருகினைக்கினுங்காண்கினுமலைந்தேசர்க்
தொளிகொளும்பெயர்வழுத்தினுமன்னவருளத்தைத்
அளிகொளும்பணிதம்பெறவாக்கலுமருந்தன்
டெளிவுயப்புவினிடத்தினின்றறிந்தனன்றறிகின். ௫

இருந்திராகமொடியம்பருவெறுப்பறவெறிந்து
பொருந்துகின்றனயாவையும்பொசிப்பதுமெவரும்
விலாந்துவந்தனுகாவகைவிற்றிருப்பதுவும்
இருந்துகின்றநற்காந்தியுமெப்தநைனறியின். ௬

வளர்ந்தகாதல்வெவ்விருப்படைந்தாரெனவிறும்
தெளிந்தயோகியருயிர்க்கலைவயிலெனத்தெரிந்தேன்
விளைந்தவாசமூம்விளம்பாற்கந்தமூசேலி
அலைந்துவந்துமக்குணம்பெறுதவெமென்றறிந்தேன். ௭

கண்ணகன்றிடெபிடத்தனைகாண்கடத்தாளான்
எண்ணைகின்றனபோகவென்றுயிலையந்தகுதல்
பண்ணுகின்றதன்மைவையிற்பற்பலபைடப்பாம்
கண்ணுகின்றவும்பிரமமொன்றறியவையறிந்தேன். ௮

உறைதவுறுவிடனின்றெனவுறையும்வாறென்றால்
குறைவுறுவகைகண்டிற்கூறுமொன்றாலும்
மறைவுறுதொருகுறையுமன்னுதுமற்றெங்கும்
நிறைவுறுதலைவகாதெனநினைந்தனன்பிரமம். ௯

அருவமாமறிவானவனாக்கைகள்பலவும்
ஒருவனாகியேயுறைகுவனென்பதையுணர்ந்தேன்
பரிதிவானவனொருவனேயாய்ப்பலகடத்தின்
மருவுநீர்தொறுநிழல்பலவாயுறன்மதித்தேன். ௰

திங்களொடொளும்வளர்தலுந்தேய்தலுந்தெரிக்கின்
அங்கண்மாநிலம்விளக்கும்வெண்கதிர்க்குணமதனால்
தங்குமோராறுவகைவிகாரங்களுந்தமியேன்
இங்குநாடினனுடற்கலாலுயிர்க்கிலையெனவே. ௧௧

விளங்குமெய்ப்பொருளாக்கையேவினுமதன்குணங்கள்
உளங்கொடெண்ணிணப்பொருட்கிலையென்பதுமோர்ந்தேன்
களங்கமென்பதுமதிக்கிலைகருதுமக்களங்கம்
வளங்கொள்பூமியின்சாயையென்பாரதைமதித்தேன். ௧௨

நிறைவினொடோறுங்குறைவறவமைந்தயனீர்வந்
தறையுநீடொளாகூடினுமதன்குணமடையா
துறையும்வாரிகம்பீரமுற்றென்பதையுணர்ந்திங்
கிறைவயானுமக்குணங்களையுவந்தியைந்தனனால். ௧௩

உற்றவுற்றவைமுயற்சியினயங்கிடாதன்னும்
குற்றமற்றுநீண்மலையாரென்பதைக்குறித்திங்
கற்றமற்றநல்லறிஞருக்கிதுவழக்கென்னப்
பெற்றபெற்றனமுயற்சியற்றருந்தினன்பெரியோய். ௧௪

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மடந்தையர்மொழியுங்கானமுங்கேட்டுமன்னவன்மகன்முலைமணந்தான்
கடந்திரிகலையின்கோடுபெற்றுயர்ந்தகருத்தவனெனக்கேட்டுப்
படர்ந்திளமறிமான்வேட்டுவன்பாடும்பண்செவிமடுத்தவன்வலைமேல்
கிடந்தனகண்டுமெவ்விசைகேளான்கேட்டன்மாறுமெகிர்த்தனமே. ௧௫

ஆதிதருவயவர்படுகுழிப்படுத்துத்தூகனாறுபிடியையுள்ளுவந்து
மதகரிதழுவிவயவர்கைவசமாய்வயங்குதல்கண்டுமட்டொழுகும்
ததைமலர்க்குழலார்தனதிரிதழுவித்தணப்பரிதாய்மதன்வசமாய்
விதலையின்மனமாய்மயக்குறுமென்னவிடுத்தனன்புணர்ச்சிமற்றன்றே. ()

ஒளிகொளுவிளக்கின்றீப்பிழம்புணராதுணைவுகொலெனவெதிர்சூழா
விளிவுறும்பரியசலபமுன்கண்டுவெய்யதித்தொழிலெனக்கருதித் [றிக்
தெளிவுகொண்முளிவாயினுங்காணிற்சிந்தைதன்வயங்கொளீஇக்கவற்
களிகொளுங்கருக்கண்மடந்தையருருவங்கருத்தொடுகாண்கிலனம்மா. ()

வஞ்சநெஞ்சினராய்த்தூண்டிலின்வனைந்தவன்சுவையூண்பெறவடைந்தூ
றஞ்சுதலடைந்தமீன்குழுக்கண்டுதன்னுணவுவகையெனும்வாயுப்
பஞ்சாமென்றற்றுடலுறைவதற்காப்பசிக்கனறணிப்பதற்கன்றி
அஞ்சுவையிவையென்றவாவினாலம்வந்தருந்துதலொரீஇயினனடிசில்.

வண்டினஞ்சிறிதுசிறிதெனவலருமலர்தொறும்வருமுருகுவப்பால்
உண்டனதிரிதல்கண்டனன்யானுமுரைக்கினித்தொழிலுமிதென
எண்டருநகரின்மனைதொறுங்குறுகியெனதொருகாமிசையையம்
கொண்டனன்சிறிதுசிறிதெனவுவந்துகொள்கலத்தேற்றிடாதன்றே. ௧௯

ஒருமரைமலரோயுவந்துமென்முருகுண்டுறைதருமொருசுரும்பிரவின்
விரியிதழ்குவியம்மலரகப்பட்டுவிளிந்ததுகண்டொருநாளும்
கருதியநகரினொருமனையுறைந்துகடிசுவையுணவுவந்தருந்தேன்
மருமலர்மகுடகோடிகளிடறுமலர்புரைதருபதயுகத்தோய். ௨௦

கலிநிலைத்துறை.

முந்தவேயொலியாதியிலொருகுணமுன்னிப்
பந்தமோடிடருற்றிறந்தனபலவென்னின்
ஐந்துசேர்குணங்களுமொருங்காசையினடைந்தோர்
உய்ந்துபோநெறியுண்டுகொலோமதித்துரைக்கின். ௨௧

பம்பிரும்பொறிவழிமனம்பரந்துறுதடக்கி
அம்புசெய்ததண்கோணறத்திருத்துவானவன்போல்
வெம்புமைம்புலன்வழிமனம்வேட்டுதல்வெறுத்துக்
கம்பமில்லறிவாம்பொருளறிந்தனன்கருத்தால். ௨௨

தாயுந்தந்தையும்வேற்றொருநகர்வயிற்சார்நாள்
நேயமாயதன்மணத்திறநேர்தாமிகழ்த்த
மேயசீருறவோர்க்குணவருத்துதல்வேண்டித்
தூயதாமெழிற்குமரிநெற்குத்துதறுணிந்தாள். ௨௩

பெரியகைவளையார்ப்பவர்கேட்கினிப்பேதை
உரைசெய்நல்குரவுற்றவளென்பரென்றுணர்ந்தாங்
கரியகைவளைகழற்றினளொற்றுவைத்ததனால்
கருதும்வெவ்வுரைவருங்கொலென்றறுங்குழக்கடிந்தேன். ௨௪

தன்றிவைத்ததண்டேனுணுதிழந்துருழ்ந்தெடுப்ப
ஒன்றுமற்றவராலுயிருலந்தமையுணர்ந்து
நன்றறிந்துபற்றெறிந்தவர்க்கொன்றையுநாளைக்
கென்றுவைப்பதுமிகையெனத்தெளிந்தனனிறையோய். ௨௫

நீணிறக்கொடுவேட்டுவன்படுத்தநீள்வலைவாய்த்
துணிறப்பெடையார்ப்பினைந்துயர்தல்கண்டணுகித்
தானுமுற்றதிலொருபுறவிறந்ததுதன்னால்
ஊனமுற்றிடுமெனத்தமர்சேண்மையீங்கொழிந்தேன். ௨௬

### கலிவிருத்தம்.

சோதிமாடந்துவன்றமிதிலைவாழ்
பேதையாமொருபிங்களையென்பவள்
ஓதுவேட்கையொருவுதனன்றெனக்
கோதிலாக்குருவானமைகூறுவாம். ௨௭

பேசுகின்றவப்பிங்களையென்பவள்
வேசிதோய்நலன்விற்கும்விரகினாள்
ஆசையாம்பொருணல்குநல்லாடவர்
பூசுசாந்தப்புயம்புணர்வாழ்க்கையாள். ௨௮

இன்னவண்ணமிரும்பொருளீட்டுநாள்
சொன்னவண்ணம்பொருடந்துதோய்பவர்
மன்னும்வண்ணமொர்மாடம்வாரமையால்
அன்னவண்ணநடையளயர்ந்தனள். ௨௯

மறுகினூடுவருபவர்யாரையும்
பெறுகநீபொருளென்றுறுபெட்பொடு
குறுகியீங்குடன்கூடுவரோவெனச்
சிறுகுறுண்ணிடைபார்த்துளந்தேம்புமே. ௩0

நேசமாய்நெடுமாடநிலைபுகும்
ஆசையாம்வளியாங்குநின்றுந்தலால்
வாசவார்குழன்மீளுமறுகுறும்
ஊசலாடுபவளையுமொக்குமே. ௩௧

வாய்தனின்றுமயங்குநடுவிரா
ஆயதென்றயர்வெய்தியகம்புகும்
நேயநன்பொருணெஞ்சினினைந்தழும்
பாயன்மீதுபடுக்கும்பதைக்குமே. ௩௨

இன்னதன்மையங்கெய்தியவேந்திழை
பொன்னினுற்றவிவ்வேட்கைபொல்லாததென்
றுன்னியுன்னியொழிவுசெய்நெஞ்சொடு
மன்னர்மன்னமகிழ்ந்திவைசொல்லுமால். ௩௩

துயரமோதொலைவின்றுசெய்யாசையும்
செயிரினோங்குறுஞ்சேணடங்காவனம்
வயிரமாகியவாள்கொடுவெட்டிடா
துயரினோர்க்கெங்குவகையுண்டாகுமே. ௩௪

உன்னிற்போதவுருவத்தலைவனுள்
மன்னிப்போகம்வழங்கிவதியவும்
மின்னைப்போலவிழுநரைவீதிதேர்ந்
தென்னைப்போலயர்வாரெவருண்டரோ. ௩௫

சலத்தையுந்தசையென்பொடுசாற்றுறும்
மலத்தையும்மயிர்த்தோலின்மறைத்ததை
நலத்ததென்றுநயந்துநலிந்தவென்
புலத்தையென்கொல்புகலப்பெறுவதே. ௩௬

என்றுகூறியவ்வேந்திழையீறிலா
தொன்றுமாசையொருவியுவப்புற்றாள்
அன்றியானவ்வகைதெருண்டாசையை
வென்றிவீரவிடுத்தனன்வேரொடும். ௩௭

அன்றிலூண்கவர்ந்தந்தரத்தேகுழித்
துன்றுமோர்புட்டுரந்துபறித்தலும்
ஒன்றவ்வூனையொழிந்துவப்புற்றதால்
என்றுமோர்பொருளெய்திடருற்றிலேன். ௩௮

சுற்றின்மேவத்தொகுசிதலைபுரி
புற்றின்மேவும்புயங்கமென்றோர்ந்தபின்
உற்றியானுனாற்றேனென்றமர்தொறும்
மற்றுளோர்செய்மதிக்குகைவைகுவேன். ௩௯

நுண்ணிதாச்சில்சிலம்பியிழைக்குநூல்
நண்ணியேயுறைந்துண்பதைநாடியான்
எண்ணிலாவுயிர்தந்தவையேய்ந்துமற்
றுண்ணுமோர்பொருளேயென்றுணர்ந்தனன். ௪௦

மானமோடவமானமடைந்திடா
தூனநீங்கியுவந்தசிறுவனைத்
தேனுலாந்தொடையோய்முனந்தேர்ந்ததால்
யானுமோகையுற்றேனவையுற்றரோ. ௪௧

அன்பினாயினுமாசையினாயினும்
வன்பயத்தின்வயிரத்தினாயினும்
நன்பெருந்திருநாதனையேநினைந்
தின்பமவ்வுயிரெய்துவதென்பதை. ௪௨

ஈங்கறிந்தனன்யானுற்றெடுத்தொரு
பாங்கர்வைத்துப்பரிவிற்பறந்தயல்
நீங்கும்வண்டைநினைந்தபசும்புழு
ஆங்குவண்டுருவாயதுகண்டரோ. ௪௩

வாக்கினைக்கடந்தோங்கிமற்றெங்கணும்
நீக்கமின்றிநிறைந்தவவ்விண்டுவை
ஊக்கமுற்றுணர்தற்கிடனாகலின்
ஆக்கையுங்குருவாயதரசனே. ௪௪

மடல்விரித்தமரைமலர்வைகுவோன்
சடமிலாத்தந்தையுந்தந்துமுவந்திலன்
இடமறுக்குமென்றெண்ணினன்மாறுட
உடல்படைத்தபிரேறையுற்றான்முனம். சரு

மாந்தர்யாக்கையிம்மாநிலத்தெய்துதல்
வேந்தர்வேந்தமிகவரிதாயினும்
காய்ந்தகன்மமன்கைப்பட்டிருக்குமென்
றாய்ந்தறிவித்தமர்தனன்றுகுமே. சசு

உறக்கமும்விழிப்புமுறுதன்மைபோல்
பிறக்கும்யாக்கையிறத்தன்மெய்பெட்பொடும்
இறக்கும்யாக்கையுமேய்ந்துபிறத்தலின்
றுறக்கவேண்டுமெய்யாசையைச்சூழ்ச்சியோய். சஎ

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இத்திறமெனுவென்பானம்மெழிற்குலத்திறைவன்கேட்ப
அத்திரிபுதல்வனென்னவறைதருதவத்தின்மிக்கோன்
சித்துருவாயதத்தாத்திரேயன்முன்செப்பினென்
றத்தவற்காழிமாயனுவந்துரையாடினனல். சஅ

ஆசிரியரையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் க௦எ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ரு-வது, ஞானகன்மமுறைத்தவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

அவ்வியம்விட்டறிவுற்றவளத்தோய்
இவ்வகையன்பளிசைத்தகருங்கார்ச்
செவ்வியிறத்திருமாலவனுக்கு
வெவ்வினைகட்டறமீளவிரிக்கும். க

நித்தியமென்னநிகழ்த்தியகன்மம்
உத்தவனன்பினுஞற்றுதனன்றாம்
சத்துடலென்றுதரும்பலனுள்ளிச்
சித்தமொடும்வினைசெய்வதுநீதே. உ

## அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அறிவினிலாக்கைமூன்றுமசத்தியமென்றுநீத்து
நிறைவுறுமறிவுதானேநித்தியமென்றுதேர்வோர்
பிறவிவெங்கடலையொன்றார்பிறங்குவர்பிறங்கும்வண்ணம்
நறைதுளித்தொழுகுதாரோய்நவிற்றுவனினிதுகேட்டி. ௩

தருக்களினுருவமெங்குந்தழனிறைந்தென்றுநீங்கா
திருக்கினுங்கடையின்வேறாயெரிக்குமவ்வனத்தையேபோல்
திருக்கிளர்காலமூன்றுஞ்சேர்ந்துறையறிவுதேரின்
உருக்கள்வேறாகவேறாயுடலுறும்பிறவிநீங்கும். ௪

வளர்தருதருக்களாகிவயங்குமோர்தழலேபோல
ஒளிகொளுமுருக்களாகியுறையுநல்லறிவுமொன்றே
அளிதருமியமமாதியருங்குணத்தமர்மாணாக்கன்
தெளிவுறுகுரவன்சொல்லாற்றேறுதல்வேண்டுமாதோ. ௫

போற்றுகீழாணிபோல்வான்புகாறுகுரவனாங்குற்
றேற்றுமேலாணிபோல்வானியைந்தநற்குணமாணாக்கன்
மாற்றருஞ்சந்திபோலும்வழங்கியவுபதேசச்சொல்
தோற்றியவங்கிபோலுந்தோன்றுநல்லறிவுமாதோ. ௬

அரும்பலனெஞ்சினுள்ளானணிவினைவிளைத்தல்வேண்டும்
தரும்பயனடையவேண்டிச்சாற்றியமகங்களாதி
வரும்பலவினையுஞ்செய்வோன்வான்மிசைப்போகந்துய்த்துப்
பெரும்பலன்றொலைந்தகாலைப்பிறந்திறந்தயர்தறிண்ணம். ௭

அழிவுறும்போகம்வேண்டியருவினையிழைத்துவான்போய்க்
குழைமுகவரம்பைமாதர்குவிமுலைப்போகமாந்தல்
எழிறிகழரசனால்வாளேற்றவேயேகுகள்வோர்
உழையுறுநகரிலோர்பாலுணிரந்தருந்தல்போலும். ௮

பொன்னகர்ப்போகம்வேண்டிப்பொருந்துநல்வினைசெய்மாந்தர்
துன்னுபற்பலவாமான்மாச்சொல்லுமாறீசனில்லை
உன்னினென்றுரைப்பரோராரும்பர்கோனாதியானோர்
என்னெனழிலேவலஞ்சியியற்றினரியங்குவாரே. ௯

என்றலுமொன்றுதானேயாவுமென்றுரைத்துப்பின்னர்
ஒன்றுமென்னேவலஞ்சியுஞற்றுவரும்பரொன்றாய்
நன்றுளங்தெளியவீதுநவின்றருளென்னவேந்து
மன்றலந்துளவத்தெம்மான்வழங்கினன்விளங்கமன்னோ. ௧௦

மாயையாமுபாதியாலேவழங்கினபலவல்லாமல்
தூயவாமணியிற்பொன்போற்றுலங்குமெவ்வுலகுமாகி
மேயதோர்பொருளேயாகும்வினையினாற்பேதமாகிக்
காயமேதாமென்பார்கள்கலங்குவர்வெருக்கொண்டம்மா. ௧௧

நித்தியமுத்தனென்றுநித்தியபத்தனென்றும்
தத்துவந்தெளிந்தோர்சொல்லுந்தன்மையாதென்றுகேட்கின்
உத்தமவுரைக்குதாங்கேளொப்பின்றியுயர்ந்தவீசன்
முத்தனுஞ்சீவனென்பான்மொழிந்தவப்பத்தனுமே. ௧௨

சிவனுமீசன்றானுஞ்செப்பியவாக்கைதோறும்
மேவுவருபாதியாலேவிழைந்தநல்லின்பதுன்பம்
தாவிலாச்சீவனுண்ணுஞ்சார்ந்துண்ணுந்தன்மைவெய்யோன்
பூவுலவாவிநீருட்பொருந்திநின்றசைதல்போலும். ௧௩

கலந்தனனாகருஞ்சீவன்கனவுகண்டிருக்கின்றானும்
மெலிந்தொன்றுநாகராவீசன்விழித்தினிதிருக்கின்றானும்
நலந்தரும்வித்தையென்றுநலிவுறுமவித்தையென்றும்
வலந்தருமெமதுமாயைமருவுடலிரண்டுண்டாமால். ௧௪

அவித்தையாமுடலமுற்றோராளவறுபிறவிசேர்வார்
பவித்திரவித்தையென்னைப்பகர்தருமுடலமுற்றோர்
புவித்தலத்தாசவீட்டிற்பொருந்துவர்புகன்றோர்தன்மை
நவிற்றின்மாவித்தையென்னுநலந்திகழுடலமுற்றோர். ௧௫

கூறிருவினையினொன்றாற்கொடுங்கதைகொண்டுமோதிச்
சீறினர்வைதுளோர்க்குஞ்சிறப்புநன்கியற்றினோர்க்கும்
மாறுசமனேயாகியவுனமுற்றிருப்பர்மற்றோர்
ஆறரியாசதம்மையறிந்திடார்வருந்துவாரே. ௧௬

என்னிடத்தன்புசெய்யாதியற்றியவினையினோரும்
உன்னுபல்வினைகள்யாமேயுருற்றுவமெனச்செய்வோரும்
நன்னயக்காமமில்லாநாரியர்ப்புணர்ந்தோரின்
துன்னுமைப்பசுக்காத்தோரிற்றுயருவர்பயன்பெறாரே. ௧௭

மன்னுமைம்புலனுமாய்த்துமருவியமனத்தையென்றும்
என்னிடத்திருத்தல்வேண்டும்திருத்தலிங்கரிதாமென்னின்
சொன்னநல்வினைசெய்தாலுந்துகளறுபவைசெய்தாலும்
பன்னுறுமன்பினத்தப்பயனெமக்களித்தனன்றே. ௧௮

அளிசெயுமனத்தாரிகையம்புலனடக்கியென்றும்
ஒளியொடுபுனிதமேன்மையுவப்பருஞ்சமனுற்றுள்ளம்
தெளிவுறுபெரியோர்தம்மைச்சேரினல்லன்புகூரும்
அளிதருமன்புகூரிற்கலக்குநல்லறிவுதானே. ௧௯

இயம்புமெம்மிடத்தினன்பிங்கியற்றுதலெங்ஙனென்னின்
நயந்துசெயெஞ்சரிதங்கேட்டனவிற்றுதனுமம்போற்றல்
பயன்றருமெமதுகோயிற்பணிவிடைமுதலசெய்தல்
வயந்தரும்பொறையுண்மைமாறிலியைமவழுத்தலாமே. ௨௦

பரிதிசெந்தழல்வான்பூமிபசுவருமதிதியன்பர்
விரிபுனல்வளிதன்றேக்கைவிளம்புபல்லுயிர்களென்ன
உரைதருபதிதொன்றின்பாலுவப்பொடெம்பூசையாற்றின்
இருவினைச்சிமிழ்ப்புநீங்குமின்பவீடெய்துமன்றே. ௨௧

திநகரனிடத்துப்பூசைசெய்வதுமறையிற்போற்றல்
அனலிடையாற்றுபூசையாகுதிமுறையிற்பெய்தல்
நினைவருவானிற்பூசைநெஞ்சினுட்டியானஞ்செய்தல்
இனிதுறுதரையிற்பூசையந்திரமெழுதியேத்தல். ௨௨

ஆதிதரும்பசுவிற்பூசைதொழுதுபுல்லுதவுதன்றும்
அதிதிதன்னிடத்துப்பூசையகமகிழ்ந்தடிசிலக்கல்
மதிதருமன்பர்பூசைமருவுதந்தமர்போற்காணல்
ததைமலர்ப்புனலிற்பூசைதருப்பணம்புரிதலாமே. ௨௩

சங்கொடுதிகிரிவில்வாடரித்தவெம்வடிவுபெற்ற
பொங்கெழிலுருக்கண்ணடிபூசைசெய்வதுநன்றாம்
கொங்கலர்சோலைவாவிகுளங்களுண்டாக்கலும்
மங்குலினுதவுவேங்கேதமருவுமெம்பூசையாமே. ௨௪

பேசியவளியிற்பூசைபிராணனைக்காத்தலாகும்
காசறமுடலிற்பூசைகலன்றுகில்புனைதலாகும்
மாசில்பல்லுயிரிற்பூசைவழங்குதம்முயிரேபோல
ஆசறுமுயிரின்கூட்டமனைத்தையும்புரத்தலாமே. ௨௫

நன்னியவன்பிறுலேகயந்தெமையடைதல்போல
என்றுசாங்கியத்திறனுமென்வகையோகத்தாலும்
பன்னுறுதவத்திறனும்பகர்வருவிரதத்தாலும்
மன்னகத்துறைறவொம்மைமருவுதற்கெளிதன்றம்மா. ௨௬

சொல்லுகற்றவரைச்சேரிற்றுகளில்போன்புவத்து
புல்லுமென்றுரைத்ததல்லாற்பொருட்டுதம்புத்தியாலே
வல்லையினன்புசெய்துவந்தெமையடைந்தோர்கள்
அல்லலிங்கொழிந்தின்றேனப்பிலாமறைதுங்கேன்மோ. ௨௭

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாவலிமுதலாவழங்குதானவரும்வன்புகழ்வீடணன்முதலாத்
தாவிலாவலிசேரரக்கருமகஞ்செய்தவத்தினர்மருவெயுமின்மடவார்
கோவியர்முதலாமடந்தையர்குழுவுங்குஞ்சரஞ்சாம்பவானனுமான்
காவில்வாழ்கவியின்றலைவனேமுதலாக்கருதரும்பற்பலவிலங்கும். ௨௮

அருச்சுனன்முதலாகத்தமர்குழுவுமாரும்பழனையின்கலைசேர்
உருசகனையடைகாளிங்கனேமுதலாமுரகரும்பறவையுமுறைக்கும்
திருக்கிளர்வணிகர்பின்னவர்வேடர்செப்பருப்புரியர்முதலாத்
தரைதலத்தமர்த்தமாக்களுமாவார் [illegible] ௨௯

பொற்புறுமனுரைப்பதியினின்முன்யாம்போயபின்கோவியர்யாரும்
பற்பலயுகமேயொருகணமாகப்பரிவொடுமெம்மையேநினைந்து
சொற்பலநியுங்கடவினையடைந்துசொல்லியநாமரூபத்தை
முற்பகலொழித்தபோற்றமைமறந்துமுன்னுமெந்தமையடைந்தனரால். ()

உரைப்பதுமுரைப்பக்கேட்பதுமினிவேறென்றிலையெனவுளத்துணர்ந்து
நிரைப்பனிக்கடல்சூழ்புவிமுதனுலகாச்சேர்ந்துநாற்படத்துருவாகி
இருப்பதுபோலவெங்கணுமிருக்குமெம்மையேநினைந்தனையாகி
விரைப்பசுந்துணர்த்தாருத்தவநீயும்வெவ்வினையொழிதிமற்றின்றே. ௩௧

மாயையென்றுரைக்கும்வித்தினிற்பிறந்துமருவுமுக்குணப்பாரையின்மேல், மேயவிந்தியவோர் பதுசினைவிடுத்து வேட்கையாம்வேர்பல வுடைத்தாச், சேயுயர்ந்திரண்டு வினைப்பயன்பழுத்துச் சீவனீசனென்றுரைக்கும், தூயபொற்பறவை யிரண்டுடனிருப்பத் துலங்குமாலாக்கையாக் தருவே. ௩௨

சொல்லிருவினையின்பயனெனும்பழத்தைத்தோற்றுறுசீவனாம்பறவை
புல்லிநின்றருந்துமீசனாம்பறவைபொசித்திடாதுணர்ந்துகொண்டிருக்கும்
நல்வெறிக்குருவான்ஞானவாட்டிநவிற்றுடற்றருவறத்தடிந்தால்
மல்லுயர்புயத்தோய்பிறத்திடுபொன்றும்வாம்பிலாவின்பமும்வருமே. ௩௩

ஞானகன்மமுறைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ௧௪௦.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௪-வது, குணவிகாரமுயிர்க்கில்லையென்றவத்தியாயம்.

### தரவுக்கொச்சகக்கலிப்பா.

வளர்ந்துவருகுணமூன்றுமனத்தைநனிதொடர்ந்திருக்கும்
தளர்ந்துமனமுந்தொடர்ந்துசாற்றுகுணத்தொடுமிருக்கும்
உளர்ந்துநறையவிழுகர்தாருத்தவனேயொண்புலத்தால்
விளைந்தகுணத்தொடுமனத்தைவெவ்வேறுபிரித்தறியின். ௧

உத்தமமென்றுரைக்கும்வினையுண்டாஞ்சத்துவத்தெனவும்
மத்திபமென்றுரைக்கும்வினையயங்குமிராசதத்தெனவும்
வித்தகனேயதமவினைவிளைகுறுந்தாமதத்தெனவும்
இத்தகையகுணமூன்றினியலும்வினையொருமூன்றும். ௨

அறைந்தவினையொருமூன்றாமரியகுணபிரமத்தி
நிறைந்தபுகழ்ச்சத்துவந்தானிங்கியலினிங்குறுமால்
இறந்துசெறியுருத்திரத்திற்சேர்ந்தவனார்[illegible]
பிறந்தவெரியமையைப்பிரித்தபினையார்க்குக்கப்படுமோயாம். ௩

என்றவுமுக்குணத்திறெறிவியக்குமனத்தெலைசின்
தொன்றியுறையுயிர்பிரிந்திங்குடலொழிப்பதெவ்வாறு
நன்றுணரும்படிவருத்துகவிற்றெனவுத்தவன்வினவத்
தொன்றுதொடுமறைப்பொருளாந்தாயவனுமிதுசொல்லும். ௪

வன்னமலரோன்மருங்குவந்தசனகாதியர்நீ
சொன்னபடியேயீதுசொல்லுதியாலெனவினவ
என்னையவனுள்ளிருளீக்கெனநினைந்தானிலைத்தநுமே
அன்னவுருவுற்றவண்யாமடைகுற்றேமடைதலுமே. ௫

மாமலரோனுயிடைக்கண்மருவினர்களெல்லோரும்
ஏமவெனைத்தருவமெய்தியநீயார்கொலென
நாமவறிவுருவாகினன்றுபொருளொன்றேயாம்
காமருடலைக்கருதிற்றிவணென்னைக்கழறலுமே. ௬

தோற்றுருவமிவ்வெல்லாந்தலங்குமைந்தபூதமென்னாம்
வேற்றுருவமொன்றேனும்விளம்பினிலையாதலினும்
ஏற்றவெனைத்தருவமெய்தியநீயார்கொலென
சாற்றுற்றவம்மொழிக்குத்தருபயனென்றுற்றிலதே. ௭

என்றுமுனங்கூறியவகையிலாருமலராமேறு
டொன்றுமுருவத்தோர்சறுவப்பிறைகொடாயினைந்த
அன்றுபுனற்பால்பிரிக்குமன்னவுருவாகியயாம்
வென்றிதிகழ்வெள்வேலோய்மீட்டுமிவைசெப்பினமால். ௮

வழுத்துபெருங்குருவானுமருவதுபோகத்தானும்
தழைத்தவரும்பேதமையைத்தள்ளியொன்றாய்ப்பாராமே
பழித்தவிருஞ்செயல்பொருந்திப்பற்பலவாக்கண்டிருப்போர்
விழித்திருந்துங்கனவுநனிமேவினரைப்போலுவரே. ௯

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சித்தமுஞ்சித்தத்துதித்தமுக்குணமுஞ்சீவனுக்காகையாற்செறிக்கின்
சத்துவகுணத்திற்சாக்கிரமுண்டாஞ்சாற்றியகனவிராசதத்தான்
மற்றவையவத்தையிரண்டலான்மூன்றாமவத்தையுந்தாமதத்தாகும்
இத்தகையவத்தைமூன்றையுமடையாதிடைவிடாதுயிரறிந்திருக்கும். ௧௦

சாற்றியகுணமுமாக்கையுமனமுந்தானலவென்பதையறிந்தால்
போற்றியவாக்கையுடனிருப்பதுவும்போவதுமறிந்திடாராகி
ஏற்றதம்புயமேற்றுகில்கழிவதுவுமிருப்பதும்வெண்ணறைபருகி
மாற்றருமதத்தினறிந்திடாதொழுகுமாக்களைப்போலுவர்மாதோ. ௧௧

யானெனதென்னுஞ்செருக்கறவெறிந்தோன்யாக்கையோடுறையினு மியாக்கை, தானெனதெனமுன்னிழைத்தவெவ்வினைதான்றருபயன்றெ லைதருங்காறும்,போனகமருந்திப்பொன்றியபின்னர்ப்புகலுடலொன்றை யும்பொருந்தான், ஊனுடலடைந்தவுறக்கமற்றுறைவோனுருவரோ வொ ருகணவுரைக்கின். ௧௨

கலிவிருத்தம்.

சொல்லினந்தியிற்றோன்றியசீவனுக்
கல்லல்செய்குணமில்லையறியென்
றெல்லையற்றவிருந்தவர்தம்முளம்
வல்லையுற்றுவருட்டினன்முன்னமே. ௧௩

ஆங்கமாதவர்சொல்லியவெண்வகை
அங்கமாகியயோகநன்காற்றினர்
எங்குமாகியிருந்தவெம்பாலுறல்
சிங்கவேறனையாயினிச்செப்புதும். ௧௪

குணவிகாரமுயிர்க்கில்லையென்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௫௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## எ-வது, யோகசித்தியுரைத்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஏர்பெறுநியமத்தோடியமமாசனங்களென்று
பேர்பெறும்பிராணாயாமம்பிரத்தியாகாரமென்று
தார்பெறும்புயத்தவேந்தேதாரணைதியானமென்று
சீர்பெறுஞ்சமாதியென்றுசிறக்குமட்டாங்கயோகம். ௧

திருந்தியயோகநூலிற்செப்புமாசனத்துச்செவ்வே
இருந்தலைவற்றுமூக்கினுனிதன்னினோக்கி
விரிந்தவைம்புலனுமாய்த்துவிளம்புபூரகமுன்னாகப்
பொருந்தியபிராணாயாமம்புகாறப்புரிதல்வேண்டும். ௨

பூரகங்கும்பகஞ்சீர்பொருந்திரேசகங்களாயும்
சீருறுரேசகாதிதிகழ்விபரீதமாயும்
பேருறுபிராணாயாமம்பிராணவத்தொடுமோர்திங்கள்
வருறவியற்றின்வாயுவிளிந்தவன்வயமதாமே. ௩

வசம்வரினிடாவிற்றேடுவயங்குபிங்கலையையூட்டி
அசைவறநடுவிலுற்றுங்கவிர்சுழுமுனைமேற்போகின்
பசியறத்தலிப்பூப்போற்பண்புறுமிதயமாகி
இசைதருகமலமேவாவெழில்பெறவலர்த்துமக்கால். ௪

அலர்ந்தவம்மலர்மேலன்பர்க்கருள்சுரந்தொழுகுகண்ணும்
நலந்தருமுகமும்வாயுநான்கெனும்புயமும்பொன்சேர்ந்
திலங்குசெம்மணிதாழ்மார்புமெழிற்றொடிபுனைசெங்கையும்
துலங்குபொற்றேளுமாகத்தோன்றுமெம்முருவநாடி. ௫

நண்ணும்யாமென்றும்வேறுநாடியதாங்கொலென்றும்
எண்ணிடாதொன்றுபட்டாங்கிருப்பரேற்றூபமூன்றின்
கண்ணுறுரின்பமென்னுங்கரையிலாக்கடலேயாழ்வர்
அண்ணலேயோகசித்தியறுமூன்றுமவையுங்கேண்மோ. ௬

அறைதருமணிமாவென்றுமரும்பெறன்மகிமாவென்றும்
விறலுறுலகிமாவென்றும்வீறுயர்பிராத்தியென்றும்
நிறைபிரகாமியஞ்சீர்நிலவுமீசத்துவஞ்சொல்
மறுவறுசிறப்பின்மிக்கவசித்துவங்கரிமாவென்றும். ௭

நலங்கிளர்சித்தியெட்டுநவிலுறுமுதன்மையாகும்
இலங்கியயோகசித்தியின்னுமீரைந்துண்டோதின்
துலங்கியவேற்றுத்தீவிற்றேன்றுமெம்முருவநாடி
இலங்கறுவகைவிகாரமேவிடாவாக்கைசேர்தல். ௮

புவிபுகழறிவின்மிக்கோய்புரையறும்யோகத்தானே
செவியினைவானிற்சேர்த்திச்செய்த்துளமொழிகடோர்தும்
சவிதிகழ்சவிதாவின்கட்டன்னிருகண்ணைவைத்து
நவையறத்தூரத்தெங்குநண்ணுருயாவுங்காணல். ௯

அற்றமின்மனத்தின்வேகமடைந்திருந்திசையிற்சேறல்
உற்றநல்லிங்கமென்னவுரைதனுவோடும்புக்குக்
குற்றமில்லாகாயத்திற்குலவுதறமக்குவேண்டின்
உற்றிடலரம்பைமாரோடினிதுவந்தாடலன்றே. ௧௦

சிந்தையிற்றிகழ்முக்காலச்செய்கையுந்தெளிதலின்பம்
வெந்துயரடையாதற்றல்வேறுளோர்சித்தமோர்தல்
அந்தழற்றம்பஞுதியரியதம்பனங்களுட்டல்
புந்தியின்வருமிப்பத்தும்போகநற்சித்தியாமே. ௧௧

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருந்தம்.

இணையறவணிமாவாவதுமுனஞ்சொலெண்வகையோகன்கிழைத்தோர்
அணிபெறுபரமாவணுவெனவெம்மையகத்திடைநினைத்தனுவாதல்
தணிவறுமகிமாவாவதுமகத்தாய்ச்சாற்றுமிங்கெமைநினைவுற்றோர்
மணியெழுவனையமல்லுயர்புயத்தோய்மகத்தெனமருவுதன்மாதோ. ௧௨

மருவியலகிமாவாவதுலகுவாய்மனத்தெமைநினைத்தனுவாதல்
உரைதருபிராத்தியாவதிந்தியங்களுறும்புலனெனவெமைநினைத்தோர்
விரவுதல்பிராகாமியமகத்தோடிவீறுயர்சூத்திராமாகிப்
புரைதபவெங்குமிருப்பமென்றெம்மைப்புந்தியினினைத்தவர்விளங்கல். ()

எழுவகைப்பிறப்பினுயிர்க்குழுவியக்கும்பெருங்காலத்தினுருவாய்
விழுமியவளத்திலைமையினைவுற்றோர்விளம்புமீசத்துவம்பெறுவார்
மொழிதருமவத்தைமூன்றையும்பொருந்தாமுழுமுதலாயறிந்திருக்கும்
அழிவறுதுரியனெனவெண்மையினைந்தோரடைகுவர்வசித்துவமன்றே. கசு

கருதருங்காமமென்றுமொன்றுனக்குக்கழறுநற்சித்தியாதென்னின்
அருவமாயறிவாயாநந்தமயமாயாகுவனெனவெண்மையினைந்து
விரைகமழ்கறுந்தாருந்தவயோகம்விதித்தவாறினிதுறவிழைந்தோர்
பொருவிலவ்வாறேயாநந்தமயமாய்ப்பொருந்தியீற்றிருப்பர்தாமன்றே. ()

எவ்வகையெவையே யியைக்கெமைமனத்திலிடைவிடாதன்பொடுநி
னைந்தோர், அவ்வகையவையே யடைந்துவப்படைவா ரகம்புறநடுவும்யா
மென்ன, மௌவலந்தொடையானுத்தவன்றனக்குவழங்கினனெனச்சொ
லியீட்டும், தெவ்வலர்புகழும் விண்டுராதனுக்குத் தெரிக்கலுற்றனன் சுக
முனிவன். கஅ

யோகசித்தியுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கஎ0.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## அ-வது விபூதியுரைத்த வத்தியாயம்.

---

### கலிவிருத்தம்.

வெளியுமொன்றும்விமலனியாயினும்
தெளிதலாவொருயோகமுஞ்செய்கலார்
எளியர்தாமுனையெங்ஙனஞ்சேர்வதென்
றுளிகொள்வேற்படையுத்தவனோதினான். க

ஆதனன்னதுகேட்டலைமறின்றனன்
தீனவருஞ்சமனோர்க்கிலைறுகி
வினவும்வண்ணம்விசயனுங்கேட்பயாம்
சினவுவேலவசெப்பினமுன்னமே. உ

நீதிமுத்தொழிலும்மவைசெய்வதும்
பூதத்துள்ளுயிரும்பலபூதமும்
ஏதமற்றயாமாதலினெம்முரு
ஓதின்முற்றுமுரைக்கடங்காதவே. ந

பொறியடங்கவடக்கியபூட்சியில்
அறையுமுள்ளத்தவர்களுமெம்முரு
அறியும்வண்ணம்யாமானவிபூதியுள்
குறைவிலோய்சிலகூறுதுங்கேட்டியால். ச

வண்மையாமகத்துக்கும்வயக்குமோர்
திண்மையாமகத்தாசவுஞ்சேர்ந்தியாம்
நுண்மையாயபொருளிதுவலரு
முண்மையாமுயிராகவுமுற்றனம். ௫

அந்தமுற்றவெழுத்திலகாரமாம்
மந்திரத்தின்மறைசொல்பிரணவம்
சந்தமுற்றுத்தயங்குசந்தச்சினில்
நந்தலற்றகாயத்திரிநாமமோ. ௬

சீலமேவியதேவரிற்றேறல்பாய்
மாலினீண்முடிவாசவன்வான்றழற்
பாலலோசனப்பண்ணவர்தங்களின்
நீலலோகிதனென்னவுநின்றனம். ௭

வளம்பொருந்தும்வசுக்களிலக்கினி
விளங்குகின்றவாதித்தரின்விட்டுணுத்
துளங்கிரும்புனற்கோன்றிறையாகிநல்
உளந்திருந்தறிவுற்றவருணனும். ௮

போற்றுகின்றபுரோகிதர்தங்களின்
மாற்றருஞ்சொல்வசிட்டனிவ்வையகம்
சாற்றுஞானச்சதுமறையோர்களின்
எற்றசீர்க்குருயாமென்றறிதியால். ௯

வண்ணவேந்தமுனிவரின்மாமனு
நண்ணுதேவமுனிவரினாரதன்
எண்ணலாதபிரமமுனிவரின்
அண்ணலேநாரணன்யாமரோ. ௧௦

சித்தரிற்கபிலப்பெயர்சேர்ந்தவன்
பத்தெனப்பகரும்படைப்போர்களில்
வித்தகத்துறைதக்கன்வில்லாளரின்
முத்திறப்புரந்தீத்தமுக்கண்ணன்யாம். ௧௧

விரியுநாள்வருணத்தினில்வேதியர்
வருணநாமவ்வருணத்திறனென
உரைசெயாச்சிரமத்திறெக்கமாம்
புரையிலாச்சிரமம்புகல்வீரயாம். ௧௨

அரியநான்மறையந்தணர்தங்களின்
பிருகுநாம்பலபேசுறுமாந்தரின்
மருவுபார்புகழ்மன்னவன்விண்ணவர்
கருதுசேனைத்தலைவரிற்காங்கேயன். ௧௩

தருணமங்கையரிற்சசருபையாம்
புருடரிற்சுவாயம்புவெனப்புகல்
உருவகன்மனுவேந்தனுடுக்களின்
இருவிசும்பிணிலங்கியதிங்களே. ௧௪

கண்ணகன்றநதிகளிற்கங்கையாம்
தண்ணிருந்தசலாசயங்களின்
மண்ணகழ்ந்தவளைப்புருவாரிதி
விண்ணுயர்ந்தசிகரியின்மேருவே. ௧௫

வினைகடந்தயர்வேதியர்தம்முழை
மனையொடன்புசெய்வோர்களின்மாவலி
புனிதநல்லொளிபுல்லினரிற்பெரும்
பனிகடந்தபரிதியஞ்செல்வன்யாம். ௧௬

மாசிலாக்கவிஞோரின்வன்சுக்கிரன்
தேசுசேர்பகவானெனுந்தேவரின்
வாசுதேவன்வழுத்தநல்லன்பரின்
ஈசிலாதகீயாமென்றறிதியால். ௧௭

அடக்கருமவைதம்மிலருங்பொறி
நடக்கலுற்றமனநவைநீங்கிய
படைக்கலத்திற்பகர்பெருங்கார்முகம்
கடக்கருங்கபட்டிற்கலியாமரோ. ௧௮

மல்லலுற்றவலியின்மன்றவிவெனய்
புல்லலுற்றதருப்பையிற்பூக்குசை
சொல்லலுற்றயோகத்திற்றுணிவுடன்
அல்லலற்றுமனத்தையடக்கல்யாம். ௧௯

விரதமானவைதம்மின்விளங்கிய
விரதமோருயிர்க்கிழிழையாமையாம்
வாதயாம்மறைவானவைதம்மினில்
சாதமாகத்தரித்தமௌனமே. ௨௰

சாற்றுகின்றதவத்தினியமமாம்
போற்றுகின்றசாரக்கவிற்பொன்னனி
ஆற்றுகின்றயாகங்களினன்பொடும்
எற்றுகின்றபிரமவியாகமே. ௨௧

தரவுக்கொச்சகக்கலிப்பா.

தயித்தியரினல்லறிவுசார்பிரகலாதனியாம்
இயக்கர்களின்மந்திரியாமெழிற்பிரமசாரியரின்
நயக்குமுனைத்தாத்தவகேசனுஞ்சனற்குமாரனென்னும்
மயக்கறுகற்பிதிர்கடரின்மருவரியமாயாமே. ௨௨

பறவைகளின்யாங்கருடன்பன்மாவின்யாமடங்கல்
கறவையெனுநிரைகளின்யாங்கடவுளாரப்பரிகளின்யாப்
சுறவமெறிதிரைக்கடலிற்றேன்றுபரிகரிகடமின்
மறவைதுனிநாற்கோட்மேதவயிராவதம்யாமே.

அரவுகளின்வாசுகியாமாவாசாரயவரின்
பரவுபலமணித்தலையிற்பார்ப்பரித்தசேடன்யாம்
விரவுபலதருக்குழுவின்விளங்குசினையாசுருயாம்
புரவுபுரியாசமுதற்புகல்பவரிலயன்யாமே.

அழிவுசெயுந்துடிமுதலாமாகாலத்தாண்டுருயாம்
விழையுமிருதுவினிவிளவேனிலெனுமிருதுவும்யாம்
தழைவுபெறுமதிகளின்யாந்தனுமதிநன்றுட்களினில்
மழைகிகருங்குடைக்காத்தாய்வழங்கபிசித்தெனுநாளே.

அரசயுகநான்கினிலுமாதியுகமாவதியாம்
பரவரியவியாதனியாம்பராசரமாமுனிபுதல்வன்
பொருதிறல்சேர்வீரர்களிற்புகன்றவெழிலருச்சுனன்யா
பெருகுசுகிகளிற்சுகியாம்பெலவானிற்பெலவான்யாம்.

நவையறுகந்திருவர்களினலஞ்செய்விச்சுவாவசுவாம்
புவனமுழுதும்புறமும்பொருந்தியவானத்தொலியும்
பவனனினற்பரிசமுஞ்சேர்பாவகனிணெழிலுருவும்
அவனியினிலருமணமுமப்புவினிவிரதமும்யாம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுடர்நவமணியிற்பதுமாரகமும்போய்த்துன்னுதற்கரிதெனுஞ்
கெடலருவலிசேரிமயமால்வரையுங்கிம்புருடரிவியமாறும்
உடைதிரைப்புனல்வாழுயிரினின்மகரவுருவமுமுதியம்பெறு
விடலருவ்வசாயங்களின்மலர்மேல்விளங்கியவிமலையும்யாமே

மருவியமாயைமகத்தகங்காரமதியொறிபுலன்குணஞ்சீலம்
தரைபுனல்கனல்கால்வான்முதலெலவையுஞ்சாற்றுநாமாயினுங்
திருவருளெழில்சேர்திகழ்வலம்பொறுமைதெளிவுமெய்சொரை
அரசவெங்குறையுமவணெலாநீமற்றறிதியெங்கலைப்பிரிவென

சுருக்கினமிவ்வாறுரைத்ததையன்றிச்சொல்லுமெம்பூதியையரு
விரித்துமற்றுரைப்பவேண்டுமேலெமக்கும்விளம்புதலரிதினை
உரைத்திடுமெமதுவடிவெனமாயனுத்தவற்குரைத்தனனென்
திருத்தகுமுனிவனரசனுக்கெரியத்தெரித்துமினவுஞ்சிலதெரி

விபூதியுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௦௦.

ஸ்ரீ [illegible]

## வது, வருணாச்சிரமமுரைத்தவத்தியாயம்.

### கலிவிருத்தம்.

ன்னலுமுத்தவனிறைஞ்சியெம்முழை
ன்னியவன்பொடுவருணநான்கினோர்
ன்னியதமவினையுளுற்றனன்றென
ன்னவவுரைத்தனைதொகுத்துமுன்னமே. க

வ்வகைவருணவாச்சிரமமன்போடும்
வ்வகைவருவர்வந்தியற்றுதம்வினை
சய்வகையிவையெனத்தெரித்தியென்றலும்
மளவலந்தொடைபுனைமாயன்கூறுமால். உ

ண்ணியமுதலெனுமுகத்தின்யாவரும்
ண்ணியஞானநன்னலத்தினோங்குவர்
ண்ணறுந்தொடையலாய்தருமமானயாம்
வண்ணிறவிடையுருவெடுத்துமேவுவேம். ங

ரைத்தனநான்மறைமுழுதுமொன்றெனத்
தரித்திடும்பிரணவமாகிச்சேர்துமால்
அருத்திசெயிரண்டெனவறைந்தவூழிவாய்
ரித்திடும்பெயர்விராட்டென்னுமெம்முழை. ச

டலவியவுயிர்ப்பினிலுதித்தமாமறை
தலவியமுகம்புயங்குறங்குதாளினில்
லவியமுறைமுறைநிகழ்த்துதந்தொழில்
லனொடுவருணமோர்நான்குந்தோற்றின. ரு

டத்தவிரண்டெனுமுகத்தினுதியின்
த்திறமுதித்தவெம்முருவமாகிய
ரித்திரவிராட்டெழில்சேர்முகத்திடை
கத்துவஞானமுந்தயங்கித்தோன்றிற்றால். சு

அல்லலிலிருபிறப்பாவதும்மதற்
சொல்லுநற்றருமமுமிதயத்துற்றெழ
இல்லினராவதுமியைந்ததன்மமும்
வல்லையிற்சகனமேல்வந்துதோற்றின. எ

வனத்திடைச்சேறலும்வனத்திற்செல்லுநர்
வினைத்தனசெயத்தகுமெனநிகழ்த்திய
வினைத்தருமங்களும்விளங்குமார்பிடைச்
எனித்தன துறவறந்தலையிற்றோற்றின. அ

டைதருசமதமமுவப்பிருந்தவம்
கருதருவஞ்சனைகளைதலெம்முழைப்
புரிதருமன்புமெய்பொறுமைநல்குதல்
அருண்முதலறங்களந்தணருக்காகுமால். கூ

துறைவழிநிலைகொடைபொருளுதவல்
மறையவருறைழமருவன்பின்னைவருதல்
முறையுயிர்புரத்தலிம்முதலைத்தையும்
இறையவர்தருமமென்றியம்புநூல்களே. ௬௰

அணிபெறநிக்குலவையடையிறுமொழி
தணிவறவளர்ப்பதுஞ்சாற்றுமந்தணர்ப்
பணிவதுமுதலியபண்பிலாவறம்
வணிகருக்கியல்பெனவழங்கற்பாலவே. ௬௧

இன்னமுத்திறத்தினோர்க்கேவல்செய்வதும்
உன்னியபொருளுறல்கொண்டுவப்பதும்
மன்னியதேவரைவணங்கிவாழ்த்தலும்
பின்னவர்க்கறனெனப்பேசல்வேண்டுமால். ௬௨

அழிவறுவருணநான்கடைக்குமோரறம்
இழிகுலமாயவர்க்கியற்கையென்பன
பழியுறுமிசைகாமாதிபட்டிமை
சுழலுபொய்பயனிலாக்கலகமாதியாம். ௬௩

நவையுறுசபவொடுசெய்பொய்ந்நீக்குதல்
குவையுறுமுயிரிலொன்றனையுங்கொல்லிடா
தவைமகிழ்கூர்தரவன்பின்னைவருதல்
இவைமுதலியவறமெனவர்க்குநல்லவே. ௬௪

தூயநன்மறையவர்தூய்ப்பகற்பொருள்
வாயதந்தொழிலினியைவதில்லெனின்
மாய்விலவணிகர்தந்தொழிலுமன்னர்தம்
ஆயுதத்தொழிலுமுற்றருந்திவைகுவார். ௬௫

மன்னவருணவறவிருமாய்விடின்
பொன்னுறுவணிகர்தந்தொழிலும்பூசுரர்க்
குன்னியதொழிலுமுற்றுண்பவொட்டியர்
பின்னவர்தொழிலுகீர்ப்படையிற்பெறுவார். ௬௬

வறுமைபின்னவர்கனிமருவிறுணைற
அறுவைநெய்வதுமுதலாயசெய்குவார்
உறுதமதொழிலினிலுணவின்றெனின்
பிறர்தொழிலியற்றுதல்பிழையிக்காமரோ. ௬௭

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விதிமுறைபிரமசாரியாயமேதகுமாச்சிரமத்தோர்
மூதுமறையியலுமுபகுருவாணர்மொழிகருயிட்டிகையென்ன
மதிபெறுமாசவிருவகையினராம்வழங்கியநயிட்டிகாவோர்
ஆதிபெறுகுரவற்கெழுதருமறையின்றுணிபொருண்முழுவதுந்தெரிந்தே

இளமுலைமடவார்தமைமணமியற்றுவேனை யாச்சிரமமாயிருப்பார்
வளமுறைமுழுதுமுபகுருவாணர்வழுவலதெளிந்துசொற்குருவுக்
குளமகிழ்கூலிதிபலகொடுத்தாங்குரைவிரதாதியவுஞற்றி
அளியுளர்தாரோய்விதித்தகன்னியரையருமணம்புரிகுவான்றே. ௧௧

மறையவர்நான்குவருணம்வந்துதித்தமடக்கிளிமொழியினர்தமையும், இறையவர்மறையோர் குலமலாலேனை யியம்புமுக்குலத்தினிற்பிறந்த, பிறைநுதன்மடவார் தம்மையும்வணிகர் பேசிருகுலத்துமாதரையும், முறைமுறைமணத்தற்குரியர்பின்னவர்தம்மொழிகுலத்தினரையேமணப்பார்.

ஞானநான்மறைதேர்நயிட்டிகர்துறந்தோர்நவையறமனையகமறந்து
கானில்வாழ்கின்றோர்காதலின்மடவார்க்காண்கலுந்தீதெனக்கவைவார்
மானவேவாசவிடுத்தவாச்சிரமமகிழ்ந்துமீண்டிறங்குதலாகா
தேனவாந்தொடையலாசாந்தணரோர்ச்சிறப்புடைவணிகர்மற்றிவர்க்கே.

குரவரைவணங்கிநான்மறையோதல் கூறியமகமுவந்தாற்றல், இருநிதிவழங்கலென்னுமுத்தொழிலுமியையுநல்வேள்விசெய்வித்தல், பொருவருமறைநூ லோதுவித்துறைதல் புகல்பொருளேற்றன்முத் தொழிலும், உரைதருமறையோர்க்குரியமற்றேனோருஞற்றுவரேற்பழுதுறுவார். ௨௨

தேவர்தென்முனிவாதிதியர்பூதந்தென்புலத்தவரெனத்தெரிந்தோர்
தாவரும்பூசைநிச்சலும்புரியுந்தவறிலாவில்லறத்தினரும்
காவலங்கலஞ்சேர்கதிபெறுகுவராற்காமம்விட்டில்லுறைந்தாங்கு
மேவியவதிதிபோலுறைகுவரேன்மீள்கலாவீட்டினுமுறைவார். ௨௩

ஆயுளின்மூன்றங்கூற்றினில்வனம்போயடைகுதலறமடைகுற்றூர்
காயும்வெவ்வேனிற்காலம்வந்தணுகிற்கருதுபஞ்சாக்கினிநடுவும்
மேயகார்பனிசேர்காலம்வந்தடையின்விரிபுனலிடத்துமுற்றுறைந்து
ஆயதாந்தவநன்காற்றிமெய்ப்பொருடேர்சூழ்ச்சியின்வைகுதறுணிவே.

மனத்தினிலோமத்தழன்முறையடுக்கிவரும்வழித்தத்துவம்போக்கிக்
குனித்திடுஞ்சிலையோயாயுளிறுவாய்க்கூற்றினிற்றுறந்தெதியாவார்
நினைப்பருவயிராக்கியமுடன்ஞானநிலைபெறமுன்னைமேவரினும்
வினைத்திறமொழியத்துறவறம்பூண்டுமெய்ப்பதமடைந்துவீற்றிருப்பார்.

விளம்புநற்பதம்பெற்றுயர்குவரென்ன விண்ணவர்பொறாமையால்விளைந்தாங், குளங்கனிந்துருகுமனையவளாதியுருவினராகிமுன்றடுப்பார், வளம்பெறுவாச வவ்வகையறிந்துவருமிடர்கடிந்தெதியாகிக், களங்கமின்மனத்திற்றுறவறமியற்றல்கடனெனவுரைப்பர்கற்றுணர்ந்தோர். ௨௪

தரவுக்கொச்சகக்கலிப்பா.

அதிவருணாச்சிரமியெனவடைந்தமுனிதிறங்கூறின்
விதிசவுசாசமனமுதல்வேண்டுதல்வேண்டாமையிலான்
பதிதருமிடத்தனுகான்பாலனைப்போன்மகிழ்ந்துறைவான்
மதிமருவியெவரேனுமெவையளிப்பாரவைபெறுவான். ௨௫

உற்றவினவறத்தினனென்றுரைப்பவொருசின்னமிலான்
எற்றிடினுமெறிந்திடினுமீனனெனவைதிடினும்
மற்றவரைவெகுண்டுரையான்வழங்குமுணவேற்பதற்குச்
செற்றமறும்படிமுயற்சிசெய்தாலுஞ்செய்குவனுல். உஅ

பயம்புரியான்பயமடையான்பழியான்மற்றொருவரையும்
நயம்புரிந்ததருமமிலைவகைவயிலையென்றுளத்தோரான்
இயம்புபெயர்தேகியெனவிருந்தாலுந்தனுவிறப்பின்
வயம்புரியுமரசவவன்வழங்கியவெந்தமாவான். உகூ

துறந்தவருக்குரியனவாஞ்சொல்லுமுயிர்க்கிதஞ்செயலும்
மறந்தவிடயங்களினுமனஞ்செலுத்தாதுறைகுவதும்
நிறைந்தபுகழுத்தவனேநெடுங்கானமடைந்தோர்க்குப்
பிறங்குதவம்புரிவதுவும்பிரமவிசாரமுமுரித்தே. கo

இல்லறத்திலிருந்தவருக்கெவ்வுயிர்களிடத்தினிலும்
நல்லவழிபுரிகுவதுநாயகர்பூசையுமுரிய
சொல்லுகுருசேவையொடுதொல்பிரமசரியமுநூல்
ஒல்லுமுபநயனவினையுற்றவருக்குரித்தாமே. கக

அருமுனிவர்தாம்பிரமமாணுலும்வெய்யவினை
மருவவருமோகாதிவந்தணுகாவெவ்வுலகும்
விரவுபுகழரசவவர்விளம்புமுடல்விழுமளவும்
பிரமவிசாரத்திருப்பர்பின்னமறவெனவுரைத்தான். கஉ

வருணச்சிரமமுறைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் உகஉ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கO-வது, இயமநியமாதியுரைத்தவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

இத்திறத்தனகேட்டலுமின்னமும்
பத்தியும்பகர்தற்கருஞானமும்
புத்தியிற்பொருந்தப்புகலென்னுமவ்
வுத்தவற்கருண்மாதவனோதினன். க

அருமையாமறிவாகியவெம்முறை
ஒருமையாயநல்லன்பொடுஞற்றிய
கருமமியாதெனினும்மதுகாண்டினற்
றருமமாமெனச்சாற்றுவர்மேலவர். உ

மம்படச்சொல்லியஞானமாம்
னன்மசபதியாயயாம்
வுவமாகவாராதிக்கின்
த்தியனுகுதிநியரோ. ங

காலமோர்மூன்றினுந்தான்றனி
மலர்மாலையொன்ருய்நடு
ளமயக்கினுரகமாய்த்
வம்பயமுந்தால்போலுமே. ச

தருமாயையினுனடு
ம்படைப்பாயதல்லாதினி
வாற்குப்பிரமமுமொன்றென
லமோர்மூன்றும்வயங்குமே. ரு

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மியமநற்றபசுசமதமம்வேள்விதக்கிணைமெய்
ஞ்சவுரியம்வித்தைதபூதியம்பண்டிதன்மூர்க்கன்
பழியருந்தனவான்றெரித்திரானீசுரனநீசன்
ணம்புகலென்றுவணங்கலுங்காங்கெயன்வகுத்தான். சு

தவாறுனக்கிசைப்பமாசநீகேட்டிமுன்னருஞ்சீர்
மமென்பனதாம்வருமுயிர்க்கிதஞ்செயன்மவுனம்
தபம்புனிதம்பகருமெய்பொறைமுதலியவாம்
மனத்தினையடக்கலுறுந்தமமிந்தியமடக்கல். எ

கலிவிருத்தம்.

யகின்றதவமெனச்சொல்வது
காமம்விடுப்பதுபுந்தியின்
ப்படுகின்றதுமற்றெமக்
துபயனளித்தாற்றலே. அ

தநற்றக்கிணையாவது
ர்க்கருள்பொற்கொடையன்றுசொல்
றென்றயர்வுறுமாந்தருக்
ாப்புகழ்ஞானமுதவலாம். கூ

மயாயதனமெனப்பேசுதல்
குந்தமையிற்றவறிலா
யாயதியாகமென்றோதுதல்
ாடுகெய்காமம்விடுப்பதே. க0

சாற்றுகின்றசவுரியமாவதிங்
காற்றலுற்றமனத்தையடக்குதல்
ஏற்றமுற்றநற்சத்தியமென்பது
சீற்றமற்றுவேதாந்தந்தெளிவதே. கக

வித்தையாவதுவேதம்விடுத்தொரு
புத்தியாகப்பொருந்துதல்பொற்புறும்
உத்தவாமிகுமூதியமாவதெம்
பத்தியாமெனவேதம்பகருமே. கஉ

தரவுக்கொச்சகக்கலிப்பா.

பந்தமொடுநல்வீடுபகுத்தறிவோன்பண்டிதனும்
அந்தமிலான்மாவாக்கையாளென்பானேமூர்க்கன்
நந்தலிலெந்நூலறிதனல்லநெறிதீநெறிதான்
புந்தியொடுநிவர்த்தியிலாப்பொய்ந்நூல்பார்த்தறிவதுவே. கந

நல்லகுணஞ்சேர்தருவோனவையிறனவானுகும்
சொல்லுமகிழ்வில்லானேதுகளாருந்தரித்திரனும்
மல்லலுறுமீசனென்பான்வழங்குபுலத்தாசையிலான்
அல்லலுறுமாசைதனையடைகுறுவோனநீசுரனே. கச

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

குணமிஃதகுணமென்னக்குறிப்பதேயகுணமாகும்
கணமுறுகுணமீதென்றுங்கருதினகுணமீதென்றும்
மணமிகுதாமமார்பமனத்திடைமதித்திடாமை
இணையறுகுணமதாகுமென்னலும்வேந்துசொல்லும். கரு

இயமநியமாதியுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் உசஎ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

# கக-வது, மனத்தொருமைப்பாடுரைத்தவத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒளிதருகுணங்களென்றுமுறும்பழியகுணமென்றும்
தெளிதருகினதுவாக்காஞ்சுருதியுந்தெரிக்குமென்றால்
களிதருகுணகுணந்தானுடிடாதிருப்பதெங்ஙன்
அளிதருகமலக்கண்ணவையுறுமடியேனுள்ளம். க

உற்றவையுறவுநீக்கியுணுதுரையமூதுதன்றேல்
பற்றுறுமிழுதையாயபணியின்வெவ்விடத்தின்மூழ்கப்
பெற்றிடுமெனதுநெஞ்சம்பிழையறநினைத்தியென்று
கொற்றவன்கூறநம்மான்கூறினன்றெரியமாதோ. உ

நலந்தருஞானயோகநவையிலாப்பத்தியோகம்
பலந்தருகருமயோகம்பகருமிம்மூன்றுமுன்னே
வலந்தருமாந்தருய்யவகுத்தனமிவையேயன்றிக்
கலந்தருமார்பநன்மைகாட்டவொன்றில்லைமாதோ. ௩

ஒழிந்தவர்தமக்குஞானயோகமுமுறைக்குமாசை
தழைந்திடாராகியாவுந்தவிர்ந்திடாதெமதுகாதை
மொழிந்திடக்கேட்கன்முன்னமுயன்றநற்றவத்தினோர்க்கும்
விழைந்திடும்பத்தியென்னவிளம்பியோகமுநன்றுமால். ௪

காமமொடுறைந்தமாந்தர்கருமயோகத்தின்வாழ்வார்
நிமையுநலனும்பின்னோர்சேர்வர்மற்றவருக்கில்லை
மாமகமுதலகன்மம்வரும்பயன்விழையாதாற்றின்
நாமநற்றுணைத்தொடைந்தாய்நண்ணிடார்ஞானஞ்சேர்வார். ௫

பேதமற்றிருந்தஞானம்பிறந்திடுமளவுமெஞ்சீர்
நீதியுற்றிருந்தமாந்தர்நிகழ்த்துதல்கேட்டுங்காறும்
ஓதுநைம்மித்திகத்தோடுற்றநித்தியகன்மங்கள்
வேதமற்றியற்றல்வேண்டுமிறையவவியல்பின்மாதோ. ௬

தேவருமாந்தராகிச்சேரவேணவாக்கூர்வாரால்
காவலவெனினுமாந்தர்கருதுதம்பிறவிமீட்டும்
மேவவேண்டுவரோவென்னின்வினைவருமென்றேவேண்டார்
தாவில்வீடொன்றநிற்பார்சமன்விரைந்துறுமுனன்றே. ௭

எறிந்திடுமாத்தின்வாழுமிருஞ்சிறைப்பறவையப்பால்
பறந்திடுமினையாதாகிற்பயக்குமோர்நன்மையுண்டே
குறைந்துநாளென்றுங்கூர்வாளரிதராச்சுன்றுமாக்கை
உறைந்துயர்நெறியினெட்டாவுயிர்க்குநன்குறுங்கொலம்மா. ௮

மானிடவாக்கையென்னுமருவரும்பஃறிபெற்றும்
ஊனமில்குரவன்சொல்லாமோடமுய்ப்பவனோடெஞ்சீர்
ஆனதோராநுகூலக்காலனுகவும்பிறவிவேலை
தாணொழிதரவொண்ணாதான்றன்னையேகொல்வனன்றே. ௯

பொன்னுலகடைவான்காதல்புரிவீர்பொருவில்வீடு
துன்னுறநிற்கருதுமென்றுசொற்றநுமேட்டைகூடார்
மன்னுமேகாந்தம்பற்றிமருவினவர்க்குவேறு
கொன்னுறுநிமையென்கொல்குணனென்கொல்குறிக்கினம்மா. ௧௦

மனத்தொருமைப்பாடுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௫௭.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

# கஉ-வது, தேசகாலமுரைத்தவத்தியாயம்.

---

## அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தருமநற்பொருள்சொல்கர்மஞ்சார்தருபாக்குச்செய்யா
விரிதருவேதநூலால்விதித்ததங்கருமமன்பால்
வருணமாச்சிரமர்செய்யின்மருவுவர்குணத்தின்வண்மை
புரையுறுவினைசெய்வாரேற்பொருந்துவாகுணமன்றே. க

வருணமாச்சிரமந்தத்தம்வருவினைபுரியுங்காலைத்
தெரிவுறுதேசகாலஞ்செழும்பொருள்கருத்தாயோர்
கருமமந்திரங்களென்னக்கழறுமிவ்வாறின்பாலும்
ஆசநற்புனிதம்பொல்லாவசுத்தமுண்டறியற்பால. உ

அந்தணர்க்கன்புசெய்யாவரசினிதுறையுநாடு
வந்துறுபகையைநீக்கிமாநிலங்காவல்செய்யா
வெந்திறல்வேந்துசேருமேதினியெமதுதொண்டை
நிந்தைசெய்பதகர்வாழுநெடுநகர்மூன்றுந்தீய. ங

கருங்கலைக்காட்டின்வைகாக்கண்ணகனுடுங்கையான்
நெருங்கலைப்புனலூறாதநிலனும்வெவ்வுவரினூர்ந்தே
இருங்கலைமதிபோல்வெண்மையெய்தியநாடுந்தீய
அருங்கலைமுழுதுந்தேரெம்மடியர்சேரிடனன்றுமே. ச

இவ்வினைக்கின்னகாலமியல்பெனவிதித்ததல்லால்
வெவ்வியகாலந்தானும்விழித்திடுஞ்சூதகாதி
கவ்வியகாலந்தானுங்கலகமாங்காலந்தானும்
செவ்வியநெறிசேர்வேந்தேசெப்புறுபுனிதமன்றே. ரு

செப்பியபொருள்களெல்லாந்தேசகாலத்தினானும்
தப்பருஞ்சுசியினோடேசாற்றியவசுசிசேரும்
அப்பொருட்கரியசுத்தியந்தணர்வசனந்தெண்ணீர்
ஒப்பருந்தபனனாதியுரைத்திடும்விதியினுண்டால். சா

சீதநீர்படிதலானுஞ்செழும்பொருளுதவலானும்
மேதகுதவத்தினானும்விளம்புநற்கருமத்தானும்
ஓதுமெய்ம்மிடத்தினன்புற்றுறைதலினானுநீங்காக்
காதல்கூராசசொல்லுங்கருத்தர்நற்புனிதஞ்சேர்வார். எ

நிந்தையில்வினையின்றூய்மைநிகழ்த்திடிற்பயன்வெஃகாது
தந்திரமறைசொல்லகேறேதறைமிசைமுறையினாற்றல்
மந்திரசுத்தியென்னவழங்கியவாறிங்கோதின்
அந்தமந்திரத்தினல்வரும்பொருளறிதலாமே. அ

தெரிவுறுமாபுநான்குஞ்செப்புறுநிலைகளுன்கும்
மருவியகுணத்தினேடேமறுத்திடுமகுணஞ்சொல்லின்
ஒருவழிக்குணமென்றேதலொருவழியகுணமாகும்
புரைதருமகுணந்தானும்புகலொருவழியினன்றும். ௯

தேசுறுமறையோர்க்கேற்றல்செப்புநற்குணமென்றாலும்
ஆசறுக்ஷத்தியம்பெற்றோர்க்கத்தொழிலகுணமேயாம்
பூசுரர்தமக்குவேள்விபுரிவித்தல்குணமென்றாலும்
மாசறுமாசாரயோர்க்கச்செயலகுணமாமே. ௰

சொல்லியதுறவுபூண்டோர்சுரிகுழலாரைச்சேரின்
அல்லல்செயகுணமாகுமாயினுமனைவிமாரை
இல்லறமியற்றுகிற்போரியம்பியநாளிற்றோய்தல்
நல்லநற்குணமேயாகுநான்மறைதெரித்தவாற்றால். ௰௧

பற்றறுகுணத்தினேடுபெழுதறுகுணனுஞ்சொல்லின்
குற்றமினிவிர்த்தியல்லாக்கொடுநெறியடைந்தார்க்கல்லால்
சொற்றிடுநிவிர்த்தியென்னுந்தூநெறியடைந்துளோர்க்கு
மற்றவைவருவவில்லைமன்னவவுரைக்கின்மாதோ. ௰௨

அமரர்தமுலகுவேள்விக்கரும்பயனென்றவேதம்
இமையவருகழ்வேள்வியியற்றனெஞ்சியையவேண்டிக்
குமாவிய்மருந்தருந்திற்கொழுங்கனிதருதுமென்னும்
தமரினர்போலல்லாதுதரும்பயன்சழக்கில்வீடே. ௰௩

மன்னுநல்வேள்விசெய்யின்மறுமையினடையும்பேறு
பொன்னுலகென்றுசொல்வார்பூவையேபலமென்றுன்னும்
கொன்னுறுகுணத்தார்போல்வார்கூறியபயன்வெஃகாமல்
அன்னநல்வேள்விசெய்யினரும்பயனழிவில்வீடே. ௰௪

இருள்படுகாட்டினூடேயிருந்துழல்சிதடராயோர்
தெருள்படுகாந்தாமேசேரதறிகலார்போல்
மருள்படுகாமமுன்னிவருவினைமுயலாநிற்போர்
பொருள்படுநலஞ்செய்வீட்டிற்புகுமதறிகலாரே. ௰௫

நாமத்தான்மூடுங்கண்ணர்சூழ்ந்தண்மையிருந்துஞ்சாலைச்
சேமத்தான்மூடுயோமத்தீயினைத்தெரிகலார்போல்
காமத்தான்மூடுநெஞ்சக்கருமத்தோருலகமாயை
நாமத்தான்மூடுமுள்ளத்தம்மைநன்கறிகலாரே. ௰௬

பழுதறவழியிற்றோன்றும்பரமமாமணுவின்கூட்டத்
தெழுமொலிவீற்றுவீற்றாவெழுத்தெனமனமூண்டாக்கும்
விழுமியவெழுத்துநானுவேதமேமுதலவாகும்
தொழுதகுமவையுமொன்றேசொற்றிடுந்துணிந்துபார்க்கின். ௰௭

மருவியதுறைகள் டோறுந் திகழ்ந்திடச் [illegible]
கருணையிற்கண்டெமென்னக் குருதமைமைவந் [illegible]
உரைதருபவமும்பாவியுமுற்றிடுமறையுமாகி
அரசனின் முனைத்தாணையிற் றிவ்வியமாதிகாலம்.

தேவகாண்டமுற்றிற்று

ஆக திருவிருத்தம் [illegible]

ஸ்ரீ [illegible]

---

## கஉ-வது தக்ஷகாண்டம்

---

கலிவிருத்தம்.

இத்திறமுன்னாயினைத்தருள்கண்ணவன்
பத்துமுகந்திலைபற்பலமேசாயும்
தத்துவமெந்தனைசாற்றுதிரிபமே
முத்தவசேதையுணர்த்தினனன்றே.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உமைத்தனாணுத்துவத்தொடேயுமி [illegible]
பெருக்குமையைக்கொண்டொண்டுனைச்சிறி [illegible]
விரித்திடுமையிலாமசெந்தன்முகமினைப் [illegible]
சுருக்கியமொழிவர்தத்துவமெல்லாம் [illegible]

வழங்குதத்துவத்தின்கூட்டமாமாக்கைய [illegible]
விழைத்திடுகைவிற்பற்பலவாக்கைகளை [illegible]
தழைத்தமெய்ச்செந்தமறந்தமேயமன [illegible]
ஒழித்திமொசபுருடனுக்கென்றுரைத்த [illegible]

இருவினைக்கிடாவேறுடல்படைத்திவ்வியக்குமுடலையுமறந்து
மருவியவுயிர்சாக்கிரத்தநிலைமறந்தபோன்றின்றுமறியும்
தெரிதரவின்னியாதனையுடைத்துசேர்த்துமறுநனைதெனத்தெரிந்து
பெருகிடர்க்கிடனுயப்பிறங்கிமனயிப்பெற்றியாற்பிறத்திறந்துழலும்.

இன்னணம்பிலிபசரீரமேயுடலத்தெய்தனுங்கருமஞ்சால
மன்னியபுருடன்றனக்கவையின்றன்மற்றவன்சுயம்பிரகாசன்
துன்னிடுஞ்சடைச்சடத்துருவாகிச்சொற்பலவாய்பிறிதுறு
யன்றுபற்பலவாக்தன்மைமற்றுரைக்கிற்படைத்ததத்துவங்களாவனவே.

போற்றுகின்றபோற்பொங்குவெத்தழல்போற் பொருந்தியபற்பல
வம்போல், சாற்றுமோர்களைத்துக் கொருகணமாக்கைதனையிலைகாட்டு
மிருக்கும், தோற்றுமோர்புருடன் சொல்லியவுடல்சேர் தொருவினைபொரு
ந்தலெவ்வாறேதல், ஆற்றுநீர்லேயக்கீருமாதிரைருகிழலைடக்கவாறுமைக்.

பொருந்தியயாக்கைபுணர்ந்தவவ்வினையப்புருடனுக்கில்லைமற்றென்னின்
வருந்தியிங்கிவ்வாறறிவதென்னென்னின்மதியுறவறிந்தவர்க்கன்றித்
தருந்துயர்போகத்தூற்றிடுவிருப்புத்தவிர்ந்தொழியாதிகலாச
இருந்தறிவில்லோர்யாக்கைதாமென்றேதினந்தினம்பிறந்திறந்துழல்வார்.

தத்துவமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௮௨.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௬-வது, நிந்தைபொறுத்தவத்தியாயம்.

---

### கலிவிருத்தம்.

வெய்யவர்செருக்கினும்வெகுண்டுபலநிந்தை
செய்யினுமதிக்கினிவைசேர்கனவுபோன்மால்
பொய்யெனமனத்தொடுபுகன்றிடர்பொறுக்கின்
மையலறுமென்னவிறைமன்னவன்வழங்கும். ௧

ஒறுக்கும்வகையொன்னலருடற்றுபடைமெய்புக்
கறுக்கும்வகையாற்றினுமினன்பரறிஞர்க்கு
வெறுக்கும்வகைசெய்யவரும்வெய்யபலநிந்தை
பொறுக்கும்வகையெவ்வகைபுகன்றருள்செயென்றான். ௨

அவந்திபுரியுற்றுறையுமந்தணன்முன்முனியா
றவந்திடர்பொறுத்தகதையொன்றுளதுனக்குத்
துவந்தவினைபோகவதுசொல்குதுமெனக்கண்
இவர்ந்தெழுபணித்தலைநடித்தபுயல்செப்பும். ௩

அந்நகரின்வாழுமறையோனளகையாளும்
மன்னவனெனப்பொருள்வருந்திநனியீட்டித்
தன்னையடைவுற்றவறிஞோர்தமரினோருக்
கின்னலறவொன்றுமுதவானினியியம்பான். ௪

உற்றமனையாளொடுமுவந்தனதெவிட்டப்
பெற்றபுதல்வர்க்குநனிபெட்பினுடனீயான்
செற்றமொடுவெவ்வியசினத்தொடுமுழந்து
குற்றமொடுமிக்கநிதிகொண்டுறையுநாளின். ௫

கள்ளர்களினானுமுறைகாவலவனானும்
கொள்ளுறுமுறையென்றெழுகுடித்தமரினானும்
நள்ளிருளினில்வினவிநண்ணழலினானும்
உள்ளபொருள்யாவுமொழிவுற்றிடவயர்ந்தான். ௬

அயர்ந்தவனரும்பொருளடைந்திடுமிடத்தும்
வியந்துநனிகாத்தவைவிருப்பினுறைபோதும்
நயந்தபொருள்போம்வழியுநண்ணுமிடமென்று
உயர்ந்தவுரவோர்களினுளந்தெளிவுகொண்டான். ௭

அறைந்தநிதியாதியவசத்தெனவவ்வாசை
மறந்துமெய்யறிந்துமகிழ்கொண்டமறைவல்லோன்
துறந்தமுனிவேடமொடுதொன்னகர்திரிந்தான்
நிறைந்தபதியோர்கணமுநிந்தைசெயமாதோ. ௮

கண்டுசிலர்கன்னலொடுகந்தைகள்பறிப்பார்
தண்டுசிலர்கைக்கொடுதருக்கொடுமதைப்பார்
உண்டுசிலவஞ்சமிவனுள்ளமிசையென்று
மண்டுசினமொன்றுசிலர்வைதனரொறுப்பார். ௯

மோனமெனவுற்றதெவனீமொழிதியென்பார்
ஈனனிவனென்றுசிலர்மிச்சில்களிறைப்பார்
போனபொருளென்றுமெய்புழுங்கியிவன்வேடத்
தானதுகரக்கநிதியையமிலையென்பார். ௧௦

கவ்வைநெடுவேலைவளைகாசினியர்வெய்யோர்
இவ்வகையறிந்தவனியற்கையறியாமே
அவ்வியமனத்தினொடடைந்தனரியற்றத்
திவ்வியமுனிக்காசுசிந்தையொடுசெப்பும். ௧௧

வேறு.

நிந்தையேமுதலாயநிகழ்த்திடாச்
சிந்தையேய்மனங்கற்பனைசெய்யுமே
மைந்தையேயுமனமடங்காவழி
ஐந்தையேயும்புலனெனங்கடங்குமே. ௧௨

நல்லசத்துவஞானமுதலிய
ஒல்லுகிற்குமுபாயத்தொடுங்கிநற்
சொல்லுகிற்குமனத்தைத்துணிவொடும்
வெல்லுகிற்பதுவேவென்றியாகுமே. ௧௩

வளங்கொண்ஞானவழக்குந்தவமுநல்
உளங்கொடானமுதலருளாதியாம்
களங்கமற்றகருமநல்வெண்மையாய்
விளங்குசத்துவத்தின்வினையென்பரே. ௧௪

உவந்துபோகமுஞற்றியநல்வினை
சிவந்தராசதத்தின்செயலென்பரால்
அவந்தரும்வினையாவுங்கருமையாய்
நிவந்ததாமதத்தின்னிகழ்கன்மமே. ௧௫

இன்னணங்குணத்தின்வினையாவையும்
பன்னுகின்றருநெஞ்சுபடைத்திடும்
சொன்னவல்வினைசூழ்ந்ததுபோன்மலால்
உன்னுகின்றவுயிர்க்கவையில்லையே. ௧௬

எங்குமோடியிடருறுமாமனம்
தங்குமோநிலையுற்றெனச்சாற்றிடின்
கங்கையாள்பெறுகாவலன்முன்மனம்
அங்கண்ஞாலம்வியப்பவடக்கினான். ௧௭

பகைவர்மற்றிவர்பற்றுடையாரிவர்
மிகவருத்தினர்வெய்யவர்வேண்டினோர்
அகலவற்புறுமன்புசெய்தாரெனப்
புகல்வர்சற்றும்பொருந்தறிவின்மையோர். ௧௮

உயிரெனச்சிலவுற்றிடுமுண்மையும்
அயர்வொழித்தவொன்றாகுமெவ்வாக்கையும்
வெயிறழைத்தநீரொன்னவெம்பூதத்தாய்ச்
செயிர்தழைத்தவிற்செப்பினொன்றாகுமே. ௧௯

உண்மையாயவுயிருக்குவகைசெய்
வண்மையாக்குநிந்தனைமற்றிலை
திண்மையாயவுடற்கவைசேரினும்
எண்மையாவுமியம்பினொன்றாகையால். ௨௦

என்றுநிந்தைசெய்வோரையென்செய்குதும்
கண்ணிற்கைப்படிற்கையையென்செய்வதே
தண்ணுறுஞ்செழுந்தாலுற்றெயிறுறின்
பண்ணைமைத்தவப்பல்லையென்செய்வதே. ௨௧

இன்னதன்மையிசைத்தங்குளத்தொடும்
பன்னுநிந்தைபலவும்பொறுத்தவன்
தன்னையெங்கிழமைப்பொருடானென
உன்னியுண்மையினொன்றுபட்டானரோ. ௨௨

என்றகண்ணனிசைத்தலுமுத்தவன்
ஒன்றுநிந்தையுவந்துபொறுக்குவன்
நன்றுநன்றினியென்றுநலந்திகழ்
மன்றற்செய்தமலர்ப்பதம்போற்றினான். ௨௩

செம்மைநங்கதைத்தேறலருந்தினர்
தம்மைநன்குணர்தன்மையினல்வரு
வெம்மைநிந்தைபொறுத்துவிருப்புடன்
மும்மையற்றுமுயங்குவர்முத்தியே. ௨௭

நிந்தைபொறுத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௩௦௬.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## கரு-வது, குணங்கலத்தலுரைத்தவத்தியாயம்.

கலிவிருத்தம்.

பவந்தருமுக்குணத்தின்பயனையோர்க்
தவந்தருமற்றவையென்றறிந்தலால்
துவந்தவல்வினைத்தோற்றம்விடாதெனச்
சிவந்தபூமகட்சேர்ந்தவன்செப்புமால். ௧

ஞானமேமுதலாகியநல்வினை
ஆனபோதருஞ்சத்துவமென்பரால்
மானமாதர்தமாசையின்வைகுவோன்
ஈனமோங்குமிராசதனென்பவே. ௨

துஞ்சல்வெஞ்சினஞ்சோம்புகொலைமுதல்
வஞ்சவல்வினைவந்துடன்வைகுழி
எஞ்சலில்லையெனச்சொற்றமகுணம்
நெஞ்சுநின்றுநிகழ்ந்தனனென்பவே. ௩

சத்துவத்தொடுசாற்றுமிராசதம்
ஒத்திருக்கினுளத்திலறம்பொருள்
சித்தமன்புறுமின்பந்தெளிவினால்
முத்தியென்னமொழிந்தவைமூன்றுவார். ௪

தாமதத்தொடுசத்துவஞ்சார்ந்தவர்
தீமைசெய்திடுஞ்சோரலர்ச்செற்றிடின்
பூமலர்த்திருப்புங்கவனல்லறம்
ஏமமுற்றிங்கியற்றுதுமென்பரால். ௫

ஓங்குராசததாமதத்துற்றவர்
தீங்கிழைப்பொருள்சேர்த்துபலன்பெற
வாங்குநீர்த்திரைவையகமேலறம்
நீங்கலாதநெடுவினைசெய்வரே. ௬

இறக்குங்காலத்திராசதமுற்றவர்
பிறக்குங்கான்மனுடப்பிறப்பாகுவர்
அறத்தின்மேவருஞ்சத்துவராகின்மேல்
சிறக்குந்தேவரெனத்திகழ்வார்களே. எ

சாருங்காலைத்தமோகுணஞ்சார்ந்திடின்
சேருசேர்நரகத்திடைச்சேர்வரால்
மோகமூன்றுகுணமுமுன்னுரெனின்
ஏகமாகுவரெம்மிற்பிரிந்தரோ. அ

கூறுமூன்றுகுணமுமொன்றாயெழில்
மாறுசெய்பவர்மாய்ந்துவளந்திகழ்
ஈறில்செல்வமியையினெழிற்பொனால்
வேறுரோர்கோயில்விளக்குவமென்பரால். கூ

தாமமார்பநற்றத்துவமுற்றவர்
காமமற்றுக்கருமமியற்றுவார்
நாமநல்வினைநற்பலன்முன்னியே
சேமமாருமிராசதர்செய்வரே. கo

வெய்யதாமதமாங்குணமேவினர்
செய்யுநல்லறந்தீமையென்றோர்சரும்
துய்யசிந்தையான்றித்துகளற
ஐயமற்றவகனுதினமாற்றுவார். கக

பிணங்கிநின்றவிப்பெற்றியமுக்குணம்
இணங்கிநின்றெமதேவலியற்றுமால்
மணங்கடந்தமதுமலர்த்தாரினாய்
குணங்கடந்தவரோமுத்திகூடுவார். கஉ

குணங்கலத்தனுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் ருகஅ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கசா-வது, பூசனையுரைத்தவத்தியாயம்.

---

### கலிநிலைத்துறை.

இன்னவாறறியாதவராயினுமெவரும்
மன்னவாறலைநீர்மலராதிகண்மருவித்
துன்னவாவொடுபூசனைசெய்தெமைத்தொழினே
அன்னவாசைகடுய்த்தபின்னும்மெமையடைவார். க

என்றுகூறலும்வருணவாச்சிரமர்களினைத்தார்
மன்றலோதியர்பின்னவர்வழுத்துமவ்வகைமுன்
கொன்றைவேணியனாதன்முதலினர்குறித்தார்
நன்றுகூறெனுமரசனுக்கரிந்தமனவிலும். ௨

இலங்குவைதிகந்தாந்திரிகமிச்சிரமென்னப்
பலங்கொள்பூசனைமூவகையாமெனப்பகர்வார்
துலங்குபூசனைக்கேற்றவர்செய்திடத்துணிவார்
வலங்கொள்வேதமந்திரங்களிற்செய்தல்வைதிகமே. ௩

குற்றமற்றதாந்திரிகபூசனைச்செயல்குறிக்கின்
உற்றபஞ்சராத்திரவைகாநசமுறையுஞற்றல்
முற்றுணர்ந்தவர்முழுமறையாகமமுயறல்
சொற்றமிச்சிரபூசனையெனத்துலங்கிடுமே. ௪

மணம்பொருந்தியசந்தனம்வாலுகம்வனப்பார்
பணம்பொருந்தியமணிமுதன்மணிபலதாருக்
கணம்பொருந்தியலோகநல்லோவியங்கவின்கல்
குணம்பொருந்தியமனமெனக்கூறுமெட்டிடத்தும். ௫

பூசைசெய்வரப்பூசனையிருவகைத்தாமால்
பேசினவ்வகைசாற்றிடுந்திரமெனப்பெறுமால்
தேசுதந்திடுமறையினாவாகனஞ்செய்து
மாசிலுத்தியாபனஞ்செயல்சரமெனவகுப்பார். ௬

உரைத்தசீர்செயாவாகனமுத்தியாபனத்தால்
விரித்தபூசனையன்றிச்சலும்விழைவிருப்பால்
தெரித்தமந்திரத்தான்முறைமுறைசெயும்பூசை
தரைத்தலத்தினிற்றிரமெனுந்தனிப்பெயர்சாரும். ௭

புனிதராகியுள்ளன்பொடுபூசனைக்கேற்ற
இனியபல்பொருளினையந்திரண்டெட்டுபசாரத்
தனசபூசனைகாமமற்றுற்றவராயின்
வினையினொன்றிடார்வீடவர்க்களிக்குதும்விழைவால். ௮

ஆசையுற்றவர்பூசனையாற்றினுமவர்தாம்
நேசமுற்றனவழங்குவநினைத்தனபொசித்தோர்
பேசுமுத்தியும்பெறுகுவர்பிறங்கிலையல்லால்
பாசிலைக்கொடுபழிச்சினும்பலனினிதளித்தும். ௯

ஆரியந்தமிழாதிமற்றவாவெழுத்தாம்
சீரியங்கியபதத்தொடையாற்றிருமகள்சேர்
வேரியந்துழாய்விமலவென்றெந்தமைவிளம்பின்
மாரியஞ்சுகைமன்னவவளிக்குதுமகிழ்ந்தே. ௧௦

நிகரின்மன்னவனேசமுற்றெமக்கிவணிலவ
நகரினிற்றவாத்திருவிழாநடத்திடுகலத்தோர்
மகாவாரிசூழ்மாநிலத்தினுமறுமையினும்
புகரிலும்பரும்புகழ்தரப்போகமுற்றுறைவார். கக

பூசனையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் கூஉக.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கஎ-வது, நைம்மிசமடைந்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆக்கையும்புலனுமன்றாலசைவுறுமனனுமன்றால்
வீக்குறும்வினைசேர்மன்றவெவ்வகங்காரமன்றால்
போக்குறும்புந்தியன்றாற்பொருளெனவிவ்வாறெல்லாம்
நீக்கிமற்றறிவுதானேநித்தியப்பொருளென்பாரால். க

இப்பியேயிரசிதம்போலிலங்குறுதன்மைத்தென்ன
ஒப்பிலாப்பிரமந்தானேயுலகுபோற்றோற்றிற்றென்று
செப்புமுள்ளுணர்விலேதேர்ந்துகொண்டிருப்போர்தம்மைத்
தப்பிலாஞானயோகத்தலைவரென்றியம்புவரே. உ

கலித்துறை.

எங்குமாய்நிறைந்திலங்கியஞானவாரிதியின்
பொங்குதெண்டிரைநுரைவரும்புற்பதமெனவே
அங்கண்மாநிலத்தொடக்கத்தவுலகங்களனைத்தும்
தங்கிநின்றெழும்வேறுவேறறிவிலர்சாற்ற. ௩

மறிந்துதோன்றியதிரைநுரைகுமிழிமற்றனைத்தும்
செறிந்துதோன்றுமங்கீரலாற்றெறிக்கின்வேறிலைபோல்
குறைந்துதோன்றியவுலகங்களனைத்தையுங்குறிக்கின்
நிறைந்துதோன்றுமப்பரமலாலனிகழ்த்தவொன்றிலையால். ௪

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆதியுநடுவுமற்றவந்தமுந்தானென்றாயும்
ஓதியநடுவிற்பல்பூணுருவொடும்பெயர்வேறுற்றுத்
தீதறவிளங்கும்பொன்னிற்செகத்துருநடுவிலுற்றுப்
பேதமினடுவுமுன்னும்பின்னுமேபிரமம்வைகும். ரு

மனமெனுமாசனுலேமருவுகற்பனைகளாகி
புனைவுறுபெயருலோகம்பொருந்துதல்குறித்தலாது
நினைவுறுபரமானந்தநித்தியப்பொருளுக்காதி
வினைநடுவந்தமென்னவிளம்பலோர்தன்மைத்தன்றால். சு

உன்னரின்யாமன்றிமற்றொன்றில்லையானுமவோவென்னத்
தன்னிலையறியுமாறுதாமரைக்கண்ணன்கூற
மன்னுமெய்ம்மயிர்சிலிர்ப்பமாமலர்க்கண்ணீர்வார
இன்னதென்றியம்பலாகாவின்பமாகடலுளாழ்ந்தான். ௭

வழுத்தருந்தகையவின்பவாரியினழுந்திமுழ்கும்
பழுத்தவன்புடையோன்செய்யாப்பழமறைப்பொருளான்கங்கை
சுழித்தலையெறியும்பொற்றாட்டுணைமலர்க்கமலப்போதில்
விழிப்புனல்பாய்ந்துபாயவீழ்ந்தனனிறைஞ்சினானால். ௮

கலிவிருத்தம்.

சேயதாட்டாமரைசென்னிசூடிய
தூயனையருந்தவர்சூழல்சேர்கென
மாயவன்பணித்தனன்மறுக்கவல்லனோ
போயினனிருகணீர்பொழியுமன்பினான். ௯

நீக்கருமன்பினனேமியானைப்பின்
நோக்கினனோக்கினனோக்கிநோன்மையான்
ஆக்கினன்சிந்தையுளமாலையானை
வாக்கினிற்றுதித்தனன்மறுகியேகினான். ௧௦

அணிதிகழ்நைமிசாரணியத்தன்பினிற்
றணிவிலவ்வுத்தவன்சார்ந்ததன்மைசெம்
மணிபுனைமன்னமுன்வழங்கினானெனாத்
துணிவுறுசுகமுனிசொல்லினனரோ. ௧௧

நைமிசமடைந்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧௪௦.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௧௮-வது, தன்னுடைச்சோதிக்கெழுந்தருளிய வத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

என்றனுமன்னவனிசைத்தசாபத்தீ
ஒன்றியயாதவருற்றதன்மைநீ
மன்றமாதவவினிவழங்குவாயெனப்
பொன்றியவாறவட்புகறன்மேயினான். ௧

மண்ணினும்வானினுமருவுற்பாதமற்
றெண்ணிலகண்டனமீங்குவைகிடல்
நண்ணொருகன்னனுநயக்கொணாதெனக்
கண்ணனுத்தவனொடுகழறினனரோ. ௨

கோதையரின்னிளங்குமரர்மூப்பினர்
ஓதுமிங்கரிடத்தொருங்குவைகுற
வேதியர்க்கரும்பொருள்வெறுப்பநல்கிமற்
றேதமில்லவரொடுமேகிவல்லையே. ௩

பாமகட்காரியம்பகரும்பேர்பெறு
காமர்வண்ணதிகடல்கலக்குமோர்துறை
நாமநன்னீரிடையந்துதோய்தரின்
தீமையற்றிடுமெனச்செல்வன்செப்பினான். ௪

இங்கணற்றவமுனஞ்செய்துநீங்கறப்
பொங்கொளிசேர்பிரபாதம்போம்பொருட்
டங்குறையந்தணர்க்காக்கநீணிதி
மங்குலின்வழங்கினர்வழிப்பட்டாரரோ. ௫

தேரினிற்சிலர்சிலர்சினக்கடாமழைக்
காரினிற்சிலர்சிலர்கவனவாம்பரித்
தாரினிற்சிலர்சிலர்தயங்கவேகினர்
சீரினிற்சிறந்தவர்சிவிகையேறினர். ௬

குடவளையலறவெண்கூந்தன்மாத்திரள்
உடைதிரையெனவெழுந்துழைதொறீண்டமா
கடலொடுகடல்பொரக்கலக்குங்காட்சிபோல்
மிடல்கெழுதார்ப்படைவெள்ளஞ்சென்றதால். ௭

விரைசெலுமிவுளிமேல்வேந்தர்சூழ்வரக்
குருதிவேலரசிளங்குமரரீட்டமோ
டொருதனியாழியானுலகம்போற்றிய
திருமறுமார்பனுஞ்செலவயர்ந்தனன். ௮

வரையினிற்பொலிதருமத்தயானையும்
திரையினிற்பொலிதருபரியுந்தேர்களும்
விரைவினிலுடன்வரவீரரோடுநல்
நிரையினிலேதியந்நீத்தநீங்கினார். ௯

ஏர்பெறுபேர்பிரபாதமென்றுசொல்
சீர்பெறுதலத்திடைச்சென்றுவாணியின்
பேர்பெறுநதிகடல்பெயருமோர்துறை
தார்பெறுபுயத்தவர்தலைப்பட்டாடினார். ௧௰

போந்துநீர்படிந்தவப்புகழினோரெலாம்
ஏய்ந்தநல்விரதமுற்றிருந்தகாலையின்
பாந்தளினடித்தவப்பரமன்மாயையால்
மாந்தினர்மதுப்பலமயங்கினோருளம். ௧௧

கூடினர்மதுக்களிகொற்றமேம்படச்
சூடினர்சுரும்புணத்தொடுத்தபைந்தொடை
ஆடினரார்த்தனராயுதங்களால்
வீடினரெனவெகுண்டமர்விளைத்தனர். கஉ

கண்ணன்முனல்கியகாமன்றன்னொடும்
தண்ணறுந்தொடைபுனைசாம்பனேற்றனன்
அண்ணலங்களிற்றினைக்குரூரான்முன்
நண்ணினன்சமர்செயநலஞ்செய்போசனே. கங

தீத்திரள்பொழிதருசெய்யதாமரை
நேத்திரத்தானநிருத்தனீணிலம்
காத்தினிதளிப்பவன்கருத்தையோர்கிலன்
சாத்தகிதன்னொடுசமருக்கேற்றனன். கச

இத்திறமுன்னவரிளையர்மைத்துனர்
ஒத்துறைமருமகருவந்தமாதுலர்
புத்திரர்தாதையர்புழுங்கித்தங்களின்
மத்தவெங்களிறெனமலைந்திட்டாரரோ. கரு

உள்ளுறுஞ்சினத்தமொழிமினீரென
விள்ளருந்தனிமுதல்விலக்கவவ்வழி
எள்ளினர்புணர்ப்பறியாதயாதவர்
தள்ளினர்தழலுறுபதங்கத்தன்மையார். கசு

முன்னவரிவரிவர்முதியர்மாதுலர்
பின்னவரிவரிவர்பெரியர்தாதையர்
என்னவங்கெண்ணிலர்யாருமீறுசெய்
ஒன்னலரெனநினைந்துருத்துடன்றனர். கஎ

பல்லுளைப்புரவியும்பருமயானையும்
வில்லுடைத்தேர்களும்வேறுவேறுசேர்
சொல்லுடைவெற்பெனத்துணிபட்டோங்கின
எல்லுடைப்படைகளுமிற்றவென்பவே. கஅ

காரகங்கிழிக்குமின்கடுக்கும்வாளினால்
போரகத்திறந்திடாப்பொருநர்யாவரும்
பாரகஞ்சூழ்கடற்பரப்பினுங்கெழும்
ஏரகத்தார்பொருதிறந்திட்டாரரோ. ககூ

துன்றிருங்கிளையினஞ்சுழல்வெங்காலுற
ஒன்றொடொன்றுரிஞ்சியாங்குருத்ததீச்சுட
நின்றவவ்வனத்தினீறாகிநீங்கல்போல்
பொன்றினர்யாதவர்புனிதன்மாயையால். உ0

...காலையர் முலையின்மாத்தன்
...றைபொருவன்முதலார்ச்சேர்தா
...வலியாயின்றமேலவன்
...ளிறவிடையடைத்தவைகிருன். ௨௧

கலிவிருத்தம்.

...வண்டுறைபங்கயப்போதின்மீது
...செக்கர்வெய்யவன்சூழ்தலைபோல்
...வக்தொழுதேத்தஞடித்தாய
...மைமென்மைந்தாபுரக்தாழ்ந்திலங்க. ௨௨

...டுகின்றவளயத்தகான்குதோளும்
...ட்டுகின்றமணிமார்வமும்பொற்புவாய்ந்த
...ட்டுகின்றவடவெற்பெறிவ்சேர்ந்துகாட்ட
...டுகின்றகருமாமுகின்மேனிகாட்ட. ௨௩

...ரும்பகர்தேவருக்கொண்டுமேவ
...லிலவளைசூழ்த்தவீராழிவெய்யோன்
...காத்திடையனவேமணிச்செம்பொனுடை
...யாளிருந்திருமேனிவயங்கமாதோ. ௨௪

...மைதயுங்கொழுந்தெருஞ்சுடர்கொண்டதேவு
...யினிவிற்றிகழ்கின்றதென்னப்
...வேலைப்படுசெம்மணிப்பைம்பொனும்
...வத்தொடுமால்வரைமார்பின்மின்ன. ௨௫

...றுவந்தசதிரோரையிரண்டுபாலும்
...றசெந்தாமரையாளெனைகாளுமேவித்
...றுடல்வெம்மருவாய்மதிதோற்பவென்ற
...றகோலக்குழைவான்முகம்வாய்ந்தமாதோ. ௨௬

...டையுற்றதுரங்கொண்டினிற்பொற்புவாய்ந்த
...மணிசேபொருதாளமலர்மேலைவைத்தாங்
...மலர்த்தாளமரேசாடைக்கூவாழ்த்தத்
...ருருவைத்தனிநோக்கித்தயங்கினுனே. ௨௭

...ன்றுதன்னைத்தொழுவோன்றவர்செப்புசாபம்
...ன்றிறப்பத்தகைசெய்துமயக்கலாலே
...ன்றுவேடன்சாபனன்பவன்காட்டின்மேய
...ன்றுதாளிரெருருவாளிவழங்கினுனல். ௨௮

...கின்றவாளிவிடுத்தொல்லைமுன்சென்றுகண்டாங்
...ன்றசெஞ்சத்தினனுகியார்த்துதாரை
...கின்றசொண்டவெனைநின்றுபுலம்பிகீத்தம்
...ன்றகன்றுனைவீழ்க்குமாமுக்கினுனே. ௨௯

கண்ணகருணைக்கடலேகவினேஞ்குநீல
வண்ணவனசமலர்மேலவன்மங்கைபாகன்
விண்ணோரியாநினையெங்ஙனம்வேடனுகி
எண்ணதியற்றும்பழியேன்றெளிந்தேத்துமாறே. ௩0

என்னுஞ்சரனையெதிர்நோக்கியிரங்கலென்னின்
மன்னும்முலகினுயிரெங்கும்வதிந்துளேன்மற்
றுன்னின்னுறைந்துவினைசெய்யவுளுற்றினேன்யான்
பொன்னின்றிலங்குமுலகெய்துதிபோதியென்ருன். ௩௧

அவ்வாறிசைத்தவனந்தன்கழல்சூழ்ந்துபோற்றி
வெவ்வாளிவிட்டோன்மிடல்யாக்கையினேடுமேவி
எவ்வானவரும்மிறும்பூதடைந்தேத்தநாளும்
செவ்வாந்தவஞ்செய்பவர்சேர்நெறிசென்றுசேர்ந்தான். ௩௨

கலிவிருத்தம்.

மண்ணியதேரொடுமருவுதாரகன்
கண்ணனையவ்வழிக்காண்குருனெவண்
நண்ணினனெனத்துழாய்நாற்றந்தேர்ந்துதேர்ந்
தண்ணலச்சுதனைவந்தடிவணங்கினன். ௩௩

நேடினனெங்கணுநின்னைக்காண்கலேன்
வாடினன்றிசைத்தனன்வழியுந்தேர்கலேன்
கூடினனினுதடிகுளிர்ந்ததுள்ளமும்
மூடியதுயரிருண்முற்றும்போயதால். ௩௪

திசைகளுந்தெரிந்தனவென்றுசெப்புழீ
இசைதரும்புட்கொடியியைக்துநேரலர்
தசையுறுபடைக்கலஞ்சாரத்தேரும்வான்
மிசையெழத்தாருகன்வியந்துநோக்கினன். ௩௫

காமருதேரவன்கைவிதிர்ப்பவான்
மாமணிவண்ணனைவலங்கொண்டேகலும்
தாமரைக்கண்ணருடழையவைகிய
தேமறைச்சிவம்படிச்செல்வன்செப்புமால். ௩௬

தேவகிகொழுநனைச்சென்றுசேர்ந்திவண்
கோவடுகுருதிவேற்கொற்றயாதவர்
சாவினையடைந்ததுந்தயங்குதாமநாம்
போவதுபுரிந்ததும்புகன்றுபின்னரும். ௩௭

ஏருறுதுவரையையேழுநாளினில்
வாரிதிகொள்ளுமவ்வாரிகொள்ளுமுன்
சேருநரிந்திரப்பிரத்தஞ்சேர்க்கெனத்
தாருகதனஞ்சயன்றனக்குச்சாற்றென்ருன். ௩௮

எம்முடையானஃதிசைப்பக்கேட்டலும்
விம்மினனேங்கினன்வெய்துயிர்த்தனன்
பெய்ம்முகிலெனக்கணீர்பெருக்கினன்விழுந்
தம்மவென்செய்வலென்றரற்றிமாழ்கினன். ௩௯

மன்னுநம்மாளுடைவள்ளறேற்றிநீ
என்னைவந்தடைகுதியென்றுசொற்றனன்
தன்னுளந்தேற்றலுந்தடுக்கவல்லனோ
பின்னுறும்பார்வையான்பெயர்ந்துபோயினன். ௪௦

சுந்தரனேகுதலொருழுதுகாண்குற
உந்தியம்போதிடையுதித்தநான்முகன்
இந்திரனெம்முகனிலேசர்தம்மொடும்
அந்தரத்தடைந்தனனன்புற்றேத்துவான். ௪௧

முக்கணன்முதலியமொய்யுயிர்க்குழாம்
ஒக்கநன்கிழைக்குமாறுதவினாயெனை
மக்களிலொருவனாவந்துதோன்றினை
சிக்கறநின்செயறெரியற்பாலதோ. ௪௨

அச்சுதனநந்தனென்றருமறைக்குலம்
நிச்சலுங்கழறுமாணின்னைநீயெனே
கொச்சைமக்களிற்பலகோலங்கோடிநின்
மெய்ச்செயலிற்றெனவிளம்பவல்லனே. ௪௩

நிலையுறவறநெறிநீடுதீவினை
குலையுறச்செய்குநர்க்குறிக்கினின்னியார்
மலரவனாவெனுடுவழுத்தியின்னணம்
தலையஃதிறைஞ்சினன்சரணிற்றாழ்ந்தனன். ௪௪

மனமகிழ்ந்தருள்பெறீஇவணங்கிவான்மிசைப்
புனைமுடிவிண்ணவர்புதியதேறல்பாய்
பனிமலர்சொரிந்துபல்லியந்துவைப்புறத்
தனிமுதலுயர்பரந்தாமமெய்தினன். ௪௫

குண்டலம்வெயிலெனக்குலவுவாண்முக
மண்டலமதியெனமாயனேகுதல்
விண்டலநிறைந்தெழுவிரிஞ்சனாதியர்
கண்டனர்சிலர்சிலர்கண்ணிற்கண்டிலர். ௪௬

தற்பரஞ்சுடர்மிசைத்தயங்குகாந்திய
நற்பதக்கேகுதனயந்துபோற்றினர்
அற்புதமடைந்தடைந்தமரர்யாவரும்
பொற்புறுந்தத்தமபதியிற்போயினர். ௪௭

தாங்கருந்துயர்மொழிசாற்றக்கேட்டலும்
தேங்கமழ்தார்வசுதேவன்றேவகி
ஆங்குறையுக்கிரசேனனாதியர்
ஏங்கினரவனடைந்தெரியின்மூழ்கினர். ௪௮

காவியுங்கமலமுங்கயலுமன்னகட்
டேவியரனைவருந்தீயின்மூழ்கினர்
தூவியம்பெடையனஞ்சுடர்பொற்றாமரைப்
பூவிரிந்தனகயம்புக்கபோலவே. ௪௯

மேதகுபுகழுடைவிதர்ப்பன்பாவையோ
டாதிநன்மடந்தையராழலின்மூழ்கமற்
றேதமின்மடந்தையர்யாருமீறிலா
நாதன்மெய்யொடுதழலண்ணினாரரோ. ௫௦

வந்துமுன்றாருகன்வருந்திக்கூறலும்
பைந்தொடைமார்பினிற்பார்த்தன்செங்கணீர்
சிந்தினன்மாக்களுஞ்சென்றுகண்டனன்
புந்தியுங்கலங்கினன்புலம்புற்றேங்கினான். ௫௧

அறந்தருமாயன்முன்னறைந்தகீதையால்
மறந்தருவேலினான்மனந்தெருண்டனன்
இறந்தவரெவர்க்குமங்கேயநல்வினை
சிறந்ததொன்னூல்வழிச்செய்வித்தேகினான். ௫௨

வருபகவேழினில்வளைத்ததெண்டிரைக்
குரைகடல்கோப்பதுகூறுபார்த்தனால்
திருவநீணகருறைமாக்கள்சென்றனர்
பெருமைசாலிந்திரப்பிரத்தமென்பதே. ௫௩

அந்தமில்லவரொடுமறைந்துபார்த்தனு
மிந்திரப்பிரத்தமென்பதனில்வச்சிரற்
குத்தெண்டிரைப்புவியோம்பிக்காக்கெனச்
சுந்தரமணிமுடிசூட்டினானரோ. ௫௪

இன்னணநடந்தவையிரங்குபார்த்தன்வந்
துன்னெறிற்பிதாமகற்குரைப்பமற்றவர்
மன்னவினக்கிவண்மௌலிசூட்டினர்
துன்னினர்கண்ணனைத்தொழுதுசொல்பதம். ௫௫

சொல்லுநல்வளந்திகழ்துவரைசூழ்ந்தநீர்
ஒல்லெனவொலித்துவந்துறமறைந்ததால்
செல்லுறழ்மாதவன்சிறந்தகோயிலை
யல்லவந்திரைக்கடன்மறைத்ததில்லையே. ௫௬

அண்டரும்புகழுமக்கோயிலின்னமும்
தெண்டிரைக்கடலிடைச்சிறந்துதோற்றுமால்
மண்டமர்கடந்தவேன்மன்னவன்னது
கண்டவர்பிறவியைக்காண்குறாரரோ. ௫௭

கருமுகிலனையவக்கண்ணன்பின்றொடர்ந்
திருவிசும்பேகியவிசையுமெய்ம்மையும்
தருமமும்பொறுமையுந்தவமுந்தானமும்
மருவினதவனியின்மறஞ்செய்வெங்கலி. ௫௮

காலமும்பிறிவொடுகலப்புமற்றுயர்
சீலமுமானவன்செய்கையிந்திர
சாலமுமவைக்களஞ்சான்றகூத்தினர்
கோலமுமல்லதென்கூறல்வேண்டுமால். ௫௯

இகலுறுமரசவிக்காதையாமமு
தகமொளிதாவுவந்தருந்தருந்தவர்
புகலருமொருபதம்பொருந்துவாரெனச்
சுகனெனுமுனிவரன்சொல்லினனரோ. ௬௦

தன்னுடைச்சோதிக்கெழுந்தருளியவத்தியாயம் முற்றிற்று.

௮௲ திருவிருத்தம் ௬௦௦.

கக-வது, ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கஉ-வது, ஸ்கந்தம்.

## க-வது, கலிதன்மமுரைத்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மருவலர்புகழும்வேலாய்மகதநாடாளுமன்னன்
திருமதிக்குலத்துவேந்தன்றிறற்சராசந்தன்மைந்தன்
தரையிலைந்தருவேபோலத்தருஞ்சகதேவனென்னும்
புரவலன்மாபின்வந்துபுரஞ்சயனுதிக்குமன்றே. ௧

அன்னவன்கலியின்காலத்தவனிகாத்துறையுநாளம்
மன்னவன்றனக்கன்பாயமந்திரிசுனகனென்பான்
பொன்னவிர்மகுடச்செங்கோற்புரவலனவனைவீட்டித்
தன்னெழின்மதலையாளத்தாரணிகொடுக்குமன்றே. ௨

சொல்லுமவ்வமைச்சனல்குந்தோன் றலைத்துவக்கியைவர்
எல்லைமற்றொருநூற்றோடுமிரண்டிலாநாற்பதாண்டு
நல்லுலகாள்வரப்பானந்திமாநந்தியென்னும்
வில்லினரிறுதியாகமேதினிபுரப்பர்சில்லோர். ௩

வேந்தர்தம்வேந்தனாகிவிறல்செய்மாநந்திபுல்ல
வாய்ந்தநல்லெழில்சேர்வேளான்மரபினளொருத்திபெற்ற
நாந்தகவுழவன்யாருநவில்பற்பதியென்றோதும்
ஏந்தன்மன்னவரைச்செற்றாங்கிருநிலம்புரக்குமன்றே. ௪

இவனுமோர்பரசுராமனென்றுலகேத்தும்வண்ணம்
கவனவாம்பரியின்றானைக்காவலர்குழுவையெல்லாம்
அவனிமீதமரிற்கொல்லுமன்னவன்றொடங்கிவேந்தாய்ப்
புவனிமேற்புரவுபூண்போர்பின்னவர்போலுவாரே. ௫

பின்னர்தம்வேந்தாதிபிறங்குதெண்டிரையின்மேவு
சொன்னவிலெயிற்றுப்பேழ்வாய்க்கூற்றுணவினிதினூட்டித்
துன்னியசேனைகாப்போர்துலங்குபொன்னடப்பைதாங்கி
மன்னியதொழும்புசெய்வோர்மாநிலங்காப்பர்மாதோ. ௬

வெல்லருயவனர்கள்ளர்வேசரியீட்டத்தாலே
சொல்லருநிதிகளீட்டுந்தொழிலினர்மறவர்பின்னோர்
அல்லுறழ்கோதைமாதராதியராங்காங்கெய்தி
மல்லலம்புவிமானின்றுமயர்வுறவாழுவாரே. ௭

அரும்பழியுறாததெய்வத்தரசுபோலங்குற்றோரும்
பெரும்பழியயற்றக்கூசார்பிணியினாற்சோரார்தம்மால்
வருந்துவர்வறுமையெய்திமன்னரான்மயங்கிநிற்பார்
பொருந்தலில்புன்மைக்காகப்புழுங்கினர்கலங்குவாரால். ௮

கடக்கருவலிமைசான்றகலியெனுங்காலத்தரசை,
அடக்கரிதாகியுண்மையருள்பொறைபுனிதமாயுள்
உடற்குறுதிண்மைபுந்தியுற்றிடுநினைவுபார்மேல்
நடக்குறுதருமமெல்லாநாட்குநாட்குறையுமம்மா. ௯

கலிவிருத்தம்.

விரியுநூன்முறைதமவீரமாற்றிடார்
உரியதோர்குருகுலவாசமுற்றொரு
புரையிலாரியமத்தாற்புகன்றிடார்மறை
பிரமசாரியாறம்பிழைத்துவாழ்வரே. ௧௦

உள்ளுவந்தில்லறமுற்றுளோர்மகம்
எள்ளலிலன்பொடுமியற்றிடாரவை
வள்ளிதழ்மலர்த்தொடைமன்னராற்றினும்
தன்னொழுக்காய்நிகருதிச்செய்வரால். ௧௧

யினரின்மறைவலோர்மறை
ளார்தமசெயலுஞ்செய்கலார்
துலங்குநூலினால்
ரனவறியவாழ்வரே. ௧௨

யெனுங்காலந்தோற்றினிங்
ந்தணரேய்ந்தகாட்டுழைச்
ர்வனஞ்சேர்ந்தவூணலால்
ணவெனநயப்பரே. ௧௩

றவறந்துணிந்துஞற்றிடார்
கிலினுஞ்சேர்ந்ததண்டினும்
னலினலுரீத்திவண்
வரெனவுலவுவாரரோ. ௧௪

தேவெனுமுருந்தன்பூசனை
ற்றிடாரறியமாமறை
ழாணரியவிரியுமாகம
ருவுவர்மாக்களென்பவே. ௧௫

ர்குலமியைந்துளோர்களும்
வரறுமருவிவைகுவார்
தறம்பிழைத்துநான்மறை
றவனைப்பழிச்சிவாழ்வரால். ௧௬

டையுயர்குலத்தரும்
வருமழையேவல்செய்குவார்
ழில்பரிந்திழைத்தும்பாருளோர்
டைவதற்காசைகூருவார். ௧௭

றிவிலரெனினுநீணிதிச்
பாளரைச்சேர்ந்துசேர்ந்தநல்
ரெனவறைவரன்னவர்
மாழியையுங்குணமிக்கென்பரால். ௧௮

கவுநங்கைமார்பிறர்
கண்டேக்கற்றன்னவர்த்
னகுவர்துணிந்துமாந்தரும்
பிறர்ச்சேரவெண்ணுவார். ௧௯

ாமியர்மாமனர்சொலச்
மகிழ்ந்துதீங்கெனினுஞ்செய்குவார்
யர்சொற்சார்ந்துகேட்கலர்
தவர்பிலைத்தினென்பவே. ௨0

நிறைபொருளுடையரெஞ்சிந்தைசொல்லினும்
முறையுறவழக்கெனமொழிந்துபோற்றுவார்
வறுமைமிக்குடையர்வாய்வழங்குநன்மொழி
அறமொழியெனக்கொளாதவையெள்ளுவார். ௨௧

உயர்பயனுவதிங்குநரத்தூண்பெறல்
மயிர்நனிவளர்ப்பதேதவனப்பென்றன்னுவார்
புயல்வளங்காத்தலிற்பொலிவழிந்ததம்
பயிர்வளங்கரிந்திடப்பசியின்வைகுவார். ௨௨

வெங்கலிமுதிர்வுறவிரியின்மாந்தர்கள்
இங்கியல்யாண்டிருபத்தின்மேவிரார்
மங்கையரேழெனும்பருவம்வந்துறின்
பொங்கெழிற்புதல்வரைப்புவியினல்குவார். ௨௩

விதைபயிர்முதலியவிளையுள்குன்றுமால்
மதிவலிகுறைவுறுமாக்கள்யாவரும்
முதிர்வுறுபலன்பெறுமுன்னமேயகாய்
புதிதுறுகொழுந்திலைபூக்கொய்துண்பரே. ௨௪

கடும்பசியடைகுவர்காந்துகங்குலின்
படும்பொருளெங்கெனப்படர்ந்துபற்றற
விடும்புகழெதிகளுக்கீடொன்றுறிவண்
குடும்பமுற்றறைவதேகுணமென்றன்னுவார். ௨௫

தள்ளருஞ்சிறப்புடைத்தலைவரேனுமற்
றுள்ளுறைமனைவியருவந்தியற்றலர்
எள்ளுநர்வெருஉச்சிறிதியைந்தியற்றுவார்
விள்ளருவெறுமையரெனின்வெறுப்பரே. ௨௬

கிட்டியபுனிதநீர்செழுமிவைகுதல்
விட்டதினன்பிலராகிவேறுசெய்
பட்டநன்னதிகளேபழுதில்லாகுமென்
றுட்டெளிந்தவாவருறதிகூறுவார். ௨௭

சாக்களுங்குறுகுநற்கனிகளாதிய
நாக்குறுஞ்சுவைப்பொருணலனுங்குன்றுமால்
மாக்களுங்குறுகுவர்வயங்குதம்முருக்
கோக்களும்யாடெனக்குறுகுமென்பவே. ௨௮

கலிதன்மமுறைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௪௨௮.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௨-வது, கற்கியவதாரமுரைத்தவத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உன்றுநான்மறையும்வருணமுநான்காயுரைத்தவாச்சிரமமுமொழிய
இன்னவாறெவருமறந்தபத்தீங்கிங்கிழைத்திடுங்கலியுகத்தீற்றின்
மன்றுநான்முகனையானையீங்குதவிமாநிலங்காத்தளித்தழிக்கும்
அன்னமாமாயன்பரியுருவாகியறத்தினைநிறுத்துவனன்றே. ௧

தண்டலையுடுத்துநீள்வளஞ்செறியுஞ்சம்பளக்கிராமத்தின்றேத்தவ்
வண்டரும்புகழுமருந்தவப்பெருமந்தணர்குலத்திளுரியத்தால்
விண்டுவின்பெயரோடிசைக்குறும்பெயர்சேர்வேதியன்வதிவனுங்கவன்
பண்டைநான்மறையுங்காணரும்பரமன்பரியவதாரமுற்றிடுமே. [பால்

அவ்வுருவெடுத்தவாழியான்வேதத்தடைதருநற்பரியிவர்ந்து
தெவ்வடுகுருதிவாள்காத்தேந்தித்தீங்குசெய்காவடனைவே
கவ்வையங்கடல்சூழ்காசினிபனிப்பக்காவல்செய்தரசராயுறையும்
அவ்வியமனத்தோர்யாரையுமறுத்தாங்கறனிலைநிறுத்துவனன்றே. ௩

ஆங்கறநிறுத்துமாயவன்றடமார்பணிவனமாலையின்காற்றுத்
தீங்கருமேனிதைவரப்பெற்றோர்தெளிவுறுசிந்தையராவார்
வாங்குவிற்றடக்கைமன்னவவந்நாண்மாநிலமேற்பிறவார்தாம்
ஓங்குறுமாதியுகத்திறுக்கேற்றவொளிபெறுகுணத்தராயுதிப்பார். ௪

ஆதியாமுகம்வந்தணையுறுங்காலத்தருக்கனுமதியுமந்தணனும்
ஓதுமோர்பூசநாளிலுற்றுறைவாருரைப்பருந்தவம்புரிந்திருக்கும்
தீதிலாத்திங்கண்மாபுராவெனனுஞ்சீர்சிறக்குந்தேவாபியுமருவா
மீதுலாம்பரிதிமரபின்மன்னவனும்விளங்குதம்மரபினைவிளைப்பார். ௫

அந்தணர்முதலாமூழியினீங்காதருந்தவமியற்றியன்பாவார்
வந்துறுமிரண்டாமூழியின்மகிழ்வான்மன்னருமாதவம்புரிவார்
நந்தலின்மூன்றாமூழியினவருஞ்சேர்நாய்கருநற்றவம்புரிவார்
நொந்துறுகலியிற்பின்னவர்தாமுநொடிப்பருந்தவமியற்றுவாரால். ௬

தேன்றருதொடையாய்முதலெனுமூழிசேர்தரினறமெனும்வெள்ளே
றூன்றிடுநான்குபாதமுமிரண்டாமூழியிலொருபதம்வாங்கி
மூன்றெனமொழிவார்மொழிந்திடுமூழிமூன்றினிலிரண்டுதாளூன்றும்
என்றிருங்கலியிலொருபதமூன்றுமிலங்குமித்தகைமிசையன்றே. ௭

அறமெனும்வெள்ளேறொருபதமூன்றினவனியிலொருபதமகற்றும்
நிறைதருதருமமொருபதநீங்கிநிலமிசையொருபதநிறுத்தும்
தெறுமொழிலைவாம்பொய்கடுஞ்சோகஞ்செப்புமிக்கால்வகையனவாம்
மறமிகுநான்குதாளுடைத்தாகிமருவியீங்குறுமாதோ. ௮

நாடொறுகொடுமைநனிதவநடாத்துநாமவெங்கொடுங்கலிமீற்றின்
கேடுறுகொலைசேர்தருமநான்காகக்கிளத்தியதான்முழுதூன்றப்
பீடுறுகருணையுண்மைநற்புனிதம்பெருந்தவமென்னுநான்கடியும்
கீடுறுபுகழ்சேர்தருமமிந்நிலமேனிறுத்திடாதொளித்திடுமன்றே. கூ

கலிவிருத்தம்.

பண்ணுமன்னர்பலர்நமன்கூற்றாய்
என்னதென்னதென்றென்னிடத்தாசையால்
துன்னுவெஞ்சமரிற்றொலைவரென
நன்னிலப்பெணகைத்துவையாடுமே. கO

வாசமாய்நமன்வாழ்வதுபார்த்திடார்
ஓசைநீர்க்கடலுற்றழிமொக்குள்போல்
பேசமாயுடற்பிண்டமெய்யாமென
ஆசைமாகடன்மூழ்கியழுங்குவார். கக

இளனும்வண்மையெழிலிக்குவாகுவும்
நளனும்யாதியென்றோதுநன்னூலுணர்
உளனும்வீமனுமுற்றநன்னீதியும்
வளனுமேவுமனுவெனுமன்னனும். கஉ

மகுடம்வேய்ந்தெழுமாநிலங்காத்தருள்
நகுடனுங்கயனுநவிலண்டநீள்
முகடளப்பமுளைத்தபெரும்புகழ்ச்
சகரனுந்திறல்சார்ந்தசையாதியும் கங

கனகனுங்கனகப்பெருங்கண்ணனும்
அநகவெள்ளிவெற்பேந்துமாக்கனும்
இனையாதிமற்றேனையாக்கையும்
வினையின்வீந்தனவென்றுவிளம்பினான். கச

அசைவில்சிந்தையராசவிங்கோதினர்
இசையினாலிங்கிருந்தனரான்றியூன்
தசையுடம்பொடுதங்கினரில்லையால்
விசையவுள்ளம்விளங்கிடக்கேட்டியால். கரு

எண்ணிலாவைராகமதெய்துமென்
றண்ணல்வாட்கையராசரையோதினன்
விண்ணினோரும்விரும்புமமுதமாம்
கண்ணன்மாக்கதையேகளிசெய்யுமே. கசு

தீயவெங்கலிசேருமிவ்வூழியின்
தூயனெங்குந்துலங்குவன்சொல்லுநர்
நேயனற்புதனாயநெடியவன்
பாயன்கீர்த்தனத்தால்வருமுத்தியே. கஎ

சோவினாலுங்குணங்களினாலுமிப்
பூவினாலும்பொருபலவானுஞ்சேர்
தாவிலாப்பழிசாற்றிடிற்றீர்ந்துபோம்
நாவினாலுரையார்நசெய்துவார். ௧௮

தானத்தானுந்தவங்களினானுநன்
மோனத்தானுமுனமகலாப்பழி
ஞானத்தார்தொழுதேத்துநவையிலா
வானத்தான்பெயர்வாழ்த்திடத்தீருமே. ௧௯

கற்கியவதாரமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் சசள.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௯-வது, பிரளயமுரைத்தவத்தியாயம்.

---

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

முடிபுனையாசபிரளயமுரைக்கின்மொழிதருநித்தியமெனவும்
நெடுநிலமுதலமுவுலகிறப்புநிலவுநைமித்திகமெனவும்
படிமுதலுலகம்படைத்தவனொழியப்படர்வறுபாகதமெனவும்
அடலுறுமாத்தியந்திகமெனவுமறைதருநால்வகைத்தாமே. ௧

நேரலர்பாவுநெடுமுடியரசநித்தியப்பிரளயமென்றல்
பாருறைமாந்தர்முதற்சராசரங்கள்பார்த்தறியாவகைப்பெருக்காம்
நீருறுதியிற்கணங்கணங்கழியுநின்றிறந்திறந்துவேறுதல்
சிருறுமயன்மற்றுறங்குழிமுதலாச்சேர்பிரளயங்களைத்தெரிப்பாம். ௨

ஆயிரமுறைநான்கூழிவர்தடையினருமறையந்தணன்றனக்கு
மேயவோர்பகலப்பகலுளேழிரண்டாய்விளம்புறுமனுக்களுங்கழிவார்
ஏயவப்பகலினீற்றினிலாசவிப்புவிமுதலமூன்றுலகும்
தூயநீர்ப்பெருக்குற்றிறந்திடுமேர்காள்சொன்மகலோகமுற்றுறைவார். ௩

அவ்வுலகைகன்றுபுகழ்சனலோகத்தடைகுவர்பிரளயப்பேரே
வெவ்வியநைமித்திகமெனவிதிப்பார்விளம்புமப்பகலளவிரவாய்த்
திவ்வியதினத்தாலாண்டுநூறிறந்திற்றிகழயன்போம்பிரளயப்பேர்
பவ்வவெண்டிரைப்பார்பரித்தவேலாசபகர்தருபாகதமாமே. ௪

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கார்மழைபருவநூறுவாந்திடக்கதிர்வெய்யோனால்
பார்புனல்சிறிதுமின்றிப்பசையறப்பிளக்குஞ்சேடன்
சீர்தருமுகத்தின்றீயாற்சேர்பொருள்யாவுந்தீய
ஓர்தருமண்டத்தாறுமுலர்ந்துநீருகுமன்றே. ௫

விடந்திகழ்தீயினண்டம்வேமியல்விளம்பின்வெய்ய
கொடுந்தழல்பட்டுநீருக்கோமயபிண்டம்போலாம்
அடைந்திடும்பருவநாளுங்கதிர்நெடுங்காற்றக்காற்றால்
உடைந்துமுன்னீருகண்டமுற்றிடுமணுக்களாயே. சு

மன்னுமக்காலினுனுவண்ணமாமங்குலீண்டித்
துன்னுதோர்ச்சிற்றுரைசொரிதரவெங்குநீராய்
முன்னுறுமணமுன்போகமுந்துநிலம்புனலுண்மாயும்
அன்னநீர்ச்சுவைமுன்போகவழல்புகுந்தடங்குமன்றே. எ

ஆழலுருமுன்போகவசிலனிலடங்குமக்கால்
சேருறுமூறுபோகச்சேணுறஞ்சிறந்தசேணும்
பேருறுமொலிமுன்போகப்பிறங்ககங்காரத்தோன்றும்
ஏருறுகுணங்கண்மூன்றுற்றியையகங்காரமூன்றும். அ

மருவுறுமகானினென்றும்வழங்கியமகானும்வந்தாங்
குறைதருபகுதியுட்புக்கொளியுமாற்பகுதிதானும்
புரையறுபுருடனேடுபோதமாயநாதியாகிப்
பெருகொளியாகிவைகும்பிரமத்திலடங்குமன்றே. கூ

இன்னணந்தோற்றுமாறேயியைந்தனயாவும்போகத்
துன்னியபிரளயப்பேர்சொல்பிராகிருதமாகும்
மன்னவபிரமமொன்றேவயங்குசித்தியமாங்காண்கின்
பின்னமிலாதஞானபிரளயங்கூறுவாமால். க0

சேலமாய்ச்சேலத்துற்றசித்திரம்பலவாநூல்போல்
ஞாலமேமுதலவாகிநலவயறுமுயிர்களாகிக்
காலமாய்க்கருவியாகிக்காரணமாகியொன்றாய்
மூலமாயழிவொன்றின்றிமுதன்மையாம்பிரமமென்றே. கக

விண்ணெழுபரிதிதன்னால்விளைந்தனமழைசெய்யோனை
மண்ணிடைநின்றுபார்க்கும்வயங்குவெஞ்சுடர்க்கூறாய
கண்ணுறன்மறைத்தல்போலக்கருதரும்பொருளினுனே
நணகங்காரந்தேருநற்பொருண்மறைக்குமாதோ. கஉ

கரும்புயனீங்கிவெய்யோன்கண்ணிடைத்தனதுகூறாய்
அரும்பொளிபொருந்தவொன்றாயவிருமவ்வாறுபோலப்
பெரும்பொருளகந்தைநீங்கிற்பேசுதன்கூறாய்த்தன்பால்
திருவுயிர்பிறிந்தொன்றாகத்திகழ்ந்திடுந்தேரின்மாதோ. கங

அறிந்திடுஞானவாளாலகந்தையாம்வனத்தைவீட்டி
நிறைந்திடும்பிரமமாகிநித்தியமாவர்வேறாய்ப்
பிறந்திடுமுயிருங்காணர்பின்னமாய்ப்பிறிந்துநீங்கி
இறந்திடுபொருளுங்காணேமென்றிருப்பரன்றே. கச

நடையுறுதொடையலொன்றேநாகமாய்விளைந்தவாபோல்
தடையுறுமாலையநீங்கித்தற்பரமாவாராய்ந்தோர்
விடலருஞானயோகவித்தகவிவேகத்திவ்வா
றடைதருபிரளயப்போதத்தியந்திகமென்றாமே. ௧௫

இன்னதொன்றாலேமாயனிலங்கவதாரமாகி
மன்றுநாராயணப்பேர்மருவியமுனிவன்கூற
நன்னரம்புணர்ந்துபாடுநாரதமுனிவன்றேர்ந்து
முன்னமெந்தாதைகேட்பமுழுவதுந்தெளிந்தான்மன்னே. ௧௬

தாதையென்றனைக்கும்வேதத்தலைவனுள்ளுவப்பமேவி
ஓதினனெமக்கவ்வண்ணமுரைத்தனனினைக்கென்றோது
காதையைச்சவுனகாதிகருதருந்தவத்தோர்கேட்பச்
சூதனுநைமிசைப்பேர்சொல்வனத்திருந்துகூறும். ௧௭

பிரளயமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௬௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௪-வது, பரிட்சித்துவீடுபெற்றவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

பிறத்தலுமிறத்தலும்பேசிறுக்கைகள்
உறத்தகுமுண்மையாயுற்றநல்லுயிர்க்
கறத்துறையாசவக்குணங்களின்மையால்
இறத்தன்மற்றுனக்கிலையென்றுவைகுவாய். ௧

அல்லதுமைந்தர்களாயும்வைகினை
சொல்லுமிவ்வுலகினிற்றுலங்குதாதையர்
நல்லெழிற்புதல்வராய்நயந்துதிப்பரென்
றெல்லையில்சுருதிகளியம்புகின்றவால். ௨

தாதையர்மைந்தர்களாகிச்சார்வதிங்
கோதுபீசாங்குரமுற்றதன்மையாம்
பேதமாமரந்தொறும்பிறங்குதியெனப்
பூதமாமுடலொறும்பொருந்துஞ்சீவனே. ௩

உறங்குழிக்கனவிடையொருவன்றன்றலை
கறங்கெனச்சுழல்பவர்கையிற்கொய்தெழ
மறங்கிளர்வேலவமாணங்காண்கையால்
இறந்திடுமாக்கைநீயென்றுமல்லையே. ௪

கடந்துறைவானுமக்கடமுடைக்கின்வான்
இடத்தொடொன்றுபட்டிருக்குமாறுபோல்
சடத்துறையுயிருமச்சடந்தணக்கினீங்
கடக்கரும்பாத்தினென்றுநிலைகுமே. ௫

மாயையான்மனமெழுமனத்தினுடல்
சேயமோடடைதருநிகழ்ந்தவாக்கையால்
மேயசீவனுக்குமோர்வினைக்கட்டுண்டெனத்
தூயநூலுணர்பவர்சொல்லுவாரரோ. ௬

சொற்றருசயிலநூறொலையுமட்டுமே
விற்றருதீபமென்பெயர்விளங்குமால்
பெற்றிடுமக்குணம்பிறங்குமவ்வள
வுற்றிடுமாக்கையென்றுரைவழக்கமே. ௭

வினைத்திறம்பொருந்தியமெய்யைமெய்யென
நினைத்திடலன்றிநீங்கலாதிவண்
டனித்துணரறிவிடைநுவலுமொன்றென
மனத்தைவைத்துறைதருதிமன்னர்மன்னனே. ௮

யாவருமிறக்கிலரொடுத்தவாக்கையே
சாவதுநினையளிதண்ணந்தாமரைப்
பூவிரிகருமுகில்போலுமாதவன்
சேவடிபடர்தியாற்றெளிந்தகேள்வியோய். ௯

தீக்கனல்கட்செவிதிருகுஞ்சீற்றமோ
டாக்கையிற்சுறவுமற்றநுநினைத்திடேல்
போக்கறுதனிமுதல்பூவைவண்ணனை
நீக்கமொன்றின்றிநீநினைத்தல்செய்தியால். ௧௦

அரவுவாய்பொழிதருஞ்சாக்கைசேரினென்
ஒருதனிமுதல்வனையுளத்திலுன்னுநர்க்
கிருவிசும்பேக்கறமீறிலின்பமாம்
பெரியதோரோதகீபெறுதியென்றனன். ௧௧

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மண்ணியமணியிற்றோன்றுமாதவன்குணங்களெல்லாம்
புண்ணியம்போலத்தோன்றும்புங்கவனுரைப்பக்கேட்டுக்
கண்ணுறும்பிறவிவேலைகடந்தனனுய்யப்பெற்ற
அண்ணல்பேரின்பவேலையலையிடைக்குளித்தான்மன்னோ. ௧௨

விழிபொழிகருணைதன்றால்வெவ்வியபிறவிமாசு
கழுவினைநின்னையிங்குக்காட்டியதவமற்றென்னே
முழுதுணர்முனிவவென்றுமுருகவிழ்கமலப்பொற்றாள்
தொழுதனன்சென்னிகூடச்சுகனகன்றேகினானால். ௧௩

என்றுநல்லுணர்வுவாய்ந்தவிருந்தவமுனிவர்போற்று
மன்றலந்துளவுருடுமாகதக்குன்றுபோல
நின்றவன்கமலபாதநினைந்துளங்குளிர்ந்தருதன்
நன்றெடுத்துரைத்துமீட்டுகெடந்தனனவிற்றினனே. ௧௪

அறந்தகன்முனிவர்சூழச்சுகமுனிபோயபின்னர்ச்
சிறந்தநன்மனத்தையொன்றாத்திகழமால்கழலிற்சேர்த்தி
அறந்தருவேந்தர்வேந்தனரியதோர்காட்டமேபோல்
நிறந்தலையெறிநீர்க்கங்கைநீள்கரையிருந்திட்டானல். ௧௫

கலிநிறைதன்மையானுங்கலந்ததன்னளியினானும்
மலர்கதிர்மதியிற்றோன்றுமாசினைத்தீண்டநாடி
மலர்தலையுலகங்காணவழங்குதக்ககனென்றோதும்
கொலைமலிகச்சுநாகங்கொதித்தழன்றெய்திற்றன்றே. ௧௬

கூற்றுறழ்தக்ககன்வேற்கொற்றவன்றன்னைத்தீண்டின்
மாற்றுவனின்னேயென்றோர்மறையவனெழுந்துசெல்ல
ஆற்றிடையவனைக்கண்டவரவும்யாங்கடைதியென்னச்
சாற்றருமறையவனோனுந்தன்னிலைகிளத்தல்செய்தான். ௧௭

கேட்டலும்வெகுளிநாகங்கிளர்தவவ்வாறுநஞ்சம்
மீட்டிடவல்லையேலிவ்விடத்தினைமீட்டியென்ன
மோட்டுநீண்மரமொன்றாங்குமுதலொடுங்கரிந்துசாயச்
சூட்டழனஞ்சுபேழ்வாய்சொரிந்திடத்தீண்டிற்றன்றே. ௧௮

வெண்டிரைவேலிஞாலம்வியப்புறவிண்ணிற்றோன்றும்
தண்டாண்மதியமென்னச்சுடரும்வாளெயிற்றுப்பாந்தள்
மண்டழல்விடத்திற்றீந்தமல்லலந்தருமற்றாங்கு
பண்டுபோற்றளிர்த்துநிற்பப்பார்த்தனன்பரிதியன்னான். ௧௯

வல்லையெவ்விடமுமாற்றவல்லையான்மறையோயாங்குச்
செல்வதென்னென்றுமின்றோய்செழுமணிச்சுடிகைநாகம்
எல்லைநீர்முகட்டிற்றோன்றுமிளங்கதிர்ப்பரிதிநாண
வில்லுமிழ்மணிகணல்கிமீள்கெனவிடுத்ததன்றே. ௨௰

புயங்கநன்மணிபெற்றேங்கும்புனிதனுங்காசிபப்பேர்
வயங்கினன்மீண்டுபோகவல்லையின்மறைநால்வல்லோர்
தயங்கெழிலுருவங்கொண்டதக்ககனென்னுநாகம்
நயங்கெழுமரசன்வைகுநதிக்கரையேகிற்றன்றே. ௨௧

நஞ்சினைமீட்பவந்தநான்மறையோனைமீட்டு
வெஞ்சினத்தடைந்தநாகம்வெவ்வராவுயர்த்தோனஞ்சச்
செஞ்சிலைகுழைத்தபார்த்தன்றிருமகன்றன்னைஞாலம்
அஞ்சிமற்றுவாவென்றுங்கதிர்தாக்கநுவிற்றன்றே. ௨௨

தீத்தவழுயிர்ப்புநாகஞ்சீற்றமோடடைந்தவாறும்
நாத்தலைபுரட்டுவெய்யநஞ்சுகக்கடித்தவாறும்
பார்த்திலன்சுடிகைநெற்றிப்பஃறலையரவினுடும்
கூத்தனைநினைந்துநெஞ்சங்குழைந்திழைந்திருக்கின்றானே. ௨௩

விரிதலையாவுகான்றவெவ்விடவழலினுக்கை
எரிதாமுதுநூற்கேள்வியின்னமுதெய்திநின்றான்
மருவிரிதருவினீழல்வாழ்பவர்வியந்துபோற்ற
அரவணைதுயிலுமம்மானடிநிழலெய்தினனால். ௨௪

தேமழைபொழியுந்தண்ணென்செழுந்தருநீழல்வானோர்
பூமழைபொழியவீடுபொருந்தினன்புதல்வனென்னும்
மாமழைபொழியுமும்மைமதக்களிறனையான்பைம்பொன்
ஆமழைபொழியுஞ்செங்கையரசுசெய்திறஞ்சொல்வாமால். ௨௫

பரிட்சித்துவீடுபெற்றவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௯௮௩.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## ௫-வது, சர்ப்பவேள்வியுரைத்தவத்தியாயம்.

கலிநிலைத்துறை.

விடமீட்பவந்தமறையோன்றனைமீட்டுவெம்பும்
அடுசீற்றநாகமரசன்றனைத்தீண்டியொரு
வடிவாட்டடக்கைச்சனமேசயன்கேட்டுவையம்
கடைநாட்கனற்றுங்கனலாமெனக்காய்ந்தழன்றான். ௧

மண்ணூர்திசையுந்தொழுதேத்தியமாலைசேர்ந்து
விண்ணணந்திகழுஞ்சுடர்மாமதிபோல்விளங்கும்
தண்ணங்கவிகைச்சனமேசயன்பாந்தள்வெந்தீ
உண்ணும்படிமற்றொருவேள்வியுஞற்றினனே. ௨

மைவ்வேலைஞாலத்துயரந்தணர்வந்துசூழத்
தெவ்வோடவென்றதிறன்மன்னவனாற்றுகின்ற
அவ்வேள்விவெய்யதழலின்றலையாலமூழும்
வெவ்வாயரவம்பலவந்தனவீழ்ந்தெரிந்த. ௩

எரிகின்றகாலத்தெரிவீழ்ந்திடவின்னுமென்றே
வருகின்றதில்லைவடிநாண்மதுவாய்நெகிழ்ந்து
சொரிகின்றமன்றற்றொடைமாலைமிடைந்ததிண்டோள்
அரசன்றனைத்தீண்டடுசீற்றவாமென்றான். ௪

புயலுற்றசெங்கைப்புகழோனுரைகேட்டலோடும்
செயலுற்றவேள்விமறையந்தணர்சேர்ந்துநோக்கி
வெயிலுற்றகூர்வேல்விறல்வேந்தனைத்தீண்டுநாகம்
வயிரப்படையோர்புகல்புக்கதுமன்னவென்றார். ௫

யாழ்கொன்றதீஞ்சொலாமங்கையாடவின்றேன்
சூழ்கின்றபொன்னந்துணரீன்றமந்தாரநீழல்
வாழ்கின்றகொற்றத்திலையோனொடும்வந்துநாகம்
வீழ்கின்றதில்லையெவனோவெனவேந்துரைத்தான். ௬

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வைம்முகமணிந்தவொள்வாள்வச்சிரப்படையினானும்
பைம்முகமணிந்தத்திப்பஃறலைப்பாந்தள்வேந்தும்
மெய்ம்முகங்கரிந்துநீயவீழ்கமற்றின்னேயென்றே
நெய்ம்முகந்தந்தணாளர்நீளெரிமுகத்திற்பெய்தார். ௭

தண்ணறுந்தருவினீழறனியாசிருக்கும்வானத்
தண்ணலுமண்ணறன்பாலடைந்தவாளரவின்வேந்தும்
கண்ணகல்விசும்பினின்றுங்கவிழ்தரவுற்றகாலை
விண்ணவர்குரவன்வல்லையேயினன்விலக்கினானால். ௮

முன்னமுதுண்டதாலம்மொழிதரும்பகுவாய்நாகம்
அன்னதுதன்னையெங்ஙனழல்வீழ்த்திமாய்த்தல்
மன்னவர்மன்னமுன்செய்வல்வினைவந்துநல்கும்
இன்னலுமுவப்புநோயுமிறப்பதற்கேதுவாமே. ௯

அவரவர்வினைகளேமற்றவரவர்க்கழிவுசெய்யும்
கவர்படுநாவினாகக்கணங்களைக்கனலின்மாய்த்தல்
உவர்படுவேலைஞாலத்துற்றதோரறன்கொலம்ம
எவரிவைதுணிந்துசெய்வாரிறைவவென்றியம்பினானே. ௧0

ஆனதன்வேள்விநீக்கியடையலர்பரவும்வைவேற்
பூநறுந்தெரியன்மன்னன்பூசனைபுரிந்துபோற்ற
வானவர்மகுடகோடிமணித்தழும்பிருந்தபொற்றாள்
ஞானநன்மறைவலாளனன்றுவந்தேகினானால். ௧௧

அழலும்வானரசர்க்கெல்லாமழற்கதிர்ப்பரிதிபோன்றும்
பொழிகதிர்மணியிற்செய்தபூங்கழலிலங்குகோன்றாள்
நிழலுறுமன்னர்க்கெல்லாநிழன்மதிபோன்றும்வையம்
முழுவதும்புரத்தல்செய்தான்முத்தவெண்கவிகைவேந்தே. ௧௨

ஆழியானன்பர்நாளுமியாமெமதென்றுபாரார்
ஏழொடேழுலகமாதியெவைகளுமொன்றாய்நோக்கி
வாழிமால்பாதஞ்சேர்வாரென்றறமகிழ்ச்சிகூர்ந்து
சூழுமாதவரெல்லோருஞ்சூதனைப்புகழ்ந்துசொல்வார். ௧௩

வேதமோர்நான்கதாகமெய்த்தவவியாதன்முன்னர்
ஓதினன்முனிவர்க்கென்னவுரைத்தனை சுருக்கியாங்குக்
கோதிலாச்சுருதிநூலுங்குலவியபுராணநூலும்
சூதமாமுனிபரக்கச்சொல்கெனச்சோறலுற்றான். ௧௪

சர்ப்பவேள்வியுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

௮௫ திருவிருத்தம் ௫௦௫.

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

---

## ௬-வது, வேதநான்காகவகுத்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தண்ணறுங்கமலத்துற்றசதுமுகனிதயமென்னும்
விண்ணிடையெழுந்தநாதம்விளங்கியபிரணவப்பேர்
நண்ணிமுன்றுறந்துளோருநாடினர்மொழியினன்றோர்
எண்ணுறும்பரமாநந்தமெய்துதற்கேதுவாமால். ௧

மந்திரமறைகளாதிமறுத்தபுநூல்கட்கெல்லாம்
முந்துறுதன்மைத்தாகிமுதன்மையாய்க்குணனோர்மூன்றும்
தந்துறுமகாநற்சீர்சார்ந்துறையுகாரத்தோடு
நந்தலின்மகாரமென்னநவிற்றுமூன்றெழுத்தின்வைகும். ௨

மூன்றெனவெழுத்தினுற்றமொழிபிரணவத்தினின்றும்
தோன்றினவுயிர்மெய்யென்னச்சொல்லியவெழுத்தின்கூட்டம்
ஆன்றவவ்வெழுத்தினாலேயயன்முகநான்கினின்றும்
ஏன்றிடுமறைகணான்காயெய்திடப்பயந்தான்மன்னோ. ௩

ஆங்குவந்துதித்தவேதமனைத்தையுமலரின்மேலான்
தீங்கறுபுதல்வரோதச்செப்பினனவருந்தத்தம்
ஓங்கெழிற்புதல்வர்தங்கட்குரைத்தனரின்னவாறே
வாங்குதெண்டிரைசூழ்பார்மேல்வயங்கினபெரிதுமாதோ. ௪

கலிவருங்காலத்தாயுள்கருதிடிற்குறையுமென்றே
நிலைபெறவேண்டிமூன்றாய்நிலவியயுகங்கடோறும்
அலருறையயன்முன்கூறுமாரணமவைகடம்மை
மலைவறச்சுருக்கிமேலோர்வகைபெறவழங்கினால். ௫

மழகளிறன்னவிந்தமனுவுறைகாலமென்னச்
சுழல்வுறுமிருபத்தேழாந்துவாபரயுகத்தின்மேவும்
முழுமறைவகுத்தல்செய்தான்முற்றுணர்வசிட்டன்சேயாம்
பழுதறுசத்திபெற்றபராசரமுனிவன்மாதோ. ௬

ங்கெழுபுகழ்சேர்வைவச்சுதனெனுமனுவேந்தற்று
ங்கெழுமூழிநான்காடைந்தனநாலேழிங்கு
யங்கியகலிநான்கேழாமுறையவெங்கலியின்காலம்
யங்குமிக்கலிக்குமுன்போந்துவாபரந்தன்னின்மாதோ. ௭

ாசரமுனிவனல்கும்பண்ணவன்வியாதன்றேரின்
ாவணைதயிலுமம்மானருங்கலையாகுமன்றோன்
ாதனநான்குவேதப்பொருப்பினொவ்வொருகைம்மொண்டு
ாதலந்தன்னினான்காச்சாற்றினன்வகுத்துமாதோ. ௮

ருந்தவமுனிவர்காளீங்கினிவருமூன்றூழி
பாருந்தினன்வேதநன்னூல்புகரறப்பிரிப்பான்பூமேல்
ருந்தியபுகழ்த்துரோணன்சேயெனவுதித்துநாளும்
ருந்தவம்புரிந்துமேவுமச்சுவத்தாமனன்றே. ௯

ருத்தகுவேதநான்காச்செப்பியவியாதன்முன்னும்
ருக்கெனுமறையையன்பாலிசைத்தனன்பயிலற்கன்றோன்
ரித்தனன்பழுதின்றாகிச்சார்ந்தவர்க்குரைப்பவந்நூல்
ரித்தயானுக்காலேபரம்பரைவிளங்கிற்றன்றே. ௧௦

ன்னியவிரண்டாம்வேதம்வகுத்தவம்முனிவியாதன்
ன்னருந்தவஞ்செய்வைசம்பாயனற்குரைப்பக்கற்றங்
ன்னவன்றானுமன்பால்யாஞ்ஞவற்கியனேயாதிப்
ன்னுமாணுக்கரோதப்பயிற்றுவித்துறையுநாளில். ௧௧

டலருவினையின்கட்டால்வெவ்வியபிரமகத்தி
டைதலின்மறைநூல்கற்றயாஞ்ஞவற்கியனேயாதிப்
டையுறும்வழிபாடாற்றிப்பொருகதுமாணுக்கர்தம்மைத்
தாடருமிப்பாவநீவிர்தொலைத்திடத்தவத்தினென்றான். ௧௨

ாவனுங்கிசைத்தல்கேட்டகோதின்மாணுக்கர்தம்முள்
ரியநற்றவத்தின்மிக்கயாஞ்ஞவற்கியனென்பேர்சேர்
ரைசெய்மாணுக்கன்செய்தான்றியேயேனையோரால்
ரியுமிப்பாவம்போகாதென்றலுங்குரவன்சொல்வான். ௧௩

க்கையுண்மகிழ்ந்தியானேதீர்க்குவனேனையோரால்
ந்தவிப்பாவம்போக்கும்வல்லமையில்லையென்று
ந்தனைசெயினின்றயானிகழ்ந்திடவுணர்ந்தவேதம்
க்கிவணொழிதியென்றானற்றடாதினிதுமிழ்தல்செய்தான். ௧௪

ன்னவனுமிழ்ந்தவேதமாங்குநின்றிலங்கநோக்கிப்
ன்னுதித்திரியென்றேதுப்பறவையினுருவமெய்தி
ன்னியமுனிவர்சிலரோர்மருவினரருந்துமாற்றால்
ன்னருமறைநூல்பெற்றபேர்தயித்திரியமாமே. ௧௫

அருமறையுமிழ்ந்துபோயவருந்தவமுனிவன்வான்போய்
விரிகதிரெல்லோன்றன்னைவிருப்பொடுவணங்கிவாழ்த்தி
ஒருமறையடியேனுசவுரைத்தியென்றியம்பலோடும்
துரகதவுருவாயவெய்யோன்சொற்றனன்மறைமற்றன்றே. கசு

கலிநிலைத்துறை.

சாசிலம்மறைகண்ணுவன்முதலியோர்கற்றோர்
வாசிநல்லுருவாய்முனம்வெய்யவன்வகுத்துப்
பேசநின்றதாலம்மறையுரித்தெனப்பெற்றோர்
தேசுறும்பெயர்வாசிதனேயராத்திகழ்ந்தார். கஎ

சீர்தழைந்தமூன்றுமறைதிகழ்சயமுனிக்கும்
ஏர்தழைந்தநான்காமறைசுமந்துவென்பவற்கும்
பேர்தழைந்திடும்புராணமென்றுரைக்கும்பெட்பால்
பார்தழைந்துறப்பரம்பரையம்முனிபகர்ந்தான். கஅ

நிகரிலான்மறைதெரித்தவவ்வியாதன்முன்னிலமேல்
புகலுமொன்பதிற்றிரட்டியாப்பொருந்தியபுராணம்
அகலுந்தத்துவப்படைப்புரைத்திடன்முதலாகப்
பகருமையிருவகையுடைத்தஃதிவட்பகர்வாம். ககூ

பூதமிந்தியமுதலியபடைப்பினைப்புகறல்
கோதிலாதவித்தின்வழிவித்துறுங்குணம்போல்
பேதமாகியசராசரம்பிறப்பனபேசல்
ஓதுசீவன்மற்றவற்றுக்கிவ்வில்லெனவுரைத்தல். உ0

ஞாலமீதுமாலவதரித்தருள்வகைநவிற்றல்
கோலமேவியமனுமுதற்றேவரைக்கூறல்
காலமூன்றுறுமாசனையிவரெனக்கழறல்
சீலமேவுமம்மன்னவர்சரித்திரந்தெரித்தல். உக

ஏயநால்வகைப்பிரளயமியம்புதலெழில்சேர்
மாயையால்வருமுயிர்த்திறமொருவகைவழங்கல்
மேயமற்றவற்றிருப்பிடனாய்விளங்கறிவாய்த்
தூயகாரணமாம்பொருடெரிதரச்சொறல். உஉ

சொன்னவையிருவகையிலக்கணத்தொடுதொக்கு
முன்னுகின்றமாபுராணமற்றப்புராணங்கள்
பன்னுமிவ்வகையிலக்கணத்தாற்பதினெட்டாய்
மன்னுகின்றனமாபுராணப்பெயர்வகுப்பாம். உ௩

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பிரமமாம்புராணம்பற்பம்பீடுசால்வைணவஞ்சீர்
மருவுபேர்சைவமென்றேவழங்குநூலிலிங்கநீர்சூழ்
தரைசொல்சாருடநல்வண்மைதயங்கியநாரதீயம்
பரமபாகவதமண்ணோர்பகர்தருமாக்கிநேயம். உச

காசறுகாந்தமின்பங்கலந்துறுபவுடிகம்பார்
பேசியபுகழ்சேர்கின்றபிரமகைவத்தநன்னூல்
மாசறுமார்க்கண்டேயம்வாமனம்வாரகமச்சம்
தேசுறுகூர்மஞ்சிலந்திகழ்பிரமாண்டமாமால். உரு

இத்தகைப்புராணமூவாறியலும்பாகவதம்பற்பம்
பொய்த்தலில்வாரகம்வைணவத்தொடுபுகல்காருடம்
மெய்த்தநாரதியமென்பவிளம்புசாத்திகநூலாமால்
கத்தறுமார்க்கண்டேயங்கருதுபௌடிகம்பிரமம். உசு

பிரமகைவத்தமிக்கபிரமாண்டம்வாமனஞ்சீர்
பெரியராசதநூல்காந்தம்பேசுமாக்கினேயஞ்சைவம்
விரியுமச்சியமிலிங்கம்வீறுறுகமடமென்னத்
தெரிதருதாமதப்பேர்சிறந்தநூலென்பர்மேலோர். உஎ

என்றுணர்குதன்கூறவியற்றருந்தவத்தோரெல்லாம்
நன்றுவந்துரைத்தவாறுநன்றெனவியந்துகாலும்
வென்றுயர்மார்க்கண்டேயன்விழுத்தவம்புரிந்தவண்ணம்
மன்றநீதெரித்தியென்னவருத்தனனுமைசெய்வானேல். உஅ

வேதநான்காகவகுத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ருகக.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## எ-வது, மார்க்கண்டேயர்தவமுரைத்தவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

மாற்றரும்பெருந்தவமார்க்கண்டேயன்முன்
ஆற்றினையுதமொடயுதமாண்டிருந்
தேற்றயோடடைந்ததிச்சிதறுஞ்செங்கண்வெங்
கூற்றையுங்கடந்தனன்கூறுமாயனேல். க

அன்னவன்சிலநல்லழகுகண்டெழித்
பொன்னவிர்மதிச்சடைப்புனிதன்போதினன்
துன்னுதென்புலத்தினர்சுராருந்தவர்
மன்னுமற்றேனையர்மனம்வியந்தனர். உ

ஆதிமாமனுமுதலானவர்காலம்போய்
நீதியேழாமனுக்களனேரிலான்
ஓதுபூம்பச்திரையென்னுமொண்பெயர்ச்
சீதநீர்நதிக்கரைசேர்ந்துவைகினன். ௩

ஊனுவண்டுடுத்தபோதுறையுஞ்சேயிழை
காதலன்சேவடிகருதினாண்மலர்த்
தாதெறிந்தொழுகுறுதண்ணெனுற்றிடை
மாதவம்புரிந்தனன்மார்க்கண்டேயனே. ௪

அன்னவனருந்தவமகற்றுவாயெனப்
பொன்னகர்மன்னவன்புகலப்போயினன்
மன்னெழிலரம்பையர்மருங்குசூழ்வர
இன்னிளவேனிலுஞ்செல்வனென்பவே. ௫

எத்திசையும்புகழிமயமால்வரை
உத்தரபக்கநின்றெழுகண்மேயபூம்
பத்திரைநதியில்வேள்படர்ந்துநோக்கினன்
மெய்த்தவம்புரிந்துறைவிமலன்றன்னையே. ௬

கூனல்யாழின்னிசைக்குயில்குடைந்துகும்
கானுலாந்தண்மலர்களுங்காவெலாம்
தேனுலாம்வண்டொடுசெறிந்துயாணசெய
வேனிலான்வருதலின்வேனிலுற்றதால். ௭

கொங்கைமென்முகிழினர்குழைந்தசாயலர்
அங்கனூழ்மேனியாரமடந்தையர்
பொங்கெழில்வேனிலிற்பூத்தகொம்பென
மங்குறேய்தண்டலைமருங்குமேயினர். ௮

கொந்தவிழ்கோதையுங்குழலுஞ்சோர்தர
இந்திரவில்லெனவெறிக்குங்காஞ்சிசூழ்
அந்துகில்சோர்தரவந்தணன்முன்
மந்தமாருதத்தொடுவந்துதோன்றினர். ௯

அயிலெனப்பிறழ்ந்துசேந்தரிபரந்தகண்
வெயின்மணிக்குழைபொருதலைப்பமெல்லென
மயிலெனமருங்குலாய்மலர்க்கொம்பாமெனக்
குயிலொடுமாறுகூய்க்குலவினர்சிலர். ௰

சில்லரிச்சிலம்பொடுசெம்பொற்கிங்கிணி
மெல்லெனமிழற்றிடமிளிர்பொன்மேகலை
ஒல்லெனவொலிசெயவொல்கிமென்மலர்
அல்லியங்கோதையராடினர்சிலர். ௧௧

படரிக்கண்ணியவொளிபொன்னூபுரம்
குடியகலவெயொடுசிலம்பத்தோகையின்
ஆடலாகயத்தினைமுதவின்னிசைப்
பாடலாகயத்திலன்றவத்துச்செய்பன்னவன். கஉ

தொடுத்தமென்மழலையஞ்சுருப்புநாண்கமழ்
கடுத்தொடையேயத்தோன்கழியவாங்கினன்
அடக்கருமைம்பொறியவித்தவாயன்மேல்
விடுத்தனன்பூங்கணைவேளிவ்வேந்தனே. கங

தொலைவுறப்பாழிவாய்த்தூணிப்பல்கணை
மலையும்வெஞ்சரம்பொருமாரன்மாட்டினன்
பலமலர்பூத்ததோர்பழுமரத்தையொத்
தலர்பொறியவித்தநல்லறிவன்றோன்றினன். கச

மாயனைவழிபடுமாதவத்தர்பால்
நீயகம்மானைதாய்ச்சேர்கலாதெனத்
தூயசெஞ்சடையவற்றொலைப்பப்பூங்கணை
ஏயதன்வடுநனியெண்ணியாழ்கின்றன். கரு

தனக்கிலனிவன்றவமென்றவூழினால்
களிச்சுரும்பார்த்தார்க்காமனேகினன்
விளைத்தவைதெரித்தனன்விரிந்தவானுல
களிப்பவன்கதிர்முடியசைத்திட்டானரோ. கசு

வேறு.

அரிதாகற்றவமாற்றுவானெனை
உரைசாலன்னவன்முன்னமெழுநுதன்
விரைசேர்தாமரைவென்றசெங்கணார்
நாராயணர்கண்ணினரோ. கஎ

உற்றுரென்னைவிழைந்ததோதெனச்
சொற்றார்மற்றவர்சொற்றசொற்கொளாப்
பெற்றேனும்மருள்பேறென்வேறெனப்
பொற்றாள்சென்னிபுனைந்திறைஞ்சினன். கஅ

வேறு.

கடையுறுபிறவியங்காணவேண்டுமால்
படைதிறந்தினகருவொழுகுமன்றலர்
தொடையலிரென்றலர்தாற்றிப்பூங்கழல்
அடிதொழவாங்கவாருள்செய்தேகினர். கக

வேலையம்புவிமகன்விழைசெய்கற்பகச்
சோலையங்கிளியெனத்தோன்றிப்பைபத்தூழாய்

மாலையம்புயத்தனைவணங்கிவைகிய
காலைவந்தெறிபெருங்காற்றெழுந்ததால். ௨0

வெடிப்பவான்முகடுமண்சுமந்தவீங்கெழிற்
படத்தவாளரவமும்பதைபதைப்பமீத்
தடித்தொளிதிசைதிசைதவழச்சூழ்ந்தெழுந்
திடித்ததிர்கருமுகிலேழும்பெய்தவால். ௨௧

செறிகதிர்மதிவலந்திரியுமாநிலம்
மறிதாவானகமடங்கவெற்புவேர்
பறிதரவுயிரெலாமிறந்துபாழ்பட
எறிதிரைக்கருங்கடலேழுங்கோத்தவே. ௨௨

மருவருநற்றவமார்க்கண்டேயன்மற்
றொருவனுக்குறுபொருளொன்றுங்கண்டிலன்
வெருவரவெளிமுகடுடையவீங்கிய
முரிதிரைக்கருங்கடல்வயிற்றுண்மூழ்குமால். ௨௩

எழுமெறிதிரையொடுமெழுமெழுந்திடை
விழுமுரிதிரையொடும்வீழும்வீழ்ந்துதன்
முழுவலிகெடவலைமொத்துண்டுள்ளழிந்
தழுமவன்மறுக்கம்யாரறையகிற்பரே. ௨௪

மழலையஞ்சுரும்பொடுவரிமிடற்றதேன்
உழுநறுந்துழாய்புனையொருவனவ்வழிப்
பழுமரப்பாசிலைப்பள்ளிமேற்பசுங்
குழவியாய்க்கண்வளர்கோலநோக்குமால். ௨௫

கரையழிந்தொழுகுமோர்கங்கைபூத்தமெல்
முருகவிழ்சேயிதழ்முளரித்தாண்மலர்
இருகையிலெடுத்தணைத்திதழ்வைத்தங்ஙனம்
பெருவிரலமுதுணும்பெற்றிபார்க்குமால். ௨௬

அகலும்வந்தணுகுநல்லங்கைபற்றிடும்
நகுதருசேயிதழ்நளினம்பூத்ததோர்
முகிலிளங்கன்றெனக்கிடந்தமுன்னவன்
புகவருவயிற்றிடைப்புகுமற்றென்பவே. ௨௭

மல்லலர்துழாயவன்வயிற்றிலோர்புடை
பல்லுயிர்ப்பகுதியும்பாவைஞாலமும்
செல்வொடுமதிதவழ்செம்பொற்குன்றமும்
கல்லெனவதிர்கருங்கடலுங்காணுமால். ௨௮

இந்திரன்முதலியரிருந்தவத்தினர்
சந்திரமௌலிசெஞ்சலசமேலவன்
சொந்தவிழ்துளவணிகொற்றவாழியான்
முந்தகட்டொருபுடைமொய்ப்பக்காணுமால். ௨௯

நண்ணிமுன்னிருந்துயர்நற்றவம்புரி
அண்ணலங்கடவுளாற்றடைகரைப்புறம்
கண்ணனைக்குளிர்ப்புறக்காணுங்கண்டுவந்
தெண்ணருங்கற்பமாங்கினிதிருக்குமால். ௩௦

இந்நிலைநிகழ்வுழியெரிபொன்னாழியான்
மன்னியமரையையைவல்லைமாற்றலும்
அந்நிலைநாணிலனம்மவோவென
மெய்ந்நிலைவேதியன்வியப்புற்றனனரோ. ௩௧

உடைத்தவெண்டிரையிடையொளிர்பொற்கொம்புபோல்
பொடித்தவளிளமுலைபொரவுடைந்தலர்
மடற்பசுந்தண்டுழாய்மாயன்மாயையார்
கடக்குநரொன்றுளங்கனியவேத்தினன். ௩௨

புரியுமாங்கவன்றவநோக்கிப்பொன்பிறழ்
வரைமகள்வழுத்தலும்வாமனித்திட
விரிதலைவிசும்பிடைவிடையிவர்ந்துலாம்
எரிமருளீர்ஞ்சடையிறைவனெய்தினன். ௩௩

பிறைபொழியிளநிலாப்பெருகுசெஞ்சடை
இறைவன்வந்திறுத்தலும்யாதுந்தேர்ந்திலான்
நிறைதவனிருந்துழிநிலவுவான்பொருப்
புறைபவன்மற்றவனுளத்தொடுற்றனன். ௩௪

மன்னியவலம்புரித்தடக்கைமாயனை
உன்னினனிருந்தகல்லுணர்வினனிஃ
தென்னெனவிழித்தலுமிமயமால்வரைக்
கன்னியோர்பாகனைக்கண்டிறைஞ்சினன். ௩௫

வேறலைமாயனுநாமும்வேட்டதென்
ஆறறியக்கணைவென்னநின்னருட்
பேறலான்மற்றுநான்பெறுவதென்னெனாத்
தேறுநீர்தவழ்சடைச்செல்வற்கூறுவான். ௩௬

இறப்பொடுநிகழ்வெதிரென்றுமும்மையாம்
சிறப்புறுகாலநல்லறிவுஞ்சேர்குதி
அறப்பெருந்துணையெனுமன்பநின்புகழ்
மறப்பறநிச்சலுமுன்னிநிலைகுமால். ௩௭

சொன்னலம்பெறுமொருபுராணஞ்சொல்லுதி
என்னலுமடிமலரிறைஞ்சியேத்திட
மின்னவிர்சடைமுடிவிமலனேகினன்
மன்னினன்றவத்தொடுமார்க்கண்டேயனே. கஅ

மார்க்கண்டேயர்தவமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௫சுக.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## அ-வது, சூரியன்கதியுரைத்தவத்தியாயம்.

---

கலிவிருத்தம்.

மையறுதவத்தர்முதன்மற்றெழுவகைத்தாய்ச்
செய்யகதிரோன்வருதல்செப்பினைசுருக்கி
வெய்யவன்விபூதிகள்விரித்துரைசெய்யென்னும்
துய்யமுனிவர்க்குரியசூதமுனிசொல்வான். க

ஏழ்வகையர்யாவரெனினெவ்வமறுமான்மாத்
தாழ்விலுருவாய்வடதடஞ்சிலையைநாளும்
சூழ்வருபதங்கனருடன்னுமுனிவோர்கள்
கேழ்கிளர்நல்லினைத்தவரமாதர். உ

காமரிசையாழுடையர்கர்திருவர்நாகர்
நாமமுறிராக்கதர்கவின்றிடுமியக்கர்
ஏமமுறுமிவ்வகையரெய்துமதிதோறும்
வாமமொடுமேவுவர்வகைக்கொருவராயே. ௩

எல்லவர்கள்பன்னிருவரென்றொருவர்யாரும்
சொல்லும்வகையெவ்வகையெனிற்சுடர்செய்வெய்யோன்
ஒல்லும்வகைதாரொருவனுகிமதிதோறும்
நல்லபெயர்வேறுறநயந்துலவுமாதோ. ௪

மீதார்செழும்பரிதிமேடமதிமேவித்
தாதாவெனும்பெயர்தழைத்துலவுமந்நாள்
போதாரயன்றருபுலத்தியனுமானேர்
மாதாமெனச்சொல்கிருதத்தலையுமாதோ. ௫

சுந்தரம்விளங்கவருதும்புருவெனச்சொல்
கந்திருவனும்மெழில்கலந்தபிலமீது
வர்தபணிநாதனெனும்வாசுகியும்வீற்றுல்
எந்தகிலமுப்புழுமேதியெனவேசொல். ௬

கலிநிலைத்துறை.

கேடிலாதசிராக்கனுமாகிருத்தெனனும்
ஆடன்மேவியவியக்கனுந்தந்தொழிலாற்றி
நீடுதேரொடும்பொருந்துவர்நிகழ்த்துவைகாசி
பீடுசேர்பெயர்த்திங்களில்வருதல்பேசுதுமால். ௭

அரியமாவெனும்பெயர்க்கதிரோனடைந்தியங்கும்
தெரியுநான்மறைப்புலகனுஞ்சிறுநதற்கருங்கட்
புரையிலாதநல்லெழிற்புகழ்ப்புஞ்சிகத்தலையும்
உரியயாழ்பயினாதனெனுமுரவோனும். ௮

அச்சமாரயில்சேர்பிரகேதியென்றறையும்
செச்சையார்புயத்தரக்கனுமூரகரிற்சிறந்த
கச்சநீரனுமோகனுமியக்கனுங்கலந்து
பச்சைமாப்பரித்தேரினநெடும்படர்குவரால். ௯

ஆனித்திங்களின்மித்திரனெனும்பெயரணிசேர்
பானுப்பெற்றிடுமத்திரியெனப்பகர்தவனும்
வானத்துற்றுறைமேனகையெனும்பெயர்மாதும்
தேனுற்றின்னிசைமூன்றதார்சிறந்தகவாவும். ௰

தயங்குநன்மணியூரகரிற்றக்ககனும்வான்
இயங்காக்கரிற்பவுருடேயன்னெனுமிறையும்
வயஞ்செய்தோங்கிரதச்சுவனப்பெயர்வாய்ந்த
வியந்தசீருடையியக்கனுமேவுவான்றே. ௧௧

ஆடித்திங்களின்வருணனென்பெயர்கதிரடையும்
நாடித்தொன்மறைநவிற்றுறுவசிட்டனுநதிபோல்
ஓடித்தண்மதுப்பாய்குழலரம்பையுமுவப்பால்
பாடிப்பண்பயிலூகுவென்பெயர்படைத்தவனும். ௧௨

நாகர்தங்களிற்சுக்கிரனெனநவில்பவனும்
சேகில்சித்திராச்சுவனனுச்செப்பிராக்கதனும்
வேகவெங்களிறெனுஞ்சகச்சன்னியவேந்தாம்
மாகமன்னியவியக்கனுமருவுவர்மகிழ்ந்தே. ௧௩

சிங்கமாமதியிந்திரனெனக்கதிர்சேரும்
அங்கிராவெனுமருந்தவக்கிழவனுமறலார்
மங்குனேர்குழற்பிரமிலோசைப்பெயர்மாதும்
பொங்கிராகயாழ்விச்சுவாவசுப்புரவலனும். ௧௪

எழினிறைந்தலர்புத்திரப்பெயராவிறையும்
மொழிசெய்கின்றவெவ்வரக்கரிற்சரியனுமுருக்கின்
தழைசெய்கின்றதாரியக்கரிற்சுரோகனுந்தத்தம்
தொழில்செய்கின்றனராய்ச்சுடரோனெடுஞ்சுழல்வார். ௧௫

கன்னிமாமதிவிச்சுவாவெனும்பெயர்க்கதிரோன்
மன்னியேகுவன்மாதவப்பிருகுவுமலர்வாழ்
அன்னநேர்நடையநுமிலோசைப்பெயரணங்கும்
நன்னர்யாழ்பயிலுக்கிரசேனநல்லோனும். கசு

சங்கபாலனுமுரகர்தந்தலைவனுந்தருக்கார்
வெங்கணுன்வியாக்கிரனெனுமரக்கர்சொல்வேந்தும்
துங்கமேயவர்சாரணனென்றுசொல்சுடர்சேர்
திங்கள்வாண்முகத்தியக்கனுஞ்செய்வர்தந்தொழிலே. கஎ

நல்லசெங்கதிர்நவிறுவட்டாவெனுநாமம்
மல்லலந்துலாமதியினிற்பெற்றெழும்வானோர்
சொல்லுறுஞ்சமதங்கியென்றுரைதொழுகுலனும்
அல்லுறுங்குழற்றிலோத்தமையாமெனுமணங்கும். கஅ

இசைவடித்தயாழ்த்திரிதராட்டிரப்பெயரியைந்த
விசையமுற்றெருளிர்விஞ்சையர்க்கிதமுறுவேந்தும்
வசையகற்றியகம்பவாச்சுவனெனவழங்கும்
திசைபரப்பொளிச்செம்மணிசேரரவாசும். கக

ஏதநீங்கியவாக்கரிலெறுழ்வலிப்பிரமா
பேதனும்பெயர்பெற்றிடும்புகழ்ப்பெரியோனும்
தாதுலாந்தொடையியக்கரிற்றனிச்சதசித்தென்
றோதுநாமனுந்தந்தொழிலியற்றுவருவந்தே. உ0

விண்டுவாம்பெயர்விருச்சிகமதியத்தின்மேவும்
பண்டைநான்மறைக்கோசிகமுனிவனும்பண்சேர்
தொண்டைவாயினளரம்பையுந்துலங்குவிஞ்சையரில்
அண்டமீதுயர்சூரியவற்சனுமரசும். உக

அரவவேந்தரிலச்சுவதானுநல்லணிதார்
விரவுதோண்மதாபேதனும்விறலிராக்கதனும்
பரவுசத்தியசித்தெனுமியக்கர்தம்பதியும்
இரவியோடுதத்தந்தொழிலியற்றியேகுவரால். உஉ

அருணவெங்கதிர்தனுமதித்திவச்சுவாவாம்பேர்
கருணைதங்கியவருமறைதெளிந்தகாசிபனும்
தருணவெம்முலையுருப்பசியெனுந்தளிரியலும்
இருநரம்புளரிசைதருசேனனென்பவனும். உரு

பணிகடம்மின்மாசங்கனென்பெயர்படைத்தவனும்
தணிவில்வித்தியுஞ்சத்துருவெனும்பெயர்தழைந்த
இணையில்வெவ்வியவரக்கனுந்தாக்கியனெனும்பேர்
அணியிலங்கியவியக்கனுமாங்கியங்குவரால். உச

ரமென்றுசொல்வயங்கியமதியின்மார்த்தாண்டன்
வனென்பெயர்பெறுருவன்பன்னுநான்மறைதேர்ந்
மகிழ்ந்தருந்தவஞ்செயுமாயுவுமயிலோ
ல்பயந்தகட்பூருவசத்தியென்பவளும். ௨௫

7ட்டநேமியாம்விஞ்சையர்க்கரசனுமுடலம்
ட்டராவாசாயகார்க்கோடனுந்தொலையா
நட்டிணேர்சிறப்பூர்சனுமிக்கவூருணனும்
நட்டுநேமியொன்றுடையதேரினையெடுமுறுவார். ௨௬

ற்றருஞ்சுடர்வெய்யவன்கும்பமாமதியின்
ாற்றுகின்றபூடாவெனும்பெயர்பொருந்தவனுங்
றநீங்கியகோதமனெனுஞ்செழுந்தவனும்
றநல்லெழில்சேர்இருதாசியென்பவளும். ௨௭

ஞ்சைவல்லவிண்ணவர்களிற்சுசேனனும்வேந்தும்
நசுமிழ்ந்தவாய்நாகரின்வீரஞ்சயனும்
ந்செனப்பொலியாக்கரில்வாதனும்வனப்பார்
ந்சலில்வலிச்சதசிராவியக்கனுமியைவார். ௨௮

னுவான்பிரசன்னியனெனும்பெயர்பரித்து
னமாமதிமேவுவன்பரத்துவாசப்பேர்
ானமாதவமுனிவனுநயில்விசுவாசி
னபூவையுஞ்சேனசித்தெனுமடலோனும். ௨௯

டல்சேரயிராவதனெனுமாவாசும்
லொக்தொடையியக்கரில்வாசனென்பவனும்
கடிலாவலியாக்கரிற்கிருதுவுங்கெழுமி
சூரியன்றேரொடுமிலவுவான்றே. ௩0

ன்னவாதிருவனைக்குழுவாமுருவெடுத்துப்
ன்னுநான்மறைகாண்பருமாயனும்பாமன்
ன்னுசிருலகளிக்குவன்கதிராண்மற்றைத்
ன்னுவோரிருமூவர்தந்தொழில்களுஞ்சோறும். ௩௧

ரயனுங்கதிர்வானவன்றிருமுனர்மருவித்
ாயநான்மறைசொல்லியின்றிருந்தவர்துதிப்பார்
மயசீராமங்கையர்வானடம்விளைப்பார்
நயமாயநல்விஞ்சையரின்னிசைகிளைப்பார். ௩௨

கர்ந்தநாகர்த்தேரினைமுறைமுறையரிப்பார்
கழ்ந்திராக்கதர்மாதவன்வந்திதம்புகல்வார்
கெழ்ந்தபூணணிவெற்பெனத்திரள்புயத்தாக்கர்
இழ்ந்துபற்றுவாரிரதமுன்வனேமணித்தாம்பு. ௩௩

தழைத்தபேரொளிநவமணிதமனியத்தழுத்தி
இழைத்ததேர்மிசைப்பானுவுக்கெதிர்முகமாகி
வழுத்துவார்புகழ்வாலகில்லியர்மனத்தன்பு
பழுத்தசீர்பெறுமறுபதினாயிரர்பணிந்தே. ௩௪

இந்தவெங்கதிர்க்கடவுளேழுதலெழுவரையும்
உந்தியொன்றுடைத்தேரவனுதயமாங்காலை
அந்தியென்றுசொல்பொழுதினுநிச்சலுமன்பால்
சிந்தைசெய்திடிற்றினஞ்செயும்பவந்தினந்தீரும். ௩௫

சூரியன்கதியுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

௮௨ திருவிருத்தம் ௯௦௪.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## ௯-வது, பாயிரமுரைத்தவத்தியாயம்.

---

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தாரணிமாதுஞ்செய்யதாமரைமாதுஞ்சேரும்
காரணிமேனிநம்மான்கலைகளின்கலைகளாலே
சீரணிவயிராசப்பேர்திகழுருவாதியான
போரணிபடிவமாகிப்பெரிதருள்புரிந்தவாறும். ௧

நாரதமுனிதன்றேற்றநலம்பெறவுரைத்தவாறும்
பாரதாயவைவர்பார்புரந்தோம்புமாறும்
மாரதர்களத்தின்மாயமண்டமர்முடித்தமாயன்
நீரதிர்பரவைசூழுநெடுநகரடைந்தவாறும். ௨

மாற்றருஞ்சிறப்புவாய்ந்தமாலவனுவிகாப்ப
வேற்றிறல்விண்டோரதன்விளங்கிவந்துதித்தவாறும்
பாற்றினஞ்சுழலுஞ்சுடர்வாட்பரண்டவர்வனத்தினேகிப்
போற்றுறும்பெருமைசாலும்பொன்னுலகடைந்தவாறும். ௩

விளம்பெழில்விண்டோரதன்விளங்கிவந்துதித்தவாறும்
வளந்திகழ்வனத்தினன்றேன்மருவிவெஞ்சாபமேவித்
தெளிந்துறுமுனிவர்சூழத்திருநதிக்கங்கையெய்திக்
களங்கனிவண்ணன்றன்னைக்கருதினனிருந்தவாறும். ௪

தூயநல்லறிவுவாய்ந்தசுகமுனியாசுகூற
மாயவனிலைமையெல்லாமன்னவன்கேட்டவாறும்
வேயிசைவடித்தோன்பாதம்விரும்பியன்பியற்றுமாறும்
மேயதத்துவங்களெல்லாமியன்முறையுதித்தவாறும். ௫

ணிசிறமாயனுந்திமலாயனுதித்தவாறும்
ணுமுதலாயகாலத்தளவையையறைந்தவாறும்
ணையறுசனகனுதியிருந்தவர்பிறந்தவாறும்
ணமருப்புடையாண்கேழல்பாரெடுத்தளித்தவாறும். சு

ருத்தியுற்றுறையும்வானோரியருதித்தவாறும்
நத்தமன்மாயனுயகபிலனையளித்தவாறும்
ருத்தியயோகநன்னூறெரித்தருள்கபிலன்சீர்சால்
நத்திகழன்னையுள்ளமொளிபெறத்தெருட்டுமாறும். எ

சியேமுதவினோர்தம்மரபினையிசைத்தவாறும்
ாரவணிசடிலன்றக்கனருமகமழித்தவாறும்
திபன்றுருவனென்பானற்பதமடைந்தவாறும்
ாபதிபிருதுமன்னன்சரித்திரந்தெரித்தவாறும். அ

சநாண்மாலைவேணேர்பிராசிகன்பிருகச்சாய
சர்தாழாவிர்த்தானியறிவுறவறைந்தவாறும்
ளைசமாகளிநல்யானைப்புரவலனன்னேனீன்ற
ாசொல்சீர்ப்பதின்மாரயோர்தக்கனைத்தந்தவாறும். கூ

ாடவிழலங்கன்மாலைச்சுவாயம்புமனுமுனீன்ற
டலஞ்சிலைக்கைமைந்தனவனியேழ்காத்தவாறும்
டகம்புரந்தசெங்கோனரபதிபாதன்கான்போய்ப்
டகத்தொடர்ச்சிபோன்றபழவினைபற்றுமாறும். க0

வலந்தீவின்வண்மைநலம்பெறநவின்றவாறும்
வலர்காத்ததீவேழ்கடலளவுரைத்தவாறும்
புலகாதிமேலேழ்பொருந்துலகிசைத்தவாறும்
வருந்தபனன்செல்லுந்தன்மைமற்றிசைத்தவாறும். கக

லைகுரைத்தவாறுங்கிளர்கோளிசைத்தவாறும்
பிகைத்தரித்தோன்பேர்கூறசாமினனுயர்ந்தவாறும்
ழ்பெறுமகிலரூபன்றகைபெறுருவனுக
யர்களிநல்யானையிந்திரனடைந்தவாறும். கஉ

த்துறீஇக்காக்குமாயன்கவசநன்கிசைத்தவாறும்
த்தனன்வரவேந்தானுமுரைபெறுமகிலரூபன்
நத்திராசுரனென்போனைவீட்டினனெனளித்தவாறும்
நத்திசெய்மறையவலோரவ்வல்வினையகற்றுமாறும். கங

திரகேதுமன்னன்செய்திறனுரைத்தவாறும்
தவெங்களிறுபோலுமருத்துவராதியாய
தகர்பிறந்தவாறும்விழைபுஞ்சவமென்றோதும்
தமவிரதமன்பாலுளுற்றுதலுரைத்தவாறும். கச

திறற்சிசுபாலன்வீடுசேர்ந்தமைதெரித்தவாறும்
மறக்கரிபோன்றவெற்றிமருவுவாட்கனகன்மார்வம்
அறத்துணேமாயனுயவாளரிகீண்டவாறும்
உறத்தருவருணநான்கோருளுற்றறமுரைத்தவாறும். ௧௫

இல்லறமியற்றுவோர்பேறென்னெனுந்தருமற்கன்பால்
நல்லனகதியுண்டென்னுநாரதனவின்றவாறும்
மல்லலஞ்சிறப்புவாய்ந்தமனுக்களேமனுக்கள்காலத்
தொல்லுணர்தன்மைமாயனுதிப்பதையுரைத்தவாறும். ௧௬

களிற்றரசுரைப்பவாவிகாத்துமாவளித்தவாறும்
துளித்திரையுத்திவெற்பாற்சுதையெழக்கடைந்தவிண்ணேர்
களிக்கடலன்னமாயனமுதனுவளித்தவாறும்
ஒளிப்புறவவுணர்ப்போரிலும்பர்வென்றுயர்ந்தவாறும். ௧௭

பாகினுமினியசொல்லாள்பங்கினன்பராவிவேட்ட
மோகினியுருவமாகிமுகுந்தன்முன்னுற்றவாறும்
மாகளிறனையவைவச்சுதன்முதன்மனுக்களோடும்
சேகறுமன்னகாலஞ்சேருநர்தெரித்தவாறும். ௧௮

வாமனவுருவமாகிமாவலிமகஞ்சென்றுற்றுத்
தாமரையனையசெங்கட்டறபான்வளர்ந்தவாறும்
நாமகள்கொழுநற்குற்றநலந்திகழ்மாலேக்காலம்
பூமகள்புணருமாமால்போற்றுமீனுயவாறும். ௧௯

இரவிதன்குலத்துமன்னனிளன்கதையுரைத்தவாறும்
தரைசொல்சையாதிசெய்யுஞ்சரித்திரஞ்சாற்றுமாறும்
புரிதருமன்பின்மிக்கான்புகலம்பரீடன்றன்னே
அரவணேமாயனேவவாழிகாத்தளித்தவாறும். ௨௦

கருதுசீர்மனுமுன்பெற்றகாவலனிக்குவாகு
மரபின்மாந்தாதாவென்னுமன்னவன்பிறந்தவாறும்
விரைசெய்தார்ப்புயத்தான்மெய்ம்மைமேவரிச்சந்திரப்பே
பொருவிலான்புருடமேதம்புகாறப்புரிந்தவாறும். ௨௧

தாதுகுமலங்கல்வெள்வேற்சகரனென்றுரைக்கும்வேந்தன்
மேதகுபுரவிவேள்விவிரும்பினனிழைத்தவாறும்
பாதலமிறந்துளோர்க்காப்பகீரதன்பணிந்துபல்கால்
மாதவமுயன்றுகங்கைமாநதிகொணர்ந்தவாறும். ௨௨

வேந்தர்தம்வேந்தனுயமித்திரசகனென்றேதும்
எந்தல்கன்மாடபாதனெனும்பெயரடைந்தவாறும்
மாந்தளிரனேயமேனிமலர்மகள்கொழுநன்வந்து
சாந்தணிந்தோங்குதிண்டோட்டயாதற்குதித்தவாறும். ௨௩

செய்யபங்கயநேர்கண்ணன் றேவர்தஞ்செல்லறீர்ப்பான்
வெய்யவெங்கானிலேயிலிழுந்தவர்க்கபயநல்கி
ஐயிருதலையினானையமர்க்களத்தடர்த்தபின்னர்
வையகமுழுதுங்காத்துவைகுந்தமேயவாறும்.　　௨௪

விட்டசெங்கதிர்களினைஞ்ஞூறுடைவிமலன்போற்ற
மட்டவிழலங்கன்மாலைமனுமகன்வழியிற்றோன்றி
எட்டெனுந்திசையுங்காத்தாங்கிலங்குநல்லறிவுவாய்ந்த
கெட்டிலேவேற்கைவேந்தனிமியைபுரைத்தவாறும்.　　௨௫

சந்திரன்றனையென்னுந்தையலைமணந்துபெற்ற
புந்திதன்மதலைசெங்கோற்புரூரவாப்புகழ்செய்யாறும்
கொந்தவிழலங்கன்மார்வன்கோசிகன்பிறந்தவாறும்
அந்தமில்பரசுராமனவதரித்தருளுமாறும்.　　௨௬

மன்னவன்யயாதியிந்தமாநிலம்புரந்தவாறும்
பன்னுமம்மரபின்வண்சீர்ப்பாதன்வந்துதித்தவாறும்
அன்னவன்மரபிலேவாதியர்பிறந்தவாறும்
எந்நிலைத்தவரும்போற்றுமெதுமரபுரைத்தவாறும்.　　௨௭

மகபதிமலரோன்முக்கண்வானவன்வழுத்தமாயன்
புகழ்வசுதேவனென்னும்புரவலர்க்கரசுபொற்பால்
திகழ்மதிவதனச்செவ்வாய்த்தேவகியென்னுமாதும்
அகமகிழ்ந்தன்புகூரவவதரித்தருளுமாறும்.　　௨௮

மாதவர்சாபத்தன்றேமனமருள்சாம்பனென்போன்
ஓரிருப்புலக்கைபெற்றங்குவரிசீரிட்டவாறும்
பூதலத்தரசர்போற்றும்புகழ்வசுதேவன்கேட்ப
நாதனையறியுமன்புநாரதனவிற்றுமாறும்.　　௨௯

தத்துவமுறைத்தியென்றுதாண்மலர்வணங்கிநின்றாங்
குத்தவன்கேட்பக்கண்ணனுளந்தெளிவுறுத்தவாறும்
பைத்தலையரவிருடும்பசும்புயறனதுதாமம்
மெய்த்தவமார்போற்றவிருப்புடனடைந்தவாறும்.　　௩௦

நினைவுறுகலியின்காலநிகழ்செயலுரைத்தவாறும்
வினையுறுபிரளயஞ்சேர்விதமெடுத்துரைத்தவாறும்
முனிவருவிண்டுராதன்முத்திபெற்றுயர்ந்தவாறும்
அனையவன்மதலைபாந்தளருமகமாற்றுமாறும்.　　௩௧

நன்மறைவியாதனென்னுநற்றவக்கிழவனுய்த்த
தொன்மறைபுராணநன்னூல்சுருக்கினன்சொற்றவாறும்
முன்மறைமார்க்கண்டேயன்மொழிபிரளயங்காணுறும்
பின்மறையில்லாவெய்யோன்விபூதியுற்றியங்குமாறும்.　　௩௨

உரைத்தனனுணர்ந்தவாறிங்கொளிபெறுதவத்தின்மிக்க
அருத்தியுற்றுறையுமாசிலந்தணரேயிக்காதை
தெரித்திடுபதினொன்றாயதிதிதுவாதசியிற்கேட்போர்
மிருத்துவைக்கடந்துமேலாம்வீடுபெற்றுவப்பர்மாதோ. ஙஎ

பாயிரமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சுஙஎ.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

## கO-வது, புராணவளவையுரைத்தவத்தியாயம்.

---

கலிநிலைத்துறை.

புகன்றவொன்பதிற்றிரட்டியாம்புராணநல்லளவை
பகர்ந்திடிற்பதினாயிரம்பிரமமாம்பற்பம்
அகன்றவைம்பத்தையாயிரமாயறிவுறுத்தும்
திகழ்ந்தசொற்றொடைவைணவத்தளவையைத்தெரிக்கின். க

சாற்றுமூவிருபத்துமூவாயிரஞ்சாரும்
ஏற்றசைவமெண்மூன்றினாயிரமியைந்திருக்கும்
போற்றுபாகவதம்மெனச்சொல்லுமிப்புராணம்
ஆற்றல்சேர்ந்தசொற்றொடைபதினெட்டினாயிரமே. உ

நாரதீயமென்றுரைதருநவையறுநன்னூல்
சீரின்மேம்படுமிருபத்தையாயிரஞ்சேரும்
ஏரினன்மிகுவாக்கினேயப்பெயரியைநூல்
பாரினோர்புகழ்பதினையாயிரத்துநானூறே. ஙு

மருவுசொற்பெறுமார்க்கண்டேயப்பெயர்மதிநூல்
விரவுமொன்பதினாயிரமுற்றிடும்விரிந்த
தரைசொனல்லறஞ்சாற்றியபௌடிகத்தனிநூல்
உரைசெயேழிரண்டாயிரத்தோடுமைஞ்ஞூறே. ச

பேசுநல்லறிவுறுத்தியபிரமகைவத்தம்
ஆசிலாப்பதினெட்டினாயிரமெனவறைவார்
தேசுலாவியவிலிங்கமென்றுரைத்திடுந்திகழ்நூல்
மாசிலாப்பதினொன்றினாயிரமெனவருமே. ரு

நற்றவத்தினர்க்கிதஞ்செயும்வராகமாநன்னூல்
சொற்றிடின்னிருபத்துநாலாயிரத்தொகையாம்
கற்றுவல்லவர்நாடொறும்புகழுநற்காந்தம்
உற்றவெண்பத்தோராயிரத்தொடுமொருநூறே. ௬

வாமனம்பதினாயிரத்தொகைபெறவயங்கும்
நாமநன்னெறிக்கூர்மமென்றுரைபெறுநன்னூல்
எமமன்னியவெழிற்பதினேழினாயிமாம்
ஆமரும்புகழ்மச்சமீரேழினாயிரமே. ௭

நீதிதன்றுகாருடமெனும்பெயர்நிகழ்நன்னூல்
ஓதுகின்றபத்தொன்பதினாயிரமுறுமால்
வேதநுண்பொருள்வெளிப்படச்சொல்பிரமாண்டம்
கோதறும்புகழாறிரண்டாயிரங்குலவும். ௮

உண்ணயங்கொளவுரைத்தநூலொன்பதிற்றிரண்டும்
எண்ணுறுந்தொகைநான்குநூறாயிரமியையும்
நண்ணுறும்பதினெட்டினுணவின்றவிந்நன்னூல்
தண்ணறுந்துளவணிபான்சதுமுகற்குரைத்தான். ௯

உந்திநாண்மலருதித்துறைசதுமுகற்குவப்பால்
இந்தநூலினையிசைத்ததென்காரணமென்னின்
அந்தமாதிமற்றிடையினுஞானமாமதனால்
சிந்தைசேரும்வெந்துயர்தவிர்த்திடவிதுதெரித்தான். ௧௦

இன்னநற்கதைகேட்குநரெழுதுநரிசைப்போர்
பின்னல்வெண்டிரைப்பார்புகழ்பெருந்திருவினராய்
மன்னுகின்றவராகியும்வல்வினைமருவார்
நன்னலந்தருமால்பரந்தாமநண்ணுவரால். ௧௧

புகன்றவிக்கதைகேட்குநர்பூசுராராயின்
அகந்தெளிந்தறிவடைகுவாரசர்மற்றாயின்
திகழ்ந்தசெங்கதிராமெனப்பகையறத்திகிரி
மகிழ்ந்துமாநிலமுழுவதுமோச்சுவர்மாதோ. ௧௨

வணிகாரமெனின்வளந்தருமளகைமன்னவன்போல்
தணிவிலாநிதிபெறுகுவர்சாற்றுபின்னவரேல்
பணிகொடோல்விடுபான்மைபோற்பாவவெங்குழுவிட்
டணியினான்மிகுந்தவணியின்விளங்குவரன்றே. ௧௩

பழுதிலிப்புராணத்தினிலொருபதமேனும்
எழுதினோர்கதையிசைக்குநர்கேட்குநரெவரும்
தொழுதகுந்திருமங்கையின்னருணனிசாப்ப
முழுநலத்தினராகிநன்முத்திபெற்றுறைவார். ௧௪

கலிவிருத்தம்.

இனையநூல்கேட்குநர்யாதுவேண்டினும்
மனனுவந்தளிக்குவர்மனுக்கள்வானுளோர்
வினையறுதென்புலமேயமேலவர்
முனிவார்விஞ்சையர்முதலினோர்களே. ௧௫

கனைத்துவண்டிமிர்துழாய்க்கண்ணன்மாக்கதை
மனத்துறவழங்குநர்மகிழ்ந்துகேட்குநர்
வினைத்திருக்கற்றுறுமெய்ம்மையாதியா
நினைத்தனபெற்றிவணீடுவாழியே. கசு

புராணவளவையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் சுருக.

கஉ-வது, ஸ்கந்தம் முற்றிற்று.

## ஸ்ரீமத்பாகவதபுராணம் முற்றிற்று.

திருவிருத்தமுழுத்தொகை சகூள0.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

---

அபியுக்தரொருவர்செய்த

நேரிசைவெண்பா.

கம்பனென்றுங்கும்பனென்றுங் காளியொட்டக்கூத்தனென்றும்
கும்பமுனியென்றும்பேர்கொள்வாரோ—அம்புவியில்
மன்னுவலர்புடைசூழ் வாழ்குடந்தையாரியப்பன்
அந்நாளிலேயிருந்தக்கால்.



ஆ. திருவிருத்தம் ௪௯௭௦.



ஆ திருவிருத்தம் ௪௯௭௰.



ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணாயநம:

# கந்தாத்தியாயமுறையும்,

## திருவிருத்தத் தொகையும்.

---

### முதற்கந்தம்.



### உ-வது, ஸ்கந்தம்.



### ங-வது, ஸ்கந்தம்.